கடிகை முத்துப்புலவர்

இயற்றிய

சமுத்திர விலாசம்



கழக வெளியீடு : அதிகு

கடிகை முத்துப்புலவர்

இயற்றிய

சமுத்திர விலாசம்



கழகப்புலவர், செவ்வூர்க்கிழார்

திரு. செ. ரெ. இராம்சாமிபிள்ளை

எழுதிய

உரையுடன்



திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition : Oct., 1956.

SAMUTHTHIRA VILASAM

[*All Rights Reserved.*]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200.

பதிப்புரை



வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகில் வளஞ்செய்கின்ற இலக்கியங்கள் அளப்பில்லனவாகும். அவற்றுள் இச் சமுத்திர விலாசமும் ஒன்றாகும்.

கல்லாக் கழிக்கும் அறிஞர்கள் அருகிய இக் காலத்தில் நூற்கீளைக் கற்போரும் கேட்போரும் நாளுக்கு நாள் அருகிவரலாயினர். முற்காலத்து அறிஞர்கள் நூற்கடல் மனப்பாடஞ்செய்து தந் நெஞ்சையே ஏடாகக் கொண்டிலகினர். இவ்வரும்பெரும் ஆற்றலால்தான் தமிழ்ச்சுவடிகள் கரையாலும் மண்ணும் கடலும் உண்டொழிதனபோக இப்போதிருக்கும் இவ்வளவாவது எஞ்சுவவாயின.

இவ்வாறு அருகி மறைந்து நாட்டில் நடமாட்டமில்லாது உள்ளடங்கிக் கிடந்த நூல்களுள் இச் சமுத்திர விலாசமும் ஒன்றாகும். இது, இற்றைக்கு ஏறக்குறைய இரு நூறு யாண்டு கட்கு முன்பு பாண்டிநாட்டைச் சார்ந்த எட்டையபுரத்தில் தோன்றிய கடிகை முத்துப்புலவரால் அவ்வூர் வெங்கடேசுர எட்டப்ப மன்னன்மீது இயற்றப் பெற்றதாகும். சொற்சுவை, பொருட்சுவை மிக்கது; இனிய ஓசை நயமுடையது; சிலேடைப் பொருளுடன் அடிமடக்குச் சொல்லணி கொண்டு திகழ்வது.

இத்தகைய அருமை பெருமை சான்ற இந் நூலை உரையுடன் வெளியிடுதல் நலனெனக் கருதினேம்; அதனுற் பயன்மிக உண்டென அறிந்தோம். எம் கழகப்புலவர் செல்லூர்க்கிழார். திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளையவர்களைக் கொண்டு சொற் பொருளும் விளக்கமும் இலக்கணக்குறிப்புகளுங்கொண்ட அரிய உரை யெழுதுவித்தும், உள்ளுறை பொருள் நயங்களை விளக்கும் சீரிய முன்னுரை வரைவித்தும் முடித்து, அச்சிட்டு நூலுருவாக்கி எம் கழக வழியாக வெளியிட்டுள்ளோம்.

எம் செந்தமிழ்நாட்டுப் பெருமக்கள் யாவரும் மாணவரும் ஆசிரியர்களும் ஆய்புல அறிஞர்களும் இசைவாணர்களும் பிறரும் இந் நூலை வாங்கிக் கற்றுத் தமிழ்த் திந்தேறலை இனிது மாந்தி இன்புறுவதுடன், எம்மையும் இந் நற்பணி போன்ற முற்பணியினின்று நூற்பணி புரிய உதவியளிப்பார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

	பக்கம்
பதிப்புரை	ரு
நூலாசிரியர் வரலாறு	எ
அணிந்துரை	ஙக
சிறப்புப்பாயிரம்	ரூஉ
சமுத்திர விலாசம்	
காப்பு	1
நூல்	3
செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை	211

நூலாசிரியர் வரலாறு

ஊரும் பேரும்

அமிழ்தினுஞ் சிறந்த தமிழ் வளரும் தென்பாண்டி நாட்டினைச் சார்ந்த எட்டைய புரத்தில் இற்றைக்கு இருநூறு யாண்டுகட்குமுன் கம்மியர் குலத்தில் தோன்றியவர் இந் நூலாசிரியரான **கடிகை முத்துப் புலவர்**. இவர்க்கு இவர் தாய் தந்தையர் இட்ட பெயர் முத்து என்பது. கடிகை இவர் குடிப்பெயர். இவர் அறிவிற் சிறந்த புலவர்கள் பலரிடம் பன்னூல்களும் பாடங்கேட்டுச் சிறந்த புலவராகத் திகழ்ந்தார்.

புலமைத் திறன்

இவர் தருணம்போற் பேசுகின்ற பேச்சுத் திறமையினும், இருபொருள் நயந்தோன்றப் பேசுவதினுஞ் சிறந்திருந்ததுடன் விரைந்து செய்யுள் பாடுந்திறமும் பெற்றிருந்தார். இவர்தம் கல்வித் திறத்தைக் கேட்டுணர்ந்த எட்டையபுர அரசர் சகவீர ராமவெங்கடேசுர எட்டப்ப நாயக்கர், தம் அரண்மனைப் புலவராக இருக்கச் செய்து சிறப்பளித்துப் போற்றி வந்தனர்.

இயற்றிய நூல்கள்

புலவரின் பாடல்கள் பொருட்செறிவும் அடிமடக்கும் திரிபும் சிலேடையும் சந்த நயமும் மிக்கதாகப் பொலிவு பெறும். இவர் தமக்கு ஆதரவு தந்து புரந்துவந்த எட்டப்ப வேந்தர்மீது பாடப்பெற்ற நூல் கழிக்கரைப் புலம்பல் என வழங்கும் சமுத்திர விலாசம் என்னும் இந் நூலும், காமரச மஞ்சரி என்பதுமாகும். இஃதன்றி மன்னன்மீது தனிப்பாடலாக அவ்வவ் வமயங்களில் பல பாடல்கள் பாடியுள்ளனர். அவை தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் தொகுக்கப் பெற்று ஏற்கனவே வெளிப்போந்துள்ளன.

இவைகளன்றித் திருவிடை மருதூரில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான்மீது **திருவிடைமருதூர் அந்தாதி** என்னும் நூல் இயற்றிப் போற்றியுள்ளனர். இஃதொன்றே இறைவன்மீது பாடப் பெற்றதாகும். இஃதன்றி ஏனையவெல்லாம் மக்கள்மேற் பாடப்பெற்ற நூல்களேயாம். அவை: சிவகிரி என்னும் ஊரில் பெருநிலக் கிழாராகவிளங்கிய வரகுணராம வன்னியனார் என்பவர் மேற் பாடப்பெற்ற **தீக்குவிசயம்** என்பதும், ஊற்றுமலைப் பெருநிலக் கிழார் மருதப்ப தேவர்மீது இயற்றிய **மதனவித்தார மாலை** என்பதும் ஆகும்.

உமறுப் புலவர்

இவர்தம் கல்வி கேள்வி நலங்களில் பெரிதும் ஈடுபாடுற்றவர், இவருடன் பழகிய முகம்மதியர் ஒருவர். அவர்தம் மகனே இவர்பால் கல்வி கற்க விடுத்தனர். அவர் இவர்பால் கல்விகற்று இலக்கண இலக்கிய வல்லுநராய் உமறுப் புலவரென்னும் சிறப்புப் பெயரோடு திகழ்ந்தனர். அவரே தம் சமய குரவரான மகம்மது நபியின் வரலாற்றைத் தமிழில் சீறப்புராணம் என்னும் பெயரால் பாடினர். அந் நூல் சொற்சுவை, பொருட்சுவை மிக்க நூலாகத் தமிழ்கூறு நல்லுலகில் உலவி வருகின்றது.

சொல்வன்மை

நம் புலவர் பெருமகனர் பேசுங்கால் இருபொருள் நயந் தோன்றவும் நகைச் சுவை படவும் பேசுதலில் வல்லுநர் என்ப. இவர்தம் இற்கிழத்தியாராகிய மகினவியார் இவருக்கு முன்பே காலஞ் சென்றனர். அவர்தம் மூதலாண்டு நினைவுநாள் கொண்டாட்டத்திற்கு வேண்டும் பொருள்களை வாங்கிக்கொண்டு அவை களைத் தலைச்சுமையாகச் சுமந்து கொண்டு வந்தார். வருங்கால் இவர் நண்பர் ஒருவர் எதிரே வந்தனர். அவர் இவரை நோக்கித் தலையில் என்ன சுமை என்றனர். இவர் அதற்கு உடனே மறுமொழியாகத் 'தலைவிதிவசம்' என்றார். இதில், இச் சுமையைச் சுமப்பது தலைவிதி வசம் என்றும், தலைவி திவசம் (நினைவுநாள்) என்றும் இருபொருள் நயமும் தோன்றி நிற்றல் காண்க. இதைக் கேட்ட நண்பர், புன்சிரிப்போடு சென்றனர். நண்பர் ஒருவருடன் இவர் உலாவச் சென்றார்; அவர் வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர்; அவரும் நகைச்சுவைபடப் பேசுதலில் வல்லுநர்; இருவரும் வயற்பாங்குகளில் பயிர்களைப் பார்த்துக்கொண்டு சென்றனர். அங்கே தட்டாரப் பூச்சிகள் பறந்து திரிந்தன. அவற்றை நோக்கி இவர் குலத்தையும் சுட்டி இவரிடம் 'தட்டான் பறக்கின்றதே பாருங்கள்' என்றார். அவர்தம் குறிப்புணர்ந்த புலவர், 'அவற்றுடன் பிள்ளையுங்கூடப் பறக்கின்றதே' என்றனர். பிள்ளையென்பது வேளாளர் குலப்பட்டமாதலால் நண்பரின் குலத்தைக் குறிப்பிட்டும் தட்டாரப் பூச்சிகளின் குஞ்சுகளைக் குறிப்பிட்டும் கூறியவாறாகி.

இறுதிக்காலம்

அரிய தமிழ்த் தொண்டும் நாட்டுத் தொண்டும் செய்துவந்த புலவர் பெருமகனர் நோய்வாய்ப் பட்டனர்; படுத்த படுக்கையாகக் கிடந்தனர்; அக் காலத்துங்கூட நகைச்சுவைபடப் பேசுந் திறம் குறைவுபடவில்லை; இவர்தம் நோய்நிலை கண்டு மக்கள் வருந்தினர்; அழுதனர்; அரற்றினர். தம் தந்தையின் பக்கலில்

வந்து, 'தங்கட்குப்பின் எங்களைக் காப்பாற்றுவோர் யாரிருக்கின்றனர்? அப்பா! நாங்கள் இனி என் செய்வோம்' என்று கூறித் தேம்பி அழுது நின்றனர். அப்போது புலவர் 'உங்கட்கு எட்டப்பன் இருக்கும்போது இந்த ஒரு அப்பனுக்கு ஏன் வருந்துகிறீர்கள்' என்றனர். எட்டப்பன் என்பது எட்டையபுர அரசரின் பெயர். எட்டு அப்பன் என்று நயம்படப் பேசுதல் இன்புறற்பாலது. பின்பு நாள் ஆக ஆகப் புலவருக்கு உணவு செல்லவில்லை. அதற்காக மக்கள் பசுவின்பால் வாங்கித் துணியில் நனைத்து வாயிற் பிழிந்தனர். அதையும் உட்கொள்ளாது உமிழ்ந்தனர். அப்போது மைந்தர்கள் தம் தந்தையாரை நோக்கிக் கண்ணீர் வாரநின்று, 'அப்பா! தங்கட்குப் பாலும் கசக்கின்றதா?' என்று கூறித் தேம்பி அழுதனர். அதற்குப் புலவர் பெருமான், 'பாலும் கசக்கவில்லை; பால்பிழிந்த துணியும் கசக்கவில்லை' என்று அப்போதுங்கூட நகைச்சுவைபட மறுமொழி இறுத்தனர். இதில் பால் கசக்கவில்லை, கைக்கவில்லை, பால் பிழிந்த துணி கசக்கவில்லை, யென்பது அழுக்குப் போகக் கசக்கி வெண்மையாக்கவில்லை யென்றும் இரு பொருள் நயம் தோன்ற நிற்றல் கண்டு இன்புறுக.

இவ்வாறான செயற்கருஞ் செயல் செய்த புலவர் பெருமகனார்- தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டு இங்கமரர் சிறப்புக் கண்ட நாவலர் திருமகன் - ஒரு நன்னாளில் என்றும் மாறு இறைவன் திருவடிப் பேறுற்றுப் பேராவியற்கைப் பெருவாழ் வெய்திவர் என்ப.

அணிந்துரை

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பில் நிலவும் செந்தமிழில் இயன்ற **'சமுத்திர விலாசம்'** என்னும் இந்நூல், பாண்டி நாட்டைச் சார்ந்த எட்டையபுர மன்னர் **சேகவீராம வேங்கடேசுர எட்டப்ப மகாராச ஐயன்** என்பார்மீது **கடிகை முத்துப் புலவர**வர்களால் பாடப்பெற்ற சீரிய செவ்விய நூலாகும்.

இந்நூல், சமுத்திரத்தினிடம், ஒரு காதல் நிறைந்த தலைவி தன் காதல் கையகப்படாக் குறையை நிறைவாக்கும்படி விரித்துக் கூறும் பகுதியாய் அமைந்த நூல் என்னும் காரணக் குறியால் அன்மொழித் தொகையாய் நூலுக்குப் பெயராயிற்று.

கூ. நூலின் வரலாறு

ஒருநாள் மாலைப்பொழுதில் 'பார் பொருந்திய மேன்மை தங்கிய பார தின்புய பூதரன்' ஆகிய வெங்கடேசுர எட்டப்ப வேந்தன், யானை குதிரை காலாள் முதலிய படைகள் புடை சூழ் வரத் தேர்மீதேறி உலா வருகின்றான். அதுகாலை அக்காட்சியைக் கண்டுகளிக்க மக்கட் கூட்டம் திரண்டு அவ் வுலாவைப் பின் தொடருகின்றது. மேளதாள முழக்கங்கள், பாட்டொலி, ஏத் தொலி, இன்னிய வொலியெல்லாம் வானளாவ முழங்குகின்றன. ஆங்கே பெண்கள் கூட்டமும் பின்வருகின்றது. அம்மங்கையர் கூட்டத்தில் பொற்கொடி போன்ற ஒருநங்கை, கறுத்து இருண்டு நீண்ட கூந்தலாள், மூன்றும் பிறையை வென்ற நெற்றியாள், செந்தாமரை மலரின் செவ்வியெய்க்கும் முகத்தாள், மூங்கிலைப் பழிக்கும் இளந்தோளினாள், மின்னல் தவழும் மேனியாள், குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த இன்சொலாள் தோன்றுகின்றாள்; வெங்கடேசுர எட்டப்ப வேந்தன் உலாக்காட்சியைக் காண்கின்றாள்; மன்னனையும் காண்கின்றாள். அவன் முகம் தோள் படர்ந்த மார்பகம் யாவும் மனத்தை ஈர்க்க மானிளம் பிணையோ என்ன நின்ற இம்மங்கைகல்லாளின் கண்களைக் கவர்ந்தன; தன் நெஞ்சத்தடத்தை மன்னன்பால் பறிகொடுத்தாள். காதல் கைம்மிகுந்தாள்; உருகினாள்; உணர்வு நீங்கினாள்; சித்திரப்பாவையின் ஒத்துச் செயலற்று நின்றாள். தன்னுடன் வந்த தோழியரை மறந்தாள்; தனித்து நின்றாள்; 'தன்னையும் துறக்கும் தன்மை காமத்தே தங்கிற்றன்றே' என்னும் முன்மொழிக்கு நன்முறையாக ஏக்கற்றாள். எட்டப்ப வேந்தன் தன் பிணிப்புக்கு எட்டாதவனாகித் தன் உலாவை முடித்துக்கொண்டு

தன் அரண்மனையை அடைந்தான்; திருவோலக்க மண்டபத்தில் மாகதர் சூதர் வையாளிகர் ஏத்தெடுப்ப, முனிவர் பல்லாண்டிசைப்ப, பாடலும் ஆடலும் பாவை நல்லார் நிகழ்த்த, இன்பப் பரவையின் மூழ்கி இயற்கையழகு பொலிய வீற்றிருந்தான்.

செயலிழந்த நங்கை, தன் இடையெனத் தேய்ந்த உணர்வு சிறிது கைவரப் பெற்றாள்; உலாக்காட்சியைக் காணுது திகைத்தாள்; தன் மனத்தில் கொலுவீற்றிருக்கின்ற மன்னன், தன் நெஞ்சிடம்விட்டு நீங்கினானில்லை; கண்ணிலும் காட்சியளிக்கின்றான்; ஏங்கித் தளர்ந்த நிலையில் தத்தடியிட்டுத் தடுமாறி நின்று நடந்து தன் இல்லம் அண்மினாள்.

ஞாயிறு தன் கதிர்களை ஒடுக்கி மேல் திசையில் மறைந்தான். மாலைப்போது மலர்ந்தது: அந்திவானம் சிரிப்பதுபோல் வான்மீன் தோன்றின; இருள் சூழ்ந்தது; வரவர இவட்குக் காதல் இருள் மூடிற்று. உணவு கொண்டாளில்லை; படுக்கையறைக்குச் சென்றாள்; படுத்தாள்; கண்கள் துயின்றில; எழுவாள்; இருப்பாள்; படுப்பாள்; நிற்பாள்; அவ் ஒருநாள் இரவு, எழுநாள் போல் நீண்டது; கலங்கினாள். எதிரே கடல்; அதன் ஒலி, தன் காதல் தீயைக் கிளர்ந்தெழச் செய்தது. அது ஓவென்று கதறுகின்றது; வெள்ளிய அலைகளால் கரையை மோதுகின்றது; செல்கின்றது; வருகின்றது; எழுகின்றது; குமுறுகின்றது; கொந்தளிக்கின்றது; நில்வுச் செல்வனும் தோன்றினன்; தன் தண் கதிர்களைக் கடல் மீதும் இக்காரிகை மீதும் அள்ளி அள்ளி வீசினன். அவள் காத லுணர்ச்சி இக்கடல்போல் பொங்கி யெழுந்தது.

அப்போது கடலோடு சில பேச முற்பட்டாள். தான் உலாவிற்கண்ட மன்னன்பால் போய்த் தன் காதலை யெடுத்துக்கூறி அவன் அன்பைத் தன்னிடம் தரும்படி கடலையும் கடலில் கரையில் பக்கலில் தோன்றும் பொருள்கள் ஒவ்வொன்றையும் அழைத்து அழைத்து அவ்வவைகளிடம் தன் குறையை முடிக்கும் படி வேண்டுகின்றாள். இவ்வாறு வேண்டிக்கொண்டிருக்குங்கால், காதல் உணர்வு அளவுமீறத் தன்னை மறந்த நிலையில் தூக்கம் வருகின்றது. அயர்ந்து கண் துயில்கின்றாள். அப்போது கனவில் ஒரு பெண் தோன்றுகின்றாள். அக் கனவு நிலையில் அவளிடம் பேசுவதாகக் காண்கின்றாள். அவளைத் தன் காதலைக் கட்டுரைத்து வருமாறு எட்டப்ப வேந்தனிடம் தூதுவிடுக்கின்றாள். அவள் அவ்வாறே எட்டப்பனிடம் சென்று இவள் நிலையை விளக்கிக் கூறி, அவன் கருத்தை இவள்பால் திருப்புகின்றாள். அவன் ஏற்றுக்கொண்டு மகிழ்ந்தான். இவட்குக் கொடுக்குமாறு கணையாழி கொடுத்தான்; அதனுடனே மிகுவிலை முத்துக்களையும் கொடுத்தான்; அவைகளை வாங்கிக் கொணர்ந்து சென்று இவட்

குத் தூதி கொடுக்கின்றாள் ; இவளும் அவைகளை அணிந்து மகிழ்ந்தாள் ; இவளைத் துன்புறுத்திய மாரப்பயலும் புறம்போனான்; பின்பு மன்னவனும் வந்தான்; இவளைத் தழுவினான்; ஒன்றுபட்ட மனத்தினராய்க் கலந்தனர். இருவரும் மாறிப்புக்கு இதயமெய்தினர் ; இன்புற்றனர் ; மகிழ்ந்தனர் ; அது மாமங்கலம்.

இக் கனவிற் கண்டவாறே அம்மன்னனை நேரிற்கண்டாள் ; அவன் கொடைத்திறத்தைப் புகழ்ந்தாள். 'மண்டலீகன் வாழி ! அண்டர் தமக்கோர் அமுதாகி, அவனி தனக்கோர் உப்பாகி அமைந்த அவன் அறவாழி வாழ்க! அவன் அணிந்த ஆழி வாழ்க! வாழ்க !' என்னும் வாழ்த்துக் கூறுவதாக இந்நூல் முற்றுப் பெறுகின்றது.

(அ) கைக்கிளைத் துறை :

இம்முறையில் இந்நூல், அன்பினைந்திணைக்கட் சாராத ஒரு தலைக் காமத்தில் பெண்பாற் கூற்றுகத் தேம்பாய் தெரியல் வீடலையைத் திருநுதற், காம்பேர் தோளி கண்டு சோர்ந்து, கடலொடு கழறுகின்ற, கைக்கிளைத் துறையில் அமைந்து அகப்பொருள் நிலையைச் சித்திரித்துக் காட்டும் தன்மையுடன் திகழ்கின்றது.

கைக்கிளையாவது ஆண்மை பெண்மைப்பருவம் முகிழ்த்த ஆண் பெண் இருபாலாருள் எவரேனும் ஒருவர், தாம் காதல் கொண்டாரிடத்தே தம் கருத்து முற்றுருமல் அவரை நினைந்து நினைந்து ஆற்றெறுழைத் துன்பங்கொள்ளும் துறையாகும்.

அவ்வாறே இது ஒரு பெண்மகள் வெங்கடேசுர எட்டப்ப வேந்தனிடத்தே கொண்ட தன் காதல் நிலையைத் தாங்கலாற்றாது, கடலொடு கூறிக் கவல்கின்றாள் ; தன் தலைவனொடொத்த அதன் தன்மைகளைக் கண்டு மகிழ்கின்றாள் ; மற்றெருகால் வேறுபாடு காண்கின்றாள் ; வெறுக்கின்றாள்; பின் நட்புக்கொண்டாடுகின்றாள் ; தலைவரிடம் தூது செல்ல விரும்புகின்றாள் ; வேறுபாடு கண்டு வினவுகின்றாள் ; அன்றிலை குயிலை மயிலை கொண்டலை கானலை கழியை தாழையை தாமரையை வேறு பிறபிற பொருள்களையெல்லாம் தன் முன்னிலையில் விளித்து அவைகளோடு பற்பல சொல்லிப் பாராட்டுகின்றாள், தன் தலைவனையும் காதலையும். இவ்வாறே முத்தொள்ளாயிரம் முதலிய நூல்கள் மொழிதலையும் காணலாம்.

(ஆ) முத்தொள்ளாயிர மொழி :

இந்நூலில் வரும் பெண்ணைருத்தி சேரமன்னன் மீது காதல் கொண்டுள்ளாள். அவள் அல்லும் பகலும் அவனையே நினைந்

தாள்; காதலால் கட்டுண்டு உடல் வெதும்பினுள்; கனவினும் நனவினும் சேரணியன்றி வேறுயாதும் கண்டாளில்லை; அதனால் அவள் செயல்கண்டு ஊராரெல்லாம் பழிதூற்றிப் பேசினர்; அவள் தாய்க்கும் அது தெரிந்தது; தாய் தன் மகளைக் கடுஞ் சொற்களாற் காய்ந்தாள்; ஓர் இல்லில் தன் மகளைத் தன்னந் தனியாக அடைத்துவைத்தாள்; அங்கும் உருவெளித் தோற்றத்தில் சேரணியே காண்பாள்; இவ்வாறிருக்குங்கால், ஒருநாள் மாலை வேளையில் சேரன் உலாவந்தான்; தேர் குதிரை யாளை காலாள் பெருமுழக்கத்துடன் சூழவந்தன; இவள் இருக்கும் தெருவழியாகவே இப் பவனிவந்தான். அதனைக் கேட்டுத் தெரிந்தாள். முரசொலி முதலிய ஒலிகள் யாவும் இவள் காதுகளைத் துளைத்துநின்றன; மன்னன் உலாவும், மன்னனும் பக்கலில் வந்துவிட்டனர்; இவள் உணர்ச்சி உந்த நாலுபக்கங்களிலும் அவ்வறையைச் சுற்றிச்சுற்றி ஓடினுள்; தேடினுள்; அவணைப் பார்க்க நாடினுள். அவ்வறையில் பலகணி இல்லை; அறைக்கதவு மட்டுமே உளது; அதில் பூட்டுகின்ற திறவுகோல் துளையொன்றைக் கண்டாள்; விரைவில் தன் கண்ணை அதனிடம் ஒற்றிக் கொண்டமைத்துப் பார்த்தாள்; கண்ணுரக்கண்டாள் தன் காதற் காவலன் அழகினை; விழியால் அவன் அழகையெல்லாம் விழுங்கினுள்; மகிழ்ந்தாள்; அதனை மற்றொரு நாள் தன் தோழியிடம் கூறினுள்:

"தோழி! என்தாய் 'நீ காவலில் இரு' என்று ஓர் இருட்டறையில் அடைத்துவைத்தாள்; சேரமன்னன் உலாப்போந்தான்; நான் அவனைப் பார்க்கத் துடிதுடித்து நின்றேன்; அங்கே எதையும் பார்த்தற்கேற்ற வெளிகள் எதுவும் இல்லை; கதவில் துளை ஒன்றுமட்டும் இருந்தது; அதன் துளைகொண்டு எங்காதல் மன்னனைக் கண்டேன், கண்டேன்; அக் கதவிடைத் துளையமைத்துத் தந்த அத் தொழிலாளிக்கு நான் என்ன உதவி செய்யப் போகின்றேன். அவ்வுதவிக்கு இவ்வையகமும் வானகமும் ஈடாகக் கொடுத்தாலும் ஒவ்வாது," என்று பேசித் தன் காதல் நிலையைக் கட்டுரைக்கின்றாள். அச் செய்யுள்:

'காப்படங் கென்றன்னை கடிமனை இற்செறித்து
யாப்படங்க ஓடி அடைத்தபின் மாக்கடுங்கோன்
நன்னலங் காணக் கதவம் துளைதொட்டார்க்கு
என்னைகொல் கைம்மா றினி.' (முத்: சக)

என்பதாம்.

இன்னும் வேறுபல நூல்களிலும் இதுபோன்ற கைக்கிளைத் துறைகள் பரந்து பாடலுட் பயின்று வருவனவற்றை உணரலாம். இங்கே எடுத்துக் காட்டுக்காக ஒன்று வரையப்பட்டது.

(இ) கடலைப்பற்றிய கருத்துரைகள்:

கடல் விரிந்த நீர்ப்பெருக்கையுடையது. ஆண்டவன் உலகைப் படைக்குங்கால் மலையாறு கடல் முதலிய பெரும் பொருள்களையும் படைத்தான். இக் கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலமென்பர். இந் நெய்தலைக் காதலர் இரங்கல் (வருந்துதல்) துறைக்கு ஏற்ற இடனாக அகப்பொருள் நூலார் வகுத்தமைத்தனர்.

'வருணன் மேய பெருமணல் உலகம்.....நெய்தல்' என்றார் தொல்காப்பியனாரும்.

எற்பாடெனப் பெறும் மாலைப்பொழுதும் நெய்தலிடமும் ஒன்று சேருங்காலைக் காதலர் காதல் துன்பந் தாங்கலாற்றாது வருந்துவர். எனவே, காதலிக்கார்க்கு இந் நெய்தல் நிலச்சார்பிலும் கடலை அமைத்து நிறுவிய நம் தமிழ்ச்சான்றோர் நுண்மை ஆய்ந்து இன்புறற்குரித்து. இக் கடலைக் குறித்துக் கட்டுரையாத ஏடுண்டோ! நாடுண்டோ! இலக்கியமுண்டோ! இலக்கணமுமுண்டோ! பேசாத மக்கள்தாம் உண்டோ! இல்லையன்றே?

திருக்கோவையில் வரும் ஒரு காதலி கூறுவதைக் காண்மின்:

ஒரு தலைவன் தலைவி ஒருத்தியைக் களவில் மணந்தான்; பகற்குறி இரவுக்குறிகளில் வந்துவந்து புணர்ந்து சென்றான்; அதனால் ஊரார் பழிதூற்றிப் பேசுவாராயினர். அப் பழிச்சொல் ஒடுங்கவேண்டும் என்னும் கருத்துடையனாய்த் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான்; சின்னாள் தன் உறைவிடங்குறுகி இருந்துவந்தான். தலைவிக்கும் தோழிக்கும் அவன் பிரிவு ஆற்றொணாத் துன்பத்தைத் தந்தது. ஊரலரும் ஒருவாறு ஓடுக்கமுற்றது. இந்நிலையிலும் தன் காதலன் வருகையை எதிர்நோக்கி யெதிர் நோக்கிக் கலக்கமுற்றாள் காதலி. அவன் வரும் வழிமீதெல்லாம் விழிவைத்தாள்; கண்ணும் பூத்தாள். பின்னர் அவன் வந்தவழிகளில் சென்று சென்று அவன் காலடித்தடமும் தேர்த்தடமும் கண்டு உவப்புற்றாள். அவ்விடம் கடற்கரையும் கடல்சார்ந்த இடமுமாக இருந்தது. அங்கே அலைகள் வந்து மோதி மோதி அடித்து அத் தடங்கள் மறைபட்டழிந்து போதலைக்கண்டு மனந்துணுக்குற்று வாடினாள். அவள் கடலை நோக்கி ஓர் வேண்டுகோள் விடுத்தாள்:

'பறவையும் அலைகளும் அடித்துமோதச் சங்குகள் ஒலிக்கின்ற போர்க் கடலே! உள்ளும் உருகி உரோமம் சிலிர்ப்ப உடையவன் ஆட்கொள்ளுமவரைப்போல ஓர் கூட்ட இன்பத்தைத் தந்த இறைவன் நின்று கூத்தாடும் புலியூரை விட்டகன்ற என்

தலைவர் சென்ற தேர்த் தடத்தைத் தூர்க்காதே' என்று கடலோடு கழறுகின்றாள்:

'உள்ளும் உருகி உரோமம் சிலிர்ப்ப உடையவன்ஆட்
கொள்ளும் அவரில்ஓர் கூட்டந்தந் தான்குனிக் கும்புலியூர்
விள்ளும் பரிசுசென் றூர்வியன் தேர்வழி தாரற் கண்டாய்
புள்ளும் திரையும் பொருசங்கம் ஆர்க்கும் பொருகடலே!'
(திருக்கோவை : கஅடு)

இனிக் கலித்தொகையில் நல்லந்துவனார் காட்டும் காதலி கடலை விளித்துக் கடுஞ்சினத்தோடு கூறுகின்றாள்:

''கடலே என்னைப் பாதுகாவாது விட்டுத் துறந்து சென்ற என் காதலனைத் தேடிக் காண்பதற்கு நீ இடங்கொடுத்து விலகு தல்வேண்டும்; அவ்வாறு இடங்கொடாது திருப்பாயே யாயின், உன் கரிய நீரெல்லாம் இல்லையாம்படி வெறும் மணலிடமே ஆமாறு என் புறங்காலால் எற்றி இறைத்துப் போக்குவேன்; 'உன்னால் போக்க முடியுமா?' எனக் கேட்பையேல், முயன்றால் அறமே எனக்குப் பேருதவியாக இருக்கும்; என்னை விட்டுப் பிரிந்தானை நீ தேடித் தருவாயானால், அதற்குக் கைம்மாறாக என் நோய்கூறி உனக்கு ஓர் பாட்டுப் பாடுவேன்,'' எனவும் பிறவாறு மர்க் கடலோடு கழறித் தன் ஆற்றாக் காதலை ஆற்றுகின்றாள்:

'பேணுன், துறந்தானை நாடும் இடம்விடாய் ஆயின்
பிறங்கிரு முந்நீர் வெறுமணல் ஆகப்
புறங்காலிற் போக இறைப்பேன், முயலின்
அறம்; பிணை ஆகலும் உண்டு;
துறந்தானை, நாடித் தருகிற்பாய் ஆயின் நினக்கொன்று
பாடுவேன் என்நோய் உரைத்து.'
(கலித்தொகை, கசச : சடு - டுo)

குறுந்தொகையில் ஒரு தலைவி தலைவன் பிரிவுக்கு ஆற்றாது வருந்திக் கடலோடு வாய்விட்டுரைக்கின்றாள்:

'கடலே! சிறிய தலையையுடைய வெள்ளாட்டின் கூட்டம் பரவி நின்றதுபோல, மீனுண்ணும் பறவைகள் சூழ்ந்திருக்கின்ற சோலை சூழ்ந்த பெரிய துறையினிடத்து, வெண்ணிறப் பூவினையுடைய தாழையை அலைகள் அலைக்கின்ற நள்ளிரவுப் பொழுதினும் உன் குரல் கேட்கின்றதே, நீ யாரால் வருத்தமடைந்தாய் கூறுக?' என்று கடலை நோக்கி வினவுகின்றாள்:

'யாரணங் குற்றனை கடலே! பூழியர்
சிறுதலை வெள்ளோத் தோடுபரந் தன்ன
மீனுர் குருகின் கானலம் பெருந்துறை
வெள்ளீத் தாழை திரையலை
நள்ளென் கங்குலும் கேட்கும்மின் குரலே.''

(குறுந்தொகை : கசுகூ)

ஐந்திணை எழுபதில் வரும் தலைவி ஒருத்தி கடலொடு கழறுகின்றுள். அவள், 'கடலே! கருநிற நெய்தல் மலர் சூழ்ந்த கடற்கரைத் தலைவனனவன், என் அழகிய நலத்தையெல்லாம் கவர்ந்து கொண்டு பிரிந்தான் என எண்ணியோ என்னைப் போல் அலைகள் வந்து மணல்மேடுகளின் மேல் மோதி மோதி அடித்து நீ உறங்காதிருப்பது ஏன்?' என, வினவுகின்றுள் :

'மணிநிற நெய்தல் இருங்கழிச் சேர்ப்பன்
அணிநலம் உண்டகன்றுன் என்றுகொல் எம்போல்
திணிமணல் எக்கர்மேல் ஓதம் பெயரத்
துணிமுந்நீர் துஞ்சா தது.'

(ஐந்திணை எழுபது : சுo)

சிலப்பதிகாரத்தில் வரும் செல்வத்தலைவன் ஒருவன் தனக்குக் கடற்கரைச் சோலையில் அணங்கு நோய்செய்த ஆயிழையின் கண்களை வியந்து வருந்துகின்றுன். அவன்,

'வலையைக் கொண்டு தம் வாழ்க்கை நடத்தும் மீன் நுளையர் சேரியிடத்து வலைகள் உலருகின்ற முற்றத்தில் கையில் மலரை ஏந்திக்கொண்டு, வீலைக்கு விற்கும்பொருட்டு மீன்களை உணக்குதற்குரிய பெண்ணுருவத்தை யெடுத்து மற்றேர் கொலைத் தொழிலுடைய வேல் போன்ற கண்களையுடைய கொடிய கூற்றனது அலைகளையுடைய கடற்கரைச் சோலையிடத்தே வாழ்கின்ற தென்பதை முன்பு அறியேன்; அறிந்திருப்பேனை யானுல் இங்கே நான் வந்திருக்கவேமாட்டேன்' என்று தான் கடற்கரைக்கு வந்ததற்காக வருந்துகின்றுன் :

'வலைவாழ்நர் சேரி வலையுணங்கு
முன்றில் மலர்கை யேந்தி
வீலைமீன் உணங்கற் பொருட்டாக
வேண்டுருவங் கொண்டு வேறேர்

கொலை வேல் நெடுங்கண்
கொடுங் கூற்றம் வாழ்வது
அலைநீர்த்தண் கானல் அறியேன்
அறிவேனேல் அடையேன் மன்னே.'

(சிலப். எ : க0)

சேரமான் பெருமாள் நாயனார் அருளிய திருவாரூர் மும்மணிக் கோவையில் தோன்றும் காதலி, கடலொடு கனிவு கொண்டு பேசுகின்றாள். அவள்,

'விரிந்த இக்கடல், இரவும் பகலும் ஓவாது வருந்துகின்ற என்பால் இரக்கங் காட்டி, சுற்றியிருக்கின்ற கரைகளில் அலைக ளென்னும் கைகளினால் மோதியடித்துக்கொண்டு மேலே விழுந்து உருண்டு புரண்டு வாய்விட்டலறித் தூங்காமல் இருக்கின்றது; (என்னிடம் எவ்வளவு அன்பு!)' என்று வியக்கின்றாள் :

'.....அயர்வேற் கிரங்கிச்
சூழ்ந்து கிடந்த கரைமேல் திரையென்னும் கையெறிந்து
வீழ்ந்து கிடந்தல றித்துயி லாதிவ் விரிகடலே.'

(திருவாரூர்மும்: க0)

இவ்வாறே பலப்பல ஆசிரியன்மார் தாம் தாம் ஆக்கிய நூல் களில் கைக்கிளைத்துறைக்கும் நெய்தலாம் இரங்கற்றுறைக்கும் தலைவன் தலைவிகள் வாயிலாகக் கடலொடு பேசுவதாகவும் கலவுவதாகவும் தூது போக்குவதாகவும் பிறவாறுமாகக் கூறுவர்.

இந் நன்முறையைக் குறிக்கோளாகக் கொண்ட இந் நூலாசி ரியர், கடலிடம் தன்குறை கூறியும் தலைவனுக்கும் கடலுக்கும் ஒப்புமை காட்டியும் தூதுசெல்ல வேண்டியும் இன்னும் பல் வகைச் செயல்களைக் கூறியுணர்த்தியும் தலைவி வாயிலாகச் சொல்லணி பொருளணி முதலிய பொருளைத் தமிழ் மாந்தரின் வழக்காற்று மரபுக்கொப்ப இந் நூலைப் புனைந்துரை வகையில் யாத்தமைத்துத் தமிழுலகுக்கு ஈந்தனர்.

எனவே, இது, கைக்கிளைத்துறையில் அமைத்துக் காட்டிப் பின்னர் அன்பின் ஐந்திணைப் பகுதியாகிய தலைவனுடன் கற்பு முறையில் இல்வாழ்க்கையில் ஒன்றுபட்டு இணைந்துவாழும் தன்மையைக் கற்பிக்கின்ற வழிகாட்டி நூலாக இலகுகின்றது.

உ. நூலின் உட்பொதிவு

(க) பாட்டுடைத் தலைவன் சிறப்பு

தன்னேரில்லா இப் பாட்டுடைத் தலைவனுகிய வெங்கடேசுர எட்டப்ப வேந்தனைக் குறித்துக் கூறுங்கால்,

'விருதிடு சரண ராசன்
வெங்கடே சுரவெட் டேந்த்ரன்.'

என்றும்,

'கார்பொ ருந்திய கொடையினுன் அழகு
கண்டுமாதர் மடல் எழுதவே
காமனைப் பொருது சோம னீக்குடை
கவித்த ராச துரந்தரன்.' (க)

என்றும்,

'கடல்மு ழங்கிய தெனமு ழங்கிய
கவிதை கொண்டுயர் வாசலான்
தினமும் அந்தணர்கள் தவமி குந்த வர்கள்
செயல றிந்தமு தருத்தியே
சிவனையும் பெரிய குருவை யுந்தொழுது
செல்வம் நாளும் வளர்ப்பனே.' (உ)

என்றும் உரைக்கின்றார்.

'பகை வேந்தர்களை வென்று வீரக்கழலணிந்தோன், கைம் மாறு கருதாத மேகத்தை யொத்த கொடையினுன், அழகில் காமனை வென்றவன், நாள்தோறும் அந்தணர்க்கும் தவமிகுந் தோர்க்கும் சோறளிப்பவன், சிவனையும் பெரிய குருவையும் தொழுது செல்வம் நாளும் வளர்ப்பன்' எனக் கூறுவதிலிருந்து பாட்டுடைத் தலைவனுடைய **வீரம் கொடை அழகு கடமை நன்றியறிவு தெய்வம்பராவல்** முதலிய மக்கட்குணம் யாவும் ஒருங்கே சாற்றப் பெறுகின்றன. ஆதலால் இறைமகற்கு இன்றியமையாது வேண்டப் பெறும் குணங்களாக,

'கொடைஅளி செங்கோல் குடி ஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க் கொளி.' (கூகo)

என்று திருவள்ளுவரால் அறுதியிட்டுரைத்த அரிய பண்புடையானுதலை அறியலாம்.

(ங) அணி வகைகள்

இந் நூலின்கண் சிலேடை யணியாகப் பாட்டுடைத் தலை வன் பவனி, கடல்; கடல், தலைவி; மன்மதன், கடல்; கடல், பொதியமலை; சிவன், பொதியமலை; சந்திரன், வைகையாறு; கண்ணன், முதுகுடி நாடு; இந்திரன், மேடை; கலைமகள், மூல்லை மலை முதலிய பலவற்றையும் இணைத்துக் கூறித் தலைவனுடைய நாடு மலை ஆறு யானை குதிரை முரசம் முதலிய அரசர்க்குரிய அங்கங் (உறுப்புக்) களை அவைகளின் சிறப்புத் தோன்றக் கூறியிருப்பது, இந் நூலை ஊன்றிப் படிப்பார்க்கும் உன்னித்துக் கேட்பார்க்கும் இன்பந் தருவனவாய் அமைந்துள்ளன.

முதல்மடக்கு அடிமடக்கு கடைமடக்கு கடைமுதல் மடக்கு திரிபு முதலாம் சொல்லணிகளும், துள்ளித் துள்ளி நடக்கும் ஓசை நயமும், ஆற்றொழுக்குப் போல் பரந்துபட்டுச் செல்லும் இசையின்பமும், அவைகளின் இடையிடையே நகை உவகை வீரம் அச்சம் வெகுளி வியப்பு இழிவு அழுகை முதலிய உணர்ச்சியூட்டும் சுவை நயங்களும், அவைகளைக் காட்டும் சொற்களின் திட்ப நுட்பங்களும், பிறவும் இந் நூலின் செம்மை சான்ற பாநலத்துக்கு இசைந்தனவாய், புலியினுக்கணியாய், ஆன்ற பொருள் தந்து, புலத்திற்றருகி, அவியகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவி, சவியுறத் தெளிந்து, தண்ணென்ற ஒழுக்கமும் தழுவி இலகுகின்றன.

(i) பொருளணி (சிலேடை)

இதில் சிலேடையாகக் கடலுக்கும் தலைவிக்கும் ஒத்த நிலையாகக் காட்டியமைத்திருக்கும் ஒப்பம் கண்டு மகிழ்வு கொள்ளற்கு ஏற்றது.

> 'நீளு மாசை நானெடுத்தேன்
> நீயு மாசை எடுத்ததனுல்
> நிணையுஞ் சரிஎன் றிருந்தேன்என்
> நிறையுஞ் சரியும் இழந்தேனே.' (சச)

எனக் கூறியிருப்பதில் 'நீளும் ஆசை நான் எடுத்தேன்; நீயும் மாசை எடுத்ததனுல்' என்று வருபவற்றுள், ஆசை மாசை யென மொழிகள் வெவ்வேருகப் பிரிக்கப்பட்டுப் பிரிமொழிச் சிலேடை அணிநயமும், 'நிணையுஞ் சரி என்றிருந்தேன் என், நிறையுஞ் சரியும் இழந்தேனே' என்பதில் சரி சரி என ஒரே சொல் சரிடத்தும் தோன்றி சரி: ஏற்றதன்மை; வலையல் என வெவ்வேறு பொருள் தருவனவாய் ஒரேசொல் நிற்கும் செம்மொழிச் சிலேடை அணி நயமும் அமைந்திருத்தலை ஓர்க.

இன்னும் தலைவன் கொடைக்கும் சமுத்திரத்துக்கும் ஒத்த நிலையாக,

'கனகம் பொலிவாய்த் தந்தநிலை காட்ட மேலா னவராலும்
காணக் காவி யத்தவரும் களிப்பா வலரும் பாணிகொண்டு
தனதா யேந்த விசைதரலால் சகல சனமும் பிழைக்கவனம்
தரலால் வெங்க டேசுரெட்ட சாமி கொடைபோல் சமுத்திரமே.'
(திசை)

என வருவதில், 'கனகம் பொலிவாய்த் தந்து அம்நிலைகாட்ட' என வும், 'கனகம் பொலிவாய் தம்தம் நிலைகாட்ட' எனவும் தனித்தனி வெவ்வேறுகப் பிரிவுபட்டு வெவ்வேறான பொருள்தருதலை அவ் வப் பாட்டுக்களின் உரைகளிடையே கண்டுதெளிக.

(ii) சொல்லணி (முதல் இடை கடை மடக்கு, திரிபுகள்)

இந்நூலில் சொல்லணிகள் முதல்மடக்கு, இடைமடக்கு, கடைமடக்கு, திரிபு முதலியனவாய் அமைந்து வேறு வேறான பொருள்நயம் தந்து மிளிர்தலை நன்கு தெரியலாம்.

(அ) முதல்மடக்கு

'தனமே முத்தம் பொரிந்ததுசந்
தனமே தரியேன் சயனமுநூ
தனமே யான தன்றில்சே
தனமே எனவும் நினைப்பேனே.' (உடு)

என்பதில், 'தனமே.....தனமே' என, வந்த சொற்களே பாட் டின் ஒவ்வோர் அடியின் முதலில் மடங்கிவந்து வெவ்வேறு பொருள் தருதலைக்கண் டின்புறலாம்.

(ஆ) இடைமடக்கு

'அவிரும் மதிநா டகத்தின் மயில்
அமரும் மதிநா டகங் காட்டும்
மணிசேர்த் தண்டத் தடுக்கும் எயில்
அதுபோய்த் தண்டத் தடுக்கும் முகில்' (உஎ)

என்பதில், 'மதிநாடகம்.....மதிநாடகம்' எனவும், 'அண்டத் தடுக்கும்.....அண்டத்தடுக்கும்' எனவும் வந்த சொற்களே ஒவ் வோர் பாட்டின் அடிகளின் இடையில் மடங்கிவந்து வெவ்வேறு பொருள் தருதலைக் காண்க.

(இ) கடைமடக்கு

'சடமே அசைக்கும் போதாவே
சம்போ லிருக்கும் போதாவே
தனிக்க வித்தான் போதாவே
தமியேற் கிதுவும் போதாவே' (நக)

என்பதில் 'போதாவே.....போதாவே' என ஒவ்வோர் பாட்டின் அடிகளின் இறுதியில் ஒரே சொல்லே மடங்கிவந்து வேறு-வேறு பொருள் தருதலே அறிக.

(ஈ) கடைத்திரிபு

'தானே நடுவின் முந்தானே
தனிலே ஏறி வந்தானேச்
சகியா மோகம் தந்தானேத்
தடுத்தேன் இலையே தந்தானே' (கஎ)

என்பதில் 'முந்தானே வந்தானே தந்தானே குந்தானே' எனச் சொற்கள் ஒவ்வோர் பாட்டின் அடியின் கடையில் மாறுபாடா (திரிபா)க வந்து வேறுவேறு பொருள்நயம் தோன்றுதலேக் காண்க.

இன்னும் இந்நூற்கண் பல இடங்களில் இவைபோன்ற சொன்னயம் பொருணயம் தந்து இன்புறுத்தலே ஆங்காங்கே இலக்கியச் சுவைஞர் கண்டு அகமுகங் குளிர்மையுறலாம்.

(ச) ஓசையின் இயற்கை

பாடல்கட்கே உயிராகஉள்ளது ஓசையே. ஓசையின் பல்வேறு வகையினுலேயே பாடல்களும் வேறுவேறு பெயர் கொண்டு நிலவுகின்றன. செப்பலோசை அகவலோசை துள்ளலோசை தூங்கலோசைகளாலியன்ற பாக்களே முறையே வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா எனத் தொல்காப்பியனுர் போன்ற தொன்னூலாசிரியன்மார் வகுத்தமைத்தனர். ஆகவே, ஓசையின்பத்தாலே உணர்ச்சியும் கிளர்ச்சியும் மக்கட்கும் வேறு உயிரினங்கட்கும் எழுதலேக் காண்கின்றேம். அவ்வகை இசையின் இயற்கையினுலே இந்நூலில் அவ்வப் பொருள்களின் தன்மை இயற்கையாகத் தோன்றுதலேக் காணலாம்.

இந்நூற்கண் குதிரை ஓட்டம், யானையின் பெருமித நடை இவைகளைப் பாட்டுடைத் தலேவன் சிறப்புக்குரிய உறுப்புக்களாக

உயர்த்துக் கூறுங்கால், குதிரையின் விரைவு யாணையின் பெருமித நடை இவைகள் பாட்டிணைப் படிக்குங்கால் கட்புலனுக்கும் செவிப்புலனுக்கும் தென்பட்டுணர்வூட்டுதலை அறியலாம்.

(i) குதிரையின் விரைவு

'குன்றின்மேல் மிதித்து வீரர் மண்டை வீழ எற்றியே
கொண்டல்மேல் உழக்கி வீதி கொண்டு போரின் முட்டியே
வென்றபாய் பரிக்குள் ஏறி நின்ற வீர பத்திரன்
வெங்க டேசு ரெட்ட ராச சிங்கம்.' (கூசு)

எனவும்,

'பட்ட வத்த னச்செ ருக்கர் பட்ட வத்தம் எய்தவே
பற்றெ றிக்க எற்றி உச்சி பற்றறக் குமைக்கமேல்
விட்ட மெய்ப்ப ரிக்குள் வட்டம் இட்ட உக்கி ரத்தினன்.'
(கூஎ)

எனவும், வரும் இவைகளில், குதிரை பல திசைகளிலும் துள்ளித் துள்ளி விரைந்து செல்லும் செலவைக் 'தன்றின்.....சிங்கம்' என்பதில் மெல்லோசை தோன்ற மெல்லெழுத்தே பாட்டோசையிற் பயின்றுவர யாத்திருப்பதும் 'பட்டவத்த.....இட்ட உக்கி ரத்தினன்' என்பதில் குதிரை போரரங்கத்தில் புகுந்து சென்று போருடற்றிப் போர்வீரர்களின் பற்கள் உதிர அவர்தம் தலைகள் நெரியச் செல்லும் கொற்றம் தோன்றிக் கற்பவர் கண்முன் காட்சியளித்து மிடுக்குடன் செல்வதுபோல் வல்லோசை தோன்ற வல்லின எழுத்தே பாட்டிற் பயின்றுவரத் தொடுத்திருக்கும் ஓட்பமும் படித்துப் படித்து இன்புறற் பாலனவாக அமைந்துள்ளன.

இவ்வாறே கம்பர் காவியமாம் இராமாயண நூலில், இராம இராவணப்போர் துவங்கிவிட்டது; போர்முழக்கம் திசையெல்லாம் செவிடுபட அதிர்கின்றது; போர் வீரரெல்லாம் மடிதற்றுப் போருக்கெழுந்தனர்; கும்பகருணன் மட்டும் பேருறக்கத்தில் மூழ்கிக் கிடக்கின்றான்; அவனை இராவணன் ஏவலால் கிங்கரர் நால்வர்வந்து எழுப்பமுயன்றனர்; தம் கையிற்கொண்ட இருப்புலக்கைகளினால் அடித்தனர்; எழுந்தானில்லை; அதனால் அவர் கட்கு வெகுளி தோன்றிற்று. அப்போது,

'உறங்கு கின்ற கும்ப கன்ன உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்கு கின்ற தின்று காண்ட முந்திராயெ முந்திராய்

கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே
உறங்கு வாயு றங்கு வாயி னிக்கிடந்து றங்குவாய்.'
(கம்ப. கும்பகரு : சகி)

என்று ஏளனமாகக் கூறுவதாக அமைந்த இப்பாட்டில் அவன் தூங்குவ தற்கேற்ற தாலாட்டுப்போல் அவன் மேலும் ஆழ்ந்த பேருறக்கங்கொள்ளத் தூண்டுவதுபோல் அமைந்த ஓசை நயத்தோடொத்ததாய் இலகுறுதலைக் காண்க.

(ii) யானையின் பெருமிதநடை

'தங்க மலைக்கு மிசைபாயத் தங்க மலைக்கு நாலிருமா
தங்க மலைக்குள் ஒளிக்கை யிற்பா தங்க மலைக்கும் தொனிகேட்டுத்
துங்க மறுக வடரறப்ப துங்க மறுக வடர்களிறு,' (கூஅ)

என்பதில் யானை செல்லுங்கால் அதன் பெருமித நடைபோல் அதன்மேற் கிடந்தொலிக்கும் மணியோசை கேட்பதுபோல் இங்கே அவ்வோசை மனக்கண்முன் காட்சி தருதலை ஊன்றி நோக்குவார்க்குப் புலனுமாறு இசைந்துள்ளமை அறிக.

இவ்வாறே கலிங்கத்துப்பரணியில் வரும் யானைப்படையைக் கூறவந்த சயங்கொண்டார்,

'கடல்க ளேச்சொரி மலையுள எனஇரு
கடத டத்திடை பொழிமதம் உடையன
கனல் வீசுப்பன முகிலுள எனவிழி
கனல்சி னத்தன கரியொடு பரிகளின்
உடல்பி ளப்பன பிறைசில உளஎன
உயர்ம ருப்பின உலகுகள் குலைதர
உருமி டிப்பன வடவனல் உளஎன
ஒலிமு கிற்கட கரிகளும் மிடையவே. (கூகூ)

என்று கூறுவதில் யானைகளின் தோற்றம் சினம் முதலியன சித்திரித்துக் காட்டுந் தன்மையைப்போல் ஒத்திருப்பதை நோக்குக. பிற ஓசை நயங்களும் ஆங்காங்கே படிக்குங்கால் தெற்றெனப் புலனுதலை உணர்க.

(ஞ) அரிய கருத்து நயங்கள்

கடலைநோக்கித் தலைவி பேசுகின்றாள். அப்போது கடலின் தன்மையும் தன் காதலன் வெங்கடேசுர எட்ட வேந்தன் தன்மை

யும் தனக்கு வெவ்வேருகத் தோன்றுகின்றது. அப்போது தலைவி கடல்நோக்கி வினவுகின்ருள்; 'கடலே! நீ கருதிற அஃகனோ விசிக் கொண்டு என்பால் வருவாய்; என் தலைவன் காதல் கொண்டவ ரின் காதலை அணைகோலித் தடுப்பான்; நீ உன் பக்கலில் உள்ள கரையைக்கூடக் கடக்க ஆற்றலில்லாமல் உள்ளடங்கி விடுவாய்; ஆனல் என் காதலன், எண்ணிலடங்காத பற்பல பகைவர்களின் அரண்களேயெல்லாம் தகர்த்துக் கடந்துசென்று வெற்றிகொண்ட வன்; ஆதலால் என் குறையை எடுத்து என் காதலனிடம் சொல் லுதற்கு நீ கரையைத்தாண்டி எங்கே செல்வாய்? நான் வீணை உன்னிடம் கூறுகின்றேன்' என்னும் கருத்துச் செறிவுடன் பேசுகின்ருள்.

'வள்ளல் எங்கள் வெங்கடேசு ரெட்ட மேந்திரன் மருவிலான்
மையலித் தடுப்பை நீயும் மையலித்த டுப்பையோ
உள்ள கோட்டை ஒன்றுநீ கடப்பையோவ டர்ந்தபேர்
ஓங்கு கோட்டை எண்ணிலாத துண்ட வன்கடந்ததே.' (சசு)

இதில் தன் காதலன் வெற்றித்திறனும் நெறிபிறழா நேர்மை யும் விளக்கப்பெறுதல் காண்க.

(i) தூது விலக்கு

தலைவி தன் குறையை எடுத்துச்சொல்லித் தன் காதலனிடம் தூதுபோக்க விரும்புகின்ருள். தூதுக்குரியோர் தன்னிடம் அன் புடையாராக-நற்குடிப் பிறந்தாராக-அரசர் விரும்பும் நற்பண் புடையாராக-அமைதல் வேண்டும். அம் முறையில் இத் தலைவி தூதுக்கேற்றனவாக ஒவ்வோர் அஃறிணைப் பொருள்களையும் நினைக்கின்ருள். நினைக்குங்கால் ஒவ்வோர் உயிரிகளையும் உயி ரற்றவைகளையும் அவைகளின் குணஞ் செயல்களையும் அளந்து காண்கின்ருள்.

தூது செல்வதற்குப் பண்டையோர் வகுத்த பொருள்கள் பத்து வகையன. அவை: மயில் குயில் கிளி பூவை அன்னம் அன்றில் வண்டு தென்றல் மேகம் தன் நெஞ்சம் என்பனவாம். பிற்காலத்தில் இன்னும் பற்பல பொருள்களையெல்லாம் தூதுக் குரியவைகளாக அமைத்தனர். இவைகளில் இத் தலைவி ஒவ் வொன்றையும் குறித்து விலக்கி இறுதியில் கடலொன்றுமே ஏற்றதெனக் கொண்டு கடலிடம் தன் குறையைச் சொல்லித் தூதுவிடுக்கின்ருள். அவள், அன்னத்தைத் தூது சென்று தன் காதலனிடம் மாலே வாங்கிவர விடுப்போமென்ருல், அவன் கொடுக்கும் கொடை மாரிபோன்று கைம்மாறு கருதாததாக இருப்பதால் - '' அறுகுளத் துகுத்தும் அகல்வயல் பொழிந்தும்,

உறுமிடத் துதவாது உவர்நிலம் ஊட்டியும், வரையா மரபின தாக" 'இருப்பதால்-தனக்கும் வேண்டுவன கொடுப்பான்' என்னும் தன்னலக் கருத்துக்கொண்டு அவன்பால் செல்லமாட்டாது. குயிலேத் தூதாகப் போக்குவோமெனின், அதன் தாய் கொடியது; பிரிந்த காதலர்க்குத் துன்பந்தரும் தன்மையது; அதன் செவிலித் தாயான காக்கையோ மிகக் *கொடி (கொடுந் தன்மைய)து; ஆகலான், அதற்கு இரக்க குணம் இராது. பொறிவண்டைத் தூது செல்ல விடுவேமென்றால், அதற்குச் சொல்வதைக் கேட்கும் செவிப்புலன் உணர்வு இல்லேஎ அஃதன்றியும் நமக்குப் பகைவனுன மன்மதன் கருப்பு வில்லிற்கு நாணுக அமைந்தது; எனவே எமக்குத் தூது செல்லற்கு இசையாது. ஆகவே, கடலே! நீ தான் இக் குறைபாடுகள் ஒன்றுமே இல்லாய், நீ என் காதலன் வெங்கடேசுர எட்டப்பன்பாற் சென்று அவன் முல்லே மலர் மாலேயை வாங்கிக் கொணர்வாயாக,' என்று கூறுகின்றுள். கூறுங்கால் 'நீ மாலேப் பொழுதோடு பன்னுட் பழகியுள்ளாய்; ஆகவே, மாலே கொள்வதற்குப் பொருத்தம் நீயே! மாலே தருவான் வாங்கிவா,' என்னும் குறிப்புத் தோன்றக் கழறுகின்றுள்.

'அன்னம் தனேயே தூது விட்டால்
அரசர் பெருமான் கொடைமாரி
ஆமென் றுரைப்பர் ஆசையினுல்
அங்கு தடுக்க மாட்டாதே;

இன்னங் குயிற்குச் சொல்லிலதை
ஈன்ற தாயும் கொடிய தென்றே
இகழும் வளர்த்த தாய்கொடிய
தென்பர் இரங்க மாட்டாதே;

பொன்னம் பொறிவண் டாயின்மயல்
புகலக் காது கேளாதே
போர்வேள் சிலேக்கு நாணுமது
போவென் றுரைத்தாற் போகாதே;

மன்னன் குமார எட்டன்மகிழ்
மகவாம் வெங்க டேசுரெட்டன்
மாலே கொடுப்பான் கடலே! செம்
மாலே அடுத்து நின்றுயே.' (அஉ)

* கொடி - காக்கை.

என்பதில் அன்னப் புள்ளின் இயற்கை, குயிற் பறவையின் பிறப்பு வளர்ப்பின் தன்மைகள், வண்டின் காதுணர்வு இல்லா இயல்பு முதலிய இயற்கை உயிர்களின் தன்மையும் தூது போதற் குரிய இன்றியமையா இயல்புகளும் பாட்டுடைத் தலைவன் கொடைத்திறம் காண்டற் கெளிமை அன்பு பண்பு முதலிய குண இயல்புகளும் கூறுகின்ற அருங் கருத்துக்கள் அமைந்து பொரு ளாழமிக்குள்ளமை தெளியலாம்.

(ii) சில வரலாறுகள்

'காமா விடமா தரித்த வஞ்சக்
கரவான் அவனுக் களித்தாயே.' (உக)

'சூலபாணிக் குணவளித்தாய்.' (உஉ)

என்னும் தொடர்களினுல் சிவபெருமான் ஆலகால நஞ்சுண் டமையும்,

'விண்ணு டருக்கன் புறமேக
மேலா யுருவச் சிரமேந்தி
வெள்ளி பதுங்க மஞ்சுர
வெளிவாய்ச் சிந்தா மணியமையக்
கண்ணு யிரத்தோன் போல்மேடை.' (உசு)

என்னும் தொடர்களினுல் இந்திரனும், அவன் ஆயிரங்கண் பெற்றமையும்,

'...சனகன் சிலாபார்த்து நகைத்தோன்.' (உஎ)

'கலையே பழகித் துரோபதிக்குக்
கலையே வழங்கி மிதிலைவழிக்
கலையே உருவாக் கண்டுபிறங்
கலையே குடையா எடுத்து நின்றோன்.' (உஅ)

என்னும் தொடர்களினுல் இராமன், கண்ணன் முதலியோர் அருஞ்செயல்களும்,

'பாரிக் கிணையா நிதிசொரிந்து
பாகத் தமிழைப் புனைந்துபுகழ்
படைத்தோன்.' (இசு)

'காரி அனைய கொடைக்குமுப
காரி தமிழ்பா ராட்டும்விப காரி.' (ஈச)

என்னும் தொடர்களினுல் தமிழ்நாட்டுக் கடையெழு வள்ளல்க ளான பாரி, காரி முதலியவர்களின் வரலாற்றுண்மைகளும்,

'.....கங்கை கொண்ட பார்ப்பான்
பார்ப்பான் என்றுசொலத் தீரந்
தருகண் கொடுத்தஅதி செயவான்.' (சுஎ)

என்னும் தொடரினுல் பாட்டுடைத் தலிவன் கங்கை கொண்ட பார்ப்பான் ஒருவனுக்குக் கண் விளக்கம் பெற உதவி செய்த வரலாறும் பேசப்படுகின்றன. எனவே, பழைய புராணக் கதைகள், வரலாற்றுண்மைகள், பாட்டுடைத் தலிவன் பேருப காரம் முதலியன விளக்கப் பெறுதல் காண்க.

(iii) உவமச் சிறப்பு

இந் நூலில் இடங்களுக் கேற்பச் சிறந்த உவமங்களே எடுத் தாளுவர். அவைகளுள் ஒரு சில காண்பாம்.

'தமிழுக்குதவு நிதிபோலத்
தானே வளருஞ் சலநிதியே.' (உக)

'வேலே மாதும் மாயனும்போல்
விளங்குந் தளவத் தொடைமார்பன்.' (ஙக)

'வெங் டேசுரெட்டன் பனுவற் கிணையாம் வாரிதியே.' (ஙச)

'அந்தி வானம் ஒத்தெழுந்த கருட கேதனம்.' (சஉ)

'வெங்க டேசுரெட்டன், பரிக்கும் கோடைபோல்
திசை நிரப்பிக் காரமரும் பைங்கடல்.' (சஙு)

'அல்லிக் கமல மலர் போலும்
தாளும் கரமும் மிகச்சிவந்த சாமி.' (சச)

'ஒற்றை ஆழித் தேரவன் போல்
உயர்வாம் சந்த்ர காயிடால் உதயங் காட்ட.' (சஅ)

'மடவார், உள்ளம் பொருந்து மதன்போல
உருவம் எடுத்துப் புவிபுரக்கும் உரவோன்.' (திங)

'வெங்க டேசுரெட்டன், மனதுநிறையும்
தணம்போல வளரும் பெரிய கடல்துறை.' (திதி)

என வரும் இவ் வுவமங்களுள், பாட்டுடைத் தலிவன் செல்வத் துக்கும் கடலுக்கும், முல்லே மலர்மாலேக்கும் திருமகள் திருமாலுக்

கும், பனுவலுக்கும் கடலுக்கும், அந்தி வானத்துக்கும் கருடக் கொடிக்கும், தலைவனது கொடைக்கும் கடலுக்கும், கால் கைகட்கும் தாமரை மலருக்கும், காவிச் சீலைக்கும் சூரியன் தோற்றத்துக்கும் மன்மதனுக்கும், தலைவன் குணத்துக்கும் கடலுக்கும் முறையே முதலும் சினையுமாக உவமங்கள் வந்து தலைவன் மேம் பாட்டை விளக்கி இன்புறுத்தலை அறிக.

(iv) அருஞ்சொற்கள், சொற்றொடர்கள்

இந் நூலில் ஆங்காங்கே அரிய சொற்களும் இனிய அரிய சொல் தொடர்களும் அமைந்து படிப்பார்க்கு இன்பந் தருதலை உணரலாம். அவைகளுள் திரு (ச) திருக்கை (டு) வேலை (சு) பெண்மை (கஉ) குருகு (கஉ) கால் (கசு) அம்புராசி (கள) மடல் (உள) கலை (உஅ) அம்பல் (உக) ஏடு (கூ) பூசல் (கூடு) ஆழி (கூக) பயம் (சக) அன்னம் (சுஉ) திட்டு (சுடு) சலம் (அக) அமுது (க00) உப்பு (க00). இப் பத்தொன்பது சொற்களும் ஒரு பொருள் குறித்த தன்றிப் பலபொருள்களும் தோன்ற அமைந் திருத்தலை உணர்க. திரு என்னும் சொற்குத் திருக்கோவை யாருக்கு உரைகண்ட பேராசிரியர், 'கண்டோரால் விரும்பப்படுந் தன்மை நோக்கமுடையது' என்று உரைவிரித் தெழுதினர், இங்கே இலக்குமி அழகு என்னும் பொருளில் வந்தது. இவ் வாறே மற்ற சொற்களும் இருபொருள் முதலியன கொண்டு பொருட்செறிவு மிக்கிருப்பதை ஓர்க. இவ்வாறே இதன்கண் அரிய கருத்து நயங்கொண்ட சொற்றொடர்கள் பின்னிப்பிணைந்து கிடத்தலை ஆங்காங்கே பல்லிடத்துங் காணலாம்.

(க) 'வனச மண்டப வனிதை தங்கிய மருமன்.' (உ)

(உ) 'மீனே சங்கினமே இனமே கேட்பீரே.' (ச)

(கூ) 'வெங்கடேசு ரெட்டணியே மேவத் தடுக்கு மெட்டணியே.' (டு)

(ச) 'ஆசைகொண்ட பெண்மைக் கடலா யிருந்தாயே.' (கஉ)

(டு) 'இரையாமற் பயவா ரணமே புரிந்தாயே.' (கதி)

(சு) 'வெள்ளப் பாவாய்! உன்னை எவர் மேவிப்பிரிந்தார்.' (ககூ)

(எ) 'உணியும் ஊரிற் குடியென் றுரையாரே.' (உசு)

(அ) 'சோழர் வணிதாரும் நீயார் நானுர் எனப் போமாம்.' (கூஉ)

(க) 'கறையி லாத தங்கமேபொன் நிறையிலாத தங்கமே.' (கூஎ)

(கo) 'வரிசை புரிந்து தமிழ்புனீய வந்தோன்.' (ஙிஙி)

(கக) 'இன்னம் புலவோர்க் கமுதளிக்கும் எங்கோன்.' (சுஉ)

(கஉ) 'செயவேள் வெங்க டேசுரெட்ட தீரன்.' (சுஙி)

(கங) 'சொலப்பா மதுரமறிந்த கல்வித்துரை.' (எஉ)

(கச) 'நிரந்த கருணைத் தயாநிதியே! நீதா!' (எஎ)

எனவரும் சொற்றொடர்கள் பொருள்நயம் மிக்கனவாய், அரிய இன்சொற் குவியலாய், கற்றுர் கருத்தை ஈர்த்துத் தம் வயப் படுத்துவனவாய் இயைந்து இன்பந்தருகலே அறிக.

கூ. முற்றுரை

இந் நூலகத்துத் துருவித்துருவி ஆய்ந்தால் இன்னும் இவை போன்றசொல் பொருள் கருத்து நுணுக்கங்களேயெல்லாம் கண்டு கண்டு இன்புறலாம்; இவைகளே இன்னும் விரித்தெழுதினுல் அதுவே பரந்துபட்டு அடங்காது செல்லும். ஆதலால் எடுத்துக் காட்டுக்காக இங்கே சில காட்டப்பெற்றன.

இந்நூல் ஏறக்குறைய ஐம்பதாண்டுகட்கு முற்பட்டு அச்சில் பதிக்கப்பட்டதெனத் தோன்றுகின்றது; தெற்றென அறிதற் கில்லே; பழைய பதிப்பு ஒன்றுளது; அதில் இந்நூலைக் குறித்த ஆண்டோ, பதிப்பித்த காலமோ ஒன்றுங் குறிக்கப்பெறவில்லே. தமிழ்ப் புலவர்கள் வரலாறு (பதினேழாம் நூற்றாண்டு) என்னும் நூலினும் இந்நூலைக் குறித்துக் காலவரையறை காட்டப்பெற வில்லே; இந் நூலாசிரியர் காலத்தையும் ஒன்றும்எடுத்துக்காட்ட வில்லே. ஆகவே, இதன் காலத்தைத் தெள்ளத் தெளிய அறிய இய லாததாக இருக்கின்றது. அது, பண்டைக் காலத்திருந்தே வந்த ஒரு பெருங்குறை. அதனுல் பெயர் தெரியாப் புலவர்களும் பலர் உள்ளனர். அவர்கள் பாடிய பாடல்களின் சொற்றொடரைக் கொண்டே பெயர் சூட்டும் தன்மையும் உளதாவதாயிற்று. அஃதெவ்வாருயினும் ஆகுக. நூல் கருத்துடையது; நயம்பல செறிந்தது; தமிழ்த்தாய்க்கு ஓர் அணிகலனுகத் திகழ்வதென்பது மட்டும் உண்மை; தேற்றம்.

ஆதலால், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையா பிள்ளேயவர்கள், இத்தகைய நூலுக்கு ஓர் உரையெழுதுவித்து வெளியிட எண்ணினர்கள்;

அப் பணியை என்பால் கொடுத்து ஊக்கினர்கள். இதற்கு என் உளங்கனிந்த நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன். சில்லாண்டுகட்கு முன் வெளிவந்துள்ள **'சந்திர விலாசம்'** என்னும் நாலுக்கு என்னை உரையெழுதத் தூண்டினர்கள்; அச் சந்திர விலாசத்துக்கு உரையெழுதி முடித்தேன். பின் அது போல் இதற்கும் உரையெழுதி முடித்துள்ளேன். இந் நூல் முழுதும் சிலேடையணி கொண்டதாகவே பெரும்பகுதியிருப்பதால் சொற்களை அலசிப் பார்த்தே பொருள்கண்டு எழுதவேண்டியதாயிற்று. சில எளிதிற் புலனுயின; சில எளிதிற் புலனுகாவண்ணம் கருத்தை உறுத்தின. ஆயினும் 'முயற்சி திருவினையாக்கும்' என்னும் பெரியார் மொழிக்கேற்ப, ஆட்சியாளர் அவர்கள் ஊக்கமும் இறைவன் திருவருள் ஆக்கமும் துணையாக முன் நின்று உணர்த்த இந்நூல் உரை, விளக்கங்களுடன் முற்றுற்றன. இதில் (அஅ) ஆம் பாட்டு முதல் (ஈச) ஆம் பாட்டுக்கள் வரை இடக்கரடக்கலாகவும் பொருள் விளங்கக் கூடியனவாகவும் இருத்தலால் அவைகட்கு அருஞ்சொற்களுக்கு மட்டும் பொருள் குறிக்கப்பெற்றுள்ளன.

ஆகலான், இந் நூல் தமிழ்ப் பெருமக்களின் கையகத்தும் நாவகத்தும் நடந்து திசையனைத்தின் பெருமையெலாம் தென் றமிழும் தென்னுடும் வென்றேறச் சிறப்புடன் திகழும் என்னும் கருத்துடையேன்.

இங்ஙன்

செல்லூர்க்கிழான் செ. ரெ. இராமசாமி,

உரையாசிரியன்.

சிறப்புப்பாயிரம்

இந்நூலை அச்சிற்பதித்து வெளிப்படுத்தியதற்கு மகிழ்ந்து
எட்டையபுரம் சமத்தான வித்துவான்
முகவூர் மீனாட்சிசுந்தரக் கவிராயரவர்கள் கூறியது

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உலகமெலாம் புகழ்செய்குமா ரெட்டமபூ
மனுக்கினமை யோனும் எங்கள்
பலகலியுந் தேர்ந்தவெங்க டேசுரெட்ட
பாண்டியசம் பனகும் பா ! நின்
குலமதின்முன் னுதித்தரசு புரிந்தவெங்க
டேசுரெட்ட குரிசின் மேற்பா
வலன்கடிகை மணிவகுத்த சமுத்திரவி
லாசமதுண் மருவத் தானே. (க)

விருத்திரன்போற் புகுந்துகரக் திருத்தகவை
யினைவிலக்க வேண்டு மென்றே
அருத்தியொடு பலர்பணிவாக் கேட்கமுன்போ
லத்தமதா லறிந்துட் கொண்டு
திருத்திமகிழ் புலவருக்கு வரவெளியாக்
கினனிந்தச் செயற்கி யாங்கள்
கருத்தினுவப் பிருத்துகைமா றீதல்வினை
யாதலன்றிக் காணற் பாற்றே. (உ)

முருகன் துணை

சமுத்திர விலாசம்

கழிக்கரைப் புலம்பல்

காப்பு

பிள்ளையார் வணக்கம்

விருதிடு சரண ராசன்
வேங்கடே சுரவெட் டேந்த்ரன்
ஒருதிடப் புருடன் கீர்த்தி
யுயர்சமுத் திரவி லாசங்
கருதிடத் தமிழாற் சொன்னேன்
கயமுகத் தசுரன் வீழப்
பொருதிடர் களையத் தாக்கும்
புகர்முகக் களிறு காப்பாம்.

(உரை) விருது இடு சரண ராசன் - வீரக்கழலே அணிந்த கால்களையுடையவன், வெங்கட ஈசுர எட்டேந்த்ரன் - வேங்கடேசுர எட்டப்பனென்னும் திருப்பெயரையுடையோன், ஒரு திட புருடன் - ஒப்பற்ற வலிமைமிக்க ஆண்டகையோன் ஆன இத்தகையோனுடைய, கீர்த்தி உயர் - புகழ்மிக்க, சமுத்திர விலாசம் கருதிட - 'சமுத்திர விலாச' மென்னும் நூலே யாவரும் விரைவுகூர்ந்து கற்குமாறு, தமிழால் சொன்னேன் - தமிழில் பாடினேன், கயமுகத்து அசுரன் வீழ - யானைமுகாசுரன் மடியும் படியாக, பொருது இடர்களைய தாக்கும் - போர்செய்து உலக இடுக்கண் எல்லாம் திரும்படி தாக்கிக்கொன்ற, புகர்முக களிறு

காப்புஆம் - புள்ளிபெற்ற முகத்தையுடைய யானைமுகக் கடவுள் இந் நூலுக்கு இடர்களைந்து காப்பதாகும். (இந் நூலில் சொற் குற்றம் பொருட்குற்றம் முதலியன வராதவாறு தடுத்துக் காத்து நிற்கும்.)

கீர்த்தி - மிகுபுகழ். இதனைத் தொல்காப்பியர் 'சீர்த்திமிகு புகழ்' என்பர்.

விருது - வீரர்களும் அரசர்களும் தம் வெற்றிக்கு அறிகருவி யாகக் காலிலணியும் தண்டை, இதனை ஆன்றோர் இலக்கியங் களில், 'கழல்' என்ப. 'சூழ்கழல் மன்ன' என இளங்கோ வடிகளும்,

'சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து'

எனத் திருவள்ளுவரும் அருளுதல் காண்க.

'விருதிடு சரண ராசன்' என்றமையான், மாற்றரசர்களை வென்று விருதணி புனைந்து நாட்டில் பசியும் பிணியும் பகையும் நீங்க அவன் ஆளும் பெருமிதம் கூறிப் பாட்டுடைத் தலைவனின் உயர்ச்சியைக் காட்டியவாறும்.

இத்தகைச் சிறப்புவாய்ந்தோன் புலவர் பாடும் புகழுடன் விளங்க 'இச் சமுத்திர விலாச' மென்னும் இந் நூலினைக் கருதிட என்று கூறுவதால் பிறர் விரும்பும்படியான தன்மையிற் சொற்பொருள் நயங்கள் அமைத்தவாறும்.

கூ

பாட்டுடைத் தலைவன் சிறப்பு

பார்போ ருந்திய மேன்மை தங்கிய
பார தின்புய பூதரன்
பங்கை யாசன மங்கை மேவிய
சங்க பாணி நிகர்த்தவன்

கூர்போ ருந்திய வேலை டுத்த
குமார வெட்டன் வரத்தினுற்
குவல யத்தரசு செயமு னைத்தநய
குணவி தட்சண விவேகவான்

கார்போ ருந்திய கொடையி னுனழகு
கண்டு மாதர்மட லெழுதவே
காம னைப்பொருது சோம னைக்குடை
கவித்த ராச துரந்தரன்

வேர்போ ருந்திய தாரு வின்புடை
மேவு மிந்திர னுமென
வேங்க ராசல தந்தி யேறிய
வேங்க டேசுர வெட்டனே.

(உரை) பார்பொருந்திய - பாரில் நிலைத்த, மேன்மை தங்கிய - உயர்வுபொருந்திய, பார தின்புய பூதரன் - பெரிய வலிமைபெற்ற தோள்களாகிய மலைகளையுடைய மன்னன், பங்கைய ஆசன மங்கை மேவிய - செந்தாமரை மலரில் வீற்றிருக் கின்ற திருமகள் சார்ந்திருக்கின்ற, சங்கபாணி நிகர்த்தவன் - சங்கேந்திய கைகளையுடைய திருமாலை ஒத்தவன், கூர்பொருந்திய-கூர்மையுள்ள, வேல் எடுத்த - வேற்படை ஏந்திய, குமார எட்டன் வரத்தினுல் - குமார எட்டப்பனுடைய வரச் சிறப் பினுல், குவலயத்து அரசு செ(ய்)ய - உலக ஆட்சி நடத்துதற்கு, முன்னர்த்த - பிறந்த, நயகுண விதட்சண விவேகவான் - நற்குண முடைய தற்காலத்துக்கேற்ற அறிவுடையோன், கார்பொருந்திய கொடையினுன் - மேகத்தை யொத்த கைம்மாறு கருதாதது

கொடுக்கும் ஈகையாளன், அழகு கண்டு - அவன் அழகையெல்லாம் அறிந்து, மாதர் மடல் எழுத - மங்கையர் தன் உருவத்தை எழுதுதற்கு, காமனைப் பொருது - மன்மதனுடன் போர்செய்து வென்று, சோமனை குடைகவித்த-அவன் குடையாகிய நிலவைத் தன் குடையெனக் கொண்ட, ராச துரந்தரன் - அரசர்க்கரசன், வேர் பொருந்திய - வேரூன்றி நிலைத்த, தாருவின்புடை மேவும் - ஐந்தருக்களைத் தன்னிடம் கொண்டுள்ள, இந்திரன்ஆம் என - இந்திரனென்று சொல்லும்படி, வெம்கர அசல தந்தி ஏறிய - கொடிய கைம்மலை என்று சொல்லத்தக்க யானையின்மீது ஏறி உலாவருகின்ற, வெங்கடஈசுர எட்டன் - வேங்கடேசுர எட்டப்பனென்னும் திருப்பெயரையுடையான்.

பங்கயம் - பங்கையம் என வந்தது போலி. பங்கய ஆசனம் பங்கயாசனம் எனப் புணர்ந்தது. வடமொழி தீர்க்கசந்தி.

கூர்பொருந்திய வேல், பகைவென்று தேய்த்துப் பின் போர் நிகழாமையால் தீட்டிப் புதுமையாக்கப்பெற்ற வேல். எனவே பகைவரின்றி விளங்குவோன் எனப் பாட்டுடைத் தலைவன் சிறப்பைப் பாராட்டிக் கூறியவாறும். இவ்வாறுக வேலின் சிறப்பைக் கூறப்போந்த திருத்தக்கதேவர் தாம் அருளிய சிவகசிந்தாமணிக் காப்பியத்தில்,

[1] 'நீரேந்தி நெய்ம்மிதந்து நிணம்வாய்ப் பில்கி அழல்விம்மிப்
போரேந்திப் பூவணிந்து புலவு நாறும் புகழ்வேலான்' (க)

என்பதால் அறிக.

---

1. சிவகசிந்தாமணி : உஇகக.

உ

இதுவும் அது

வனச மண்டப வனிதை தங்கிய
மரும னம்புவி யாளவே
வந்த வன்சேக வீர ராம
வரோத யப்பெயர் நாட்டினேன்

கனக தண்டிகை யதிப னந்துரை
கசது ரங்கத ளத்தினன்
கடன்மு ழங்கிய தெனமு ழங்கிய
கவிதை கொண்டுயர் வாசலான்

தனத னென்றநிதி வளர வுங்கிளைஞர்
தழைய வும்பு துமையாகவே
சட்ட முஞ்செம்ப வெங்க டேசுர
வெட்ட மன்கரு ணாகரன்

தினமு மந்தணர்கள் தவமிகுந்த வர்கள்
செயல றிந்தமு தருத்தியே
சிவனே யும்பெரிய குருவையுந் தொழுது
செல்வ நாளும் வளர்ப்பனே.

(உரை) வனச மண்டப வனிதை தங்கிய மருமன்-செந்தாமரை மலரைக் கோயிலாகக் கொண்ட திருமகள் குடிகொண்டிருக்கின்ற மார்பையுடையவன், அம் புவி ஆளவே வந்தவன்-அழகிய இவ்வுலகை அரசுபுரியப் பிறந்தவன், சேகவீர ராம வரோதயப் பெயர் நாட்டினேன் - 'சேகவீர ராம' னென்னும் கொடைமிக்க தன் திருப்பெயரை உலகில் நிலை நிறுத்தினேன், கனக தண்டிகை அதிபன் - பொன்னால் செய்த பல்லக்கையுடையவன், நம் துரை-நம் வேந்தன், கச துரங்க தளத்தினன் - யானைப்படை குதிரைப் படைகளையுடையான், கடல் முழங்கியது என - கடல் முழக்கஞ் செய்ததென்று சொல்லுமாறு, முழங்கிய கவிதை கொண்டு - இடைவிடாமல் பாடப்பெறுகின்ற இசைப்பாடல்களைக் கொண்டு நிறைந்து, உயர்வாசலான்-சிறந்த அரண்மனை முற்றத்தையுடை

யான், தனதன் என்று நிதி வளரவும் - குபேரனென்று சொல்லும் வண்ணம் செல்வம் பெருகவும், கிளைஞர் தழையவும் - தன்னை யடைந்தோர் செல்வத்தால் செழிப்புறவும், சட்டமும் செய்த - ஒத்தநிலையில் வாழும்படி சட்டத்தையும் திருத்தியமைத்த, வெங்கடேசுர எட்டமன் கருணாகரன் - வேங்கடேசுர எட்ட னென்னும் மன்னனுகிய அருட்கு இருப்பிடமானவன், அந்தணர் கள்-அழகிய ஒழுக்கமுடையவர்கள், தவம் மிகுந்தவர்கள் - தவத் தில் மிக்கவர்கள் ஆகியவரின், செயல் அறிந்து - செய்கையை ஆராய்ந்தறிந்து, தினமும் அமுது அருத்தி - (அவர்கட்கு) நாள் தோறும் உணவூட்டி (மகிழ் வித்து), சிவனீயும் பெரிய குருவை யும் தொழுது - சிவபெருமானையும் பெருங்குரவனுகிய அகத்திய முனிவரையும் வணங்கி, செல்வம் நானும் வளர்ப்பன் - செல்வம் நாள்தோறும் பெருக வாழ்பவனுவான்.

வனச மண்டபம் - தாமரைமலர் மாளிகை. வனிதை-அதில் தங்கியிருக்கின்ற திருமகள். மருமம் - மார்பு. அதையுடையன் மருமன். திருமகள் மார்பிலுறைகின்ற திருமாலின் சாயலாக உள்ளவன். உலகை நெறி முறைதவருது ஆட்சி செலுத்தி ஆளு கின்ற வேந்தன், ஆதலால் பாட்டுடைத்தலைவனுன இவனைத் திருமாலின் தன்மையான் என, உயர்த்துக் கூறியவாறும்.

'கச துரங்க தளத்தினுன்' என்பது, யானை குதிரை முதலிய நால்வகைப் படைகளையும் உடையோன் என அவன் வீரப் பெரு மிதத்தை விளக்கியவாறும். அரசர்கட்கு மற்ற எவ்வகைச் செல்வத்தினும் முதன்மையானது, படையின் செல்வமேயாகும். இதனை,

'படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு'

என்று திருவள்ளுவரும் படையையே முதலில் வைத்துக் கூறு வது காண்க. ஆகவே படைப்பெருக்கத்தைச் சுட்டிக்காட்டிப் பாட்டுடைத்தலைவனின் வீரப் பெருமையை இதனுல் விளக்கிய வாறும்.

இந்நூல் தலைவனுன, வெங்கடேசுரெட்ட வேந்தன், 'விரு திடு சரண ராசன், திண்புய பூதரன், கார் பொருந்திய கொடை யினுன், மலர் வனிதை தங்கிய மருமன், கச துரங்க தளத்தினுன், சிவனீயும் பெரியகுருவையும் தொழுது செல்வம் நானும் வளர்ப் போனவன். இத்தகைய மக்கட்பண்போடு செல்வமும் சிரும் சிறப்புமிக்க ஏந்தல், ஒருநாள் மாலைப்பொழுதில், பல்வகை வாத்தியங்கள் முழங்கத் தேரில் ஏறி உலா வருகின்றுன்- அவன் உலாவைத் தொடர்ந்து ஆடவர், பெண்கள் நிறைந்த கூட்டம்

பின்தொடருகின்றது. அவருள், பெண்கள் குழாத்தில், கட்டழகு வாய்ந்த கன்னி, மங்கைப் பருவம் எய்தி நின்றவள், அவள் 'பத்தினி' என்னும் சாதிவகுப்பில் சார்ந்த தன்மையள், அவள் அழகெலாம் திரண்ட அணங்குக்கும் அணங்கு செய்வோள். வெங்கடேசுரன் உலாவைக் காண்கின்றுள். அவன் தோளையும் திருமுகத்தையும் அடிமுடியுடன் பார்த்தாள்; அவன் அழகில் தன் நெஞ்சைப் பறிகொடுத்தாள். நிலைகலங்கி நின்றுள்; காதல் நெஞ்சைத் துளைத்தது, அவன் முல்லைமலர்மாலையைப் பெற விழைந்தாள். அவள் நெஞ்சை ஈர்த்துக்கொண்டு வேந்தன் தன் பரிவாரத்துடன் தன் அரண்மனை சென்றடைந்தான்.

இவள் காட்சியைப் பார்த்து வெட்கிக் கதிரவன் மறைந்தான்; மாலைப் பெண் வந்தாள்; முல்லைப்பல் தோன்றச் சிரித்தாள்; வான நங்கை தன் முக நிலவை வெளிக்காண்பித்துத் தோன்றினுள். பத்தினி தன் இல்லஞ் சேர்ந்தாள். அன்று உணவுகொள்ள இயலவில்லை; இரவு முற்றுகின்றது; படுக்கை விரித்தாள்; படுத்தாள்; கண்கள் துயில்கொள்ள இசையவில்லை; தன் இல்லத்துக்கு மூன் கரிய கடல், கதறுகின்றது; காதல் உணர்வை மிகுதிப் படுத்துகின்றது. அக் கடலை முன்னிலைப்படுத்திக் கடலுடன் பேசுகின்றுள்; அதில் தோன்றும் மீன்கள், பிற பொருள்கள், மரக்கலங்கள், குவளை, கழிக்கரை, நாரை முதலிய எல்லாவகைப் பொருள்களிடமும் கூறிக்கூறித் தன் காதலுணர்ச்சியை வெளிப் படுத்தி வருந்தி, இறுதியில் இந்நூலுக்குரிய தலைவனைக் கனவிற் கண்டு களித்து, அதன்பின் நேரிற்கண்டு அவன் அன்பு பெற்றுக் கலந்து என்றும் பிரியாமல் இனிதின் வாழ்வதாக இந்நூலை ஆசிரியர் முற்று விளக்கினர்.

அடுத்துவரும் பாட்டுமுதல் இத்தன்மைகள் பலவும் செறிந் ததைக் காணலாம். அவைகளில் தலைவனுக்கும் பிறபொருள் கட்கும் சிலேடையாக அமைந்து இன்பந்தருதலைக் காண்க. (உ)

கூ

பாட்டுடைத் தலைவன் வரும் பவனிக்கும், கடலிற்கும் நிலைடை

[முதல்மடக்கு]

தொடுத்த வாரங் கடவாமல்
சூழ்கம் பளமும் பிரியாமல்
தொலையாச் சங்கந் திரண்டுவரத்
துணைத்தோ ணிவந்து பொன்னேந்த

அடுத்த வாய்மை கடவாமல்
அவனி தனிலே தொட்டுமிகுந்
தார்க்கு மினம்போர் செயம்படைக்க
அங்கே யாழ நிலையாமல்

எடுக்குங் கயமுங் குதிரையுங்கொண்
டெங்கோன் வெங்க டேசுரெட்டன்
எய்தும் பவனி போலஎனக்
கெதிரே தெரிந்தாய் கருங்கடலே !

தடுக்கு மணையும் பொருவாய்நீ
தடுக்கு மணையும் பொருந்தேனுன்
தப்புத் தரமே சொல்லேன்மி
தப்புத்த ராமற் கேட்பாயே.

(உரை) தொடுத்த ஆரம் கடவாமல் - கட்டப் பெற்ற மாலை விலகாமலும், சூழ் கம்பளமும் பிரியாமல் - சுற்றி அணிந்துள்ள சிவந்த ஆடை கீழே நழுவாமலும், தொலையா சங்கம் திரண்டுவர-தொடர்ந்து வருகின்ற மக்கட் கூட்டம் நெருங்கிவர, துணைதோள் நிவந்து பொன் ஏந்த - இரண்டு தோள்களும் (மகிழ்ச்சியால்) பூரித்து அழகுதோன்ற, அடுத்த வாய்மை கடவாமல் - சார்ந்த உண்மை தவறாமல், அவனி தனிலே - உலகத்தில், தொட்டு மிகுந்து - சார்ந்து பெருக்கமுற்று, ஆர்க்கும் இனம் போர் செயம் படைக்க-வெற்றி முழக்கஞ் செய்கின்ற மிகுதியான போரில் வெற்றிபெற, அங்கே ஆழம் நிலையாமல் - அவ்விடத்தே நிலைப்பாக நிற்காமல், எடுக்கும் கயமும் குதிரையும் கொண்டு -

நிமிர்ந்து நிற்கின்ற குதிரைகளையும் யானைகளையும் தன்னுடன் வரப் பெற்று,[1]

தொடுத்த வாரம் கடவாமல் - தான் சார்ந்துள்ள கரையை விட்டுத் தாண்டாமல், சூழ் கம் ப(ள்)ளமும் பிரியாமல்-தன்னைச் சுற்றிப் பக்கத்திலுள்ள பள்ளங்களையும் விட்டு நீங்காமல், தொலியா சங்கம் திரண்டுவர - கெடாத சங்குகளும் சேர்ந்து மேல்வர, துணைத்தோணி வந்து பொன் ஏந்த - பெரிய படகுகள் வந்து பொருள்களைக் கொள்ள, அடுத்த வாய் - சார்ந்ததான, மீகள் தவாமல் - மேகங்கள் நீங்காதனவாய், அவனிதனில் - பூமியிலுள்ள, ஏது - எந்தப் பொருள்களிலும், ஓட்டுமிகுந்து - ஓட்டுவது (சார்வது) மிகுதியாகி, ஆர்க்கும் - ஒலிக்கின்ற, இனம் போர் செய் - கூட்டமாக மோதுகின்ற, அம்பு அடைக்க - நீர் அலைகள் பெருக, அங்கே - உள்ளிடத்தே, ஆழம் நிலையாமல் - ஆழத்தின் அளவு தெரியவொண்ணுமல், எடுக்கும் கயம் முங்கு - மேல் எழும்பியும் ஆழத்தில் செல்கின்றனவுமாய் மறைக்கச் செய்கின்ற, திரையும் கொண்டு - அலைகளையும் உடையதாகி,[2]

எம்கோன் - எம்வேந்தன், வெங்கடேசுர எட்டன் எய்தும் பவனிபோல - வெங்கடேசுரெட்டன் வருகின்ற உலாக்காட்சி போலாக, எனக்கு எதிரே தெரிந்தாய் கருங்கடலே-எனக்குமுன் காட்சிதந்தாய் கரிய கடலே !, தடுக்கும் அணையும் பொருவாய் நீ - தடைப்படுத்தி நிற்கின்ற கரையையும் நீ மோதி மோதி அடிப்பாய், தடுக்கும் மண்ணையும் பொருந்தேன் நான் - நான் ஓலைத் தடுக்கையும் (தவிசையும்) உயர்ந்த இருக்கை (ஆசனப் பலகை) யையும் சேர்ந்து இருக்கேன், தப்பு உத்தரமே சொல்லேன் - தவறுதலாக யாரிடமும் விடை ஒன்றும் கூறமாட்டேன், மிதப்பு தாராமல் - கருத்துவைத்து, கேட்பாயே - நான் சொல்வதை நன்கு கேட்பாயாக.

ஆரம் - மாலை. வாரம் - கரை. இப் பாட்டு, தலைவன் உலாக் காட்சிக்கும், கடலுக்கும் சிலேடைப் பொருளமைய வந்துள்ளமை காண்க.

'கருங்கடலே !' எனக் கடலைத் தன் முன்னிலைப்படுத்திக் கூறுகின்றாள். 'நீ உன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்ற கரையையும் மோதுவாய்; நான் ஓரிடத்தில் இருக்கலாற்றாமல் காதலாற் கலங்கிநிற்கின்றேன்; நான் உண்மையே புகல்வேன்; தவறு சொல்லேன்; ஆதலால், நீ உன்னிப்புடன் கேட்கவேண்டும்' என்று தன் மனநிலையை அதனுடன் கூறுகின்றாள். 'மிதப்புத்

---

1. பாட்டுடைத் தலைவன். 2. கடல்.

தராமல் கேட்பாயே' என்று தொடங்கித் தன் கருத்தை வாய் விட்டுக் கூறுதல் காண்க.

கடல் அஃறிணைப்பொருள்; அதனை முன்னிலைப்படுத்துக் கூறுவது யாங்ஙனமெனின்? காம மிக்கார்க்குத் தம்மைக் காதற் றுன்பங் கவற்றித் துன்புறுத்தலே, அவைகளோடு சார்த்திக் கேட்பன போலவும் இளக்குந போலவும் சொல்வது, அத் துன்பத்தைப் போக்குதற்கேற்ற வாயிலாம் எனக் கொள்க. இதனைத் தொல்காப்பியர் பொருளியலில் 'நோயும் இன்பமும்' எனத் துவங்கும் நூற்பாவில்,

[1]'உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்
சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபின் தொழிற்படுத் தடக்கியும்'

என்னும் பகுதியில் கூறியதுகொண்டு அடக்குக. (கூ)

---

1. தொல். பொருள். பொருளியல்: உ.

கடலிற்கும், தலைவிக்கும் சிலேடை

[முதல்மடக்கு]

திருவும் பிறையு முன்றோற்றத்
திருமா லெயும்பின் னேதாங்கிச்
சேரு மோதி மங்குலுக்குஞ்
சிறப்பா வகமுங் காட்டுவைநீ

திருவும் பிறையு முன்றோற்றத்
திருமா லெயும்பின் னேதாங்கிச்
சேரு மோதி மங்குலுக்குஞ்
சிறப்பா வகமுங் காட்டுவனுன்

பருவ முகில்போற் கொடுத்துநம்மைப்
பரிப்போன் வெங்க டேசுரெட்டன்
பவனி யடுத்து வருவேன்முன்
பவனி யடுத்து வருவாய்நீ

இருவர் நாமு மொப்பாமென்
றிருந்தோங் கடலே! கழிக்கரையே!
இரையுந் திரையின் மீனே! சங்
கினமே! யினமே கேட்பீரே.

(உரை) கடலே - பரவையே! திருவும் பிறையும் முன் தோற்ற - திருமகளும் திங்களும் (திருப்பாற்கடலைக் கடைந்த) முன்காலத்தில் உண்டாகச் (செய்து), திருமாலெயும் பின்னே தாங்கி - திருமாலெயும் (தன்மேற் பள்ளிகொள்ள) ஏற்று, சேரு மோதி - தன் அலைகளால் தான் சேர்ந்துள்ள இடத்தைத் தாக்கி, மங்குலுக்கும் - மேகத்துக்கும், சிறப்பா அகமும் காட்டுவை நீ - சிறப்புடன் உன் இடத்தைக் காணச்செய்வாய் நீ,[1]

திருவும் பிறையும் - தன் (கரிய மினுமினுப்பான) அழகும் நெற்றியும், முன் தோற்ற-முன்தோன்ற, திரு மாலெயும் பின்னே

1. கடல்.

தாங்கி - அழகுள்ள பூமாலையையும் தன் மேலிடத்துக்கொண்டு, சேரும் ஓதி - பொருந்தியிருக்கின்ற கூந்தலால், மங்குலுக்கும் சிறப்பா - இருட்டினைப் பார்க்கினும் சிறப்புடையதாக, ஆவகமும் காட்டுவன் நான் - அம்புபோன்ற கண்களையும் நான் தாங்கி நிற்பேன்,[1]

பருவமுகில்போல் - கார்காலத்து மேகம்போல, கொடுத்து - வேண்டும் பொருள்களை ஈந்து, நம்மைப் பரிப்போன் - நம்மைப் பாதுகாப்போனை, வெங்கடேசுரெட்டன்——, பவனி அடுத்து வருவேன் - உலாவருகின்ற இடத்தைச் சார்ந்து வருவேன், நீ முன்பு அவனி அடுத்து வருவாய் - நீயோ உனக்கு முன்னுகவுள்ள தரையையடுத்து அலைகளால் மோதுவாய், நாம் இருவரும் ஒப்பு ஆம் - நாம் இருவர்களும் இத்தன்மையினால் ஒத்தவராவோம், என்று இருந்தோம் - என உலகத்தார் சொல்லுமாறு இருக்க லாமெனும், கழிகரையே - கடல்நீர்வரும் இடமே! திரையும் திரையின் மீனே - இரைச்சலிட்டு வருகின்ற அலைகளிலுள்ள மீனே! சங்கு இனமே - சங்குக் கூட்டங்களே! இ(ன்)னமே கேட்பீரே - இனிமேல் நாம் ஒன்றுக இணைந்திருக்கும் தன்மையினால் நான் சொல்வதைக் கேட்பீராக.

பருவமுகில் - கார்காலத்து மேகம். கார்காலத்தில் கருக் கொண்டெழுந்த மேகம், கங்குகரையின்றி மழைபொழிந்து உயிர்களைப் பாதுகாப்பதுபோல, வெங்கடேசுர எட்ட வேந்தன் கொடையினால் உலகமக்களைக் காத்துவருகின்றனன் என்னும் கருத்தினால் 'பருவமுகில்போல் கொடுத்து நம்மைப் பரிப்போன்' என்று தலைவி நயம்படக் கூறினள்.

> [2]'பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
> குரிமையின் உரிமையின் உதவி'

எனத் திருமுகப் பாசுரத்தினும் வருதல் காண்க.

இவ்வாறு தலைவன் பெருமையைக் கூறித் தன் காதல் மயக்கத்தை வெளிப்படுத்தும் கருத்தினளாய்க் 'கடலே! கழிக் கரையே! மீனே! சங்கினமே! என் குறையைக் கேண்மின்' என வேண்டுகின்றனள். இதில் அவள் உள்ளம் பறிபோய் நிற்கின்ற நிலையை 'இனமே கேட்பீரே' என்ற தொடரால் குறிப்பது காண்க. (ச)

---

1. தலைவி.
2. பதினொராந் திருமுறை, திருமுகப் பாசுரம் : க.

ரு

[கடைமடக்கு]

உள்ள திருக்கை காணீரே
யுறங்கா திருக்கை காணீரே
யோசைக் கடலைப் பொருமலையே!
யொழியேன் விரகப் பொருமலையே

கள்ள ருதாங் குவளைகளே
கழலுங் கரந்தாங் குவளைகளே
கரையிற் படராத் துப்பீரே!
கலந்த துடலத் துப்பீரே

அள்ள லளியுங் களிக்கரையே!
யழைப்பார் மாதர் களிக்கரையே
யாறு வகுப்புக் காற்றேனே!
யாழிப் புடைப்புக் காற்றேனே

வெள்ள மூரும் பானத்தே!
விரும்பா திருந்தேன் பானத்தே
வெங்க டேசு ரெட்டனையே
மேவத் தடுக்கு மெட்டனையே.

(**உரை**) உள்ள திருக்கைகாள் - (கடலி) லுள்ள திருக்கை மீன்களே! நீரே - நீங்கள், உறங்காது இருக்கை காணீரே - நான் (காதலால்) உறங்காமல் இருப்பதைக் காணீரோ, ஓசை கடல் ஐ பொரும் அலையே - ஒலிக்கின்ற கடலில் அழகாக மோதுகின்ற அலைகளே, விரகப் பொருமலையே ஒழியேன் - காதற்பெருக்கம் நான் குறைந்தேனில்லையே, கள் அருது ஆம் குவளைகளே-தேன் மிக்க குளிர்ந்த குவளைமலர்களே! கரம்தாங்கு வளைகளே கழலும்- (காதலால்) நான் கைகளில் அணிந்துள்ள வளையல்கள் கழலா கின்றன, கரையில் படரா துப்பீரே - நீரிற் படர்ந்திருக்கின்ற பவளக் கொடிகளே!, உடலத்து பீரே கலந்தது - என் உடல் இடமெல்லாம் தேமலே படர்ந்துள்ளது, அள்ளல் அளியும் களி கரையே - சேறு குழம்பியுள்ள கடற்கரை இடமே! அழைப்பார்

மாதர்கள் இக் கரையே - எம்போன்ற பெண்கள் இவ்விடத்துக்கு உன்னை அழைப்பார்கள், ஆறு வகுப்பு கால்தேனே - ஆறு வகையான கால்களையுடைய தேன் வண்டுகளே !, ஆழி புடைப்புக்கு ஆற்றேனே - கடலின் மோதுதலுக்குத் தாங்கவொண்ணாதவளாயிருக்கின்றேனே, வெள்ளம் ஊரும் பால் நத்தே - நீர்மேல் மிதந்து ஓடிவரும் வெள்ளிய சங்குகளே, பால் நத்தே விரும்பாது இருந்தேன் - விரும்புகின்ற பாலையே விரும்பாமல் இருந்தேன், வெங்கடேசு ரெட்டனேயே———, மேவ தடுக்கும் மெட்டு அ(ன்)னையே - விரும்புதற்குச் செருக்குக்கொண்ட என்தாய் தடுக்கின்றாளே.

காதலால் நெஞ்சங் கலங்கி அலமருகின்ற தலைவியின் கண் முன் கடலில் உள்ளனவான திருக்கைமீன்கள், குவளைமலர்கள், கடற்கரை, சங்கு முதலியன தோன்றுகின்றன. அவைகளையெல்லாம் தன்முன் அழைக்கின்றாள் ; முன்னிலைப்படுத்திப் பேசுகின்றாள். பேசுங்கால் தான் படும் துன்பங்களையெல்லாம் அவைகளிடம் கூறுகின்றாள். ‘ திருக்கைகாள் நீர், நான் உறங்காதிருக்கையைக் கண்டீரில்லையே ; கடற்கப் பொரும் அலையே ! நான் காதற் பொருமலை யொழிக்கும் வழி யறியாதிருக்கின்றேனே ! தேன் நிரம்பிய குவளைகளே !, என் கரம் தாங்குவனைகள் கழல்கின்றனவே !’ என்று ஒவ்வொன்றின் முன்பாகத் தன் துயரைக் கூறிக் கலங்கி, ‘வெங்கடேசுர ரெட்டனைத் தழுவ எண்ணும் என்னை மெட்டு (மேட்டிமை) உடைய என் அன்னை தடுக்கின்றாளே ! என்செய்வேன். நீவிர் ஒருவரேனும் வந்து உதவுதலாகாதோ’ என மனமுருகி வருந்துகின்றாள்.

காற்றேன் - கால் + தேன். கால்களையுடைய வண்டு. தேன் வண்டின் சாதிப்பிரிவுகளில் ஒருவகை.

‘ தூங்கிசை வண்டும் தேனும் சுரும்பொடு ஞிமிறும் பாட ’ என வரும் நைடதச் செய்யுளில் வண்டுவகைகளில் ‘ தேன் ’ குறிக்கப்பட்டமை தெளிக.

மெட்டு - மேட்டிமை : செருக்கு. பிறர் துன்பங்கூலையை எண்ணுத மனப்பான்மை. மேடு - உயர்வு. மற்றவற்றையெல்லாம் தாழ்த்தி தான்கொண்டதே கொள்கையாய்ப் பிறரை ஓர் பொருட்படுத்தாத குணத்துக்கு ‘ மெட்டு ’ என்ற பெயராயமைந்தது. ‘மேட்டிமை என்னிடம் காட்டுகிறாய் ’ என்னும் காவடிச்சிந்தினும், இஃது இப் பொருளில் வந்துள்ளமை அறிக.

(கு)

ஊ

[கடைமடக்கு]

காலே யலராக் கழுநீரே !
கண்ணீர் முலையைக் கழுநீரே
காட்டுத் தால மாமடலே !
காம னெடுக்கு மாமடலே

சோலே நாகப் பரப்பணையே !
தொடப்போ றேன்பூப் பரப்பணையே
துறைவா லாகத் துறுமனமே !
துடிக்கு மாலைத் துறுமனமே

சேலே விரட்டுஞ் சிறைக்குருகே !
சிறியே னிருக்குஞ் சிறைக்குருகே
தீரண்டுமுத் தீனுஞ் செவிக்கம்பே !
திரையோ சையுமென் செவிக்கம்பே

வேலே கொழிக்கு மென்னுரையே !
வெறப்பா மெவர்க்கு மென்னுரையே
வெங்க டேசு ரேட்டனையே
மேவத் தடுக்கு மேட்டனையே.

(உரை) காலே அலரா கழுநீரே - காலைப்பொழுதில் மல ராமல் மாலைப்பொழுதில் மலர்கின்ற செங்குவளை மலரே !, கண் நீர் முலையைக் கழுநீரே - கண்ணிலிருந்து வருகின்ற நீர் என் நகிலைக் கழுவுகின்ற நீராக இருக்கின்றது, காட்டு தால மாமடலே- காட்டிலுள்ள பனையின் பெரிய மட்டையே !, காமன் எடுக்கும் மாமடலே - மன்மதனால் எடுக்கப்பெறுகின்ற மாம்பூவாம் அம்பு களே யாகும், சோலே நாகப் பரப்பு அணையே - சோலையாகப் பரந்துள்ள புன்னைக் காடுகளின் வரிசைகளே !, தொடப்பொறேன் பூ பரப்பு அணையே - பூக்கள் பரப்பி விரித்துள்ள மெத்தையைத் தொடுதற்குக்கூட இயலாதவளாக இருக்கின்றேன், துறைவா லாகத்து உறும் அ(ன்)னமே - நீர்த்துறை மணற் குன்றுகளில் இருக்கின்ற அன்னப் பறவைகளே, துடிக்கும் மால் ஐதுறு

மனமே - மிக்க மயக்கங்கொண்ட என் மனம் துடித்து நிற்கின்றது, சேலே விரட்டும் சிறை குருகே - கெண்டைமீனைத் தொடர்ந்து பிடிக்கச் செல்கின்ற இறகுகளையுடைய கொக்குகளே !, சிறியேன் இருக்கும் சிறைக்கு உருகே - எளியேன் இருக்கின்ற சிறையிற்கிடந்து உழல்வதையொத்த என்னிலைக்கு இரக்கங் கொள்ளீர்களா ? திரள்முத்து ஈனும் செ(வ்)வி கம்பே - திரண்ட முத்துக்களை ஈனுகின்ற இளமையுள்ள சங்குகளே !, திரை ஓசையும் என் செவிக்கு அம்பே - கடலலை ஓசை என் காதுகளில் அம்புபோல் பாய்வதாகும், வேலே கொழிக்கும் மெல்நுரையே - கடலால் கரையில் ஒதுக்கப்படுகின்ற மெல்லிய நுரையே !, வெறுப்புஆம் எவர்க்கும் என் உரையே - யார்க்கும் நான் சொல்லும் சொற்கள் வெறுப்பாகவே தோன்றுகின்றன, வெங்கடேசுர எட்டனையே -, மேவ தடுக்கும் மெட்டு அ(ன்)னையே - விரும்புதற்குச் செருக்குகொண்டதாய் என்னைத் தடுக்கின்றாளே.

தலைவிக்குக் கடற்கரையில் காணப்படுகின்ற குவளைமலர், பனைமரம், புன்னைக்சோலை முதலிய பொருள்களின் தோற்றம், காதலை மிகைப்படுத்துகின்றன. அதனால், அவ் வுணர்வைத் தன்னுள் அடக்கவொண்ணுதவளாய்க் கருத்தழிகின்றாள் ; புலம்புகின்றாள் ; கண்ணீர் தாரைதாரையாகப் பெருக்கெடுத்து ஓடுகின்றது. நீவிர் கண்ணீர் வராமல் தடுக்கிறோ !, காமன் அம்பெடுப்பானே ! பூவிரித்த படுக்கை எனக்குந் துன்பந்தருவதாக இருக்கின்றது ; அதனைத் தொடுவதற்குங்கூட என்னுள் பொறுக்கலாற்று திருக்கின்றதே.

செவ்விக்கம்பு - இனிமையுள்ள சங்கு. செவிக்கு அம்பு - காதில் அம்பை நுழைத்தால்போன்ற துன்பம். செவ்வி, செவியென வந்தது தொகுத்தல் விகாரம். (சு)

ஏ

[கடைமடக்கு]

மருக்கு லாவு கேதகையே!
மாரு தொருத்திக் கேதகையே
வருத்த மெனக்கோ பானலமே!
வளருங் குயிற்கோ பானலமே

இருக்குந் தாராக் குஞ்சினமே!
யென்மேன் மடவார்க் குஞ்சினமே
இருன்மீன் பாயு மிடக்கயமே!
யெடுத்தான் மதனு மிடக்கயமே

ஓருப்புக் குழப்ப மாற்றலையே!
உள்ளக் குழப்ப மாற்றலையே
ஓடித் திரியு மாமதியே!
உருப்பங் கொடுக்கு மாமதியே!

விருப்பங் கூரு மோதிமமே!
விடியா திருக்கு மோதிமமே
வெங்க டேசு ரெட்டனையே
மேவத் தடுக்கு மெட்டனையே.

(உரை) மரு குலாவு கேதகையே - மணம் உலவுகின்ற தாழைகளே!, மாருது ஒருத்திக்கு - என் ஒருத்திக்கே இடை விடாமல், ஏது அகையே - வருத்தங்கொடுப்பது ஏனே? வருத்தம் எனக்கோ பானலமே வளரும் - நெய்தல் மலர்களே! எனக்கோ துன்பம் வளர்கின்றது, குயில் கோப அனலமே - குயிலாகிய சினந்தரும் நெருப்பே!, இருக்கும் தாரா குஞ்சு இனமே-(கூட்டில்) இருக்கின்ற நாரைக்குஞ்சுக் கூட்டங்களே!, என்மேல் மடவார்க்கும் - என்மீது பெண்களுக்குங்கூட, சினமே - வெகுளியே ஆகின்றது, இருல்மீன் பாயும் இட கயமே - வெள் இருல் மீன்கள் பாய்ந்தோடுகின்ற விரிந்த இடத்தையுடைய நீர்த்தடாகமே!, எடுத்தான் மதனும் இட கயமே - மன்மதனும் அம்பு தொடுத்தற்கு மீன்கொடியை உயர்த்தி நின்றுன், ஒரு

உப்பு! [*குமுப்பு - ஒப்பற்ற உப்புத்திரளே, அம்ஆற்று அலையே - உண்டாக்குகின்ற உவர்ப்பு நீராம் அலைகளே!, உள்ளக் குமுப்பம் மாற்றலையே - உள்ள மயக்கத்தை எனக்கு மாற்ற முடிய வில்லையே!, ஓடி திரியும் மாமதியே - ஒருங்கிலப்படாது ஓடித் திரிந்து செல்கின்ற என் பேரறிவே!, உருப்பம்கொடுக்கும் மாமதியே - வெப்பத்தை எனக்குத் தருகின்ற நிறை நிலாவே!, விருப்பம் கூடும் ஓதிமமே-அன்புமிக்குள்ள அன்னப்பறவையே!, விடியாது இருக்கும் மோது இமமே - வருத்துகின்ற பனியோ விடாமல் இருந்துகொண்டே இருக்கின்றது, வெங்கடேசுர எட்டனையே——, மேவ தடுக்கும் மெட்டு அ(ன்)னையே - விரும்புதற்குச் செருக்குக்கொண்ட என் தாய் தடுக்கின்றனே.

மரு - மணம். குலாவுதல் - தங்குதல் என்னும் பொருளில் வந்தது. அகை - வருத்துதல்.

உருப்பம் - வெப்பம். மாமதி - நிறைநிலவு.

காதல் நினைவு மீதூரப் பெற்றவர்க்குத் தென்றலும் கடலும் மாலையும் நிலவும் வருத்தங் கொடுப்பது இயற்கை. ஆதலான், 'சுழன்று சுழன்று வருந்துகின்ற என் பேரறிவே! நிறைநிலா சுட்டுருக்குகின்றதே என் செய்வே' னென்று வருந்துகின்றாள். 'வருத்தங் கொடுக்கும் மாமதியே' என்பதில் இக் காதலியின் கட்டற்ற மனத்துன்பம் - உணர்வு கலங்கிய நிலை கட்டுரைக்கப் படுகின்றது காண்க. (எ)

* குமுப்பு : குமும்பு ; வலித்தல் விகாரம்.

அ

மன்மதனுக்கும், கடலிற்கும் சிலேடை

[முதல்மடக்கு]

கருப்பஞ் சிலையை வேளெடுத்தான்
கருப்பஞ் சிலையை நீயெடுத்தாய்
கங்கு லாவும் பலவனுக்கே
கங்கு லாவும் பலவனுக்கே

மருப்பங் கயமே வனங்கருக்க
மருப்பங் கயமே வனங்கறுத்தாய்
மதமா தரையு மலைப்பதுஞ்சம்
மதமா தரையு மலைத்தாயே

திருக்கு லாவு மணிமார்பன்
செயமால் வெங்க டேசுரெட்டன்
சேரா வேளை யடிக்குமுர
சேரா வேளை யழைத்தாயே

தருக்கண் டலஞ்சூழ் வாரிபர
தருக்கண் டலஞ்சி யிருந்தேனே
சகிமா ரனேநே ரிலையேவஞ்
சகிமா ரனேநே ராவாயே.

(உரை) கரும்பு அம் சிலையை வேள் எடுத்தான்-கரும்பின் அழகிய வில்லை மன்மதன் எடுத்துநின்றான், கரும்பு அம் சிலையை நீ எடுத்தாய் - கருநிற நீர் அலையின் ஒலியை நீ கொண்டுள்ளாய், கங்குல் ஆ உம்பல் அவனுக்கே - இராப்பொழுது (ஊர் தியாக) ஏறிச் செலுத்துகின்ற யானையாகும் அம் மன்மதனுக்கு, உனக்கு உலாவும் பலகங்கு-உனக்கு உன்அலைகள் சென்றுவரப் பல வெளியிடங்கள் உண்டு, மரு பங்கயம் - மணமுள்ள தாமரைமலரில், மேவு அ(ன்)னம் - இருக்கின்ற அன்னப் பறவைகள், கரு உக்கு-முட்டையிட்டு, அமர் - இருப்பதற்குரிய, உப்பம் கயமே-உப்பங் கழியிடமே !, வ(ன்)னம் கறுத்தாய் - உன்நிறம் கருமையுற்றுள்ளாய், மத மாதரையும் - காதல்மிக்குள்ள மகளிரையும், மலைப்பதும் - பகைத்துக் கொள்ளுதலும், சம்மதமா - உனக்கு ஏற்ற

தன்மையாகுமா?, தரையும் அலைத்தாயே - பூமியையும் அரித்து அரித்துத் தோண்டினுயே, திரு குலாவு - திருமகள் வாழுகின்ற, மணி மார்பன்-அழகிய மார்பையுடையோனும், செயமால்-வெற்றிச் செல்வனும் ஆகிய, வெங்கடேசுரெட்டன் - வெங்கடேசு ரெட்டவேந்தன், சேரா வேளை-என்னை அணையாத காலத்தில், அடிக்கும் மூரசே - மன்மதனுல் வெற்றி முழக்கஞ் செய்கின்ற மூரசமே!, ரா - இவ் இரவுநேரத்தில், வேளை அழைத்தாயே-மன்மதனே அழைத்து எனக்குத் துன்பந் தந்தாயே, தரு கண்டல்-மரங்களும் நீர் முள்ளிகளும், அம் சூழ்-அழகாகச் சுற்றியுள்ள, வாரி-கடலே!, பரதருக்கு - கடலோடிகளுக்கு, அண்டல் அஞ்சி - சார்பாயுள்ள உனக்கு நான் அச்சமுற்று, இருந்தேனே - இருப்பவளானேன், சகிமார் அ(ன்)னை நேர் இ(ல்)லையே - என் தோழிகளும் தாயும் எனக்கு அன்புடையராயில்லை, வஞ்சகி - வஞ்சக முடையாய் நீ, மாரனை நேர் ஆவாய் - துன்பந்தருவதில் மன்மதனுக்கு ஒப்பாகவே இருக்கின்றாய்.

தரு கண்டல் - கண்டல்தரு - தாழைமரம் என்று பொருள் கூறலுமாம். கண்டல்தரு, தரு கண்டல் என வந்தது, சொன்னிலை மாறிய இலக்கணப் போலி. பரதர்-நுளையர்; மீன் பிடிப் போர். இங்கே கடலோடிகள் எனப் பொதுவாகப் பொருள் கூறப் பெற்றது. சகிமார் - தோழிப் பெண்கள். நேர் இலை-நேர்மை இல்லை; எனக்கு ஒத்ததன்மையாயில்லை. வஞ்சகி - வஞ்சகத் தன்மையுடையாய் என்னும் பொருளது. தலைவி கடலை முன்னிலைப் படுத்திப் பேசுவதால் இங்கே வஞ்சகி என்றது கடலினை என்க. கடலைப் பார்த்துத் தலைவி ஈண்டு நொந்து பேசுகின்றாள்; கடலிடம் தன் குறைகளையெல்லாம் பன்முறை எடுத்துக் கூறினுள்; அஃதோ தனக்கு ஒருதவியுஞ் செய்யாது தன் நிறத்தாலும் செயலாலும் தனக்குத் துன்பத்தை மிகுதிப் படுத்துகின்ற தொன்றைத் தவிர வேறன்று. அதனுல் அதனை வெறுத்துரைப் பாளாய், எனக்குத் துன்பத்தைத் தருவோன் மன்மதன் ஒருவனென்றே யிருந்தேன்; அவனை யொப்பத் துன்பம் கொடுப்போர், வேறெருவர் யாருமே இல்லையென்றும் எண்ணினேன். அந்த எண்ணத்தை மாற்றிவிட்டாய்; 'வஞ்சகி! நீ மாரனை நேராவாயே!' என்று மனம் உணர்ந்து கூறுகின்றாள். இதில் அவள் துன்ப மனநிலை கண்ணுடிபோல் விளக்கமுறுவதைக் காண்க. (அ)

ஆ

கடலிற்கும், பொதியமலைக்கும் சிலேடை

[கடைமடக்கு]

நெடிய வானந் தொடுமேயும்
நீலியா மாமை முதுகோடும்
நீங்கா திருக்குங் கடுந்திரையும்
நீளு மாரம் பிறைத்தடுக்கும்

வடிவி னுற்கப் பலைத்தடலி
வாங்குங் கடனேர் பொதியவரை
மாமால் வெங்க டேசரேட்டன்
மனது மகிழுங் கடற்றுறைவாய்ப்

படியு மானத் தவளைகளே!
பறிபோ னதுமத் தவளைகளே
படரும் வாரி நடுக்காரே!
பலரு நகைக்க நடுக்காரே

கோடியாய்ப் படரு நெய்தலமே!
கோங்கை மார னெய்தலமே
கோதை யாரு முலைத்தாரே!
கோடுப்பா நிலையா முலைத்தாரே.

(உரை) நெடிய வால் நந்தொடு மேயும்-நீண்ட வெள்ளிய சங்குகளோடு மேய்கின்ற, நிலைஆம் ஆமை - நிலைத்திருக்கின்ற ஆமைகள், முதுகோடு நீங்காது இருக்கும்-மேலிடத்தில் தவறுமல் இருந்து கொண்டே இருக்கும், கடும் திரையும்-விரைவுள்ள அலைகளும், நீளும் ஆர் அம்பு இறைத்து அடுக்கும்-நீண்டு கொண்டே செல்கின்ற நிறைந்த நீரும் தூற்றிச் சேரும், வடிவினுல் கப்பலை தடவி - தன்னிடத்தில் கப்பலை ஏற்று, வாங்கும் - தொட்டுத் தொட்டுத் திரும்பும்,[1]

நெடிய வானம் தொடும் - நீண்ட வானவெளியளவு உயர்ந்திருக்கும், ஏயும் நிலையா மாமை - தன்னுடன் சார்ந்திருக்கின்ற

1. கடல்.

செல்கின்ற கருநிற மேகங்கள், முதுகு ஓடும்-தன்மேற் செல்லும், நீங்காது இருக்கும் - தான் இருந்த இடத்தைவிட்டுப் பேராமல் இருக்கும்; கடும் திரையும் நீளும் - வேகமிக்க நீரலைகளும் ஓடிக் கொண்டிருக்கும், ஆரம் பிறை தடுக்கும் - சந்தன மரங்கள் பிறையையும் தொட்டு நிற்கும், கப்பு அலைத்த அடவி-கிளைகளை ஆட்டுகின்ற மரத்திரள்கள், வடிவினால் வாங்கும் - தம் வடிவ இடத்தில் கொண்டிருக்கும்; அதனால்,[1]

கடல் நேர் பொதியவரை - கடலைப்போல் இருக்கின்ற பொதியமலைக்கு, மாமால் - மிக்க பெருமையுடைய, வெங்கட ஈசுர எட்டன் -, மனது மகிழும் கடல் துறைவாய்-மனம் மகிழ இருக்கின்ற கடல்துறை இடத்து, படியும் மானதவனைகளே-இருக்கின்ற பெரிய தவனைக் கூட்டங்களே!, பறி போனதும் அத்த வனைகளே - கழன்று விழுந்ததும் கையில் அணிந்துள்ள வளையல்களே, படரும் வாரி நடு காரே - பரந்து செல்லும் கடலின் நடுவிலுள்ள மேகமே!, பலரும் நகைக்க நடுக்காரே - எல்லோரும் என்னைக் குறித்து ஏளனஞ் செய்தற்குத் துணுக்கமுறுர், கொடியாய்ப் படரும் நெய்தல் அ(ம்)மே - கொடியாகப் படருகின்ற அழகிய கருங்குவளையே, மாரன் எய்தலம் கொங்கையே - மன்மதனால் எய்யப்படுகின்ற இடம் நகில்களே, கோதையாரும் உலைத்தாரே - என் தோழிப்பெண்களும் (என் மனத்தைக்) கலக்கினரே, மு(ல்)லைத்தார் கொடுப்பார் இ(ல்)லையா - முல்லை மலர் மாலையை வாங்கித் தருவார் இல்லையோ?

வால்நந்து - வெண்ணிறச் சங்கு. நிலை ஆம் ஆமை - படிந்து கிழேகிடக்கின்ற ஆமை. ஒடு: மூன்றனுருபு, ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்தது. நெய்தலமே என்பதை, அம் நெய்தல் என மாறிக் கூட்டுக. தலம் - இடமென்னும் பொருட்டு. முலை - முல்லைமாலை. விகாரத்தால் இடை லகரம் தொக்கது. ஏகாரங்கள் அசைநிலை. (க)

---

1. பொதியமலை.

கூ0

சிவனுக்கும், பொதியமலைக்கும் சிலேடை

[கடைமடக்கு.]

நிறைவாய்ச் சங்கக் குழைதவழ
நித்த மருவி யமைவிளங்க
நிமிர்கந் தரமா லங்காட்ட
நீளு மரவந் தலைபொருந்த

இறையோ னிகரும் பொதியவரை
யெங்கோன் வெங்க டேசுரெட்டன்
இளசைக் கதிப னுளமகிழ
மெழிற்கா னலஞ்சேர் கழிக்கரையே!

மறைவா யிருந்த வோரலவா!
மடவா ரேனவை வோரலவா
மடியின் முருகு வாரிலையே!
மனது முருகு வாரிலையே

உறைவா கியவெம் பனைக்காடே!
உணவா மோவெம் பனைக்காடே
உள்ளக் கவலை யாராலே!
ஒழிப்பேன் உரைப்பா யாராலே.

(உரை) நிறைவு ஆய்-அழிவற்றதாக, சங்கக் குழை தவழ-சங்குக் குண்டலங்கள் காதில் அசைய, நித்தம் மருவி அ(ம்)மை விளங்க - நாள்தோறும் ஒன்றுபட்டு உமாதேவியார் இருக்க, நிமிர் கந்தரம்-உயர்ந்த கழுத்து, ஆலம் காட்ட-ஆலகால நஞ்சின் கரிய நிறத்தைத் தெரிவிக்க, நீளும் அரவம் தலை பொருந்த - நீண்டு செல்கின்ற நாகப்பாம்பு திருமுடியில் இருக்க,[1]

நிறைவு ஆய் - மிகுதியாக, சங்க குழை தவழ - கோடானு கோடி மரங்களின் தழைகள் அசைய, நித்தம் அருவி அமை விளங்க - தவறாமல் ஒவ்வொரு நாளும் அருவிநீரும் மூங்கில் மரங்களும் தோற்றமுற, நிமிர் கந்தரம் - உயர்ந்த மேகங்கள்,

1. சிவன்.

மால் அம் காட்ட - நீரைப் பொழிந்து மலியிடமெல்லாம் நீர் படிய, நீளும் அரவம் தலை பொருந்த - குறையாத பேரொலி தன்னிடம் அமைய,[1]

இறையோன் நிகரும் - சிவபெருமானே யொத்திருக்கின்ற, பொதியவரை எங்கோன் - பொதியமலைக்குரிய எம் வேந்தன், வெங்கடேசர எட்டன்—, இளசைக்கு அதிபன் - எட்டியாபுரத்துக்குத் தலைவனானவன், உ(ள்)ளம் மகிழும் - மனம் மகிழ்கின்ற, எழில் கானலம் சேர் - அழகிய கடற்கரையைச் சேர்ந்த, கழிகரையே-கழிக்கரை இடமே!, மறைவாய் இருந்த ஓர் அலவீர்-மறைவாக இருந்த ஒப்பற்ற நண்டே!, மடவார் என்னே வைவோர் அ(ல்)லவா - பெண்கள் என்னே ஏசுவார் அன்றே?, மடி இல் முருகுவார் இலையே-சோர்வில்லாத நீண்ட மெல்லிய இலைகளே!, மனதும் உருகுவார் இ(ல்)லையே - என்பால் மனம்இரங்குவார் இல்லையே, உறைவு ஆகிய வெம்பணி காடே - தங்குதற்கு இடனான விரும்பத்தக்க பணித் திரள்களே!, வெம்பு அ(ன்)னைக்கு ஆடே உணவு ஆமோ - இனமுள்ள நம் தாய்க்கு ஆட்டுக்கடாவே உணவாக இருக்குமோ, உள்ளக் கவலை யாராலே ஒழிப்பேன் - மனவருத்தத்தை நான் யாரைக்கொண்டு போக்குவேன், ஆராலே உரைப்பாய் - ஆராலென்னும் மீனே நீ சொல்வாயாக.

நிறைவு - குறைவற்றது; இறைவன் காதில் விளங்கும் சங்கக் குண்டலமாகலான், அதற்கு அழிவற்றது எனப் பொருள் கூறப்பட்டது. குழை - குண்டலம்; காதணி. இறையோன் - பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமான். சங்கம் - சங்கு; கோடானுகோடி; எண்பெருக்கம். அமை - அம்மை; உடமையம்மை; மூங்கில். இளசை - எட்டியாபுர நகர்; பாட்டுடைத் தலைவனது ஊர். அலவன் - நண்டு. (கo)

---

1. பொதியமலை.

கஉ

முன் மாதர் கொங்கைக்கும், பொதியமலைக்கும் சிலேடை
பின் கழிக்கரைக்கும், பெண்பா லுறுப்புக்கும் சிலேடை

வாரு மார முந்தியிட
மறைக்கு மாறு புடைத்துவர
வருதே மிலைக்கோண் டலர்வனமேன்
மாருக் கிள்ளை யுடன்பொருந்தச்

சேரு மாதர் மூலைபோலத்
திகழும் பொதிய வரைவேந்தன்
சேயமால் வெங்க டேசுரெட்டன்
சேரா நாளிற் கழிக்கரையே !

சாருங் கோணை முகம்போருந்தச்
சந்த தநந்தாங் கப்புடைக்கத்
தருகா வேலைக் கண்ணுகச்
சாதித் தருவா யிடைகாட்ட

ஊரு வரம்பை நீதாங்கி
உண்ணீ ருறுங் கடிதடமு
முன்பா லிருக்கப் பெண்பாலாம்
உறுப்பால் எனையும் வெறுப்பாயே.

(**உரை**) வாரும் ஆரம் முந்தி இட - கச்சும் முத்துமாலை களும் மேலிடத்தில் அணிய, மறைக்கும் - மூடப்படுகின்ற, மாறு - வெவ்வேறான தன்மையில், புடைத்துவர - மேலே வளர்ச்சி பெற்று வர, வரு தேமலை கொண்டு - வளர்ந்துவருகின்ற பசலை நிறத்தைக்கொண்டு, அலர் வ(ன்)னம் - மிக்க அழகுடன், மேல்மாரு - மேலிடத்து நீங்காமலுள்ள, கிள்ளை உடன்பொருந்த - நகக் கீறலுமாகிய அழகும் சேர்ந்து திகழ,[1]

வாரும் ஆரம் உந்தியிட - கொழித்தலையுடைய முத்துக்களை ஓதுக்க, மறைக்கும் ஆறு - அவைகளை மறைக்கின்ற ஆறுகள் (வழிகள்), புடை - பக்கங்களில், துவரவரு - முற்ற முடிய வருகின்ற, தேம் அலைகொண்டு - இனிமையுள்ள தேன்களை

1. மாதர் கொங்கை.

அலையோடு சேர்த்துக்கொண்டு, அலர்வனம் - மலர்களையுடைய மரக்காடுகளின், மேல் - இடத்தில், மாரு - நீங்காமல், கிள்ளை உடன்பொருந்த - மூங்கில் புதர்களுடன் சார்ந்திருத்தலால்,[1]

சேரும் மாதர் - அணையத்தக்க மகளிரின், மூலிபோல-கொங்கைகளென்று கூறும் வண்ணம், திகழும் - விளங்குகின்ற, பொதியவரை-பொதிய மலைக்கு, வேந்தன்-அரசனை, செயமால்-வெற்றிப் பெருமையுடையவனை, வெங்கடேசுரெட்டன் -, சேரா நாளில் - அணையாத நாட்களில், கழிக்கரையே - உப்பங் கழியே!, சாரும் - பொருந்தியிருக்கின்ற, கோணுமுகம் பொருந்த-வேளவுள்ள இடங்கள் ஒன்றுபட, சந்ததம் - நாள்தோறும், நந்து-சங்கினங்களை, ஆங்கு - அவ்வவ்விடங்களில், அப்பு உடைக்க - நீரலைகளால் வெளிப்படுத்தி, தருஒதுக்கித் தருகின்ற, கா வேலை கண்-சோலைகள் சூழ்ந்த கடற்கரையிடத்து, நாக சாதி தரு வாய்-சுரபுன்னை மரங்களும் சாதிக்காய் மரங்களும் சேர்ந்து, இடை காட்ட - தன்னிடம் தோன்ற, ஊர் உவர் அம்பை-ஓடிவருகின்ற உப்பு நீரினை, நீ தாங்கி-நீ உடையையாகியும், உண்நீர்-யாவரும் உண்ணுகின்ற நீரானது, ஊறும் கடிதமும் - ஊறி வருகின்ற நல்ல இடங்களும், உன்பால் இருக்க - உன்னிடத்தில் இருத்தலினால்[2],

சாரும்-சேர்ந்திருக்கின்ற, கோணுமுகம் பொருந்த-கோணலையுடைய இருதலைப்புக்களும் ஒன்றுகூட, சந்த தம் - அழகிய தன் தன்மையை, தாங்க - உள்ளடக்கவும், புடைக்க-வளரச்சியுறவும், தருகா வேலை-நீங்காத செயலை, கண் ஆக-தன்னிடமாக, சாதித்து - தவருமல் செய்து, அரு வாய் - அருமையான தன் வழியை, இடை காட்ட - நடுவில் காட்டி, ஊரு அரம்பை - தொடையாகிய வாழையால், நீ - (வெளியிடம்) விட்டு, தாங்கி-சுமந்து, உள் நீர் ஊறும் - உள்ளிடத்தில் நீர் சுரக்கின்ற, கடி தமும் - மறைவிடமும், முன்பால் இருக்க - முன் இடமாக இருத்தலினால்,[3]

பெண்பால் ஆம் - பெண்பால் இடத்துள்ளதான, உறுப் பால் - வடிவத்தால், எ(ன்)னையும் வெறுப்பாயே-என்னை வேறு பாடாகக் கருதுகின்றாயே.

'பெண்ணென்றால் பேயும் இரங்கும்' என்பர், பெரியோர். நீ என்னைப் போலும் பெண்பாற் குரிய உறுப்பை நீ கொண்டிருந்தும் கழிக்கரையே! வெறுப்பது தகாது. ஒத்த பண்பு உளவாதலே அறிந்து என்பால் அன்பு செய்க என வேண்டுகின்றாள், தலைவி. நீ - நீத்தல்; விடுதல்: முதனிலைத் தொழிற்பெயர். (கக)

1. பொதியமலை. 2. கழிக்கரை.
3. பெண்பால் உறுப்பு.

கூ

முன், கார்காலத்திற்கும், பொதிய வரைக்கும் சிலேடை
பின், கடலிற்கும், தலைவிக்கும் சிலேடை

மின்னு மணியாய் விளங்கவதின்
மிகுந்த கோப முடலுக
மேவத் தலையி லிந்திரவில்
வெளியாக் காட்டக் கார்காலம்

என்னும் பொதிய வரைக்கதிப
னெங்கோன் வெங்க டேசுரெட்டன்
என்னைப் பிரிந்தா னுனைப்பிரிந்த
தெவரென் றறியேன் வாரிதியே!

உன்னு மலைப்பா லுள்ளமச்ச
மூரு மதனு லலைவாரி
யுண்ணத் தினமுங் கசந்தாவி
யோட வோட மாட்டாமற்

பின்னுங் காலு முடனடுக்கப்
பெலத்த நாவா யசைக்கவரும்
பெருமைக் கடலே! யாசைகொண்ட
பெண்மைக் கடலா யிருந்தாயே.

(உரை) வாரிதியே - கடலே!, மின்னும் அணியாய் விளங்க-மின்னல்களும் வரிசையாக விளங்கித் தோன்ற, அதின் மிகுந்த கோபம் உடன் ஆக - அதிலுடைய சினம் போலாக இடிமுழக்கம் அப்போது உண்டாக, மேவ தலையில் - சார அதனிடத்தில், இந்திரவில் வெளியா காட்ட - வானவில்லானது வெளிப்படையாக யாருங் காணத்தோன்ற,[1]

மின்னும் ஆய் மணி - ஒளிவிட்டெறிக்கின்ற சிறந்த ஒளி மணிகள், விளங்க-உண்டாகித் தோன்ற, மிகுந்த கோபம் உடன் ஆகம் மேவ - மிக்க பாதுகாப்புடன் யானைகள் இருப்ப, இந்து இரவில்-இரவு நேரத்தில் நிலவானது, வெளியா காட்ட-வெளிப்படையாகத் தோன்ற,[2]

---

1. கார்காலம். 2. பொதியவரை.

கார்காலம் என்னும் - கார்காலம் என்று சொல்லும்படி தோன்றுகின்ற, பொதிய வரைக்கு அதிபன் - பொதிய மலைக்குத் தலைவன், எங்கோன் வெங்கடேசுர எட்டன் -, என்னைப் பிரிந்தான்-, உன்னைப் பிரிந்தது எவர் என்று அறியேன்-, உன்னும் அலைபால் - யாவரும் கருதுகின்ற அலைகளில், உள்ள மச்சம் ஊரும் - இருக்கின்ற மீன்கள் ஓடிச் செல்லும், மதனால் - தன்வலிமையால், அனைவாரி உள் - கலக்குதலையுடைய நீர் வழியில், நத்து இனம் முங்க - சங்குக் கூட்டங்கள் மறைய, சந்தஆவி ஓட-அழகிய நீராவி மேலெழுந்து செல்ல, ஓடமாட்டா மல் - தானே செல்லமுடியாமல், பின்னும் காலும் - தன்னிடம் வந்து கலந்த காற்றினால், உடல் நடுக்க - தன் உடலாகிய நீரை அசைத்து அலையாக்க, பெலத்த நாவாய் - பெரிய கப்பல்கள், அசைக்க வரும் -,[1]

உன்னும் மலைப்பால் - நினைக்கின்ற திகைப்பினால், உள்ளம் அச்சம் ஊரும் - என்மனமானது அச்சங்கொள்ளும், மதனால் - மன்மதன் செயலினால், அனைவாரி உண்ண - தயிர் வெண்ணெய் முதலியவற்றை யெடுத்து உண்பதற்கு, தினமும் கசந்து - நாள் தோறும் வெறுத்து, ஆவி ஓட ஓட மாட்டாமல் - உயிர்நிலை குறைய விரைந்து செல்லவொண்ணுமல், பின்னும் காலும் - ஒன்றோடொன்று சேர்ந்து பின்னிக்கொள்கின்ற கால்களும், உடல் நடுக்க - உடம்பை நடுங்கச் செய்ய, நா வாய் அசைக்க அரும் - நாவையும் வாயையும் வணைத்துப் பேசற்கு முடியாத[2],

பெருமை கடலே - பெரிய கருங்கடலே, ஆசை கொண்ட பெண்மைக்கு - காதல் கொண்ட பெண்மக்களை, அடல் ஆய் இருந்தாயே - கொல்லுதற்காகவே தோன்றியுள்ளாயோ ?

மின் - மின். உம்: இசையின்பந்தோன்ற நின்றது. தலைவி. தன் நிலையைக் குறித்து வருந்திக் கடலோடு பேசுகின்றாள், இதில் கார்காலம் பொதியவரை கடல் தலைவி ஆகிய நான்கும் ஒப்புமையாக உரைத்திருக்கும் திலேடை கண்டு மகிழ்க. (கஉ)

---

1. கடல். 2. தலைவி.

கூங

முன், மருத நிலத்திற்கும், பொதிய மலைக்கும் சிலேடை
பின், கடலிற்கும், சிவபெருமானுக்கும் சிலேடை

குருகு படரக் கதிருடனெற்
கோட்டை யளந்து கட்டவயற்
குலாவு வனசந் தமரமொடு
கூடக் காலா றுவண்டுவர

மருத நிகரும் பொதியவரை
மன்னன் குமார வெட்டமன்சோன்
மதவேள் வெங்க டேசுரேட்டன்
மருவா நாளிற் பொருகடலே!

பெருகு மரவ மேற்கொண்டு
பெருந்தீ வாரக் கண்பொருந்திப்
பெண்ணை யொருபாற் கலந்துள்ளே
பெலத்த விரும்பார் காணுமற்

கருது சிவனைப் போலிருந்துங்
காமன் றனக்கு முரசறைந்தாய்
கண்டங் கருமை காணிலுனைக்
கண்டங் கருமை செய்வேனே.

(உரை) குருகு படர - எல்லாவகைப் பறவைகளும் வந்து கூட, கதிருடன் - நெற்கதிர்களுடன், நெல் கோட்டை - நெல்லியும் கோட்டை யென்னும் அளவால், அளந்து கட்ட - அளவு கொண்டு சேர்க்க, வயல் குலாவு வனசம் - வயலில் விளங்குகின்ற தாமரைகளிடத்து, தமரமொடு கூட - பேரொலி முழக்கத்தோடு சேர்ந்து, கால் ஆறு வண்டுவர - ஆறுகால்களையுடைய வண்டுகள் வாராநிற்க,[1]

குருகு படர - வெள்ளிய அருவிகள் எங்கும் பரவிநிற்க, கதிருடன் எல் கோட்டை அளந்து - ஞாயிற்றோடு திங்கள் மண்டிலம் அளவு சென்று, கட்ட - நிற்க, அயல்குலாவும் - பக்கத்தில் உண்டாகி விளங்குகின்ற, வன சந்தமரமொடு-அழகிய சந்தன

1. மருத நிலம்.

மரங்களுடன், கூட - சேர ஒன்றுபட்டு, காலால் துவண்டு வர - தென்றற் காற்று எவ்வழியிலும் அசைந்து வர,[1]

மருதம் நிகரும் பொதியவரை - மருதநிலத்தை யொத்த பொதியமலைக்கு, மன்னன்-வேந்தனுகிய, குமாரஎட்டமன் சொல்- குமார எட்டமன் என்று சொல்லப்பெறுகின்ற, மதவேள் வெங்கடேசுர எட்டன் - மன்மதனே யொத்த வெங்கடேசுர எட்டப்பனுனவன், மருவா நாளில் - அணையாத நாட்களில், பொருகடலே - என்னுேடு மாறுபடுகின்ற கடலே !,

பெருகும் அரவம் மேற்கொண்டு - நீர் பெருகி வருதலால் வருகின்ற இரைச்சலே மேலாகப் பெற்று, பெரும் தீவு ஆர் - பெரிய உள்திட்டுகள் மிக்க, அ கண் பொருந்தி - அழகிய இடங்கள்கொண்டு, பெண்ணே ஒருபால் கலந்து - பெண்ணேயென்னும் ஆற்றுடன் ஒருபக்கத்தில் ஒன்றுபட்டு, உள்ளே பெலத்த - உள்ளிடத்தே வலிமைபெற்ற, இரும் பார் காணுமல் - பெரிய பாறை நிலங்கள் வெளித்தோன்ருமல்,[2]

பெருகும் அரவம் மேல்கொண்டு - வளர்கின்ற நச்சுப் பாம்பைத் தம் தலேயில் அணிந்து, பெரும் தீ வார - மிக்க நெருப்புக் கக்க, கண்பொருந்தி - நெற்றிக்கண் கொண்டு, பெண்ணே ஒருபால் கலந்து - உமையம்மையை ஒருபக்கத்தில் கலப்புக்கொண்டு, உள்ளே - தம் நெஞ்சத்திடத்தே, பெலத்த விரும்பார் காணுமல் - நிலேபெற்ற அன்பர்கள் கண்களாற் காணுமல், கருது - உணர்ச்சியால் கொள்கின்ற,[3]

சிவனேபோல் இருந்தும் - சிவபெருமானே ஒத்திருந்தும், காமன் தனக்கு முரசு அறைந்தாய் - காமவேளுக்கு வெற்றிப் பேரிகையாக முழங்கினுய், கண்டம் கருமை காணின் - உன்னிடம் கரியநிறத்தைக் கண்டால் (கழுத்தின் கரியநிறத்தைப் பார்த்தால்) உ(ன்)னே கண்டு அங்கு அருமை செய்வேனே - உன்னேப் பார்த்துப் பார்த்த அந்த இடத்திலேயே சிறந்த அருமையைச் செய்து பாராட்டுவேன்.

குருகு - வெண்ணிறம்; இங்கே வெண்ணிறமுள்ள நீர்வாழ் பறவைகளேயும் அருவிநீரையும் குறித்து நின்றது. கோட்டை - கோட்டையென்னும் நெல் அளவு. நூறு நாழிகொண்ட நெல்லேப் பாண்டிநாட்டில் 'கோட்டை' என்பார்; சில பகுதிகளில் நாழிஅளவு கூடுதல் குறைதல் ஆகவும் கொள்வர். பெண்ணே-பெண்ணேயென்னும் ஆறு. கண்டம்-கண் + தம் எனப் பிரித்துக் கண் ஏழன் உருபாகிய இடப்பொருளாகக் கொள்க. தம் : சாரியை. கண்டம் - கழுத்து. (கக)

---

1. பொதியமலே. 2. கடல். 3. சிவபெருமான்.

கூ

சந்திரனுக்கும், வைகையாற்றிற்கும் சிலேடை.

[முதல்மடக்கு]

வானந் தரித்து வரலாலும்
வளைந்து பரந்த மீனுலும்
மாருக் கோட்டை யுறலாலும்
மணலே மேலாக் கொளலாலுந்

தானந் தவரு மதிபோலுந்
தடநீர் வைகைத் துறைக்கதிபன்
சமர்வேள் வெங்க டேசுரெட்டன்
தழுவா நாளிற் கழிக்கரையே!

மீனங் கொடுக்கும் நீயெனக்கு
மீனங் கொடுக்கும் வகையழியாய்
மேவம் பரமே! நீபகையா
மேவம் பரமே போலறுக்கும்

பானந் தாரா! வழியவனட்
பானந் தாரா வழியாதே
பந்த வராலே! யனங்கர்கருப்
பந்த வராலே மெலிந்தேனே.

(உரை.) வானம் தரித்து வரலாலும் - வின்னில் தங்கி வருவதாலும், வளைந்து பரந்த மீனுலும் - சுற்றி மிகுந்திருக்கின்ற உடுக்கூட்டங்களாலும், மாரு கோட்டை உறலாலும் - தன்னை விட்டு அகலாத வளைவைப் பெற்றிருத்தலாலும், மண் அலே - மலையை மிகுதியாக, மேலா கொ(ள்)ளலாலும் - தன்னிடத்துக் கொண்டிருத்தலாலும்,[1]

வால் நந்து அரித்துவரலாலும் - வெள்ளிய சங்குகளை வாரிக் கொண்டு வருகையாலும், வளைந்து பரந்த மீனுலும் - சூழ்ந்து பரவியிருக்கின்ற மீன்களினுலும், மாரு கோட்டை உறலாலும் - கெடாத கரையை உடையதாக இருப்பதாலும், மண் அலே

1. சந்திரன்.

மேலாக் கொளலாலும் - மண்கனையும் அலைகனையும் தன் மேலிடத்துக் கொண்டு வருதலாலும்,[1]

தானம்தவறு மதிபோலும்-தன் நிலைமாறுத நிலவைப்போன்ற தாகயிருக்கின்ற, தடம் நீர் வைகை துறைக்கு அதிபன்-விரிவான நீரையுடைய வைகையாற்றுத் துறைக்குத் தலைவனனை, சமர் வேள் - போர் தொடுக்கின்ற மன்மதனேயொத்த, வெங்கட ஈசுர எட்டன்—, தமுவா நாளில் - மருவாத நாட்களில், கழிக்கரையே-கானலிடமே!, மீனம் கொடுக்கும் நீ - மீன்கனைத் தருகின்ற நீ, எனக்கு - என்னுடைய, மீன் அங்கு ஓடுக்கும் - மீன்போன்ற கண்கள் தூங்கச்செய்கின்ற, வகை அறியாய் - இயற்கைத் தன்மையை எனக்குத் தந்தாயில்லை, மேவு அம்பரமே - நிலைத் திருக்கின்ற கடலே!, நீ பகை ஆமே - நீ எனக்குப் பகையாக இருத்தல் ஆகுமோ, வம்பு அரமே போல் அறுக்கும் - புதிய அரத்தைப்போல் அறுக்கின்ற, பானம் - உண்பதற்குரிய, தாரா - நீரே! அறி - நான் சொல்வதை அறிவாயாக, அவன் நட்பால் - அவ் வெங்கடேசுரெட்டன் அன்பினுல், (எனக்குண்டான), அம் தார் ஆவல் - அழகிய முல்லைமலர் மாலையின்மீதுள்ள ஆசையினுல், தியாதே - திமையே அடைகின்றேன், பந்த வராலே - கூட்ட மான வரால் மீன்களே!, அனங்கர் - உருவற்ற மன்மதனுரின், கருப்பம் தவராலே - கரும்புவில்லின் கொடுமையினுல், மெலிந் தேனே - யான் உடலிளைக்க லானேனே.

வானம் - விண்; வால் நந்து - வெள்ளிய சங்கு. மணலை - மண்ணலை, மண்ணல் - கழுவுதல். மக்களும், பிற விலங்கு, பறவை முதலியனவும் நீராடுதல் என்று கொள்ளலும் ஆம். மீனம் - மீன்; அம்சாரியை பெற்று வந்தது. மீன் - மீன்போன்ற கண். உவம ஆகுபெயராய்க் கண்களே உணர்த்திற்று. மீனே ஓடுக்குதல் - கண்களே மூடித்தூங்கச் செய்தல்.

'வம்பு அரமேபோல் அறுக்கும் பானம் தாரா' என்பது, புதிய அரம், இரும்பு முதலியவற்றை அராவி அறுத்தல்போல், நீரும் அலைகளினுல் மணலை அறுத்து அறுத்து ஒதுக்கிவிடுவதால், 'அரமேபோல் அறுக்கும் தாரா' என்ருள். தாரா—தாரை - நீர். தாரைவார்த்தல் என்ற வழக்கும் 'வெள்ளி வீழ்நிடை விழித் தெனத் தாரைகள்' (கம்பராமா. ஆற்று: சு.) என்னும் கம்பர் பாடலும் இப் பொருளே குறிப்பது காண்க. 'ஆவல் தியாதே' என்பதில் 'தியாதே' எனற்பாலது இசையெயம் நோக்கி, 'தியாதே' என நீண்டது, செய்யுள் விகாரம்.

---

1. வைகையாறு.

காதலால் கட்டுண்டு கலங்கிநிற்கும் தலைவிக்கு முன்பு தோற்றமளிக்கின்ற கடல்படுபொருள்கள், கடல்வாழ் உயிர்கள் யாவும் தன்னொடு பேசுவதாகக்கொண்டு முன்னிலைப்படுத்திப் பேசி, தனக்குத் துன்பந்தருகின்ற மன்மதனை அவன் கொடுஞ் செயலுக்கு வெறுப்புற்றவளாய் இங்கே சினத்தால் அனங்கனை, அனங்கர் என்றாள். செறலினால் வந்த பன்மை விகுதிபெற்ற சொல். 'கருப்பந்தவரால் மெலிந்தேனே' என்றாள். மன்மதனுக்கு ஆலைக்கரும்பே வில். அக் கரும்பினால் கரும்புபோன்ற தனை வருத்துவது குறித்து அடங்கா வருத்தமுற்றவளாய் இக் கரும்புக்கும் நான் மெலியலானேனே! எவ்வாறுய்வேன்! நீர் யாரும் உதவீரோ எனக் காதல் மெலிவால் வருந்திக் கூறுவதாக அமைந்த அரிய பாடலாகும். (கச)

கரு

பிரமனுக்கும், வையையாற்றிற்கும் சிலேடை

[அடிமடக்கு]

பூவிற் பொலியு மாந்தரையும்
பொருந்தப் படைக்கும் பாரதிக்கும்
புகலா வோட்டந் தருநாலு
புறமு முகந்துங் கும்பெருகுந்

தேவிற் பிரம னிகராகுஞ்
செழுநீர் வைகைத் துறைக்கதிபன்
செயமால் வெங்க டேசுரேட்டன்
சேரா நாளிற் கழிக்கரையே !

காவிக் கனமாம் பூவே! நீங்
காவிக் கனமாம் பூவோரே
கரைவாய் படவே ! பாலோடுசேர்க்
கரைவாய் படவே சகியேனே

பாவிப் படியும் வண்டே! யப்
பாவிப் படியும் மெலிவேனே
பயவா ரணமே ! யிரையாமற்
பயவா ரணமே புரிந்தாயே.

(உரை) பூவில் பொலியும் - செந்தாமரை மலரில் விளங்கா நிற்கும், மாந்தரையும் பொருந்த படைக்கும் - மக்கள் முதலிய எல்லாவகை உயிர்களையும் அவைகளின் தன்மை சேர உண்டாக்கும், பாரதிக்கும் புகலா ஓட்டம்தரும்-கலைமகளுக்கு உள்ளடங்கி இருத்தற்குத் தன் நாவை இடமாகத் தரும், நாலுபுறமும் முகம் தங்கும் - நான்கு முகங்களும் கொண்டிருக்கும்,[1]

பூவில் பொலியும் - பூமியிற் சிறப்புப்பெறும், ஆம் தரையும் பொருந்த படைக்கும் - தரையிடத்துத் தன் நீர்படிய இருக்கும், பார தி க்கும் - பெரிய திசைகளிலெல்லாம், புகலா ஓட்டம் தரும்- சென்று ஓடிநிற்கும், நாலுபுறமும் உகந்து அங்கும் பெருகும் - நாலுபக்கங்களும் மிகுந்தோங்கி அவ்வவ் இடங்களெல்லாம் பெருக்கெடுக்கும்,[2] (இத்தன்மைகளினால்)

1. பிரமன். 2. வைகையாறு.

தேவில் - தெய்வத்தில், பிரமன் நிகர் ஆகும் - பிரமதேவனே ஒத்ததாக இருக்கின்ற, செழுநீர் வைகை துறைக்கு அதிபன் - செழித்த நீரையுடைய வைகைத் துறைக்குத் தலைவன், செய மால் - வெற்றிப் பெருமையோன், வெங்கடஈசுர எட்டன்-, சேரா நாளில் கழிக்கரையே-மருவாத நாட்களில் கானலிடமே!, காவி கனம்ஆம் பூவே - குவளையாகிய உயர்வுள்ள மலரே!, நீங்கா வீக்கனம்-கெடாத துன்பத்தைத் தருகின்ற, மாம்பு ஓரே-மாம்பூ வாளியால் வரும் துன்பத்தை அறிவாயாக, கரைவாய் படவே - கடற்கரையிலணிந்துள்ள ஓடமே!, பாலொடு சர்க்கரை வாய் படவே சகியேனே - பாலினுடனே சர்க்கரையும் என்வாயில் படின் பொறுக்கலாற்றாதவளாக இருக்கின்றேன், பாவி படியும் வண்டே - பரந்து மலர்களில் தங்கியிருக்கின்ற வண்டினமே!, அப்பா இப்படியும் மெலிவேனே - ஐயோ! இவ்வாறுக வருந்தித் துன்புறுவேனே?, பய வாரணமே - நீர்ப் பெருக்கையுடைய கடலே! இரையாமல் பய வா - அலையெறிந்து இரைச்சலிடாமல் மெல்ல வருவாயாக, ரணமே புரிந்தாயே - (இரைச்சலிட்டு இரைச்சலிட்டு எனக்குத்) துன்பத்தையே செய்தாயே, (இனி இரைச்சலிடாமலும் துன்பந் தராமலும் இருப்பாயாக.)

அப்பா - இரக்கக் குறிப்பு. பைய-பய என நின்றது: இலக்கணப் போலி; மெல்ல என்னும் பொருட்டு. ரணம் - புண். இங்கு ஆறாத புண் போல் மனத்தை ஊடறுத்துக் கொண்டு வருத்துந் தன்மையினால், காதல் துன்பத்தை மிகுதிப்படுத்துகின்ற கடலை நோக்கி 'ரணமே புரிந்தாயே' என்றாள். ரணம் போல் துன்பந்தரும் செயலை 'ரணம்' என்றது ஆகுபெயர். பய-பைய - மெல்ல. பய: போலி.

இராமாயணப் பெருங்காப்பியத்தில் தசரத வேந்தன் இராமனுக்கு முடிசூட்ட எண்ணியபோது கைகேயிக்குக் கொடுத்த வரங்கள் இரண்டையும் தனக்கு வேண்டுமென்று வேண்டினாள். மன்னன் அவ்வரங்கள் இரண்டில் ஒன்றைப் பெறும்படியும் மற்றொன்றைத் தனக்குத் தர வேண்டுமென்றும் குறையிரந்து நின்றான். வேந்தன் சொற்களைச் செவியேற்காத கைகேயி மறுத்து நின்று, 'தாம் முன்னரே கொடுத்த வரத்தைத் தராது மறுத்தல் அறனே வேந்தர் முறையே' என்று மறுத்துரை புகன்றாள். அச்சொல், 'வெந்த கொடும் புண்ணில் வேல் நுழைந்த தொப்ப' மன்னனுக்கு இருந்தது. அதுபோலவே இக் காதல்மிக்க தலைவிக்கும் கடலிடும் பேரொலி காதில் வெந்தபுண்ணில் வேல் நுழைந்து வருத்துவது போலிருந்ததால், 'ரணமே புரிந்தாயே' என்று கூறிக் கலங்குகின்றாள். (கஞ)

கசூ

'மூன், மன்மதனுக்கும், வைகையாற்றிற்கும் சிலேடை
பின், கடலிற்கும், தலிவிக்கும் சிலேடை

[முதல்மடக்கு]

காலி லேறி யப்பர்குளக்
கண்ணி லடங்கி மோத்துண்டு
கரையு முருவு மானதனுற்
காட்டும் போக நடத்துமதன்

போலும் வைகைத் துறைக்கதிபன்
புகழ்சேர் வெங்க டேசுரேட்டன்
புலவர் தமக்குப் புரிகருணை
போலே நிறைந்த பணிக்கடலே!

மாலி னுலுங் கலக்கமுற்றுய்
மாலி னுலுங் கலக்கமுற்றேன்
வைய முடுக்க வருவையனே
வைய முடுக்க வருவேனுன்

நீலங் கையிலுந் தோடுவைமத
னீலங் கையிலுந் தோட்டிடுவா
னேமித் திடர்நீ யுன்னையென்போ
னேமித் திடர்நா னுரைத்தேனே.

(உரை) காலில் ஏறி - தென்றற் காற்றும் தேர்மேல் ஏறி இருந்து, அப்பர் - சிவபெருமானது, குளக் கண்ணில் அடங்கி - நெற்றிக்கண்ணினுல் எரிபட்டு வெந்து நீருகி மடிந்து, மொத்து உண்டு - அடிபட்டு, கரையும் உருவும் ஆனதனுல்-நாளுக்கு நாள் தேய்ந்து போகின்ற வடிவும் பெற்றதனுல்,[1]

காலில் ஏறி - வாய்க்கால்கள் மேலே நடந்து, அப்பர் குளக் கண்ணில் அடங்கி - ஊருணியிடத்துச் சார்தலுடையவாகி உள்ளே பெருகி, மொத்து உண்டு-அலைகொண்டு மோதியடித்து,

1. மன்மதன்.

கரையும் - இரைச்சலிடுகின்ற, உருவும் - வடிவமும், ஆனதனால்- பெற்றுள்ள தன்மையால், காட்டும் போகம்-இன்பத்தைக் காட்டு கின்ற காதலின்பத்தை, நடத்தும் - செய்கின்ற,[1]

மதன்போலும் - மன்மதனே ஒத்திருக்கின்ற, வைகைத் துறைக்கு அதிபன்-வைகைத் திரு ஆற்றுக்குத் தலைவனும், புகழ் சேர் வெங்கடேசுர எட்டன்-, புலவர் தமக்கு - கற்றறிந்த அறிஞர்களுக்கு, புரிகருணை போலே-செய்கின்ற அருள் தன்மையை யொத்து, நிறைந்த பனிக்கடலே - (நீர்ப்) பெருக்கினையுடைய குணமை மிக்க கடலே!, மாலினலும் கலக்கம் உற்றும் - நீ திரு மாலினால் அமிழ்த மெடுக்கக் கடையும்போது கலங்கப் பெற்றும், மாலினலும் கலக்கம் உற்றேன் - நானும் உன்னைப்போல் காதல் மயக்கத்தினால் வருத்தமடைந்தேன், வையம் உடுக்க வருவை - நீ உலகத்தைச் சுற்றி வளைந்து கொண்டுள்ளாய், அ(ன்)னை வையமுடுக்க வருவேன் நான்-நானும் என்தாய் என்னைப் பழித் துப்பேசித் துரத்தித் துன்புறுத்த இலக்காக இருப்பேன், நீல் அம் கையினும் தொடுவை-நீ கருநிற நீரை அலைக்கைகளாகக் கொண்டு மண்ணைத் தோண்டுவாய், மதன் - மன்மதனனவன், நீலம் கையினும் தொட்டிடுவான் - கருநீலப் பூவாம் அம்புகளைக் கை யிடத்து வைத்து (என்மீது) விடுவான், நேமி திடர் நீ-கடலாகிய மேட்டிடமேயாகி நீ இருக்கின்றாய், உன்னை என்போல் நேமித்து - அவ்வாறு உயர்ந்துள்ள உன்னை என்னைப்போலாக அமைத்து எண்ணி, இடர் நான் உரைத்தேனே-என் துன்பங்களையெல்லாம் நான் உன்பால் எடுத்துக் கூறினேன் (என் வருத்தங் களைவாயாக!)

கால் - காற்று. ஈண்டுத் தென்றற்-காற்றை உணர்த்திற்று; மன்மதனுக்குத் தேராகக் கொண்டுரைப்பது நூலோர் மரபு. ஆகலான், 'காலில் ஏறி' என்றார். அப்பர்-சிவபெருமான். உலக உயிர்கட்கெல்லாம் தந்தையாகலான் 'அப்பர்' எனப்பட்டார். மால் - திருமால்; மயக்கம். வையம் - உலகம்; வைய - ஏச, திட்ட; வசைமொழி கூற என்னும் பொருட்டு. (கசு)

1. வைகையாறு.

கஎ

முன், புவி வனிதை மாலேக்கும், வைகையாற்றிற்கும் சிலேடை
பின், மன்மதபாணங்களுக்கும், கடலிற்கும் சிலேடை

நாரங் கினேத்துச் சுற்றவத
னடுவே வண்டு தலேநீட்ட
நாடு மேடு நனேக்குமது
நன்னீ ராகப் புவிவனிதை

ஆரம் போல விசைந்தவைகை
யாற்றுக் கதிபன் றமிழருமை
யழிவோன் வேங்க டேசுரேட்ட
னணேயா திருந்தான் வாரிதியே !

பாரங் காட்டுஞ் சிலேயாலும்
பற்றி யிருக்கு நாணலேயும்
படிமேற் கோண்ட விருப்பாலும்
பாத்தி யெடுப்பா னெய்தலினுன்

தீரம் பொருந்த வந்துதைகுந்
திறத்தா லம்பு ராசியென்றே
செப்பும் பெயரை மெய்யாக்கிச்
சேரா நெஞ்சைத் துனேத்தாயே.

(உரை) வாரிதியே-கடலே, நார் அங்கு இனேத்து சுற்ற - (நார் இனேத்து அங்கு சுற்ற). (மாலேயில்) சிறிய மெல்லிய நாரால் வனேத்துக் கட்ட, அதன் நடுவே - அதன் நடுவிடத்தே, வண்டு தலேநீட்ட - வண்டுகளானவை வர, நாடும் ஏடு நனேக்கும் மது-யாவராலும் விரும்பப்பெறுகின்ற பூ விதழ்களே ஈரஞ்செய்கின்ற தேன், நல்நீர் ஆக - நல்ல இனிமைத்தன்மை யுடையதாக,[1]

நாரம் - மக்கட்கூட்டம், கினேத்து - மணலேத் தோண்டி, சுற்ற - சூழ்ந்துநிற்க, அதன் நடுவே - அதன் நடுவிடத்திலே, வண்டு தலேநீட்ட-சங்குகள் மேலோங்கிவர, நாடும் மேடும் - மருதநிலங்களேயும் மேட்டு நிலங்களேயும், நனேக்கும் அது நல் நீர்

1. புவிவனிதை மாலே.

ஆக - ஈரம்படச் செய்கின்ற அந்தநீர் நல்ல நீராக,[1] (இருத் தலினால்)

புவி வனிதை - பூமாதினது, ஆரம் போல - மாலையைப் போலாக, இசைந்த - பொருத்தமுற இருக்கின்ற, வைகை ஆற் றுக்கு அதிபன் - வையை யாற்றுக்குத் தலைவன், தமிழ் அருமை அறிவோன் - தமிழ் மொழியின் அருமை பெருமைகளை ஆராய்ந் தறிவோன், வெங்கடேசுரெட்டன் -, அணையாது இருந்தான் - என்னை மருவாமல் இருந்துவிட்டான்,

பாரம் காட்டும் சிலையாலும் - கனத்தைக் காட்டுகின்ற பெரு வடிவமாகக் காணப்பெறுகின்ற வில்லினாலும், பற்றி இருக்கும் நாணாலேயும் - அதனோடு சார்ந்திருக்கின்ற நாண் கயிற்றையும், படிமேல் கொண்ட விருப்பாலும் - பொருந்தும்படி மேலிடத் தில் கொண்டுள்ள தளராத் தன்மையாலும், பாத்தி எடுப்பான் - (காதலரின் மனத்தைப்) பிரித்து எடுக்கும்பொருட்டு, எய்தலி னால்-(அம்பைத்) தொடுத்து விடுவதால், நீரம் பொருந்த - வீரம் சேரும்படியாக, வந்து தைக்கும் - (எய்யப்பட்டார்மேற்) பட்டுத் துளைக்கின்ற, திறத்தால் - தன்மையினால்,[2]

பார் அங்கு ஆட்டும் - பூமியை அவ்வவ் விடங்களில் அரித்து அரித்துத் துளைக்கின்ற, சில் அலையாலும் - சிலவாகிய அலைகளி னாலும், பற்றி இருக்கும்-தரையில் வேரூன்றி நிற்கின்ற, நாணலே யும் - நாணற்புற்களையும், படிமேல் கொண்டு - மேழ அவைகள் தாழும்படி மேலேறிக்கொண்டிருந்து, அவிர்-(வெண்ணிறமுடன்) விளங்குகின்ற, உப்பு ஆலும்-உப்பு விளைகின்ற, பாத்தி-அணைக் கட்டுகள், எடுப்பால் - மேலோங்கியுள்ளதான், நெய்தலினால் - உவர்நிலத்துடன் சேர்ந்த, நீரம் பொருந்த - கரைகளைக் கொண் டுள்ளதாய், வந்து உதைக்கும் - (அலைகள் ஒன்றின்மேல் ஒன்றுக) வந்து மோதியடிக்கின்ற, திறத்தால் - தன்மையினால்,[3]

அம்புராசி என்றே-அம்பின் கூட்டம், அல்லது நீர்த்தொகுதி யென்று, செப்பும் பெயரை - உலகத்தாரால் உனக்குச் சூட்டிச் சொல்லப்பெறுகின்ற பெயரினை, மெய் ஆக்கி - உண்மைப் படுத்தி, சேரா நெஞ்சை-(காதலரால்) ஒருநிலைப்படாமல் கலக்கங் கொண்டு வருந்தும்எம்போன்றாரின் நெஞ்சங்களை, துளைத்தாயே-துளைப்படுத்தித் துன்புறுத்தினையே:

நார் - மலர்கட்டுகின்ற வாழைநார். நாரம் - மக்கட் கூட்டம். பாரம் - கனம்; சுமை: பெருமை. நாணல் - வில்லின் நாண்; நாணற்புல். நீரம் - கடலினது கரை; வீரம். (கஎ)

1. வைகையாறு. 2. மன்மதபாணங்கள். 3. கடல்.

கஅ

[முதல்மடக்கு]

தரையே ழையுமுன் னளந்துவிபு
தரையே மூழுதும் புரந்துநிரு
தரையே சினந்து துறந்தவிர
தரையே நிகரா வடிவெடுத்த

விரைசேர் குழலார் மடலெழுதும்
வேந்த னிளசைக் குமாரவேட்டன்
வெங்க டேசு ரேட்டனேனே
மேவா நாளிற் பணிக்கடலே !

கரைகா ணுத வேலையென்ரே
காமன் கணைக்கு வேலைதந்தாய்
கடவுள் கீறுஞ் சக்கரம்போற்
கடுஞ்சக் கரமாப் பேரெடுத்தாய்

திரையோ சையினு லாசைகொண்டோர்
செவியிற் புகுந்து துளைப்பதனுல்
தெரியம் பரமென் றுன்பேரைத்
திகாந்த வரைக்குஞ் சொல்வாரே.

(உரை) பனிகடலே - குளிர்ச்சியுள்ள கடலே !, தரை ஏழையும் - உலகங்கள் ஏழினையும், முன் அளந்து - (வாமன வடிவங்கொண்ட) முன்காலத்தில் தன் திருவடிகளினுல் அளத்தலைச் செய்து, விபுதரையே முழுதும் புரந்து - தேவர்கள் யாவரையும் பாதுகாத்து, நிருதரையே சினந்து - அரக்கர்களை வெகுண்டு, துறந்த வீரதரையே நிகரா - உலக இன்பதுன்பங்களை விட்ட அந்தணரென்று கூறுமாறு, வடிவு எடுத்த - உலகில் திருமாலின் அவதாரமாகத் தோன்றிய, விரைசேர் குழலார் - மணமலி கூந்தலையுடைய இளமங்கையரால், மடல் எழுதும் வேந்தன் - (தம் காதல் மிகுதியால்) வடிவத்தை ஓவியமாக வரைந்து பார்க்கின்ற மன்னன், இளசை - எட்டியாபுரநகரில் விளங்குகின்ற, குமாரஎட்டன் - இளமைத்தன்மை பெற்ற எட்டப்பனென்னும் பட்டம் பெற்றவனை, வெங்கடேசுர

எட்டன் - வெங்கடேசுர எட்டனென்னும் பெயருடைய எம் தலைவன், எ(ன்)னை மேவா நாளில் - என்னை வந்து மருவாத நாட்களில், கரைகாணுத - அளவு காண்பதற்கு அரியதான, வேலை என்றே - தொழிலையுடையது இக் காதல்நோயென்று கருதியோ, காமன் கணைக்கு - மன்மதனுடைய மலரம்புகட்கு, வேலைதந்தாய் - என் மார்பிற்றுளைக்கும் வேலையைக் கொடுத்து என்னைத் துன்புறுத்தினை, கடவுள் கூறும் - திருமாலினால் கொடியோரை அழிக்கப்பெறுகின்ற, சக்கரம்போல் - வளைப்படை போல, கடும் சக்கரமா - மிக்க வட்டமாக, பேர் எடுத்தாய் - பெருமைப்பேர் கொண்டாய், திரை ஓசையினால்-உன் அலைகளின் பேரிரைச்சலால், ஆசைகொண்டோர் - காதலுடையாரின், செவியில் புகுந்து-காதுத்துளையின் உள்ளே நுழைந்து, துளைப்பதனால்-துளைத்துக்கொண்டு செல்வதனால், தெரி - யாவரும் அறிகின்ற, அம்பர் அம் என்று - அம்பாகிய நீர் என்று, திக்கு அந்தம் வரைக்கும் - தம் கண்ணுக்கு எட்டிய திசையளவு முழுதும், சொல் வாரே - சொல்லித் தூற்றுவாரே.

மடலெழுதுதல் - தலைவன் உருவத்தைக் காதலி ஓர் திரைச் சீலையில் எழுதிப் பார்த்து இன்புறல். அம்பரம் - கடல்; கடலின் பெயர்களுள் இஃதும் ஒன்று. அது, காதலர்களின் காதில் தன் ஓசையால் காதலை மிகுவித்துத் துன்புறுத்தலால் அம்பைப் போலவும் அரத்தைப் போலவும் துளைத்துத் துளைத்து மனத்தைக் கரைக்கின்றது, ஆகையால் அம்பரம், அம்பு+அரம் என்று காதலி கழறி ஏங்குகின்றாள். அம்பு - அம்பர் எனவானது இறுதிப்போலி. திக்கு+அந்தம்=திக்கந்தம், திகாந்தமெனப் புணர்ந்தது; அது, திசையின் கடைசி என்று பொருள்படும். எனவே, உலகம் முழுதும் என்றபடி. (கஅ)

கூவல்

முன், கண்ணனுக்கும், முதுகுடிநாட்டிற்கும் சிலேடை
பின், தலைவிக்கும், கடலிற்கும் சிலேடை

[வெள்ளப்பாவாய் அறியேனே !]

ஆலுங் கரும்பை மிதித்தேறி
யடரும் பகடு கோடுடைத்து
மப்பாற் கஞ்ச னடுவாணே
அகற்றி நிரைக்கா வேய்ங்குழலும்

கோலுஞ் சுமந்தோன் போலுமுது
குடிநன் ஞட னெமைப்புரக்குங்
கோமான் வெங்க டேசுரேட்டன்
கோடைபோற் றழைத்த நெடுங்கடலே !

ஏலும் படிக்குத் திரைக்குள்ளே
யிருப்பா மஞ்சங் கிடைகாட்ட
எழிற்பா யலையும் விரித்தமளி
யிட்டு நடுவே யணைபோருத்தி

மேலுந் தடவிக் கால்வருட
விழியு முறங்கா யெனைப்போல
வெள்ளப் பாவா யுன்னையெவர்
மேலிப் பிரிந்தா ரறியேனே.

(உரை) ஆலும் - படமெடுத்து ஆடுகின்ற, கரும் பை - கருநிறமுள்ள (காளிங்கனென்னும்) பாம்பின் தலையில், மிதித்து ஏறி - காலால் மேல் அடக்கி ஏறினின்றும், அடரும் - (தன்னைக்) கொல்லவந்த, பகடு - (குவலயாபீடமென்னும்) ஆண்யானையின், கோடு உடைத்தும் - கொம்பினை ஒடித்து அடக்கியும், அப்பால்- அதன்பின்னர், கஞ்சன் அடு ஆன - (தன் மாமனும்) கஞ்ச னுடைய போர்வீரர்களை, அகற்றி - கொன்றொழித்தும், நிரைக்கு ஆ - பசுக்கூட்டங்களை மேய்த்து வருதற்காக, வேய்ங்குழலும் கோலும் - (இசைக்குழலாகிய) வேய்ங்குழலையும், (பசுநிரைகளை

மேய்க்கும்) தடியையும், சுமந்தோன் போலும் - கொண்டிருந்தவனுகிய கண்ணனப்போலாகத் தோன்றுகின்ற,[1]

ஆலும் - தோகைகள் அசைகின்ற, கரும்பை - கரும்புத் தோட்டத்தை, மிதித்து ஏறி - உழக்கிச்சென்று, அடரும் - நெருங்குதலியுடைய, பகடு-எருமைக்கடாக்கள், கோடு உடைத்தும் - (அத் தோட்டத்தில் ஒதுங்கிக் கிடக்கின்ற) சங்குகளைக் காலால் மிதித்து நெரித்தும், அப்பால் - நீரினுல் வளர்ந்து படர்ந்திருக்கின்ற, கஞ்சன் அடு வாளை - தாமரைமலரினைத் துளைக்கிழங்கின்ற வாளைமீன்களை, அகற்றி - (தாம் செல்லுதலினுல்) வெளிப்போக்குதலுக்கேற்ற, நிரை கா - வரிசையாகவுள்ள காடுகளையுடைய, முதுகுடி நல்நாடன் - முதுகுடியென்னும் பெயரையுடைய நல்ல நாட்டினையுடையவனுன,[2]

கோமான் வெங்கடேசு ரெட்டன் - மன்னவன் வெங்கடேசு ரெட்டன் வழங்கப் பெறுகின்ற, கொடை போல் - கொடைப் பெருக்கத்தைப் போன்று, தழைத்த - மேலு மேலும் பெருக்கெடுத்து வருகின்ற, நெடு கடலே - நீண்ட வாரிதியே! ஏலும் படிக்கு-கூடுதலுக்காக, திரைக்கு உள்ளே - (மறைவுக்கு இட்ட) திரைச்சீலையின் உள்ளிடத்தில், இருப்பு ஆம்-இருக்கும் இடமான, மஞ்சம் - கட்டில், கிடைகாட்ட - கிடக்க, எழில் பாயலையும் - அழகிய படுக்கையை, விரித்து - (அதன்மேல்) பரப்பி, அமளி இட்டு - (அதன்மீது) மெத்தையை விரித்து, நடுவே - (அதன்) நடுவிடத்தில், அணை பொருத்தி - தலையணைகளை இட்டுவைத்து, மேலும் தடவி - (என்னைப் படுக்கச்செய்து, என் பணிப்பெண்கள்,) என் உடலையும் மெல்லெனத்தடவிக் கொடுத்து, கால் வருட - என் கால்களைத் தம் கையால் பிடித்துப் பிடித்து வருடிக்கொண்டிருக்கவும், விழியும் உறங்கா - கண்ணுறங்காமல் விழித்துக்கொண்டேயிருக்கின்ற,[3]

ஏலும் படிக்கு - பொருந்தும் வழியாக, திரைக்கு உள்ளே - அலைகள் ஓடுமிடத்தில், இரு உப்பு ஆம்-மிக்க உப்பு வினைய, அம் சங்கு - அழகிய சங்கினங்கள், இடைகாட்ட - அலைகளின் இடை வெளியில் தோற்றமுற, எழில் - எழுச்சியுடைய, பாய் அலையும் - பாய்ந்து செல்லுகின்ற அலைகளையும், விரித்து - நாலாபக்கமும் மிகுதிப்படுத்தி, அமளி இட்டு - பேரிரைச்சல் செய்து, நடுவே - நடுஇடங்களில், அணை பொருத்தி - திட்டுக்களை உண்டாக்கி, மேலும் தடவி-அதன்மீதும் ஏறிச்சென்று, கால் வருட-தென்றல் முதலிய காற்று மேலெழுந்துவர, இழியும் உறு - செல்வதையும் கொண்டு, அங்கு ஆய் - அவ்விடத்தேயே நிற்குந்தன்மை உடையையாய்,[4]

---

1. கண்ணன். 2. முதுகுடி நாடு.
3. தலைவி. 4. கடல்.

எ(ன்)னே போல - என்னையே ஒத்த தன்மையாக இருக்கின்ற, வெள்ள பாவாய் - நீராகிய பெண்ணே!, உன்னை - உன்னிடத்து, எவர் மேவி பிரிந்தார் - எக் காதலர் கூடி உன்னைத் தனிக்க விட்டுவிட்டுப் பிரிந்து சென்றார், அறியேனே - அதை நான் அறிந்தேன் இல்லையே! சொல்வாயாக. (நான் என் காதலரைப்பிரிந்து இரவும் பகலும் உறங்காமல் பிரிவாற்றாமல் தவிக்கின்றேன், வெள்ளப் பாவாய்! நீயும் உன் காதலரைப் பிரிந்து இரவும் பகலும் உறங்காது தவிக்கின்றாயோ? என்றபடி..)

கரும்பு - கரும்புத் தோட்டம். கரும்பை - கருமையும் பை (படம்)யும், என உம்மைத்தொகை விரிந்து, அதையுடைய பாம்பின் தலையை உணர்த்திற்று. வெங்கடேசு ரெட்ட வேந்தன் கொடை, நாளுக்கு நாள் குறையுபடாமல், இரவலர்க்கும், எளியர்க்கும், புலவர்க்கும், பாணர்க்கும் பிறர்க்குமாகப் பயனெக்கிப் பெருகி வருவதால், 'கொடைபோல் தழைத்த நெடுங்கடலே' என்றார். இப் பாட்டு அவலச்சுவை விஞ்சித் தலைவியின் காதல் கரைகடந்து நிற்பதாக அமைந்துள்ளது; தலைவி காதல் தன் மனத்தைக் கவற்றக் கடலை நோக்கி 'வெள்ளப் பாவாய்' எனக் கூவி அழைக்கின்றார்; அழைத்து, நான்தான் காதலர் கூட்டுற வின்மையால் அல்லும் பகலும் கண் ணுறங்காமல் துன்பம் விஞ்சி இருக்கிறேன்; நீயும் என்னைப்போல் கண் துயிலாது போவதும் வருவதுமாய்ப் புரண்டு புரண்டு கத்தி அலைந்து திரிந்து நிலைகொள்ளாமல் இருக்கின்றாயே! உன்னை எக்காதலர் தழுவிப் பிரிந்தார், அதையறிந்தாவது, என்னைப்போலவே, ஏனையோரும் உலகத்திலிருக்கின்றனர,' என்று மன ஆறுதல் அடைவேன்', என்னுங் கருத்தினளாய் 'வெள்ளப் பாவாய்! உன்னைப் பிரிந்தோர் யார்?' என வினவுகின்றார். 'புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள் போல், வன்கண் ணோதான் துணை' என்னும் திருக்குறட் கருத்தோடு ஒப்பு நோக்கத்தக்கது. இப்பாடலின் கருத்தொப்ப,

'சூழ்ந்து கிடந்த கரைமேல் திரையெனும் கையெறிந்து
வீழ்ந்து கிடந்து அலறித்துயி லாதில் விரிகடலே'

(திருவாரூர் மும்: கூ0)

என்னும் சேரமான் பெருமாள் நாயனார் காட்டும் தலைவியின் உரையையும் அறிந்து மகிழ்க.

அகற்றி - அகற்றுதலையுடைய நிரைக்கா நாடு என்க. கஞ்சன் - கம்சன் என்னும் பெயரையுடையோன்; கஞ்சம் - தாமரை; ஈண்டு இரு பொருள் நயத்துக்காக மகரம் னகரமாகத் திரிந்தது. (கக)

உ o

மூன், குரங்கிற்கும், திருமாலிற்கும் சிலேடை
பின், கடலிற்கும், நாடகக் கணிகைக்கும் சிலேடை

உ ரங்கொண் டிருக்கு மாக்கனியை
யுந்திக் கமலத் துறவேத
னுங்கு கையினு லளிக்குமரு
ளுடனே பொருந்தும் வனந்தரிக்குங்

குரங்கு மால்போ லிருக்குமுது
குடிநன் னுட னேமைப்புரக்குங்
கோமான் வெங்க டேசரேட்டன்
கூருங் கருணை நிகர்கடலே !

அரங்க நீங்கி யம்பலம்வந்
தாட வரைச்சே லையுந்தலைமே
லாக்கிக் குதித்தா யுன்னுழை
மாரா லழியுந் தரமாமோ

இரங்க வாரந் தரங்கமெடுத்
தெழிந்து போட்ட நீயலவோ
இந்தப் படியே யாருமுனை
எழிநீர் வேலை யென்பாரே.

(உரை) உர் அம் கொண்டு இருக்கும் - 'உர்' என்று உறுமிக் கத்துகின்ற தன்மையுள்ளதாக இருக்கும், மா கனியை-மாம் பழங்களை, உந்தி - பறித்தெறிந்து, கம் அல(த்)து உற - மேக மண்டலத்தின்மேல் மோத, தன்-தன்னுடைய, ஒங்கு கையினால்-உயர்த்தி வீசுகின்ற கைகளினால், அளிக்கும் - கொடுக்கும், மருள் உடனே பொருந்தும் - தனக்கேயுரிய குறும்புத்தன்மையோடு இருக்கும், வனம் தரிக்கும் - காடுகளில் வாழ்க்கை நடத்தும்,[1]

உரம் கொண்டு இருக்கும் மா க(ன்)னியை - இலக்குமியாகிய கட்டழகுமிக்கவளைத் தன் மார்பிடமாகக் கொண்டு வைத்திருப்

1. குரங்கு.

பான், உந்திகமலத்து - கொப்பூழ் ஆகிய தாமரைமலரில், உற - பொருந்தி, வேதன் ஓங்கும்-மறைவல்லுநனான நான்முகன் இருப்பன், கையினுல் அளிக்கும் - தன்திருக்கைகளினுல் அன்பர்கட்கு வேண்டுமவற்றை ஈவான், அருள் உடனே - அருள் தன்மை கொண்டு, பொருந்தும் - இருப்பான், வனம் தரிக்கும் - துளசி மலர்மாலையை அணிந்திருப்பான்,[1]

குரங்கும் மால்போல் - (இத்தன்மைகளின் இயல்பினுல்) குரங்கையும் திருமாலையும்போல் தோற்றமளிக்கின்ற, மூதுகுடி நல்நாடன் - மூதுகுடியென்னும் நல்ல நாட்டிற்குரிமையானின், எ(ம்)மை புரக்கும் கோமான் - எம்போன்றவரைப் பாதுகாக்கின்ற வேந்தன், வெங்கடேசுரெட்டன்——, கூரும் கருணை - மிக்க அருள்தன்மையை, நிகர்கடலே - ஒத்த பரவையே!, அரங்கு அம் நீங்கி - தன்னிடத்தைவிட்டு நீர் வெளிப்போந்து, அம்பலம் வந்து - நீரலைகள் வலிமைபெற்றேறி, ஆட - துள்ள, வரு - அதில் ஓடிவருகின்ற, ஐ சேலை - அழகிய கெண்டை முதலிய மீன்களை, உந்து அலைமேல் - ஒன்றின்பின் ஒன்றுக வருகின்ற அலையிடத்து, ஆக்கி - பெற்று, குதித்தாய் - மேலெழும்பி நின்றாய்,[2]

அரங்கம் நீங்கி - (கற்ற கலைகள் நிரம்பியதனுல்) கல்விச் சாலையை விட்டு வெளிவந்து, அம்பலம் வந்து ஆட - அவைகளில் வந்து ஆடலைச் செய்ய, அரைசேலையும் - இடையிலணிந்துள்ள ஆடையையும், தலைமேல் ஆக்கி-(ஆடுங்கால் ஆடும் விசையினுல்) தலைமேல் வந்து பொருந்தும்படி செய்து, குதித்து - துள்ளித் துள்ளி ஆடி (ஆடல் மகளிர்போல் காட்சியளித்தலாலும்),[3]

உன் ஆழம் - உன் உள்ளிடத்து நிலையை, ஆரால் - எப்படிப் பட்டவராலும், அறியும் - கண்டு தெளிகின்ற, தரம் ஆமோ - தன்மை வருதல் கூடுமோ?, இரு அங்க - இருபக்கங்களிலும் தன் உறுப்பாக இருக்கின்ற, வாரம் - கரைகளாக, தரங்கம் - அலைகளை, எடுத்து எறிந்து - மேலெழுப்பிக்கொண்டு வந்து மோதியடித்து, போட்ட - செய்தது, நீ அ(ல்)லவோ - நீதான் அன்றே? இந்தப் படியே - இத்தகைத்தான தன்மையினுல், யாரும் உ(ன்)னை - எல்லோரும் உன்னை, எறிநீர் வேலை என்பாரே - மோதிக்கொண்டு வருகின்ற நீரையே தனக்குத் தொழிலாகக் கொண்டுள்ளதென்று கூறுவார்களன்றே? (இவ் வேலையையே வேலையாக இரவும் பகலும் ஓவாது செய்துவருகின்ற நீ, எனக்குத் தூதாகும் வேலைக்கு உதவுவையோ? துன்பவேலையே தந்தாயே! இதனுல் தான் உனக்கு 'வேலை' என்னும் பெயர் சூட்டினரோ என்று தலைவி இரங்கிக் கூறுகின்றாள்.)

---

1. திருமால். 2. கடல். 3. நாடகக்கணிகை.

குரங்குகள் தம்மேல் சிறுவராவது பிறராவது கல்லெடுத் தெறிந்து துன்புறுத்தினால் 'உர்' என்று உறுமிக்கொண்டு ஓடி வந்து கடிக்கும் இயல்புடையன. ஆதலான், அவைகளின் இயற்கையைக் கூர்த்தறிந்துகண்ட ஆசிரியர் தலைவி கூற்றாக 'உர்அம் கொண்டிருக்கும்' என்றார்.

மா கனி - மாக்கனி : மாங்கனி; தமிழர் உயர்வாகக் கண்ட கனிவகைகள், மா, பலா, வாழை என்னும் மூவகையன. இதனை இறைவன் இனிமைத்தன்மைக்கு உவமங் கூறப்போந்த இராம லிங்க அடிகளார் 'தனித்தனி மூக்கனி பிழிந்து வடித்தொன் றாய்க் கூட்டி.....எடுத்த சுவைக் கட்டியினும் இனித்திடும் தெள்ளமுதே' என்றார். இக் கனியைத் தரும் வளமுடைய நாடு, மூதூகுடி நன்னாடு; இந் நன்னாடுடையான், எமைப்புரக்கும் கோமான் வெங்கடேசுரெட்டன் என்றாள் தலைவி. அவன் நாடு பல்வகை வளங்களும் பழுநி இன்பந்தருவதுபோல, எமக்கும் இன்பந்தருவான் என்று தலைவி எண்ணி எண்ணி இறும்பூதெய்து கின்றாள்; ஏங்குகின்றாள்; காதலால் கவன்று கடலொடு கழறு கின்றாள். (20)

உக

சத்திரத்திற்கும், முதுகுடிநாட்டிற்கும் சிலேடை

[முதல்மடக்கு]

ஆமாம் பழனங் குளத்துடனே
யனையுந் தேனுங் குழப்பியபா
லன்னம் பொருந்த வுண்டுபெணி
யார மெடுத்து வரப்படைத்துக்

கோமான் வெங்க டேசுரெட்டன்
கொடுக்குந் தான சத்திரம்போற்
குறைவில் லாமல் வளர்ந்தமுது
குடிநன் னுட்டுப் பெருங்கடலே !

காமா விடமா தரித்தவஞ்சக்
கரவா னவனுக் களித்தாயே
காமா விடமா தரித்தவஞ்சக்
கரவா னவமோ விதுவேனவே

ஏமா றுவனே வவனுமிருந்
தேமா றுவனே நானுமையோ
ஈரம் படைத்த வாரிவிழி
யீரம் படைக்கக் காணேனே.

(உரை.) ஆம் மாம்பழன் - சாறுநிறைந்த மாம்பழமும், அம் குளத்துடனே - நல்ல சருக்கரை வெல்லம் முதலியவற்றோடும், அனையும் - ஒன்றுகக் கலந்த, தேனும் குழப்பிய - தேனையும் சேர்த்துத் திரட்டிய, பால் அன்னம் - வெண்சோற்றுத் திரளை, பொருந்த - நன்றுக அமைய, உண்டு - சமைத்து, பணியார் - பணிவிடை செய்யும் படைத்தொழிலாளர், அ எடுத்து - அதனை எடுத்துக்கொண்டு வந்து, வர-வருகின்ற யாவர்க்கும், படைத்து-(உண்ணுதற்குக்) கொடுத்து,[1]

ஆம் மா பழனம் - நீர்நிலைகள் மிக்குள்ள பெரிய வயல்களிடத்தும், குளத்து உடனே - தடாகங்களினும், அனையும் -

1. சத்திரம் - அறவுணவு விடுதி.

கலந்துள்ள, தேனும் குழப்பிய பால் - தேனும் பாலும் சேர்ந்த வற்றை, அன்னம் - அன்னப்பறவைகள், பொருந்த உண்டு - தம் வயிறுநிறையக் குடித்து, பணி - வணங்குள்ள, ஆரம் - வரிகள் தோன்றும் தம் கழுத்தை, எடுத்துவர - மேல் தூக்கிக்கொண்டு வர, படைத்து - உடையதாகிய,[1]

கோமான் - மன்னவனுடைய, வெங்கடேசுரெட்டன்-, கொடுக்கும் - அளிக்கப்படுகின்ற, தானசத்திரம் போல் - அற உணவு விடுதிபோல், குறைவு இல்லாமல் - குறைவற்று, வளர்ந்த - வளர்ச்சிபெற்று வருகின்ற, முதுகுடி நல்நாட்டு - முதுகுடி நல்ல நாட்டின், பெரும்கடலே - பெரிய அளக்கரே !, கா மா விடம் - வலிமையுள்ள உண்டார்க்கு மரணத்தைத்தரும் நஞ்சை, ஆதரித்த - தன்பால் வைத்துள்ளதை, அஞ்சுஅக்கர-ஐந்தெழுத்து மறைப்பொருளுக்குரியவனை, வானவனுக்கு-சிவபெருமானுக்கு, அளித்தாயே - கொடுத்தாயே, கா - காத்தல்தொழிலுடைய, மா - திருமகளே, இடம் ஆ - தன் மார்பிடமாக, தரித்த - கொண்டுள்ள, அம் சக்கரவான் - அழகிய சக்கரத்தையுடைய திருமால், நவமோ இது எ(ன்)னவே - (இதை அறிந்து) இச் செயல் புதுமையோ என்று, ஏமாறுவனே - வருத்தமடைவானே? அவனும் இருந்தே மாறுவனே - அத் திருமாலும் தான் இருந்த இடத்தைவிட்டுச் செல்வானே?, நானும் ஐயோ - அந்தோ நானும், விழி - கண்களே, ஈர் - அரித்துக்கொண்டு வருகின்ற, அம்பு - கண்ணீரை, அடைக்கக் காணேனே - நீ நிறுத்துவதைக் காண்கின்றிலேனே.

கடல் தனக்கேயன்றிச் சிவபெருமானுக்கும் நஞ்சை உண்ணக்கொடுத்துக் 'காளகண்டன்' என்னும் பெயரடையச் செய்தது. ஆகவே, கடலுக்கு நலஞ்செய்யும் குணமில்லை; கெடுதல் செய்வதே இயற்கை; 'கடலே நீ நீரால் குளிர்ச்சிபெற்றிருந்தும் குளிர்ச்சித்தன்மையனவான அன்பு இரக்கம் நன்மை முதலிய உயர்ந்த பண்புகள் இன்றி, அலைகளால் இரைச்சலிட்டு மோதிமோதி யடித்துத் துன்புறுத்துகின்றதன்றி, என் கண்ணீரைத் துடைத்து நலஞ்செய்வதைக் காண்கிலேன்' என்பாளாய் 'விழிஈர் அம்பு அடைக்கக் காணேனே' என்றாள். (உக)

---

1. முதுகுடி நாடு.

உ உ

மணக்கோல இராமனுக்கும், முதுகுடிநாட்டிற்கும் சிலேடை

சால மரத்தே மூடுதத்தத்
தள்ளு மதுக்கே சரந்தாங்கத்
தருவி லமைத்த கனிகலக்குஞ்
சாறு பெருகப் பெருகமணக்

கோல ராமன் போலுமுது
குடிநன், னுட னெமைப்புரக்குங்
கோமான் வெங்க டேசுரேட்டன்
குலாவுங் கருணை நிகர்கடலே!

சூல பாணிக் குணவளித்தாய்
தோண்டை புகுமுன் சத்திவந்து
தொடுத்து விழுங்க வோட்டாமற்
சூட்டான் மிடறு கறுத்திருந்தான்

வால மதியு முன்னிடத்தில்
வந்து சூடு பட்டதன்றே
மறுவாய்க் கறத்த துன்சூடு
மட்டோ வடய மிட்டாயே.

(உரை) சால் அமரத்து - மிக்க போர்க்களத்தில், ஏ மூடு - சரக்கூட்டத்தை, தத்த தள்ளும் அதுக்கே - கடக்க ஊடறுத்துச் செல்லுதற்கு, சரம்தாங்க - அம்பருத்தூணியைத் தாங்கி, தருவில்-வெற்றியைக் கொடுக்கின்ற வில்லினை, அமைத்த-கொண்ட, க(ன்)னி கலக்கும் - சீதையாம் மங்கையை மணம்புணருகின்ற, சாறு பெருக - மணத்திருவிழா மிகநிகழ,[1]

சாலமரத்தே - மிக்கமரங்களில், தேம் மூடு - தேன்ஈக்களால் கட்டப்பட்ட தேன் இருள்களில், தத்த தள்ளும் மது - கசிந்து மேலெழுந்து உடைத்துக்கொண்டு வருகின்ற தேனில், கேசரம் தாங்க - பூந்தாதுகள் சேர, தருவில் - மரங்களில், அமைத்த -

1. மணக்கோல இராமன்.

உண்டான, கனி - பழங்கள், கலக்கும் - கசிந்து ஊற்றிய, சாறு - பழச்சாறுகள், பெருக பெருக - மேலே மேலே மிகுதியாக வர,[1]

மணக்கோல ராமன்போலும் - திருமணக் கோலங்கொண்ட இராமனைப்போல் தோற்றமளிக்கின்ற, முதுகுடி நல்நாடன் - முதுகுடி நல்லநாட்டிற்குத் தலைவன், எ(ம்)மை புரக்கும் கோமான் - எம்மைப் பாதுகாத்து வருகின்ற மன்னன், வெங்கடேசுரெட்டன் - வெங்கடேசுரெட்டனிடத்து, குலாவும் - பொருந்தியிருக்கின்ற, கருணைகர் கடலே - அருளையொத்த நிரம்பியிருக்கின்ற வாரணமே!, சூலபாணிக்கு - சூலப்படையைக் கையிற்கொண்டுள்ள சிவபெருமானுக்கு, உணவு அளித்தாய் - (ஆலகாலமென்னும் நஞ்சை) உணவாக உண்ணக் கொடுத்தாய், தொண்டைபுகுமுன் - அவன் தொண்டைக்குள் அது செல்லு முன்பாக, சத்திவந்து - கக்கும்படி உமட்டல் எடுத்து, தொடுத்து விழுங்க ஒட்டாமல் - சேர்த்து விழுங்கமுடியாமல், சூடு ஆல் - அதன்கொடிய வெப்பத்தினால், மிடறு கறுத்து இருந்தான் - கழுத்து கருநிறம் பெற்று இருந்தான், வால மதியும் - இளந்திங்களும், உன் இடத்தில் வந்து - உன்னிடமிருந்து பிறந்ததனால், சூடுபட்டது அன்றே - சூடுபட்ட தன்மையின் அறிகுறியல்லவா? மறு ஆய் - களங்கம் உடையதாய், கறுத்தது - இருள் நிறம் ஊடே காணப்பெறுகின்றது, உன் சூடு மட்டோ - உன் வெப்பம் இவ்வளவில் அடங்குந்தன்மையதாமோ? அபயம் இட்டாயே - நீயும் அச்சூடு பொறுக்கலாற்றுமையாலன்றே எந் நேரமும் கூக்குரலிட்டுக் கத்திக்கொண்டே இருக்கின்றாயே.

அமரம் - அமர் - போர். அம் சாரியை பெற்றது. தேம் - தேன். கேசரம் - பூந்துகள்; பூவினுள் இருக்கின்ற மகரந்தப் பொடி.

சிவபெருமான் பாற்கடலில் உண்டான நஞ்சை உண்ட வரலாற்றைக் குறித்து 'சூலபாணிக்கு உணவளித்தாய்' என்றுள். திங்களில் உண்டாகிய களங்கத்தையும், கடல் இரைச்சலையும் கடலில் உண்டான வெப்பத்தால் ஆனதென்று தற்குறிப்பேற்றம் தந்து கூறினள். அபயம் இடுதல் - தன்துன்பத்தை நீக்குமாறு கூறி ஓலமிடுதல். (உஉ)

1. முதுகுடி நாடு.

உங

மேகத்திற்கும், குயிலிற்கும் சிலேடை

[முதன்மடக்கு]

மேவுங் கறுப்பாற் பயந்தாரை
விட்டுக் காலால் விசைத்தெழும்பி
விரிவாம் பக்கஞ் சுற்றி வந்து
வேண்டுங் குயில்போற் சோலைதோறுங்

கூவுங் குயில்வந் திருக்குமுது
குடிநன் னுட னெமைப்புரக்குங்
கோமான் வெங்க டேசுரேட்டன்
கோடைபோற் பெருகு நெடுங்கடலே!

காவும் படைவீ டானவற்குக்
கடின முரச நீயென்மூலை
கடின முரச மன்னவனைக்
கலந்தாங் கிருந்தாற் கலந்தாங்கி

ஏவுந் தரங்கத் தரியேவே
வேருந்தரங்கத் தரிக்குமன்பா
யிரங்கா தவருக் கென்வீடா
யிரங்கா தமும்போ லிருந்ததுவே.

(உரை) மேவும் கறுப்பால்-தன்னிடங்கொண்டுள்ள கருமை நிறத்தன்மையால், பயம் தாரை விட்டு - மழைநீரைப் பொழிந்து, காலால் - காற்றினுன், விசைத்து எழும்பி - மோதப்பட்டு வேகங் கொண்டு மேலே சென்று, விரிவுஆம்-மிகுந்துபரந்துள்ள, பக்கம்-எட்டுத் திக்குப் புறங்களிலும், சுற்றிவந்து - சூழ்ந்து ஒன்று பட்டு,[1]

மேவும்-பொருந்தியிருக்கின்ற, கறுப்பால்-கரிய நிறத்தினுல், பயந்தாரை - தன்னை ஈன்ற தாய்தந்தையரை, விட்டு - விட்டு விட்டுப் பிரிந்து, காலால் விசைத்து எழும்பி-காலினுல் வானத் திடத்து வேகங்கொண்டு பறந்து, விரிவு ஆம் - வெளியிடமாகிய,

---

1. மேகம்.

பக்கம் சுற்றிவந்து-எல்லாப்பக்கங்களிலும் ஓடிப் பறந்துசென்று வந்து,[1]

வேண்டும் குயில்போல்-யாவரும் விரும்புகின்ற மேகத்தைப் போல், சோலை தொறும் - பொழில்கள் எங்கும், கூவும் குயில் - கூவுகின்ற குயில்கள், வந்து இருக்கும் - சென்று உறைகின்ற, மூதுகுடி நல்நாடன்-மூது குடியாகிய நல்நாட்டுக்குத் தலைவனும், எ(ம்)மை புரக்கும் கோமான் - எம்மைப் பாதுகாக்கின்ற வேந்தனும், வெங்கடேசுரெட்டன் - வெங்கடேசுரெட்டனென்னும் திருப்பெயரையுடையவனும் ஆனவனின், கொடைபோல் - கொடைத்திறத்தையொத்த, நெடும் கடலே-நீண்ட பௌவமே!, காவும் - சோலைகளெல்லாம், படைவீடு ஆனவற்கு - பாசறையாகக் கொண்டு காதலர்மேற் போர்தொடுக்கின்ற மன்மதனுக்கு, கடினம் - வலிமைமிக்க, முரசம் நீ - நீ பேரிகையாய் இருந்து உதவுகின்றாய், என் முலைகள் - என் கொங்கைகள், தினம் உரச - நாள்தோறும் தழுவுதற்கு இருக்க (அதற்கு விடாமல்), மன்னவனே - என் காதற்கிழவனும் அவ்வேந்தனே, கலந்து ஆங்கு இருந்தால் - காதலால் பிணிப்புற்றுப் பிரியாது இருக்கப் பெற்றால், கலம் தாங்கி - கப்பல்களைத் தம்மிடம் ஏற்று, ஏவும் தாங்கத்து - மேலெழுந்து ஓடிவருகிற அலைகளையுடைய, அரியே - கடலே!, வேள் தரு ஏவும் - மன்மதனால் என்மேல் செலுத்தப்படுகின்ற மலரம்பும், அங்கத்து - என் உடல் உறுப்புகளில், அரிக்கும் - துளைத்துத் துன்புறுத்தும், அன்பு ஆய் - அன்பு கொண்டாராய், இரங்காதவருக்கு - இரக்கங்கொள்ளாத என் காதலர்க்கு, என் வீடு - நான் வாழும் இல்லம், ஆயிரம் காதமும் போல் - ஆயிரங் காதத்தூர அளவுபோல் வருதற்கு முடியாத நிலையில், இருத்தலே - இருக்கின்றதே.

குயில் - மேகம்; குயிலென்னும் பறவை. குயிலுக்குக் கூடு கட்டிக் குஞ்சு பொரிக்கத் தெரியாது. அதனால் அது, காக்கைக் கூட்டில் முட்டையிடுமென்றும், காக்கை அதனைத் தன் முட்டையென்றே கருதி அடைகாத்துக் குஞ்சாக்கிவிடுமென்றும் கூறுவர். அதனால் 'பயந்தாரை விட்டு' என்று கூறினள். இதனைக்

> 'கண்மூன் றுடையானும் காக்கையும் பையரவும்
> என்னின்ற யாயும் பிழைத்ததென்—பொன்னின்ற
> கோங்கரும் பன்ன முலையாய் பொருள்வயிற்
> பாங்கனுர் சென்ற நெறி.'

என்னும் நாலடியார்ப்பாட்டும் 'காக்கையும்' என்ற தொடரினால் வலியுறுத்தும். (உக)

---

1. குயில்.

உரை

புலவருக்கும், மேகத்திற்கும் சிலேடை

[முதல்மடக்கு]

சாரம் படைக்குங் கவியுமிசை
தாங்கும் படிக்கு மத்தமுன்னே
சத்தங் காட்டி உள்ளுறையும்
தானே விரிக்கும் புலவரைப்போற்

காரங் கிருக்கு மணிமாடங்
காணும் இளசை புரக்கவந்த
கதிர்வேல் வெங்க டேசுரேட்டன்
கருத்துக் கிசைந்த கருங்கடலே !

ஆரங் கோழிப்பாய் உனைக் காணில்
ஆரங் கோழியார் கும்பமுனி
அடுத்தான் எடுத்தான் ஆற்றுமல்
அந்தோ போதிய மலைசேர்ந்தான்

மாரன் புடைப்பான் உனையெனக்கு
மாரன் புடையார் எனைப்போதிய
மலைவா யிருந்து வருந்தாமல்
மனையில் இருத்திப் புரப்பாயே.

(உரை) சாரம் படைக்கும்-நூல்களின் உட்கருத்துக்களைக் கொண்டிருக்கின்ற, கவியும் - பாடல்களும், இசை தாங்கும் - இராக அமைவுபெற்றிருக்கும், படிக்கும் அத்தம் - சொல்லுங் கால் பொருளும், முன்னே சத்தம் காட்டி - முன்பாகவே பாடுகின்ற ஓசையை உண்டாக்கி, உள் உறையும் தானே விரிக்கும் - (வெளிப்படை உவமமன்றி) உள்ளுறை உவமங்களையும் தாமாகவே விரித்துரைக்கின்ற,[1]

சார் அம்பு அடைக்கும்-சேர்க்கையுள்ள நீரினை உட்கொண்டிருக்கும், கவியும் - வான வெளிமுழுதும் சூழ்ந்துநிற்கும், படிக்கும் - வானத்தினன்றிப் பூமியினும், அத்தம் முன்னே - எல்லா

1. புலவர்.

வழியிடங்களினும், சத்தம் காட்டி - இடிஇடித்து முழங்கி, உள் உறையும்-தன்னிடத்துள்ள நீர்த்துளிகளையும், தானே விரிக்கும்-தானே பொழிந்துதவுகின்ற,[1]

புலவரைப்போல் - தமிழ்ப்புலவர்களைப் போலாக, கார் - மேகங்கள், அங்கு இருக்கும் - அவ்வவ் விடங்கள்தோறும் தங்கியிருத்தற்கான, மணிமாடம் காணும் - அழகிய மாளிகைகள் காட்சியளிக்கின்ற, இளசை - எட்டியாபுர நகரை, புரக்கவந்த - பாதுகாக்கத் தோன்றிய, கதிர்வேல் - ஒளிமிக்க வேற்படையைத் தரிக்கிய, வெங்கடேசுரெட்டன், கருத்துக்கு இசைந்த - கருத்தினுக்கு ஏற்ற, கரும் கடலே - கரியநிறமுள்ள கடலே!, ஆரம் கொழிப்பாய் - நீ முத்துக்களை அலைகளால் ஒதுக்குவாய், உ(ன்)னைக் காணில் - உன்னைப் பார்த்தால், அர் அங்கு ஒழியார் - யார்தாம் உன்னிடம்விட்டுப் போகாமல் தங்கியிருப்பவர்?, கும்ப முனி - குடமுனிவனுடைய அகத்தியன், அடுத்தான் - உன்னிடம் சார்ந்தான், எடுத்தான் - உன்னைக் கையில் எடுத்தான், ஆற்றுமல் அந்தோ - உன் கொடுமைக்கு வருந்தி ஐயோ, பொதியமலை சேர்ந்தான் - தன் இருப்பிடமாகிய பொதியமாமலைக்கண்ணேயே தங்கிவிட்டான், உ(ன்)னை மாரன் படைப்பான் - உன்னை மன்மதன் தனக்குரிய முரசமாகக்கொண்டு அடித்து முழக்குவான், எனக்கும் ஆர் அன்பு உடையார் - என்பால் அன்புள்ளார் யாரிருக்கின்றனர், எ(ன்)னை - தமியளாம் என்னை, பொதியமலையாய் இருந்து - பொதியமலையிடத்திலிருந்து, வருந்தாமல் - வருத்தமுறுதபடி, மனையில் இருத்தி - என் இல்லிடத்திலேயே தங்கவைத்து, புரப்பாயே - காத்துதவி செய்வாயாக.

அகத்தியமுனிவன் கடல்நீரை உண்ட வரலாற்றை 'கும்ப முனி அடுத்தான் எடுத்தான் ஆற்றுமல் அந்தோ பொதியவரை சேர்ந்தான்' என்றுள். பொதியிலைத் தமக்கு இருப்பிடமாகக் கொண்டு வாழுகின்ற தன்மையைத் தந்துறைப்பேற்ற அணியாகக் கடலுக்கு அஞ்சிப் போயிருப்பதாகக் கற்பித்துக் கூறினள். மலையாய் - மலையிடத்து; மலைவுஆய் மலைப்பாக என்று இரு பொருள் நயந்தோன்றல் காண்க. எனக்கும் என்பதில் உம்மை இறந்தது தழீஇய எச்சம்; என்னை? உனக்கேயன்றி என்பதைக் குறித்தலால் என்க. (உ-சை)

---

1. மேகம்.

உரு

[முதல்மடக்கு]

தினகராதி பரைக்காணிற்
செல்லா திருந்த பிறைபோலத்
தேரைத் தடுக்க வொற்றைவண்டிற்
றேற்கும் வடக்கு மாப்புரட்டக்

கனக மாட மீதுகோடி
கட்டு மிளசை புரக்கவந்த
கதிர்வேல் வெங்க டேசுரேட்டன்
கருத்துக் கிசைந்த பெருங்கடலே!

தனமே முத்தம் பொரிந்ததுசந்
தனமே தரியேன் சயனமுநூ
தனமே யான தன்றில்சே
தனமே யெனவு நினைப்பேனே

வனமே நிரம்பி மரகதம்போல்
வனமே படைத்தா யெனக்காக
வனமே கொடுத்தாய் மான்மிகுந்த
வனமே தணிக்க மாட்டாயே.

(**உரை**) *தினகர ஆதிபரை* - ஞாயிறுகிய முதன்மைபெற்ற தன்மையுடையாரை, *காணில்* - கண்டால், *செல்லாது* - எதிர் போகாமல். *இருந்த* - (ஒளிகுறைந்து) நின்ற, *பிறைபோல* - திங்களைப்போல், *தேரை-கதிரவனின் தேரினை, தடுக்க* - மறித்து, *ஒற்றைவண்டில்* - கதிரவனின் ஒற்றை உருளையை, *தெற்கும் வடக்கும்ஆ* - (தான் செல்லும் திசையான மேல்புறம் செல்ல வொட்டாது) தென்திசை வடதிசைப் பக்கமாக, *புரட்ட* - நிலை பிறழச்செய்யும்படி, *கனகம் மாடம்மீது* - பொன்னுலியன்ற மேல் மாட வரிசைகளின் உச்சியில், *கொடிகட்டும் இளசை* - கொடிகள் கட்டிப் பறக்கின்ற இளசைநகர்த்தை, *புரக்கவந்த*-பாதுகாக்கத் தோன்றிய, *கதிர்வேல்* - ஒளிவீசுகின்ற வேற்படையையுடைய, *வெங்கடேசுரெட்டன்*-, *கருத்துக்கு இசைந்த* - மனதுக்கு ஏற்ற, *பெரும் கடலே* - பெரிய வேலியே!, *தனமே* - என் கொங்கைகளின்மேல் கிடக்கின்ற, *முத்தம் பொரிந்தது* - முத்து

மாலே காதல்வெப்பத்தால் பொரிந்துவிட்டது, சந்தனமே தரியேன் - சந்தனக் கலவை அணிதல்லப் பொறுக்கலாற்றேன், சயனமும் - படுக்கையணையும், நூதனமே ஆனது - (உறக்கங் கொடுக்காமல் இப்போது) புதுமையாக இருக்கின்றது, அன்றில்-அன்றிற் பறவையோ, அசேதனமே எ(ன்)னவும் - என் நிலையை உணராத அறிவற்றதாக இருக்கவும், நினைப்பேனே - (உன்னையன்றி வேறு யாரையும் நான்) கருதுவேனே?, வனமே நிரம்பி - நீர் பொங்கியெழுந்து, மரகதம்போல் - பச்சைமணியின் நிறத்தையொத்து, வ(ன்)னமே படைத்தாய் - பசுமைநிற அழகுகொண்டுள்ளாய், எனக்கு ஆகம் - என்றனுக்கு உடலின்மேல், வ(ன்)னமே கொடுத்தாய் - பசலைநிறத்தையே தந்தாய், மால் மிகும் - காதலினுல் மிகுந்துள்ள, தவனம் - வெப்பத்தை, தணிக்க மாட்டாயே - குறைத்து நலஞ்செய்தா யில்லையே.

தினகரன் - சூரியன். ஞாயிற்றின் ஒளிமுன் ஏனைய திங்கள் விண்மீன்களின் ஒளி நன்கு ஒளிவிளங்கித் தோன்றுது, தம் மொளி குன்றிவிளங்கும்; அதுபோல, வானுற வோங்கிய மாமாடங்களின்மீது கட்டி அசைகின்ற கொடி, சூரியன் ஒளி படாதவாறு மறைத்து, அதன் ஒற்றை உருவையைப் புரட்டுமாறு ஓங்கி நின்றதென, இளைசைகரின் ஏற்றத்தைக் கூறினர். (உக)

உசூ

இந்திரனுக்கும், மேடைக்கும் சிலேடை

விண்ணு டருக்கன் புறமேக
மேலா யுருவச் சிரமேந்தி
வெள்ளி பதுங்க மஞ்சூர
வெளிவாய்ச் சிந்தா மணியமையக்
கண்ணு யிரத்தான் போன்மேடை
காணு மிளசைப் பதிபுரிந்த
கதிர்வேல் வெங்க டேசுரெட்டன்
கருத்துக் கிசைந்த பெருங்கடலே!

பெண்ணு கியசேந் திருவையுநீ
பெற்றுய் அவளு மாரனையே
பெற்றுள் அந்த மாரனுமுன்
பேரன் உனக்கும் இரக்கமுண்டோ

உண்ணு விரத மாயிருந்தும்
உயரத் தோடம் வரவிசைக்கும்
உன்பால் இடந்தந் தாயுனையும்
ஊரிற் குடியேன் றுரையாரே.

(உரை) விண்நாடருக்கு - வானுலகிலுள்ள தேவர்களுக்கு, அன்பு உற - அன்பு மிக, மேகம் மேல் ஆய் - மேகத்தை வாகன மாகக் கொண்டு அதிலேறியிருந்து, உரு வச்சிரம் ஏந்தி - அழகிய வச்சிரப்படையைக் கையிற்கொண்டு, வெள்ளிபம்-வெள்ளையான யாகிய, துங்க மஞ்சு ஊர - மேன்மையான மேகம் வர, வெளி வாய் - மறைவில்லாத இடத்தில் யாவர்க்கும் பயன்படும்படி, சிந்தாமணி அமைய - சிந்தாமணியென்னும் மணிக்கல் தன்னிடம் பொருந்த,[1]

விண்நாடு அருக்கன் - வானத்தின்மேலேறிச் செல்கின்ற ஞாயிறும், புறம் ஏக - வேறெரு வழியாகச் செல்ல, மேல் ஆய் - மிக உயர்ந்ததன்மையாய், உருவ சிரம் ஏந்தி - வடிவ மேலிடத் தால் உயர்ந்து, வெள்ளி பதுங்க - விண்மீன்கள் தன்மேல்

1. இந்திரன்.

பொருந்த, மஞ்சு ஊர-மேகங்கள் தன்மேல் படிந்து ஓடிக்கொண் டிருக்க, வெளிவாய் - தன்னுடைய மேல்பக்கத் தளங்களிடத்து, கிந்தா மணி - பேர்ந்து விழாத ஒன்பதுவகை மணிகளும் பதிக்கப் பெற்று, அமைய - பொருந்த,[1]

கண் ஆயிரத்தான் போல் - ஆயிரங் கண்களையுடைய இந்திரனைப்போலாக, மேடை காணும் - உப்பரிகைகள் தோன்று கின்ற, இளசைபதி புரந்த - எட்டியாபுர நகரைக் காக்கின்ற, கதிர்வேல் வெங்கடேசுரெட்டன் - ஒளிபொருந்திய வேற்படை யைக்கொண்ட வெங்கடேசுரெட்டனின், கருத்துக்கு - மனதுக்கு, இசைந்த - ஏற்ற, பெருங்கடலே - பெரிய கடலே!, பெண் ஆகிய-பெண்மையின் இயல்புகள் யாவும் உடையளான, செம்திருவை யும் - அழகிய இலக்குமியையும், நீ பெற்றுய் - நீ மகளாகப் பெற்றுத்தந்தாய், அவளும் - அப் பெண்திருவும், மாரனையே பெற்றுள் - மன்மதன் ஒருவனையே மகனுகப் பெற்றுள், அந்த மாரனும் - அத்தன்மையுள்ள அனங்கனும், உன் பேரன் - உனக்குப் பேரனுகும் முறைமை பெற்றுன் (அவன் எம்போல்வார்க்குக் கொடுமை இழைக்கும் குணம் படைத்தவன்) உனக்கும் இரக்கம் உண்டோ - (அத்தன்மையே உனக்கும் இருக்குமே யல்லாமல் வருந்தினேர்பால்) உனக்கு இரக்ககுணம் உண்டாகுமோ? உண்ணு இரதம் அய் இருந்தும் - எந்த உயிர்களும் உண்பதற்கு ஏலா உப்புக் கைப்புச் சுவையுடையையாக இருந்தும், உயரத்து ஓடு-மேலெழுந்ததான, அம் வர இசைக்கும் - நீரலைகள் வரும்படி செய்கின்ற, உன்பால் - உன்பக்கத்தில், இடம் தந்தாய் - இடங் கொடுத்தாய், உ(ன்)னையும் - உன்னை, ஊர் இல் - ஊரில் இருக் கின்ற எவரும், குடி என்று - இந் நீரை உண்ணென்று, உரை யாரே - கூறமாட்டாரே.

மேடைகள் பல்வகை மணிகளால் அழகுபடப் புனைந்திருப் பதனுல் 'கண்ணுயிரத்தான் போல் மேடை' என்ருள்.

> [2]'ஆயிரங் கண்ணேன் அருங்கலச் செப்பு
> வாய்திறந் தன்ன மதிலக வரைப்பு'

என, இளங்கோவடிகள் சிலப்பதிகாரத் துரைத்தமையும் இக் கருத்தே கொண்டென்க.

திருப்பாற் கடலில் திருமகள் தோன்றியமையால் 'செந்திரு வையும் நீ பெற்றுய்' என்ருள். அவள் மகன் மன்மதன். அவன், காதலர்கட்குப் பெருந்துன்பஞ் செய்து அலைப்பவனுகலின், அக்கொடுமை வழிவழி பெருகிவருவது இயல்பெனக்கொண்டு 'மாரனும் உன்பேரன்' என்ருள். அந்த முறையில் உனக்கு இரக்க

---

1. மேடை. 2. சிலப். கச : சுஅ - க.

மில்லையென்று கடலொடு கழறி வருந்துகின்றாள். கடல் இரவு பகல் ஓவாது இரைச்சலிட்டுக்கொண்டு இருப்பதால் காதலர் கட்குக் கண் துயில் கொள்ளாமல் வருத்தத்தைக் கொடுப்பது இயல்பு, ஆகலான் 'உனக்கு இரக்கமுண்டோ' என்றாள்.

உண்ணிரதம் - பட்டினிகொண்டிருக்கும் நோன்பு; உண்ணு இரதம் - யாரும் உண்பதற்கேலாத உப்புச்சுவை. கடல்நீர் உப்புச் சுவையாக இருப்பதால் இவ்வாறு இருபொருள் நயம் பெறக் கூறினாள். இரதம் - இரசம்; சுவை, வடசொல். ஊரில் குடி - ஊரிலிருக்கின்ற குடிமக்கள்; ஊரில் வாழ்வோர். ஊரில் குடி - ஊரில் வாழ்வோர் குடி (பருகுங்கள்) என்று கூறுவாரல்லர் எனப் பொருள்சிறப்புக் காண்க.

ஊர்: இடவாகு பெயராக மக்களுக்கு வந்தது. குடி: பெயர்ச்சொல்; குடி என்னும் முன்னிலையேவல் ஒருமை. உரையார்: எதிர்மறை வினையாலணையும் பெயர்.

'பெண்ணுகிய செந்திருவையும் நீ பெற்றாய்' என்பது, பெண்ணைப் பெற்றெடுத்தவர்க்குப் பெண்ணியல்பு தெரியும். அதனால் இரக்கங்காட்டுவர். 'பெண்ணென்னும் பேயுமிரங்கும்' உனக்கு இவ்வியல்பு ஒன்றுமில்லை எனக் கடலை நோக்கிக் குறிப்பால் தலைவி உணர்த்தியவாறும். (உசு)

உடு

[இடைமடக்கு]

அவிரும் மதிநா டகத்தின்மயில்
அமரும் மதிநா டகங்காட்டும்
அணிசேர்த் தணடத் தடுக்குமெயில்
அதுபோய்த் தண்டத் தடுக்குமுகில்

நவிலும் அளகை நகரிளசை
நகரோன் சனகன் சிலைபார்த்து
நகைத்தோன் வெங்க டேசுரெட்டன்
நயனம் போலும் பெருங்கடலே!

புவிமுன் னேயம் பரமாகப்
புகுமுன் னேயம் பரமானேன்
பொருந்த வேலை யாய்வஞாவாய்
போட வேலை யாய்வஞாயே

குவியு மலைக்கத் தக்கவனங்
கோண்டே மலைக்கத் தக்கவணுன்
குறையா வனசக் கரமடவாய்
கோண்டேன் வனசக்கர மடலே.

(உரை) அவிரும் - விளங்குகின்ற, அதி நாடு அகத்தின் - மிக்க வனங்களிடத்து, மயில் - மயில்களானவை, அமரும் - யாவரும் விரும்புகின்ற, மதி - அறிவான் அறிகின்ற, நாடகம் காட்டும் - கூத்தாடி நிற்கும், மணிசேர்த்து - நவமணிகளோ ஒன்று படுத்தி, அண்ட - பொருந்த, தடுக்கும் எயில் - கட்டியிருக்கின்ற தான மதில், அதுபோய் தண்ட - அவைகள் போய் இடைமறித் தலால், தடுக்கும் முகில் - செல்வது தடைப்பட்ட மேகங்கள், நவிலும் - முழக்கஞ்செய்கின்ற, அளகை நகர் - அளகை நகரை யொத்த செல்வச் சிறப்பு மிக்க, இளசை நகரோன் - எட்டியாபுர நகருக்குரிமையாளனுகியவனும், சனகன் சிலை பார்த்து - மிதிலை யில் சனக மன்னனுடைய வில்லைக் கண்டு, நகைத்தோன் - சிரித்து வளைத்தவனை இராமனையொத்தவனும், வெங்கடேசு ரெட்டன் - வெங்கடேசு ரெட்டனென்னும் பெயருடையவனு

மான ஏந்தலின், நயனம் போலும் - திருக்கண்களே யொத்திருக்கின்ற, பெரும்கடலே - பெரிய கடலே! புவி முன்னே - பூமியிடத்து, அம்பரம் ஆக - கடலாக, புகும் - வருகின்ற, உன் நேயம்- உன்னிடமே பேரன்பு, பரன் ஆனேன் - மிகுதியாகக் கொண்டுள்ளேன், பொருந்த - பொருத்தமான, வேலையாய் - அலுவலாக, வளாவாய் - உலகைச் சுற்றியிருப்பாய், ஆய்வளையே - ஆராய்ந்தெடுத்த வளையல்களே, போட வேலை-(காதலால் உடல்மெலிந்து கழன்று விழுவதையெடுத்து) அணிவதே எனக்குத் தொழிலாக இருக்கின்றது, குவியும் மலைக் கத்த - வளர்ந்துள்ள பொதியில் மலைக்குத் தலைவனவன்பால், கவனம் கொண்டே - (காதற்) கவற்சிபெற்று, மலைக்கத் தக்கவள் நான் - மலைப்புக்கொண்டிருக்குந் தன்மையுடையவள் நான், குறையா வ(ன்)ன - குறைவில்லாத அழகிய, சக்கர மடவாய் - வட்டமான கடலாம் தோழியே, கொண்டேன் வனச கரம் மடலே - தாமரை மலரையொத்த என் கையிடத்து எம் தலைவனின் திருவுருவையெழுத மடலையெடுத்து வைத்துள்ளேன் (இனி மடலெழுதுவதே என் துணிவு).

நகைத்தோன் - சிரித்தோன். தெரிவிலை விளையாலணியும் பெயராய் இராமபிரானைக் குறித்துப் பின்னர், பாட்டுடைத் தலைவனைக் குறித்துநின்றது; இருமடியாகு பெயர். தலைவி, தன் காதலனை, வெங்கடேசுவரெட்டன் கண்களையொத்ததாகக் கடலைக் கருதியது. கடலினைப் போல் அளியும் தெறலும் உடைமை கருதி எனக்கொள்க. (உவ)

உஅ

[முதல் மடக்கு]

கலேயே பழகித் துரோபதிக்குக்
கலேயே வழங்கி மிதிலேவழிக்
கலேயே யுருவாக் கண்டுபிறங்
கலேயே குடையா வெடுத்துநின்ரேன்

சிலேவேள் கதிர்வே லெடுத்துவருஞ்
செயவேள் வெங்க டேசுரேட்டன்
சித்த மகிழுஞ் சந்த்ரகிரி
செழிக்க முழக்கஞ் செயுங்கடலே!

அலேயே கொழித்துப் பின்னேயுங்கா
யலேவே யமைத்து நீயிருந்தா
யலேயே விடியக் காணேன்மை
யலேயே யுரைத்தா லறியாயே

இலேயோ விரக்க முனக்குமேங்க
ளிலேயோ மதனும் வகுப்பதுவேய்
யிலேயோ கொடுக்கு மதியுரைக்கை
யிலேயோ வெனவு முரையாயே.

(உரை) *கலேயே பழகி - எல்லாக் கலைகளும் கற்றுப் பயிற்சி பெற்று, துரோபதிக்கு - பாஞ்சாலிக்கு, கலேயே வழங்கி - ஆடை அவிழாமல் காத்துக் கொடுத்து, மிதிலே வழி - மிதிலே நகருக்குச் செல்லும் பாதையில், க(ல்)லேயே உருவா கண்டு - கல்வடிவைப் பெண் வடிவாக்கி, பிறங்கலேயே - 'கோவர்த்தனம்' என்னும் மலேயை, குடையா எடுத்துநின்ரேன்-குடையாக நிமிர்த்தெடுத்து நின்றவனன திருமாலேயொத்த, சிலேவேள் - வில்லேத் தாங்கி விருப்பத்துக்குரியவனன, கதிர்வேல் எடுத்து வரும் செய வேள்- ஒளிபொருந்திய வேற்படையைத் தாங்கிய வெற்றிக்குரியனும், வெங்கடேசுரெட்டன் - வெங்கடேசுர எட்டனனவன், சித்தம் மகிழும் - மனம் மகிழ்கின்ற, சந்த்ரகிரி செழிக்க - பொதியமாமலே செழிப்படைய, முழக்கம் செ(ய்)யும் கடலே - முழங்குகின்ற கடலே! அலேயே கொழித்து - அலேகளே மேலும்மேலும் ஒதுக்கிக்*

கொண்டுவந்து பின்னேயும் - அதன் பின்னரும், காயலேயே அமைத்து - என்போல் வாருக்குக் காமக்காய்ச்சலே உண்டாக்கி, நீ இருந்தாய் - நீ இருக்கின்றாய், அ(ல்)லேயே விடிய காணேன் - ஐயோ! இராப்பொழுது கழிந்துபோகக் கண்டேனில்லே, மையலேயே உரைத்தால் - என் காதலேயெடுத்துக் கூறினுல், அறியாயே - உணர்கின்றியில்லேயே, இலேயோ இரக்கம் உனக்கும் - உனக்கு இரக்க உணர்வு என்பது ஒன்று இல்லேயோ? எங்கள் இ(ல்)லேயோ மதனும் வளைப்பது-எம் இல்லங்களேயோ மன்மதன் வந்து சூழ்ந்துகொள்வது? வெய்யிலேயோ கொடுக்கும் மதி - திங்கள் வெப்பக்கதிரையே கொடுக்கின்றது, உரைக்கையில் - (இக்கொடுமைகளே உன்னிடங்) கூறுங்கால், ஐயோ எனவும் - ஐயோ வென்றுகூறும் பரிவுரைகூட, உரையாயே - நீ கூறுகின்றியில்லேயே.

தலேவிக்குக் கண்கள் தூக்கங்கொள்ளாது இரவுப் பொழுது ஓர் இரவு ஏழிரவுபோல் துன்பஞ் செய்தலால், 'அலேயே விடியக் காணேன்' என்றுள். ஒருவர் தம் குறையை மற்றொருவரிடம் எடுத்துச் சொல்லும்போது கேட்போர் சிறிது செவிகொடுத்துக் கேட்பதோடு, 'ஐயோ இவ்வாறுனதா?' என்று இரக்கவுரை கூறி ஆறுதலளிப்பது உலகியல் முறை. இங்கே கடலானது தலேவி முறையிடுதலேச் சிறிதும் கருதாதிருப்பது அறிந்து, 'உரைக்கையில் ஐயோ எனவும் உரையாயே' எனப் பரிவும் துன்பமும் மனத்தைக் கவற்ற வெறுத்துக் கூறினுள். (உ அ)

உரை

[முதல் மடக்கு]

களக மெனவே யிருந்தவிந்தை
கருத்து மகிழ்ந்து நகைத்ததுபோற்
கருதார் புறந்தந் ததைப்புயங்கள்
கண்டு நகைத்துக் கொண்டதுபோல்

தளவ மலரை வணங்தசய
தரமால் வெங்க டேசுரேட்டன்
தமிழுக் குதவு நிதிபோலத்
தானே வளருஞ் சலநிதியே!

வளமைக் கடலே யெனைநெருங்கு
வளமைக் கடலே பிரதானம்
வாரி யிடமே மதன்கணையை
வாரி யிடமே கலியிழந்தேன்

உளமத் தனையு மயலாகி
உளமத் தனையு மெனைப்பாராள்
ஊரம் பலத்த விரிதிரையே
ஊரம் பலத்த விருதிலையே.

(**உரை.**) களகம் எ(ன்)னவே - அன்னமென்னும் படியாக, இருந்த விந்தை - தன் தோள்களில் வீற்றிருந்த வீரத்திருமகள், கருத்து மகிழ்ந்து - உளங்களிகொண்டு, நகைத்ததுபோல் - சிரித்த ஒளிபோன்றும், கருதார் - தன் பகைவர்கள், புறம் தந்தை - புறமுதுகிட்டோடுவதை, புயங்கள் கண்டு - தன் தோள்கள் கண்டு, நகைத்துக் கொண்டதுபோல் - தாமே தமக்குள் சிரித்த தென்னும்படியாகவும் தோன்றும்படி, தளவ மலரை வணங்த-முல்லை மலர்மாலையைப் பூண்திருக்கின்ற, சயதரமால்-வெற்றிப் பெருமை மிக்கவனை, வெங்கடேசுரெட்டன்-வெங்கடேசுரெட்ட வேந்தன், தமிழுக்கு உதவு நிதிபோல - தமிழ்மொழிக்காகக் கொடுக்கின்ற கொடைப் பெருக்கமென்னும் படி, தானே வளரும் - தானாகப் பெருகிக்கொண்டு வருகின்ற, சலநிதியே - நீர்ப்பெருக்கமே, வளமை கடலே - செழிப்புமிக்க

கடலே!' எ(ன்)னை நெருங்கு - என்னை நெருக்கிக்கொண்டு வருகின்ற, வள மைக்கு - மிக்க இருட்கூட்டத்துக்கு, அடலே பிரதானம் - வருத்துதலே முதன்மையாக இருக்கின்றது, வாரி இடமே - கடலாகிய விரிந்த இடமே, மதன் - மன்மதனுனவன், கணையை - மலரம்புகளை, வாரி இட - மிகுதியாக என்மேல் தொடுத்துச் செலுத்த, மேகலை இழந்தேன் - நான் அணிந்துள்ள மேகலாபரணத்தைப் போக்கினேன், உ(ள்)ளம் அத்தனையும் - என்நெஞ்சிடம் முழுதும், மயல் ஆகி - மயக்கமடைந்து, உ(ள்)ளம்-இருக்கின்றேம், அத்த அ(ன்)னையும் - (எனக்குரிமையுள்ள) சிறந்த தாயும், எ(ன்)னைப் பாராள் - என்னைத் தன் கண்ணுலும் பார்க்க ஒருப்படாளாயிருக்கின்றுள், ஊர்-தவழ்ந்து செல்கின்ற, அம்பு அலைத்த - நீரால் உலைத்துள்ள, விரி திரையே-விரிந்த கடலே!, ஊர் - ஊர்மக்கள், அம்பலை தவிருது - பழிச் சொற் பேசுவதை நீக்குவது, இ(ல்)லையே - இன்மையாகவே இருக்கின்றதே.

களகம் - பெருச்சாளி, அன்னம் முதலியவற்றைக் குறிக்கும் பல பொருள் உரிச்சொல். ஈண்டு வெற்றிமகட்காதலால் 'அன்னம்' என்று பொருள் கூறப்பெற்றது. பாட்டுடைத் தலைவன் தோள்களிற் புரளும் முல்லை மலர்மாலை வெண்ணிற முடையதாகலான், அதன் வெள்ளியநிற ஒளிக்கு வெற்றித் திருமகள் (வீரலட்சுமி) சிரிப்பின் ஒளியையும், பகைவர் புறமுதுகிட்டு ஓடுதலைக் கண்டதும் அவர்களைத் துரத்தி வீறுகொண்ட தோள்கள் சிரிப்பதாகக்கொண்டு, அச் சிரிப்பின் ஒளியையும் உவமமாகக்கொண்டு முல்லைமாலையின் வெண்ணிறத்துக்கு ஏற்றங் கூறினர்.

வெங்கடேசுரெட்டவேந்தன், தமிழ்ப் புலவர்கட்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் உதவிய பேரறநிதி பலபடப் பெருகி அதன் பயனைத் தருதல்போல், கடலும் ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் முதலிய நீர் பெருகி நாளுநாளும் பேரலைமிக்கு இரைந்து கொண்டே இருத்தலின், 'தானே வளருஞ் சலநிதியே' என்று தலைவி கடலை விளித்தாள்.

காதலர்க்கு மதன் மலர்க்கணைகள் வருத்த உடல் மெலிவினுல் தாம் அணிந்துள்ள அணி ஆடை முதலியன நெகிழ்ந்து நீழ்விழுதல் இயல்பு. ஆகலின், 'மதன்கணையை வாரியிட மேகலை இழந்தேன்' என்ருள்.

"தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை." (திருக்குறள்: கூஎஎ)

என்னும் திருவள்ளுவர் தந்த காதலிகூறி வருந்துதலும் காண்க. இது போன்றே திருவிளையாடற் புராணத்தும் இறைவன், இறைவி தடாதகைப் பிராட்டியாரை மணத்தற்கு மணக் கோலங் கொண்டு செங்கண் விடைமேல் உலாவந்த காலை, பருவப் பெண்கள் காதல்கொண்டு உடலும் உயிரும் ஊசலாட ஏங்கித் தாம் அணிந்த அணிகளும் உடுத்த கலையும் தாம் கற்றகலையும் இழந்துநின்றதாகப் பரஞ்சோதி முனிவர் பகரும் செய்யுளும் ஈண்டு ஒன்றுபடுத்தி மகிழற்பாலதாகலின் அதனையும் காட்டுகின்றும்.

[1]"விதுக்கலை மிலைந்து செங்கண் விடையின்மேல் வருமா னந்த
மதுக்கடல் தனைக்கண் வாயான் முகந்துண்டு மகளி ரெல்லாம்
புதுக்கலை சரிவ தோரார் புரிவளை கழல்வ தோரார்
மூதுக்குறை வகல்வ தோரார் மூழ்கினர் காம வெள்ளம்,"

என்பதாகும். பிற ஆன்றோர் இலக்கியங்களில் இவ்வாறு வருவன பிறவுங் காண்க. (உக)

1. திருவிளையாடல் ,திருமணப் படலம்: கஙு அ.

நூ ○

கலிமகளுக்கும், முல்லை மாலைக்கும் சிலேடை

[முதல்மடக்கு]

ஏடு சேர்க்கு மதுகரமே
லேந்தும் போதன் பான்மலர்வா
யிருக்கு நூலி னுலுமமைந்
திருக்கு மிசையும் பொருந்துமென்றுல்லா

நாடு வாணி போற்றளவ
நான்மா லிகையான் குகவேடன்
நட்பாம் வெங்க டேசரேட்டன்
நயனம் போலும் பெருங்கடலே !

சாடு மனங்கன் றன்னுற்றச்
சாடு மனங்கன் றன்னேரஞ்
சகரப் பாவாய் தூற்றியவஞ்
சகரப் பாவாய் மிகச்சினப்பார்

ஓடு நூரு யிரங்கனமீ
னெடு நூரு யிரங்கவலை
ஒருமித் துருக்க முரைத்தமெனக்
கொருமித் துருக்க மசைத்திலையே.

(உரை) ஏடு சேர்க்கும் - பல்வகை நூல் ஏடுகளை ஒன்று படுத்தும், அது கரம் மேல் ஏந்தும் - அவ் ஏடுகளைத் தன் கைக் கொண்டிருக்கும், போதன் பால் - நான்முகனிடத்தும், மலர்வாய் - வெண்தாமரை மலரிடத்தும், இருக்கும் - குடிகொண்டு வாழும், நூலினுலும் - பல்வகை நூல்களிலெல்லாம், அமைந்து இருக்கும் - பொருந்தி நிலைத்துநிற்கும், இசையும் பொருந்தும் - புகழுடன் கூடியிருக்கும்,[1]

ஏடு சேர்க்கும் - இதழ்கள் பொருந்தியிருக்கும், மதுகரம் மேல் ஏந்தும் - (தேனுண்ணும்) வண்டுகளைத் தன்மேற் கொண்டிருக்கும், போ தன்பால் - மலருங் கால் தன்னிடத்து, மலர்வாய்

1. கலிமகள்.

இருக்கும் - விரிந்து இடங்கொண்டிருக்கும், நூலின் நாலும் - நூல் நார் முதலியவற்றுல் கட்டப்பெற்றுத் தொங்கும், அமைந்து இருக்கும்-(மாலே கண்ணி முதலியனவாகப்) பொருந்தியிருக்கும், மிசையும் பொருந்தும் - (தலேதோள் மார்பு முதலிய) மேலிடங்களில் அணியப்பெற்றிருக்கும்.[1]

என்ருல் - எனக் கூறுமாற்றினுல், நாடு வாணிபோல் - யாவராலும் விரும்பப்படுகின்ற கலேமகளேப் போன்று, தளவ நால் மாலிகையான் - அணிந்து அசைந்து தொங்குகின்ற முல்லேமலர் மாலேயை அணிந்தவன், குக வேடன் நட்புஆம் - குகனென்னும் வேடனுக்கு நட்பாளனுயமைந்த இராமபிரானின் அவதாரமான, வெங்கடேசுரெட்டன் - வெங்கடேசுரெட்ட வேந்தனுடைய, நயனம் போலும் - கண்களே ஒத்திருக்கின்ற, பெரும்கடலே - பெரிய கடலே! சாடும் அனங்கன் தன்னுல்-வருத்துதலேயுடைய மன்மதனுல், தச்சு ஆடும் மனம் - மலரம்புகொண்டு அழுத்தித் துளேத்து வருத்தத்தால் ஊசலாடுகின்ற என் மனம், கன்ற - தன்மைகெட, அல் நேரம் - இரவுப்பொழுதில், சகரப்பாவாய் - சகரர்புதல்வியே! தூற்றிய வஞ்ச - வஞ்ச எண்ணம் படைத்த, கரு அப்பு ஆவாய் - கருநிற நீரினேயுடையாய், மிக சி(ன்)னபார் - மிகச் சிறிய பாறைகளில், ஒடு - விரைந்து செல்கின்ற, நூறு ஆயிரம் - இலட்சமென்னும் தொகை பெருகிய, கனம் மீனுடு - பெரிய மீன்களுடன், நூறு ஆயிரம் கவலே - இலட்சக்கணக்கான என் துன்பநிலேயை, ஒருமித்து - முழுதும், உருக்கம் உரைத்தும் - இரக்கமாகக் கூறியும், எனக்கு - எனக்காக, ஒரு மித்துரு - ஒரு நட்புத் தன்மையான் (நன்மை தருகின்ற), கம் - அலேயை, அசைத்திலேயே - அடித்துமேலெழுந்தாயில்லேயே? (துன்பந்தருகின்ற அலேகளேயே மோதிமோதி அடிக்கின்ருயே; உனக்கு இரக்கமிராதா?)

கடல், சகரர்களால் உண்டாக்கப்பட்டதென்பது புராண மரபு. இதனேச் 'சகரர் தொட்டலால் சாகரம் எனும் பெயர் தழைப்ப' என்ருர் கம்பரும். அவர்களால் படைக்கப்பெற்ற தன்மை கருதி அவர்கட்கு மகள் என்பாராய், 'சகரப்பாவாய்,' என்ருர். சூது, வாது, பொய், புரட்டு, கொலே, புலே முதலிய கொடுஞ்செயல்களேக் கருநிறமாகக் கொள்வது, தமிழ் மாந்தர் தம் உள்ளப்பாங்கு. அச்சந்தரும் பொருள்களேயும் கருநிறமாகவே உரைப்பதும் பெருவழக்கமாகும். திருவள்ளுவர், கள்வினேக், 'கள்ளவென்னும் காரறிவாண்மை' என்றும், உண்மையைப் 'பொய்யா விளக்கே விளக்கு' என்றும், மயக்க அறிவை, 'இருள் நீங்கி இன்பம் பயக்கும்' என்றும் பிற இடங்களிலும் கூறுவன

1. முல்லே மாலே.

கொண்டு தெளிக. வானெல்லாம் இருள் பரம்பிகின்ற காட்சியை வருணிக்கப்போந்த சேக்கிழார், பெரிய புராணத்துள், 'அஞ் செழுத்தும் உணரா அறிவிலார் - நெஞ்சுமென்ன இருண்டது நீண்டவான்' என இருளுக்கு அஞ்செழுத்தறியா மாக்களின் நெஞ்ச அறிவின்மையைக் கூறுவதுகொண்டறிக. உயிர் கொள்ளும் கூற்றுவனைக் கரியவன் என்பதும், கொலைத்தொழிற்கு உரிய காளிகள், கூளிகள், பேய்கள் முதலியவற்றைக் கருநிற மாகவே கொள்வதும் காண்க. அம்முறையில் துன்பந்தரும் - கொல்லும் தன்மையைத் தன் (காதலர்) பால் தருகின்ற தன்மை யுடைய கடலின் கருநிறநீரலைகளை 'வஞ்ச கரு அப்பு அவாய்' என்றாள். (நற்)

ஈக

இலக்குமிக்கும், மாயனுக்கும்,மூல்கீமாலீக்கும் சிலேடை

[முதல்மடக்கு]

மாலீ யாக மேற்சாய்ந்து
வண்டு ளாயுந் தாமலிவாய்
வருந்தா திசையப் புல்லியெய்து
மணத்தாற் பிரியா திருப்பதனுல்

வேலீ மாது மாயனும்போல்
விளங்குந் தளவத் தொடைமார்பன்
வெங்க டேசு ரெட்டனெங்கோன்
விருப்பங் கூருங் கடற்றுறைவாய்ச்

சேலீ வகீயுந் தடவுவரே
சேலீ வகீயுந் தடவுவனே
திருத்தத் தாயு மடவையெனைத்
திருத்தத் தாயு மடைவிலேயே

ஓலீ வாகீ தாழைமடல்
ஓலீ வாகீ வேளெடுத்தான்
ஊறுங் கேணீ யேழையிடை
யூறுங் கேணீ யறியாயே.

(உரை) மால் - திருமாலின், ஐ ஆகம் மேல் சாய்ந்து - அழகிய மார்பின்மீது சேர்ந்து, வண்டு உள் ஆயும் - வண்டுகள் தேனுண்பதற்கு உள்ளே கிளைக்கின்ற, தாம் - தாமரை மலரின், அ(ல்)லிவாய் - உள்ளிதழிடத்து, வரும் - மேல் தோன்றுகின்ற, தாது இசைய-மகரந்தப் பொடிகள் படிய, புல்லி - சார்ந்திருந்து, எய்தும் மணத்தால் - குடிகொண்டிருக்கின்ற சார்பினுல், பிரியாது இருப்பதனுல் - அதனை விட்டு நீங்காமல் வாழ்வதனுல்,[1]

மாலீ ஆக - (திருத்தோளிலணியும்) தாராக, மேல் சாய்ந்து-தன் உடலிடத்துப் பொருந்தி, வண் துளாயும் - குளிர்மையுள்ள துளபமும், தாம் மலிவாய் - மிகுதியாக அவை, வருந்தாது -

1. இலக்குமி : திருமகள்.

வாடாமல், இசைய - பொருந்த, புல்லி - இணைந்து, எய்து மணத் தால் - தங்கிய வாசத்தால், பிரியா - நீங்காமலிருக்கின்ற, திரு பதனுல் - அழகுமிக்க நற்செவ்வியினுல்,[1]

மால் - வெங்டேசுரெட்டவேந்தனிடத்து, ஐ ஆக-அழகாக மேல் சாய்ந்து - உடலின்மேல் படிந்து, வண்டு உள் ஆயும் - வண் டினங்கள் உள்ளே தேனுண்ணப் பார்க்கின்ற, அ(ல்)லிவாய் - அகவிதழிடத்து, வருந்தாது - துன்புறுமல், இசையப் புல்லி - இடங்கொடுக்கச் சேர்ந்து, எய்தும் மணத்தால் - அம் மலரின்கண் உள்ள மணத்தினுல், பிரியாது இருப்பதனுல் - விட்டு நீங்காமல் இருக்கின்ற தன்மையினுல்,[2]

வேலை மாதும் மாயனும்போல் - திருமகளும் திருமாலும் போலாக, விளங்கும் - தோன்றுகின்ற, தளவ தொடை மார்பன்- முல்லைமலர் மாலையணிந்த மார்பையுடையவனுன, வெங்கடேசு ரெட்டன் - வெங்கடேசுரெட்டனென்னும் பெயரையுடைய, எம் கோன் - எம் வேந்தனின், விருப்பம் கூரும் - விருப்பம் மிக்க, கடல் துறைவாய் - கடல் துறைமுகத்து இடத்து, சேல் ஐ வளை யும் - பெருங்கெண்டைமீன்கள் வட்டமிட்டுச் செல்கின்ற, தட உவரே - விரிந்த உப்பங்கழியே, சேலை வளையும் தடவுவனே - நான் என் ஆடையையும் வளைகளையும் நழுவவிட்டுத் தேடுவனே, திரு - அழகிய, தத்தாயும் - கிளியாகிய நீயும், மடவை - அறி யாமையுடையாய், எ(ன்) ஐ - என் தந்தையுடன், தாயும் - என் அன்னையும், திருத்தம் அடைவு - ஒழுங்குபெறுதல்; இ(ல்)லையே- இல்லையே, ஊறும்கேணி - நீர் ஊறுகின்ற கிணறே! ஓலை - ஓலையையுடைய, வாளை - வாளை மீன்களே! தாழை மடல் ஓலை - தாழை மடலின் ஓலையாகிய, வாளை - வாளினை, வேள் எடுத்தான்- மன்மதன் எடுத்து வந்தான், ஏழை - இவ் எளியேனுடைய, இடையூறும்கேள் - துன்பத்தையும் கேட்பாயாக, நீ அறியாயே - நீ தெரிந்துகொண்டாயில்லையே. (அதனுல் காது கொடுத்து உன் னிப்போடுகேள்.)

தலைவி தனக்கு உற்ற காதலை யறிந்து தந்தையும் தாயும் தம் பிடிவாத குணத்தைநீத்து வெங்கடேசுர எட்டப்பனுக்கு என்னை மணம் புணர்த்தினரில்லையே என்பாளாய் 'எனைத் திருத்தத் தாயு மடைவிலையே' என்றுள் எனக் கொள்க. (கூக)

---

1. மாயன். 2. முல்லைமாலை.

ந உ

திருமால் நின்றதன்மைக்கும், முல்லைமாலைக்கும் சிலேடை

[முதல்மடக்கு]

வன்னங் தவள மாகையினுல்
வன்னந் தவளந் தாங்குதல்போல்
வாய்க்குங் குழற்காம் பிசைந்ததனுல்
வாய்க்குங் குழற்காம் பிருந்ததுபோல்

மூன்னந் திருமால் நின்றதுபோல்
முல்லை அணிந்த புயத்தழகன்
முருகோன் வெங்க டேசுரெட்டன்
முத்தங் கொழிக்குங் கடற்றுறைவாய்

அன்னங் காளம் ஆதலினுல்
அன்னங் காளம் ஆவேனே
ஆசை வலரீ மெலிதாமே
ஆசை வலநான் மெலியேனே

சின்னந் தினமே சிலைமாரன்
சின்னந் தினமே வருத்தாதோ
தேரா வூரும் மதிப்பகையுந்
தேரா வூரும் மதியாதே.

(உரை) வல் நந்து - வலிமையுள்ள சங்காம், அ வளம் - அழகிய சிறப்பு, மா கையினுல் - பெரிய கையிற்கொண்டிருத் தலால், வன்னம் - நிறமானது, தவளம் தாங்குதல்போல் - வெண்மைநிறத்தைத் தாங்கிக்கொண்டிருத்தலைப் போலாக, வாய்க்கும் - வாயினிடத்தும், குழல்காம்பு வேய்ங்குழல், இசைந்த தனுல் - ஏற்றுள்ள தன்மையினுல்[1], வாய்க்கும் குழல் காம்பு - பொருந்தியிருக்கின்ற துளையுடைய கால், இருந்ததுபோல் - இருந்த தன்மையைப் போலாக, முன்னம் - முன்பே, திருமால் நின்றதுபோல் - திருமால் நின்ற தன்மையைப்போல்[2], முல்லை அணிந்த - முல்லை மலர்மாலை சூடிய, புயத்து அழகன் - தோளின் அழகுபெற்றவன், முருகோன் - முருகனையொத்தவன், வெங்கட

1. திருமால்நின்றதன்மை. 2. முல்லைமாலை.

ஈசுர எட்டன் - வெங்கடேசுர எட்டனுடைய, முத்தம் கொழிக்கும் - முத்துக்களை ஒதுக்குகின்ற, கடல் துறைவாய்-கடல் துறை இடத்திலுள்ள, அன்னங்காள் - அன்னப் பறவைகளே! அம் ஆதலினால் - உங்களின் அழகுடையதாயிருப்பதால், அன்னம் - உண்ணும்சோறு, காளம் ஆவேனே - நஞ்சுபோல் வெறுக்கும் தன்மையளாயிருப்பேனே? ஆ - ஆகா, சைவலம் - கொடிப் பாசியே!, நீ மெ(ல்)லிது ஆமே-நீமெல்லிய தன்மையுடையையே ஆவாய், ஆசை வ(ல்)ல நான் - காதலிற் சிறந்த நானே, மெலியேனே - வருந்தி வாட்டமடைய மாட்டேனே? சில்நந்து இனமே - சிறியனவான சங்குக் கூட்டங்களே!, சிலோமரான் - (கரும்பு) வில்லேந்திய மன்மதன், சின்னம் - அடையாளப் பொருள்கள், தினமே வருத்தாதோ - ஒவ்வொரு நாட்களும் துன்பப்படுத்தாவோ? தேரா ஊரும் - தேராகச் செல்லும் (தென்றலையும்), மதிப்பகையும் - சந்திரனுகிய என் பகைப் பொருளையும், ஊரும் - ஊர்மக்களும், தேரா - அறிந்து தெளியாமல், மதியாதே - கருதிப்பாராரே!

தவளம் - வெண்ணிறம், முருகன் - முருகக் கடவுள்: ஆகு பெயராகப் பாட்டுடைத் தலைவனுக்கு வந்தது. முத்தம்-முத்து. கொழித்தல் - அலைகளில் கொணர்ந்து கரையில் ஒதுக்குதல். தேரா ஊரும் - தேராகச் செல்கின்ற. ஈண்டு மன்மதனுக்குரிய தேராகத் தென்றலைச் செப்புவராதலான், தென்றல் என்று பொருள் கூறப்பட்டது. ஊர்: இடவாகு பெயராக மக்களைக் குறித்தது. அதற்கேற்ற பயனிலை மதியாதே என அஃறிணை முடிபேற்றது. அதற்கு ஊர்மக்கள் என்று பொருள் கூறியதனால் மதியாதே என்ற சொற்கு ஏற்ற உயர்திணை முடிபாகக் கருதிப்பாரார் எனப் பொருள் கூறப்பட்டது. (கூ உ)

ங. ங.

[கடைமடக்கு]

நெஞ்ச மகிழ்ந்து சேரர்வணே
நெடுந்தார் தானப் பனந்தாராம்
நிலத்திற் சோழர் வணேதாரும்
நீயார் நாஞ ரெனப்போமாம்

தஞ்ச மடவார் கற்புநிலே
தரிக்க விரிக்குங் கற்பையென்றுந்
தரித்தோன் வெங்க டேசுரெட்டன்
சங்க முழங்குங் கடற்றுறையே!

அஞ்சம் படுக்கு முன்னீரே
ஆறம் படுக்கு முன்னீரே
ஆர்க்கு முதவா யுடையாயே
அலர்க்கு முதவா யுடையாயே

வஞ்சம் பார முன்ஞலே
மதனம் பார முன்ஞலே
வரவிட் டானஞ் சம்பாலே
மயக்கு வேனஞ் சம்பாலே.

(உரை) நெஞ்சம் மகிழ்ந்து-மனம் மகிழ்வுகொண்டு, சேரர் வணே - சேரவேந்தர்களால் அணியப்படுகின்ற, நெடும்தார்-நெடிதான மாலே, தானப் பனம் தாராம்-பெரிதான பணமாலேயாகும், நிலத்தில் - தமிழ்நாட்டில், சோழர் வணேதாரும் - சோழமன்னர்கள் அணிகின்ற மாலேயும், நீ ஆர் நான் ஆர் எ(ன்)ன போம்ஆம்-நீயார் நான் யார் என்று இகழ்ந்து கூறுமாறு 'ஆர்' என்னும் பெயராகப்போய்விடும், தஞ்சம் மடவார் - யார்க்கும் எளியரான பெண்கள், கற்புநிலே - கற்புமேம்பாடு, தரிக்க-நிலேபெற்றுநிற்க, விரிக்கும் கற்பை - மலர்கின்ற கற்புக்கு அடையாளமான மூல்லேயையே, என்றும் தரித்தோன் - என்றைக்கும் மாலேயாக அணிந்தவனை, வெங்கடேசுரெட்டன் - வெங்கடேசுரெட்ட வேந்தனுடைய, சங்கம் முழங்கும் - சங்குகள் முழக்கஞ் செய்கின்ற, கடல் துறையே - கடலின் துறையிடமே! அஞ்சம் படுக்கும் -

அன்னப் பறவைகள் உறங்குகின்ற, முன் நீரே - வற்றுத நீர் நிலையே, ஆறு அம்பு அடுக்கும் - ஆற்றுநீர் வந்து சார்வதுவே, உன் நீரே - உன் தன்மையாயிருக்கின்றது, ஆர்க்கும் உதவாய் - எத்தகையோர்க்கும் உதவிசெய்யாய், உடையாயே - நீ கெடுவது மில்லையே, அலர் குமுதவாய் உடையாயே-அல்லிமலராம் வாயைப் பெற்றுள்ளாயே, வஞ்சம் பாரம் உன்னுலே - மிக்க வஞ்ச நிலே உன்னுலேயே வருகின்றது, மதன் - மன்மதனுனவன், அம்பு-மலர்க்கணைகளே, ஆர - மிகுதியாக, முன்னுலே - என் முன்னிலே யில், வரவிட்டான் - தொடுத்துச் செலுத்தினுன், நஞ்சம் பாலே-(அக்கணைகளின் கொடுமையால் காம மிக்காளாகி) பாலும் நஞ்சு போல் வெறுக்கத்தக்க தாயிற்று, மயக்குவேன் - மயக்கப்படு வேன், அஞ்சு அம்பாலே - அச்சத்தைத் தரும் அம் மலரம்பு களினுலேயே.

மாலேயாக இருக்கும் மலர், மணமும் அழகும் மென்மையும் நன்னிறமும் உடையதாக இருத்தல்வேண்டும். மூவேந்தர்களுள், சேரமன்னர்க்குரியது பணமாலே; அது மணமும் அழகும் மென் மையும் இன்றி வன்மையுடையது; சோழர்க்குரியது ஆத்திமாலே. நிறனும் மென்மையும் உடையதாயினும் நறுமணமற்றது. ஆக லான், இவைகள் மன்னர்களால் சூடப்படினும் நமக்கு நலஞ் செய்தற்கில்லேயென்பாளாய், 'சேரர்.....பனந்தாராம்' என்றும், 'நீயார் நான்ஆர் எனப்போமாம்' என்றும் அவைகளேத் தலேவி வெறுத்துக் கூறினுள்.

காதலிற் கன்றியுள்ள காதலர்க்குத் தாம் காதலித்தோரே பிறர் யாவரினும் சிறந்தோராகத் தோன்றுவது இயற்கை.

[1]"இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயா கியர்எம் கணவனே
நானு கியர்நின் நெஞ்சுநேர் பவளே."

என்பது தமிழ்நாட்டுக் கற்புடைப் பெண்டிர் வேண்டும் வேண்டு கோள். ஆகலின், இவ்வாறு கூறினுள்.

பனந்தார் - பணமாலே. பன் அம்தார்-சொல்லளவில் அழகிய மாலேயன்றி மாலேக்குரிய தன்மையில்லேயென இகழ்ச்சிக் குறிப்பு.

ஆர் என்பது ஆத்தி, அதனுலாகிய மாலேயை உணர்த் திற்று. ஆர் என்பது, யார் என்னும் வினுவினியின் மரூஉ; அது 'நீயார் நானுர் எனப்போம்' என்று நகைச்சுவைபட இகழ்ச்சிக் குறிப்புத் தோன்றக் கூறினுள்.

1. குறுந்தொகை : ஈகூ.

முல்லை - இல்லிருத்தல்: கற்புடை மனைவியுடன் காதற் கிழமை பூண்டு இல்லறம் நிகழ்த்துவது. 'முல்லை சான்ற கற்பின் மெல்லியல்' என்பர், சிறுபாணாற்றுப்படை ஆசிரியர். அதற்கு நச்சினார்க்கினியர் 'கற்பின் மிகுதிதோன்ற முல்லை சூடுதல் இயல்பு' என உரை கூறினர். வெங்கடேசுவரெட்ட மன்னன் சூடிய மாலை முல்லை மாலை, மகளிரின் கற்பைக் காக்கும் அடையாளப் பூவாக மிளிர்ந்தது. அதைச் சூடியே அரசன் அவர்களின் நெறிபிறழாமல் காக்கின்றான். எனவே, என்னையும் காப்பான் என்பது தலைவி குறிப்பு. ஆதலால் நன்னெறியுடையான் என்றாள் இதனை,

> [1]"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
> காவலன் காவல் இன்றெனின் இன்றும்."

என மணிமேகலை ஆசிரியர் அருளுவதும் காண்க. இம்முறையில் அரசன் கற்பைக் காக்கச் சூடும் மாலையைக் கற்பாகவே உபசரித்து, 'கற்பை என்றும் தரித்தோன்' என்று நயம்பெறக் கூறியது அறிக. (நூறு)

---

1. மணிமேகலை.

நட

துதிரை மறம்

[முதல்மடக்கு]

சாரி வரவே பதைத்திடுமஞ்
சாரி வரவே மலைகாட்டும்
சத்த மாவை யகந்துளைக்கும்
சத்த மாவை யகந்துளைக்கும்

பாரி லடையா ருடனடுங்கப்
பாயும் பரியா னுலகனைத்தும்
பரிப்போன் வெங்க டேசுரெட்டன்
பனுவற் கிணையாம் வாரிதியே!

வாரி யார வாரமிட
வாரி யார மேதடவேன்
மணவா ளனையுங் கண்டேனே
மணவா ளனையுங் காணேனே

நீரி னுளும் வளர்குருகீர்
நீரி னுளென் றழியீரே
நிலையா வாழி திரையோழிந்து
நிலையா வாழி புகல்வேனே.

(உரை) சாரி வரவே - இடசாரி வலசாரியாகக் குதித்து வருதலால், பதைத்திடும் - பதைபதைத்து நிற்கின்ற, மஞ்சார் - மேகங்கள், இவரவே - மேலேறிச் செல்வதற்கு, மலைகாட்டும் - மலையிடஞ்செல் என்று காட்டிநிற்கும், சத்தமாவை - கதிரவன் ஏழு குதிரைகளையும், அகம் துளைக்கும் - தன் விரைவு மிகுதியால் மனம் அச்சங்கொள்ளச் செய்யும், சத்த மா வையகம் - பல வகை ஒலிநிரம்பிய பெரிய இந் நிலவுலகத்தை, துளைக்கும் - போர் செய்து ஊடறுத்து வருகின்ற, அடையார் - பகைவேந்தர்களின், பாரில் - நாட்டில், பாயும் - வெற்றிகொண்டு பாய்ந்து செல்கின்ற, பரியான் - குதிரையை உடையான், உலகு அனைத்தும் - எல்லா வுலகங்களையும், பரிப்போன் - காப்பாற்றுவோன், வெங்கடேசுரெட்டன் - வெங்கடேசுர ஏட்ட வேந்தனுடைய,

பனுவற்கு - (புகழ்பாடும்) பாடலுக்கு, இணை ஆம் - ஒத்ததான, வாரிதியே - கடலே! வாரி - அலைகளைச் சேர்த்துக்கொணர்ந்து, ஆரவாரம் இட - பேரொலி கொண்டு முழங்க, வாரி-கைகளால் சேர்த்துப்பிடித்து, ஆரமே!- முத்துமாலையை, தடவேன் - தொடாமின்றேன், மணவாள் - என்பால் அன்பற்றவளாகிய, அ(ன்)னையும் கண்டேனே - என் தாயரையும் பார்த்தேனேயல்லாமல், மண ஆளனையும் - என் காதலனையும், காணேனே - பார்த்தேனில்லையே, நீரில் - நீர்ப்பரப்பிடத்தே, நாளும் வளர் - நாள்தோறும் வாழ்கின்ற, குருகீர் - நாரையினங்களே! நீர் - நீவிர்தாமும், இ(ன்)னள் என்று அறியிரே - இவள் இத்தன்மையுடையாள் என்று அறியாதவராக இருக்கின்றீரே, நில்லையா ஆழி-ஓரிடத்தில் நிற்காமல் அலையெறிகின்ற கடல், திரை ஓழிந்து நில்லையா - தன் அலைகளற்றுப்போய் நிற்கமாட்டாது, வாழி புகல்வேனே - (அதன் தன்மைக்கு வியந்து) வாழ்த்துக் கூறுகின்றேன்.

இது முதல் மன்னனின் குதிரைமறம் கூறப்பெறுகின்றது. மஞ்சு - மஞ்சார் என ஆர் விகுதிபெற்ற உயர்வுப்பன்மை. சத்தம்-ஏழு; சூரியன் தேரில் ஏழு குதிரைகள் பூட்டப்பெற்றுள்ளதாகக் கூறும் புராணமரபு கருதி 'சத்தமா' என்றார். சத்தம் - ஓலி. மணத்தல் - விரும்புதல். மண ஆள் - மணவாள் : மணவாதவள் - விரும்பாதவள் என்னும் பொருள் எதிர்மறையாகத் தந்தது.

கடலின் அலைகள் வந்து கரையில் மோதிமோதித் தன் உறக்கநிலையைக்கெடுத்துக் காதலுணர்வை மிகைப்படுத்துவதால், அதனை ஏசுமுகத்தால் 'வாழி புகல்வேனே' என்று கூறுகின்றார் தலைவி. நிலை செய்வாரைநோக்கி வெறுத்து நன்றுக ஏசுவோர் நேர்மாறுக 'நன்றுக வாழ்க' என்று கூறுவதும், பெண்கள் தமக்குள் வாக்கு வாதம் நிகழ்ந்தபோது ஒருத்தியைநோக்கி மற்றொருத்தி 'உன் தாலித்தழைக்க' என்று கூறுவதும் காண்க. இவ்வாறு கூறுவதை மங்கல வழக்கென்பர். அவ்வாறே இங்குத் தலைவியும் கடலை ஏசுமுகத்தால் வாழ்த்துதல்போல் ஏசிய (கூசை) தறிக.

ஈடு

துதிரை மறம்

[கடை, முதல்மடக்கு]

அண்டலார்கள் கோண்டபூசல்
கண்டுசீறி மிண்டியே
ஆகவேற்பை மோதிரத்த
ஆறெடுக்க நூறியே

விண்டராத லத்தும்வீதி
கோண்டவாசி கட்டினேன்
வெங்கடேசு ரெட்டராச
சிங்கநீள் கடற்குளே

மண்டுபேர லீக்கலாம
கண்டபேர லீக்கவே
மாறுவட்ட வாறிசைப்பர்
சீறுவட்ட வாரியே !

தண்டமோத மோதவேம
ருண்டுமோத மோதவே
தக்கவீர வேளென்மார்பு
தக்கவீர வாளியே.

(உரை) அண்டலார்கள் - பகைமன்னர்கள், கொண்ட பூசல் - தாம் செய்கின்ற போரினை, கண்டு - தன் கண்ணாற் பார்த்து, சீறி - சினங்கொண்டு, மிண்டியே - பாய்ந்து சென்று, ஆக வெற்பை - அவரின் உடலாம் மலையை, மோதி - அடித்துத் தகர்த்து, ரத்த ஆறு எடுக்க - குருதிநீர் ஆருகப் பெருக்கெடுத்து ஓட, நூறியே - கின்னபின்னப்படுத்தி வெற்றிகொண்டு, விண் தராதலத்தும் - மேலுலகத்திடத்தும் மண்ணுலகத்திடத்தும், வீதிகொண்ட - தனக்கே உரிமையான பெருவழியாகக்கொண் டுள்ள, வாசி கட்டினேன் - குதிரையைத் தனக்குரிமையாகப் பெற்றவனான, வெங்கடேசுரெட்ட ராச சிங்கம் - வெங்கடேசு ரெட்டனென்னும் அரசரில் ஆண் சிங்கம் போன்றவனுக்குரிமை யான, நீள் கடற்கு உ(ள்)ளே - நீண்ட கடலிடத்தே, மண்டுபேர்

அலை-நெருங்கி வருகின்ற பெரிய அலைகளின், கலாம்-கொடுமை, அகண்டபேர் - அளவுபடுத்த இயலாத பெரிய அளவில், அலைக்கவே - வருத்தமுறச் செய்யவே, மாறு அட்ட ஆறு - மாறுபாடாக அடுத்துள்ள உன் தன்மையை, இசைப்பர் - சொல்லுவர், சீறு வட்டவாரியே - இரைச்சலிடுகின்ற உலகைச் சுற்றியுள்ள கடலே! தண்டம் - ஒருநாழிகை நேரம், மோத மோதவே - (பல்லூழிக்காலம் போல்) வருத்தி வருத்தித் துன்புறுத்த, மருண்டு-(அதனால்) நான் மயக்கங்கொண்டு, மோத மோதவே - தானாகவே முட்டிக்கொள்ள முட்டிக்கொள்ள, தக்க வீரவேள் - தகுதியான வீரத்தையுடைய மன்மதனுடைய விரும்பத்தக்க, என் மார்பு தக்க - என் மார்பில் நிலைக்க, வாளியே ஈர - (மலர்) அம்புகள் துளைத்தலையுடையன.

அண்டலார் - பகைவர். பூசல் - போர். மிண்டுதல்-பாய்ந்து செல்லல். வாசி - குதிரை. ராச சிங்கம் - அரசரில் ஆண் சிங்கத்தை யொத்தவன். மோதமோத என்னும் அடுக்குமொழி இடைவிடாமைப் பொருள் தந்துநின்றது. ஈர - பிளக்கின்ற தன்மையுடையன : பலவின்பாற் படர்க்கை வினைமுற்று. (கூ)

ஈக

குதிரை மறம்

[முதல்மடக்கு]

குன்றின்மேல் மிதித்துவீரர்
மண்டைவீழ வேற்றியே
கொண்டல்மேல் உழக்கிவீதி
கொண்டுபோரின் முட்டியே

வென்றபாய் பரிக்குளேழி
நின்றவீர பத்திரன்
வெங்கடேசு ரெட்டராச
சிங்கநீள் கடற்குளே

கன்றுபோன துப்புநீர
கன்றுபோன துப்புநான்
காணுமோச மத்தியாசை
காணுமோச மத்தியே

நின்றபேரி தத்தரோவோல்
லென்றபேரி தத்தவே
நீடுசக்க ரத்தனேய
வேடுசக்க ரத்தனே.

(உரை) குன்றின்மேல் - மலையின்மீது, மிதித்து - கால்வைத்தேறி, வீரர் - போர் வீரர்களின், மண்டை வீழ - தலைகள் தரிபட்டுக்கீழே விழும்படி, எற்றியே-காலினுன் இடறி, கொண்டல் மேல் - மேக மண்டலத்தின் மேற்சென்று, உழக்கி - காலால் மிதித்துத் துவைத்து, வீதிகொண்டு - அவ்விடத்தில் தெருவாக ஆக்கிக்கொண்டு, போரில்-போரரங்கத்தில், முட்டியே-நெருக்கிக் கொண்டு சென்று, வென்ற - வெற்றிகொண்ட, பாய் பரிக்கு உள் - பாய்ந்துசெல்கின்ற குதிரையின்மேல், ஏறிநின்ற - ஏறிச் செல்கின்ற, வீரபத்திரன் - வீரபத்திரனேயொத்தோன், வெங்கடேசுரெட்ட ராச சிங்கம்-வெங்கடேசுரெட்டனென்னும் வேந்தர் கட்கு ஆண்சிங்கமானனுக்குரிமையுள்ள, நீள் கடற்கு

உ(ள்)ளே - நீண்ட கடலிடத்தே, கன்று - கை வல்லியல்கள், போனது - கையைவிட்டுக் கழன்று சென்றது, உப்புநீர் - உவர் நீரை, அகன்றுபோன-விட்டு விலகிச்சென்ற, துப்பு-பவளத்தை, நான் காணுமோ - நான் பார்ப்பேனோ, சமத்தி ஆசை காணும் மோசம் அத்தியே - கடலே! சமர்த்தியாகிய யான் ஆசை கொள்ளுதல் மிக்க கேடானதாகும், நின்ற பேர் இதத்து - நிலை பெற்ற பெருத்த நன்மையுடன், ஒல் என்ற பேரி - ஒல்லென்னும் ஒலியுடன் முழக்கப்படுகின்ற முரசம், தத்தவே - அவ்விடம் விட்டு நீங்கவே, நீடு சக்கரத்து அ(ன்)னே - நீண்ட வட்ட வடிவமுள்ள கடலாம் தாயே!, அ வேள் துச கரத்தனே - அந்த மன்மதன் தன் மீன்கொடியையுடைய கையனுக வந்துளானே.

நீள் கடற்குளே என வருவன கடலையுடைய இம்மண்ணுலக மெனக் கொள்க. காதலால் தன் கைவல்லியல்கள் கழலின்றுளான தலைவி, மன்மதன் தன் கொடியை உயர்த்தின்றுன்; ஆகவே, வெற்றிகொண்டு என்னை வருத்துவான்; என்ன செய்வேன்! கடலாகிய தாயே! என்னைக் காப்பது உன் கடன் என்னும் குறிப்பிற்றுய் இத்தொடரினுல் 'அவ் வேள் துசக்கரத்தனே' என்றுள் என்க. (நகை)

கூ ஏ

துதிரை மறம்

[முதல், கடைமடக்கு]

பட்டவத்த னச்செருக்கர்
பட்டவத்த மெய்தவே
பற்றெறிக்க வெற்றியுச்சி
பற்றறக்கு மைக்கமேல்

விட்டமெய்ப் பரிக்குள்வட்ட
மிட்டவுக்கி ரத்தினுன்
வெங்கடேசு ரெட்டராச
சிங்கநீள் கடற்குளே

மூட்டவிட்ட சங்கமேகை
மூட்டவிட்ட சங்கமே
மூன்புகுந்து தடவிதென்று
பின்புகுந்து தடவினேன்

கட்டகூத்தே ணகமாசை
யிட்டிகூத்தே ணகமே
கறையிலாத தங்கமேபெண்
ணிறையிலாத தங்கமே.

(உரை) பட்ட வத்தனச் செருக்கர் - பட்டந்தரித்த அரசர்களாகிய கீழ்ப்படியாத செருக்குக்கொண்டவர், பட்டு அவத்தம் எய்தவே - தனக்குக் கீழாகித் துன்பம் அடைய, பல் தெறிக்க - பற்கள் நொறுங்கிவிழ, எற்றி - (காலால் உதைத்துத்) தள்ளி, உச்சி - தலை, பற்று அற - தன் பிடிப்பு நீங்கிக்கீழ்விழ, குமைக்க - அழித்துச் செல்ல, மேல்விட்ட - மேலே தூண்டிச் செலுத்திய, மெய் பரிக்குள் - உடற்கட்டமைந்த குதிரையின் மேலேறி யிருந்து, வட்டம் இட்ட - சுற்றிவலம் வந்துள்ள, உக்கிரத்தினுன் - சினக்குறிப்புடையானை, வெங்கடேசுரெட்ட ராச சிங்கம் - வெங்கடேசுரெட்டனென்னும் வேந்தர்கட்கு ஆண் சிங்கமானானுக்குரிய, நீள் கடற்கு உ(ள்)ளே - நீண்ட கடலிடத்தே, மூட்ட விட்ட - ஒன்றுபட்டுள்ள, சங்கமே - யாறுகள் கூடிய இடமே,

கைமுட்ட - கைகளில் நிறையும்படி, இட்ட - அணிக்துள்ள, சங்கமே - சங்க வளையல்கள், முன் புகுந்துது - காதலால் கைமெலியக் கழன்று என்முன் விழுந்தது, அட இது என்று - ஆ இஃதென்னவென்று, பின் புகுந்து - அதன் பக்கத்தேபோய், தட வினேன் - தொட்டெடுத்தேன், என் ஆகம் - என் உடல், கட் டளைத்து - முறையையுடையது (இளைப்பில்லாதது), ஆசை இட்டு - ஆசைநிறைந்து, இளைத்தது - இப்போது களைப்புற்றது, என் ஆகம் - என் மார்பிடமெல்லாம், கறை இல்லாத - கலப் பற்ற, தங்கமே-பொன்னிறப் பசலை பூத்துள்ளது, அங்கம் - என் மனமானது, பெண்நிறை இலாதது - பெண்களின் உறுதிப் பாடில்லாத தாயிற்று. (என் செய்வேன் !)

பட்ட வத்தனர் - முடிசூடுதற்குரியார் என்னும் பொருட் டாய்ப் பகைவேந்தர்களைக் குறித்தது. பட்டு - அடிமையாகி என்னும் பொருளது. அவத்தம் - துன்பம். உச்சி பற்றறல் - தலைதுண்டாகப் போதல். தலைவிக்குக் காதல்மிக்கு உடலின் தேமல் படர்ந்ததைக் 'கறையிலாத தங்கமே' என்றாள். தங்கம் போன்ற பசலையைத் தங்கமென்றது ஆகுபெயர். நிறை - நிறுத்து தல்; மனத்தை ஒருவழிப்படுத்துதல். அது, பெண்பாலோர்க்கு இயற்கையாக அமைவது; ஆனால் என் தலைவனுடைய வெங்க டேசுர எட்டன்பால் நிறைநிலாது போயிற்றே என்பாளாய்ப், 'பெண்ணிறையிலாத தங்கமே' என்றாள். (கூஎ)

ஈ அ

கடலிற்கும், தலைவிக்கும் சிலேடை

யானை மறம்

[முதல், கடைமடக்கு]

தங்க மலைக்கு மிசைபாயத்
தங்க மலைக்கு நாலிருமா
தங்க மலைக்குள் ஒளிக்கையிற்பா
தங்க மலைக்குந் தோனிகேட்டுத்

துங்க மறுக வடரறப்ப
துங்க மறுக வடர்களிற்றுத்
துரையாம் வெங்க டேசுரேட்டன்
சோரியுங் கோடைபோல் வாரிதியே!

அங்கங் கோடி யோங்கநல
மைவாம் வங்கங் கொண்டாயே
அங்கங் கோடி யோங்கநல
மைவாம் வங்க மானேனே

சங்கை விடுத்துக் கூடலையுங்
தனிப்பா ணியினுல் வஞ்சித்தாயே
சங்கை விடுத்துக் கூடலையுங்
தனிப்பா ணியினுல் வஞ்சித்தேனே.

(உரை) தங்க மலைக்கு - பொன்மலையாம் மேருமலைக்கு, மிசை பாய - மேலே பாய்ந்துசெல்ல, தம் கம் அலைக்கும் - தம் மூடைய தலையை ஆட்டுகின்ற, நால் இரு மாதங்கம் - எட்டுத் திக்கு யானைகள், மலைக்கு உள் - அப் பொன்மலையின் உள்ளிடத் தில், பாத அங்கம் - தம் காலாகிய உறுப்புக்கள், அலைக்கும் - அசைக்கின்ற, தொனி கேட்டு - ஒலியைக் கேட்டறிந்து, துங்கம் அறு - உயர்வற்ற, கவடர் - வஞ்சச் சூழ்ச்சியுடைய பகைவர், அற பதுங்க - வெளித் தோன்றுமல் பதுங்கி ஒளிக்கும்படிக்கும், மறுக - தத்தளிக்கும்படிக்கும், அடர் - நெருங்குகின்ற, களிற்று துரை ஆம் - ஆண் யானையையுடைய மன்னனும், வெங்கடேசு

ரெட்டன் - வெங்கடேசுரெட்டனுனவன், சொரியும் கொடை போல் - (இரவலர்க்கும், புலவர்க்கும் பிறர்க்கும்) பொழிகின்ற கொடைத்திறம்போல் மிக்குப் பெருகி வருகின்ற, வாரிதியே - கடலே! அங்கு அங்கு ஓடி - அவ்வவ் விடந்தோறும் சென்று, ஓங்க - மேன்மையுற, நலம் அமைவு ஆம் - நன்மை பொருந்தியுள்ளதான, வங்கம் - தோணியை (மரக்கலத்தை), கொண்டாயே - கொண்டுளாயே.[1]

அங்கம் கோடி - என் உடலும் வாட்டமுற்று, ஓங்கு அம் நலம் - உயர்ந்துள்ள அழகிய நன்மைமிக்க, அமைவு ஆம் - பொருந்தமுடைத்தான, வங்கம் ஆனேனே - ஈயம்போல் ஆகி விட்டேனே,[2]

சங்கை விடுத்து - சங்கினங்களே மேலே மிதக்கவிட்டு, கூடு அலையும் - ஒன்றன்பின் ஒன்றுகச் சேர்ந்து வருகின்ற அலைகளையும், தனி பாணியினுல் - தனித் தனியான உன் நீரினுல், வளைத்தாயே - வளைத்துக்கொண்டாயே,[3]

சங்கை விடுத்து - என் கையிலணிந்துள்ள சங்கு வளையல்களையும் கழன்றுவிழக் கிழேவிட்டுவிட்டு, கூடலையும் - கூடல் வளைத்தலையும், தனி பாணியினுல் - தன்னந் தனியாக இருக்கும் இயற்கைத் தன்மையினுல், வளைத்தேன் - அழித்துப் பார்த்தலையும் மேற்கொண்டேன்,[4]

இதில் தலைவிக்கும், கடலுக்கும் தனித்தனிச் சிலேடைப் பொருள்கொள்ள வந்துள்ளதாகலான், அவ்வவற்றிற்கொப்ப சரிடங்களில் தலைவிக்கும் கடலுக்கும் பொருந்த உரை கூறப் பட்டது. (கு.அ)

1, 3. கடல். 2, 4. தலைவி.

நெய்தல்

கடலிற்கும், தலைவிக்கும் சிலேடை

யானை மறம்

[முதல்மடக்கு]

சேறுவண்டு கூறுகொண்டு
சேறுவண்டு சீறியே
சேரரங்க நாடவஞ்சி
சேரரங்க நாடரை

வீறுகொண்டு தானடர்த்த
வீரதந்தி யேறினேன்
வெங்கடேசு ரேட்டன்வாய்மை
தங்கவாழும் உவரியே!

ஆறுகண்ட டுக்குமுன்னை
ஆறுகண்ட டுக்கிலேன்
ஆழியென்பர் உன்னையென்கை
ஆழியென்ப தறிகிலேன்

பாறுகொண்டு நீயென்னெஞ்சு
பாறுகின்ற தறிகிலாய்
பங்கமுண் டெனக்குமென்பர்
பங்கமுண் டெனக்குமே.

(உரை) சேல் துவண்டு-கெண்டைமீன்கள் வளைந்தோடி, கூறு கொண்டு-பகுதிபகுதியாக வேறுபட்டு, சேறு-செல்லும், வண்டு சீறியே - சங்குகள் அதுகாலைச் சினங்கொண்டு, சேர் அரங்கம் நாட - தாம் ஒதுக்கிடமாகத் தங்கியிருக்கின்ற ஓரிடத்தைத் தேடிச் செல்ல, அஞ்சு சேரர் அங்க நாடரை - அச்சங்கொள் கின்ற சேரர்களையும் அங்கநாட்டுக் குரியோரையும், வீறு கொண்டு - பெருமிதத்துடன், தான் அடர்த்த - தான் நெருங்கிக் கொன்ற, வீர தந்தி - வீரமுள்ள யானையின்மேல், ஏறினேன் - ஏறிச் செலுத்துகின்றவன், வெங்கடேசுரெட்டன் - , வாய்மை தங்க - உண்மை நிலைக்கும்படி, வாழும் - இருக்கின்ற, உவரியே -

கடலே !, ஆறுகண்டு - ஆறுகளானவை தெரிந்து, அடுக்கும் உன்னே - சேருகின்ற உன்னே, ஆறுகண்டு - வழி தெரிந்து, அடுக்கிலேன் - சேர்கின்றிலேன், ஆழி என்பர் உன்னே -உலக மக்கள் உன்னே 'ஆழி' என்று பெயர் கூறி அழைப்பர்,[1] என் கை ஆழி என்பது அறிகிலேன் - (ஆனல்) என் கைவிரல்களில் அணிந்துள்ளவற்றை ஆழி (மோதிரம்) என்று கூறுவதை அறிந்தேனில்லே,[2] பாறு கொண்டு-மரக்கலங்களேக் கொண்டு, நீ என் நெஞ்சு - நீ என்னுடைய மனத்தை, பாறுகின்றது - அடியுடன் பறித்தெறிவதை, அறிகிலாய் - அறிந்தாயில்லே, பங்கம் உண்டு - அசைவானது உள்ளது, உனக்கும் என்பர் - உனக்கும் என்று கூறுவர்,[3] எனக்குமே பங்கம் உண்டு - என்னிடமும் (காதல்) நோய் உள்ளது.[4] (ஆகவே, எல்லாவாற்றனும் நாம் இருவரும் ஒற்றுமையுடையோம் ஆதலால் என்னிடம் வேற்றுமை காட்டாமல் அன்பு கூர்வாயாக என்றபடி.)

ஆறு - ஆறு ; நதி ; வழி. ஆழி - கடல் ; மோதிரம். பாறு - மரக்கலம் ; கப்பல் ; அன்றிப் பாறை என்றலுமாம். பங்கம் - அசைவு; நோய். இவ்விரு சொற்களால் கடலிற்கும், தலேவிக்கும் நிலேடையாகப் பொருள் அமைந்திருத்தலறிக. (ஙக)

1, 3. கடல். 2, 4. தலேவி.

30

யானை மறம்

[முதல்மடக்கு]

மத்தகத்து வெற்பையத்தி
மட்டறப்பு டைத்திடித்து
வட்டமிட்டு ழக்கியச்ச
மக்கருக்க ளித்துரத்து

மெத்தவுக்கி ரத்தோடெற்றி
விட்டகைக்க ளிற்றினன்
வெங்கடேசு ரெட்டன்வாய்மை
தங்கவாழும் உவரியே !

கத்தனீகை கண்டதுண்டு
கத்தனீகை கண்டிலாய்
கற்படுத்து வருவதோசொல்
கற்படுத்த சேதுவே

நத்தமைக்க வருவையாசை
நத்தமைக்க ணடைகோளேன்
நஞ்சிருக்கும் உன்னையேண்ணி
நஞ்சிருக்கும் நெஞ்சமே.

(உரை) மத்தகத்து வெற்பை - மத்தகத்தையுடைய ஆண் யானையை, அத்திமட்டு - எலும்புகள் வரையில், அற - ஒடியும் படி, புடைத்து - அடித்து, இடித்து - நொறுக்கி, வட்டம்இட்டு-சுற்றிவந்து, உழக்கி - துவைத்துக் கலக்கி, அச்சம் - அச்சத்தை, அக்கருக்கு - பக்கத்திலுள்ளவர்க்கு, அளித்து - கொடுத்து, உரத்து - (பகைவர்) மார்பில், மெத்த உக்கிரத்தொடு - மிகுந்த சினத்துடன், எற்றி - காலால் உதைத்து, விட்ட - விட்டெறிந்த, கைகளிற்றினன் - கையையுடைய ஆண் யானையையுடையான், வெங்கடேசுர எட்டன் -, வாய்மை தங்க - உண்மையான புகழ் நிலைக்க, வாழும் உவரியே - இருக்கின்ற கடலே ! நீ, கத்தல் - நீ ஓலமிடுவதை (இரைச்சல் கொள்ளலே), கைகண்டது உண்டு - தெரிந்தது உண்டு, கத்தன்-இத்தலைவனுடைய, ஈகை-கொடைத்

இறத்தை, கண்டு இலாய் - பார்த்தா யில்லை, கல்படுத்த-கல்லால் உண்டாக்கிய, சேதுவே-அணைக்கட்டே! கற்பு அடுத்து - (நான் இருக்கும்) மதிலரணின் பக்கத்தே, வருவதோ சொல் - வந்து துன்புறுத்துவதோ சொல்வாயாக, நத்து - சங்குகளை, அமைக்க - ஒதுக்கி வெளியேற்ற, வருவை - நீ வருவாய், ஆசை - காதலை, நத்த - (நான்) விரும்புதலால், மைகண் - மையெழுதிய என் கண்கள், அடைகொள்ளேன் - தூங்குதல் அற்றேன், நஞ்சு இருக்கும் - கொடிய ஆலகாலவிடத்தை வைத்திருக்கின்ற, உன்னை எண்ணி - உன்னை நினைத்து அஞ்சி, நஞ்சு இருக்கும் - நைந்து (சிதைந்து) போயிருக்கின்றது, நெஞ்சமே - என் மனமே.

மத்தகத்து வெற்பு - நெற்றியையுடைய மலை என்ற குறிப்பினால் யானையை உணர்த்திற்று: உவம ஆகுபெயர். கற்பு - கோட்டை அரண்.

தலைவி தனக்கும் கடலுக்கும் ஒப்புமை காட்டி நேசமுறையில் பேசுகின்றாள். அம்முறையில் தான் காதலால் துன்புறுதற்கு நீ துணைசெய்யாதிருப்பது தகுதியோ என்பாளாய் 'நஞ்சிருக்கும் உன்னையெண்ணி நஞ்சிருக்கும் உள்ளமே' என்றாள்.

நஞ்சு - விடம். நஞ்சு - நைந்து - சிதைந்து; இங்கே நஞ்சனப் போலியாயிற்று. (ச0)

சாக

யானை மறம்

[முதல்மடக்கு]

தண்டமொன்று கொண்டுகொண்டல்
தண்டியண்ட ரண்டம்விண்டு
சண்டனும்ப யந்தடங்கு
சண்டைகொண்ட திண்டுமிண்டில்

விண்டலங்கு லுங்கவெங்கும்
வென்றதந்தி யேறினேன்
வெங்கடேசு ரேட்டன்வாய்மை
தங்கவாழும் உவரியே !

முண்டகங்கள் உண்டுதோய
முண்டகங்கள் எங்குமே
முத்தமங் கொடுக்குநீயு
முத்தமங் கொடுப்பையோ

பண்டரங்கன் அன்னசாலை
பண்டரங்கன் நல்குமே
பயமெனக்கு திக்கும்வாரி
பயமெனக்கு திக்குமே.

(உரை) தண்டம் ஒன்று-பெருந்தடியொன்றினை, கொண்டு-தன் கையில் எடுத்து, கொண்டல் - மேகத்தை, தண்டி - அடித்து விலக்கி, அண்டர் அண்டம் - தேவர் வாழும் விண்ணுலகமும், விண்டு - பிளவுபட்டுடைந்து, சண்டனும் - (உயிர்கொள்ளும்) கூற்றுவனும், பயந்து அடங்கு - அஞ்சி ஒடுங்குகின்ற, சண்டை கொண்ட-போரினை ஏற்றுக்கொண்ட, திண்டு மிண்டில்-வலிமையுள்ள போர்நெருக்கத்தில், விண்தலம் - வானிடமும், குலுங்க-அதிரும்படி, எங்கும் - எல்லா இடத்தும், வென்ற - வெற்றி பெற்ற, தந்தி ஏறினேன் - ஆண் யானையின்மேல் ஏறிச் செலுத்தினேனை, வெங்கட ஈசுர எட்டன் -, வாய்மை தங்க - உண்மைப் புகழ் நிலைபெற, வாழும் உவரியே - இருக்கின்ற கடலே ! முண்டகங்கள் உண்டு - தாமரை, நீர்முள்ளி முதலியவைகளை

அமிழ்த்தி, தோயம் உண்ட - நீர் நிறைந்த, அகங்கள் எங்குமே - இடங்கள் யாவற்றினும், அங்கு - அவ்வவ்விடங்களில், முத்தம் ஓடுக்கும் - முத்துக்களே ஒதுக்கிக்கொணர்ந்து மூடுகின்ற, நீயும் - நீதானும், உத்தமம் கொடுப்பையோ - உயர்ந்த நிலையை (ஆக்கம் தருபவைகளைத்) தருவாயோ?

பண்டரங்கன் அன்னசாலை - சிவபெருமானது (நஞ்சாகிய) சோற்றுவிடுதியே, பண்டு அரங்கன்-முற்காலத்தில் திருவரங்கத் திறைவனுனை திருமால், நல்குமே-உன்னிடம் அறிதுயில் கொண்டு தங்குவானே, (இத்தன்மையால்) பயம் என குதிக்கும் - நீரால் (உயர்ந்ததெனன்று) துள்ளித் தாவுகின்ற, வாரி - கடலே!, பயம் எனக்கு உதிக்கும் - (உன்னைக்கண்டாலே) எனக்கு அச்சம் உண்டாகாநிற்கின்றதே!

தண்டம் - தண்டு; பெருந்தடி. மிண்டு - நெருக்கம். பண்டரங்கன் அன்னசாலை என்றது கடலை. சிவபெருமான் கடலில் தோன்றிய நஞ்சையுண்டமையால், அந்நஞ்சை உணவாகக் கொண்டு கடலினை 'அன்னசாலை' என்றார். பயம் - நீர்; அதன் உயர்வுக்கு, மிகுதிக்கு ஆகுபெயராக வந்தது. தலைவி கடலின் நஞ்சு தந்த தன்மை, திருமால் பாம்புப்பாய் விரித்துத் துயில் கொள்ள இடங்கொடுத்த தன்மை இவைகளைக் கேட்கும்போதே அச்சம் கண்டால் மிகுந்த அச்சம் என்பாளாய்த் தலைவி, வாரி பயமெனக்கு உதிக்குமே என்றாள். அன்னசாலை, வாரி என்பன கடலைக் குறிக்கவந்த காரணப் பெயர்கள். அவை அண்மைவிளி. ஆகலான், இயல்பாக நின்றது. 'அண்மையின் இயல்பும், ஈறழி வும் சேய்மையின்' என்னும் நன்னூல் நூற்பா நோக்குக. (சக)

கூஉ

[முதல்மடக்கு]

அந்திவானம் ஒத்தெழுந்த
கருடகேத னத்தையே
அடுத்துவந்த சந்திரோத
யத்தையோக்கும் என்னவே

சந்த்ரகாவி டக்கயம்பி
டித்தராச கேசரி
சாமிவெங்க டேசுரெட்டன்
நேமிசுற்று நேமியே!

சிந்துமாலி ஞெந்துபார்வை
சிந்துமாலி கொஞ்சமோ
தென்றலைக் கொடுத்ததின்ன
தென்றலைக் குரைப்பனே

கந்தனுனி ரம்பவாய்சு
கந்தனுனி சைந்திலேன்
களவனைக் கலந்தநீசெய்
களவனைக் கிசைந்ததே.

(**உரை**) அந்திவானம் ஒத்து - மாலைநேரச் செவ்வானத் தைப்போல, எழுந்த - மேலே உயர்ந்த, கருட கேதனத்தையே - கருடக்கொடியை, அடுத்துவந்த - பக்கத்தே வந்துள்ள, சந்திர உதயத்தை ஒக்கும் - நிலவின் தோற்றத்தை ஒத்திருக்கும், என் னவே - என்று சொல்லும்படி, சந்திரகாவி - சந்திரகாவி யென் னும் சிலையையும், டக்கயம் - தேர்க்கொடியையும், பிடித்த - உயர்த்திக்கொண்ட, ராச கேசரி - அரசர் சிங்கம், சாமி - உயர்ந் தோனுனை, வெங்கட ஈசுரஎட்டன்—, நேமி-(ஆள்கின்ற) நிலவுல கத்தை, சுற்றும் நேமியே - சூழ்ந்துள்ள கடலே! சிந்துமாலின் - சிந்துநதிபோன்று பெருகும் காதல் மயக்கத்தால், நொந்து - வருத்தமுற்று, பார்வை - கண்கள், சிந்தும் - தூற்றுகின்ற, ஆலீ - நீர்த்துளிகள், கொஞ்சமோ - சிறு அளவினவோ? தென்றலை - தென்றற் காற்றினை, கொடுத்தது - தந்தது, இன்னது என்று -

இதுதான் என, அல் ஐக்கு - இரவுக்குரியோனுன சந்திரனுக்கு, உரைப்பனே - எடுத்துக்கூறுவேனே? கந்தனுன் - முருகனே யொத்த மன்னனுல், நிரம்ப ஆய் - நிறைவுள்ளதான, சுகம் - இன்பம், நான் இசைந்திலேன் - நான் பெற்றேன் இல்லே, கள வனேக் கலந்த - திருடனே (நண்டுகளே)க் கூடிக்களித்த, நீ செய் களவு - நீ செய்கின்ற வஞ்சத்தொழில், அ(ன்)னேக்கு இசைந் ததே - என் தாய்க்கு ஏற்றதேயாகும்.

அந்திவானம் - மாலேப்பொழுதில் தோன்றும் செந்நிற மேகம். இதன் நிறம் செம்மை நிறம். வெங்கடேசுர எட்ட வேந்தனுடைய கருடக்கொடி செந்நிறமாக உள்ளதாகலான், அதனே, 'அந்திவானம், ஒத்தெழுந்த கருடகேதனம்' என்ருர். அந்திப்பொழுதின் செந்நிறத்துக்கு முருகவேளின் நிறமாகக் கொண்டு, மாலே வேளேயில் வரிசைமுறையாகப் பறந்துசெல்லும் வெண்ணிறக் கொக்குகளே முருகவேளின் மார்பில் முத்துமாலே யாகக் கண்ட நக்கீரனுரின் சொல்லோவியமும் இதனேடொப்ப,

"நெடுவேள் மார்பின் ஆரம் போல
செவ்வாய் வானம் தீண்டிமீன் அருந்தும்
பைங்காற் கொக்கினம் நிரைபறை உகப்ப"

அகம் (கஉ0) என வருதல் காண்க.

சிந்து - சிந்துவென்னும் ஆறு. சிந்தும் ஆலி - சிதறுகின்ற கண்ணீர்த்துளி. வெங்கடேசுரெட்ட வேந்தன்மீது காதல் கொண்ட கன்னிக்கு கண்ணினீர் காதல்துன்பத்தால் வெள்ளம் போல் கரைபுரண்டு ஓடுகின்றது; அது சிந்துநதியின் நீர்ப் பெருக்கம்போல் வரவரப் பெருகுகின்றது. அதனே மாற்ற ஆற்ருளாய், 'நேமியே! சிந்துமாலின் கொந்து பார்வை சிந்தும் ஆலி கொஞ்சமோ?' என்று கலக்கத்துடன் கூறுகின்ருள். இதில் காதலி கண்கள் இரவிலும் தூங்காத ஏக்கம் தெற்றெனப் புல னுதல் காண்க.

கந்தனுன் - கந்தன் போன்ற வேந்தன். இங்கே உவம ஆகு பெயராய் வெங்கடேசுர வேந்தனேக் குறித்து நின்றது. கந்தன் அனுன் எனற்பாலது கந்தனுன் என விகாரத்தால் அகரம் தொக்கது.

களவன் - கள்வன் - நண்டு; திருடன் என இருபொருள் நயம் காண்க. (சஉ)

நாடு

[முதல்மடக்கு]

ஆர முரசக் கரவாகத்
தணிவா ரணைய விம்முரசம்
அளியுங் கவிஞர் மகிழமலர்
அடியின் மருவார் புனைமகுட

பார முரச மும்முரசம்
பரிவாய் முழங்கு மணிவாசல்
படைத்தோன் வெங்க டேசுரேட்டன்
பரிக்குங் கொடைபோல் திசைநிரப்பிக்

கார மரும்பைங் கடல்வேள்ளங்
கார மரும்பைங் கணையாக்கிக்
கடுந்து மிறைத்தான் கங்குலம்ப
கடுந்து மவனை யார்தடுப்பார்

நாரம் பலமேற் கொண்டாய்மின்
ளரம் பலமேற் கொண்டேறி
நடப்பா ரதம மாயவர்முன்
னடப்பா ரதமா யிருந்ததுவே.

(உரை) ஆரம் - முத்துமாலை. உரச - உடலில் அசைந்து தேய, கரஆகத்து - ஒளியுள்ள மார்பில், அணிவார் - அணிந்திருக்கின்ற பெண்கள், அணைய - (ஓர்பால்) சார, விம்மு ரசம் - மகிழ்ச்சி தருகின்ற நூல்களின் இனிமையை, அளியும் - நுகருகின்ற, கவிஞர் - பாவாணர், மகிழ - (ஒருபால்) மகிழ்வுகொள்ள, மலர் அடியில் - தாமரை மலரையொத்த கால்களில், மருவார் - பகைவர்கள், புனை மகுடபாரம் - (விழுந்து வணங்குங்கால்) அணிந்துள்ள திருமுடிகளின் வரம்பு, உரச - தேய, மும்முரசம் - (வெற்றி, கொடை, வீரம்) ஆகிய மூன்று வாச்சியங்களும், பரிவு ஆய் - இன்பமாக, முழங்கு - முழக்கஞ்செய்கின்ற, மணிவாசல் படைத்தோன் - அழகிய முற்றத்தையுடையான், வெங்கட ஈசுர எட்டன்—, பரிக்கும் கொடைபோல் - தாங்குதலையுடைய ஈகைத் தன்மையை யொத்து, திசை நிரப்பி - திக்குகள்தோறும் கவிந்து, கார் அமரும் - மேகங்கள் தங்குகின்ற, பைங்கடல் - பசிய கடலே!

வெள்ளம் காரம் - மிக்க நீர்ப்பெருக்கே ! அரும்பு - மலரரும்புகளே, ஐங்கணை ஆக்கி - ஐவகை அம்புகளாகக் கொண்டு, கடுந்தும் இறைத்தான் - விரைவாகவும் (என்மீது) அள்ளி வீசினுன், கங்குல் - இரவுப்பொழுதாகிய, அம் பகடு - அழகிய ஆண் யானையை, உந்தும்அவனே - ஊர்தியாகக்கொண்டு செலுத்துகின்ற மன்மதனே, யார் தடுப்பார் - எவர் தடைசெய்து நிறுத்தும் ஆற்றலுடையார், நாரம் பல-நீரலைகளே மிகுதியாக, மேல் கொண்டாய்-மேலிடத்தில் கொண்டுள்ளாய், மின்னுர் - பெண்கள், அம்பல் அம்மேல் கொண்டு - பழிதூற்றிப் பேசுவதையே தமக்குரிய சிறப்பாக ஏற்று, ஏறிநடப்பார் - மிகுதிப்படுத்திக் கொண்டிருப்பார், அதமம் ஆயவர் - கீழ்மையான செயலைக்கொண்டுள்ளவரிடத்து, மூன் நடப்பு - முன்பு போகுதல், ஆர் அதம் ஆய் இருந்ததுவே - மிகுதியான கெடுதலாகவே இருக்கின்றது-(நான் என் செய்வேன் !)

ஆரம் - முத்துமாலே : காரியவாகுபெயர். மும்முரசம் - வெற்றி கொடை வீரமாகிய மூன்றுவகை நிகழ்ச்சியைக் குறித்து அறிவிக்கும் முரசு. வீரமுரசுச்சிறப்பை,

> [1] "வேத்தர், மருள வைகல் வைகல் மாறட்டு
> வெற்றி வினேயே மன்னே கொற்றத்து
> இடிப்படை வானவன் முடித்தலே உடைத்த
> தொடித்தோள் தென்னவன் கடிப்பிகு முரசே"

என, இளங்கோவடிகள் இயம்புதலால் அறிக. (சகூ)

---

1. சிலப். கஎ : படர்க்கைப்பரவல் : கூ.

தகவிக்கும், கடலிற்கும் சிலேடை

[இடைமடக்கு]

ஆளும் பரியு மறவெழிந்தோன்
ஆளும் பரிவாற் சாத்தூரர்
ஆணை கடவா திருந்தபிரான்
அல்லிக் கமல மலர்போலும்

தாளுங் கரமு மிகச்சிவந்த
சாமி தமிழுக் கிருநிதியம்
தருமால் வெங்க டேசுரெட்டன்
சந்த்ர கிரிசூழ் பெருங்கடலே!

நாளு மீன மேற்கொண்டாய்
நானு மீன மேற்கொண்டேன்
நாடு மணலை நீகொழித்தாய்
நானு மணலை யூர்க்கொழித்தேன்

நீளு மாசை நானெடுத்தேன்
நீயு மாசை யடுத்ததனால்
நினையுஞ் சரியேன் றிருந்தேனேன்
நிறையுஞ் சரியும் இழந்தேனே.

(உரை) ஆளும் - செலுத்துகின்ற, பரியும்-குதிரையையும், அற எறிந்தோன் - இறக்க வாளால் வெட்டினோன், ஆளும் - ஆளுகின்ற, பரிவால் - விருப்பத்தினால், சாத்தூரர் - சாத்தூரர் களின், ஆணை கடவாது - கட்டளையை மீறாமல், இருந்த பிரான் - இருந்த பெருமையுடையவன், அல்லிக் கமலமலர் போலும் - உள்ளிதழையுடைய தாமரைமலர் போல் இருக்கின்ற, தாளும் கரமும் - கால்களும் கைகளும், மிக சிவந்த சாமி-மிக்க செம்மை நிறமுடைய தலைவன், தமிழுக்கு - தமிழ்மொழிக்கு, இருநிதியம் தரும் மால் - பெரும்பொருள் கொடுக்கின்ற பெருமையுடையான், வெங்கடேசுர எட்டன்—, சந்த்ர கிரிசூழ் - பொதியில் மலையைச் சுற்றியிருக்கின்ற, பெரும்கடலே-பெரிய கடலே! நாளும் மீனம் மேல் கொண்டாய் - நாள்தோறும் மீனினங்களை மேலிடத்தில்

கொண்டிருக்கின்றாய், நானும் ஈனம் மேல் கொண்டேன் - நானும் கீழான துன்பநிலையையே உயர்வாகக் கொண்டிருக்கின்றேன், நாடும் மணலை-யாரும் விரும்புகின்ற மணலினே, நீ கொழித்தாய் - நீ ஒதுக்கிக்கொண்டு வந்தாய், நானும் அ(ண்)ணலே - நானும் பெருமை பொருந்திய என் தலைவனே, ஊர்க்கு ஒழித்தேன் - ஊரிடத்தே விட்டுவிட்டேன், நீளும் ஆசை - நெடிதாகவுள்ள காதலை, நான் எடுத்தேன் - நான் மேற்கொண்டிருக்கின்றேன், நீயும் மாசை அடுத்ததனால் - நீயும் மேகத்தை மேலே கொண்டிருக்கின்ற தன்மையினால், நி(ன்)னையும் - உன்னையும், சரி என்று இருந்தேன் - (எனக்கு) ஒத்த தன்மையுடையையென இருந்தேன், என் நிறையும் - (அதனால்) எனது மனவுறுதியையும், சரியும் - கைவளையல்களையும், இழந்தேனே - இழந்துபோம்படிவிட்டு விட்டேனே.

அல்லி - அகவிதழ்; உள்ளே யமைந்த இதழ். அல்லிக்கமலம்: உருபும் பயனும் தொக்க தொகை. சந்திரகிரி - பொதியமலை; சந்திரன்தொட உயர்ந்தமலை யென்பது பொருள். மீனம் - மீன். ஈனம் - கீழ்மை; கீழான துன்பத்தைக் குறித்தது. நிறை - பெண்களுக்கேற்ற நிலைத்தற்குரிய மனவுறுதி. சரி - கைவளையல். இங்கே தலைவி, தன் தலைவனை யெண்ணுங்கால் மனவுறுதி தளர்ச்சிபெறக் கையிலணிந்த வளையல்கள் உடல் மெலிவால் கழன்று கீழ் விழ நின்ற தன் நிலையைக் கடலொடு கலக்கமுற்றுக் கூறிக் கூறி ஆற்றுவாளாய்,

'நிறையும் சரியும் இழந்தேனே'

என்றாள். இவ்வாறே திருச்சிற்றம்பலக் கோவையார்த் தலைவியும்,

[1] '.....என்னெஞ்சும் வளர்ந்த
பொற்பார் திருநாண் பொருப்பர் விருப்புப் புகுந்துநுந்த
கற்பார் கடுங்கால் கலக்கிப் பறித்தெறி யக்கழிக
இற்பால் பிறவற்க ஏழையர்'

என வருந்தும் நிலையும் ஒப்பக்கண்டு மகிழ்க. (சசு)

---

1. திருக்கோவையார் : உ0அ.

சுரு

[முதல், கடை மடக்கு]

தாக்குவெண் திரைக்கடற்
பரப்புநீர் நிரப்பியே
சங்கமேந்து கின்றதென்ன
சங்கமேய்ந்த புலவரைக்

காக்கும்ராச சிங்கம்வெங்க
டேசுரேட்ட மேந்திரன்
கையிலுண்டு சங்கரேகை
கண்டதுண்டு நாங்களும்

நோக்குபார்வை கமலமென்று
மலர்மடந்தை மேவினுள்
நுரையெடுத்த கமலமென்றுன்
னுரையெடுத் துரைப்பரோ

வாக்குநெஞ்சு மோத்தவன்
கொடுத்ததான தாரையால்
வந்தநீர்ப் பெருக்கினீயும்
இந்தநீர்மை பெற்றதே.

(உரை) தாக்கு - மோதுகின்ற, வெண்திரைக்கடல்-வெண்ணிற அலைகளையுடைய கடலினது, பரப்புநீர் - பரவியுள்ள நீரை, நிரப்பியே - நிறையச் செய்து, சங்கம் ஏந்துகின்றது என்ன - சங்குகளை மேலே கொண்டு தாங்குகின்ற தன்மையென்னும்படி, சங்கம் ஏய்ந்த-தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்த, புலவரை-தமிழ்ப் புலவர்களை, காக்கும் - காப்பாற்றுகின்ற, ராச சிங்கம் - அரசர் ஏறுன, வெங்கடேசுர எட்டம இந்திரன் - வெங்கடேசுர எட்டமனென்னும் இந்திரன் போன்றவன், கையில் உண்டு சங்க ரேகை-அவன் கையில் சங்கவரி இருக்கின்றது, கண்டது உண்டு நாங்களும் - நாமும் பார்த்துள்ளனம், நோக்கு பார்வை - அவன் பார்க்கின்ற பார்வையை, (கண்ணினை), கமலம் என்று - தாமரை மலரென்று, மலர் மடந்தை மேவினுள் - திருமகள் அவன்பால் குடிகொண்டாள், நுரை எடுத்த - நுரைகளை மேலே ஏந்திக்

கொண்டு வருகின்ற, கமலம் என்று - நீரென்று, உன் உரை எடுத்து - உன் பெயர்ச்சொல்லே எடுத்துக்கூறி, உரைப்பரோ- விளம்பரப்படுத்துவரோ? வாக்கும் நெஞ்சும் - சொல்லும் மனமும், ஒத்தவன் - வேறுபாடில்லாமல் ஒன்றுன தன்மையுடையோனை, எட்டமேந்திரன்—, கொடுத்த தானதாரையால் - இரவலர்க்குக்கொடுத்த கொடையுடன் சேர்ந்த தாரைநீரின் பெருக்கத்தினால், வந்த நீர்ப்பெருக்கில் - வந்த நீரின் மிகுதியால், நீயும் இந்த நீர்மை பெற்றதே - நீயும் இவ்வளவு மிகுதியான நீர்ப்பெருக்கின் தன்மையடைந்ததாகும்.

தலைவி கடலை நோக்கிக் கடுஞ்சொல்லாற் கூறுவதாக அமைந்தது, இப்பாட்டு. கடலே! உன்னிடம் என் தலைவன் பெருமை கூறி அவன் அருளைப் பெற்றுய்ய நான் வேண்டியும் செவிசாய்த்தாயில்லை. உனக்கு வெளியேயே சங்குகள் இருக்கின்றன, எம் தலைவன் கையிடத்தேயே சங்க இரேகை உண்டு. உன்னிடத்தே திருமகள் தோன்றினளெனப் பெருமை கொள்வாய்; என் வெங்கடேசுரெட்டன் கண்பார்வையே தாமரை மலர் என்று கருதித் திருமகள் அவன்பாற் குடிகொண்டிருக்கின்றாள். அன்றியும் உனக்கு முந்நீர், சலநிதியென்ற பெயர் வந்ததெல்லாம், எம் தலைவன், புலவர்கட்கும் வறியார்க்கும் இல்லையென்றிரப் போர்க்கும் இல்லையென்னது பொருள்களை வாரிவாரி வழங்கித் தாரை வார்த்துக்கொடுத்த நீர்ப்பெருக்கே பெருக்கெடுத்து ஆறுகப் பெருகித் திரண்டு உன்பாற் சேர்ந்ததனலன்றே? இதையறிந்தேனும் பெருமை கொள்ளாதிரு; எம்போன்றார்க்கு நலஞ்செய் என்பாளாய், இக்கருத்துக்களை உள்ளடக்கியே, 'இந்த நீர்மை பெற்றதே' என்றாள். (சகு)

ஈசுர

/

[இடை, முதன்மடக்கு]

வேள்ளமே! உனக்குமுத்தம்
அம்பரிக்கும் இளசைவாழ்
வேந்தர்வேந்தன் ஈகையாலும்
முத்தமம்ப ரிக்குமே

கள்ளருத குவளையுன்
னிடத்திலுண்டு பாரேலாம்
கண்டிதந்த குவளையேந்து
கருணைமாலு மாவனே

வள்ளலெங்கள் வேங்கடேசு
ரேட்டமேந்த்ரன் மருவிலான்
மையலைத் தடுப்பைநீயும்
மையலைத் தடுப்பையோ

உள்ளகோட்டை யொன்றுநீ
கடப்பையோ வடர்ந்தபே
ரோங்குகோட்டை யெண்ணிலாத
துண்டவன் கடந்ததே.

(**உரை**) வெள்ளமே - கடலே! உனக்கும் - உன்னிடத்திற்கும், முத்தம் - முத்துக்களை, அம்பு அரிக்கும்-நீரலைகள் ஒதுக்கிக் கொண்டு வருகின்ற நீர்வளமிக்க, இளசை வாழ் - எட்டையாபுரநகரில் இருக்கின்ற, வேந்தர் வேந்தன் - மன்னர் மன்னனனவன், ஈகையாலும் - தன் கொடையினாலும், உத்தமம் - மேன்மைத்தன்மையை, பரிக்குமே - தாங்குவானவன், கள் அருத - தேன் நிறைந்திருக்கின்ற, குவளை - நீலோற்பலம், உன் இடத்தில் உண்டு - உன்னிடம் இருக்கின்றது, பார் எ(ல்)லாம் - உலகம் யீவற்றையும், கண்டு - (தனக்குரிமையாக்கிப்) பார்த்து, இதம் தகு - நன்மை பொருந்திய, வளை - ஆக்கினை சக்கரத்தை, ஏந்து - கையில் தாங்கிக்கொண்டிருக்கின்ற, கருணை மாலும் ஆவனே - இரக்க முள்ள திருமாலுமாக இருக்கின்றான், வள்ளல் - அளவில்லாமல் கொடுக்கின்றவன், எங்கள் வெங்கட ஈசுர எட்டம

இந்திரன்—, மருவிலான் - என்னை அணைந்தானில்லை, நீயும் மை அலைத்து-நீயோ கருநிற நீர் அலைகளை உடையாயாய், அடுப்பை - பக்கத்தில் வருவாய், மையல் - காதல் உணர்வை, தடுப்பையோ - நீக்குவாயோ? உள்ள கோட்டை - உன் பக்கலிலுள்ள கரையில், ஒன்று நீ கடப்பையோ - ஒன்றையேனும் நீ கடந்து வெளியேறிச் செல்வாயோ? அவன் கடந்தது - அவன் கடந்து சென்றதான, அடர்ந்த - நெருக்கமான, பேர் - பெரிய, ஓங்கு - உயர்ந்ததான, கோட்டை - பகைமன்னர்கட்குரிய மதிலரண்கள், எண் இலாதது உண்டு - எண்ணற்றன உள்ளன.

அலைத்து - அலையையுடையது. ஈண்டுக் கடல்: ஒன்றன் படர்க்கை. அலை + து எனப் பிரிக்க; குண்டுகட்டு என்பது போல். ஈண்டு படர்க்கையிடம் முன்னிலையிடமாகவந்த இட வழுவமைதி; அதனால் அலையையுடையாய் எனப் பொருள் கூறப் பட்டது. கோட்டை - கரை; மதிலரண். கடலே உன்னால் ஒரு கரையைக்கூடத் தாண்டிச் செல்ல இயலவில்லை: என் தலைவன் பகைவர்கட்குரிய கோட்டைகளை இடித்துத் தகர்த்து அவைகளைத் தனக்குரிமையாக்கிக் கொண்டு கடந்துசென்ற கோட்டைகளோ எண்ணிலடங்காது என்றபடி. (சசு)

சுல

[கடைத்திரிபு]

ஆனை யடர்த்த சேருக்கோட்டை
அங்நா ளோடித்தோன் கருக்கோட்டை
ஆளும் பெருமான் செங்கோட்டை
அழித்தோன் மருவார் தங்கோட்டை

சேனைப் பெருக்காற் சினந்தேறும்
திடவா னமரின் மனந்தேறும்
சேயமால் வெங்க டேசரேட்டன்
செவ்வே ளெனவே பவனிகொண்டே

தானை நடுவின் முந்தானை
தனிலே யேழி வந்தானைச்
சகியா மோகந் தந்தானைத்
தடுத்தே னிலையே குந்தானை

சோனை மதவே ளத்திரமே
தொடுத்தா லெனக்கு பத்திரமே
சோர்ந்த துடுத்த வத்திரமே
சொல்வாய் வனச முத்திரமே!

(உரை) வனசமுத்திரமே-அழகிய கடலே! ஆனை அடர்த்தயானை மோதிய, செரு கோட்டை - போர்புரியும் கொம்பினை, அந்நாள் - அந்தக் காலத்தில், ஓடித்தோன் - முறித்தவன், கருக் கோட்டை - கருக்கோட்டையென்னும் ஊரினை, ஆளும் பெருமான் - ஆட்சிபுரிகின்ற பெருமையுடையான், செங்கோட்டை - செங்கோட்டையென்னும் நகரத்தை, அழித்தோன் - சிதைத்தொழித்தவன், மருவார்தம் கோட்டை - பகைவருடைய கோட்டையை, சேனைப் பெருக்கால் - பெருஞ் சேனைகளினால், சினந்துவெகுண்டு, ஏறும்-வெற்றிக்கொண்டுமுன்னேறிச்செல்கின்ற, திடவான்-வலிமைமிக்கோன், அமரில்-போர்க்களத்தில், மனம்தேறும்-மனத்துணிவு கொண்டுள்ள, செயமால் - வெற்றிப் பெருமையாளன், வெங்கடேசர எட்டன் -, செவ்வேள் எ(ன்)னவே - முருகப்பெருமான் என்று கூறும்படி, பவனிகொண்டே - உலா

வாகப்போக ஏற்று, தாணை நடுவின் - படைகளின் நடுஇடத்தில், மூந்து - முன்பு செல்கின்ற, ஆணை தனிலே - யானையின்மீது, ஏறி வந்தாணை - மேலே இவர்ந்து வந்தவனை, சகியா - பொறுக்கலாற்றாது, மோகம் தந்தாணை - காதல் நோயினைத் தந்தவனை, குந்தாணை - ஓரிடத்தில் இருக்காமல் செல்கின்ற தலைவனை, தடுத்தேன் இ(ல்)லையே-தடைசெய்தேன் இல்லேனே, மதவேள்-மன்மதன், அத்திரமே - அம்புகளை, சோணை தொடுத்தால் - சொரிந்துவிடுவானானால், எனக்கு உபத்திரமே - எனக்குத் துன்பமே, உடுத்த வத்திரம் - உடுத்துள்ள ஆடை, சோர்ந்தது-நழுவியது, சொல்வாய்-(இதற்கு என் செய்வேன்! நீயே) கூறுவாயாக.

செரு கோடு - போர்புரிதற்கு ஏற்ற வலிமை கொண்ட கொம்பு. கருக்கோட்டை, ஒரூர். அரசர்கள் திருமாலின் பிறப்பாகக் கோடலில் தமிழ்ச்சான்றோர் மரபாகலான், கோட்டை அந்நாள் ஓடித்தோன் என்றுள். தம்மை எதிர்த்த 'குவலயாபீடம்' என்னும் கம்சனின் ஆண் யானையின் கொம்பை ஓடித்துக் கொன்ற வரலாறு கண்ணனின் காதை கூறும் பாகவதத்தில் கூறப் பெற்றுள்ளது, அதைக்கொண்டே இவ்வாறு வெங்கடேசுரெட்டனுக்கு ஏற்றிக் கூறினர்.

அமர் - போர். அதில் மனம் தேறுதல், அஞ்சாது எதிர்நின்று போர்புரிதல். வீரப் பெருமக்கட்குப் போரென்றால் மகிழ்வு. [1]'போரெனிற் புகலும் புனைகழல் மறவர்,' என்றார் புறநானூற்றிலும். [2]'நானிலம் அதனின் உண்டு போரென நவிலின் அச்சொல்-தேனினும் களிப்புச் செய்யும் சிந்தையர்' என்றார் கம்பரும். எனவே, கல்தோன்றி மண்தோன்றுக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடியிற் பிறந்த தோன்றலாகலான், அவற்குப் போரென்றவுடன் புன்னகையோடு மனத்துணிவு கொண்டெழுந்தான். அதனால், 'அமரில் மனந்தேறும் செயமால்' என்றார்.

மூந்தாணை, வந்தாணை முதலியன, இறந்தகால வினையாலணையும் பெயர்கள். குந்துதல் - இருத்தல்; இருக்காதவனை உலாவாகச் செல்வானை என்னும் பொருளுடையது.

அத்திரம் - அஸ்திரம் என்னும் வடசொல், அம்பு. (சஎ)

---

1. புறம்: கூக. 2. கம்பரா, சுந்தர, ஊர்தேடு:

சுஅ

பாட்டுடைத்தலைவன் பவனிக்கும், கடலிற்கும் சிலேடை

[இடை, கடை மடக்கு]

ஒற்றை யாழித் தேரவன்போல்
உயர்வாஞ் சந்த்ர காலியிடால்
உதயங் காட்ட மகரமென
ஓங்கு மகரக் கொடிதுலங்க

மற்றை அருவி வல்லியமும்
மழைபோற் கவிய மதிபோல
வட்டக் கவிகை நிழல்காட்ட
வந்தான் பவனி ஊனப்போலச்

சேற்றை யாலுங் கடலையுமுன்
செயித்தோன் வெங்க டேசுரேட்டன்
சீதை யாலுங் கடலையுமுன்
சேது வழியாக் கண்டுநின்ரோன்

இற்றை நாளி லாசைதந்தான்
இறையோ னெடுந்தேர்க் காற்றுகிலேன்
இந்த விரக மாற்றுகிலேன்
இன்றே யிழந்தே னூற்றுகிலே.

(உரை) ஒற்றை ஆழி - ஓர் உருளையையுடைய, தேரவன் போல் - தேரையுடைய சூரியன்போன்ற, உயர்வுஆம் - மேன்மை பொருந்திய, சந்த்ரகாவி இடால் - சந்திரகாவிச் சீலையின் ஒளி, உதயம் காட்ட - தோற்றத்தைக் காட்டிநிற்க, மகரம்என - மகர மீனென்று சொல்லும்படி, ஓங்கு - உயர்ந்திருக்கின்ற, மகரக் கொடி துலங்க - மகரக் கொடியானது விளங்க, மற்றை - வேருக வுள்ள, அருவி வல்லியமும் - ஒழுங்காக வைத்த எறிசட்டிகளும், மழைபோல் - மழைத்தாரைகளைப்போல், கவிய - நாலாபக்கமும் சூழ, மதிபோல - சந்திரனைப்போல், வட்டக்கவிகை - வட்டக் குடை, நிழல்காட்ட-நிழலை உண்டாக்க, உ(ன்)னைப்போல - உன் போலாக, பவனிவந்தான் - உலாப்புறப்பட்டு வந்தான், செற்றை ஆலும் - பல சிறுதாறுகள் சேருகின்ற, கடலையும்-, முன் செயித்

தோன் - முன் வென்றோன், வெங்கடேசுர எட்டன்—, சீதையாலும் - சீதையைத் தேடிச்செல்லும் பொருட்டாக, கடலையும்—, முன் - முன்காலத்தில், சேதுவழியா - அணைக்கட்டின் வழியாக, கண்டு நின்றோன்-பார்த்துநின்றான், இற்றைநாளில்-இன்றைக்கு, ஆசை தந்தான் - காதல் விருப்பத்தை எனக்குக் கொடுத்தான், இறையோன் - தலைவருடைய, நெடும் தேர்க்கு - நீண்ட தேரின் வருகைக்கு, ஆற்றுகிலேன் - பொறுக்கலாற்றேன், நூல்துகில் - நூலாடையை, இன்றே இழந்தேன் - இன்று இழக்கலானேன்.

ஒற்றைஆழி - ஓர்உருளை. சூரியன் வட்டத்தை 'ஓராழித் தேர்' என்பது புராணமரபு. [1]'ஒற்றை ஆழியங் தேரவன் உயர் மதில் கடக்கப் - பெற்றிலாமையிற் பிறங்குபொற் கதவங்கள் திறக்கும் - அற்றம் நோக்குவன்' என்றார் நைடதத்தினும்.

வல்லியம் - எறிஈட்டி. பாண்டியருள் ஒருவனான உக்கிரகுமார பாண்டியன் கடல் சுவற வேல்விட்டு வென்றதாகப் புராணங்கள் கூறும். வெங்கடேசுர எட்ட மன்னன் அவ்வழிவந்தோனதலால், கடலையும் முன் செயித்தோன் என்று முன்னோன் செயலை ஏற்றிக் கூறினள்.

காதல் மிகுதியால் நெஞ்சங்கரைய அறிவுமயங்கி ஆடை குலைந்து அவிழ்ந்துவீழ ஆற்றுளாயிருக்கின்ற தன் நிலையை, 'இழந்தேன் நூல்துகிலே' என்று கடலுடன் நட்புமுறை கொண்டு தன் உள்ளக்கிடக்கையைக் கூறுகின்றாள்.

கடலில் தோன்றும் இளஞ் சூரியன் தோற்றமுறும், அத் தோற்றத்தைப்போல் தலைவனுக்குநிழல் செய்கின்ற சந்திரகாவிச் சிலையை உவமங் கூறினர். (சஅ)

1- நைடதம், நகரப்படலம்: கூ.

சுபவ

பாட்டுடைத்தலைவன் பவனிக்கும், கடலிற்கும் சிலேடை

[கடைமடக்கு]

பாயுங் களிறு முன்னேறப்
பல்கு திரையும் பின்னேறப்
பாரத் திருந்த விடக்கயமும்
பலவா னூயுமொன் றுய்நிரத்தித்
தோயுங் கனமே படர்ந்தகொம்பு
தொடும்போ திடமா னந்துவைக்கத்
தொடுத்தே செல்லுங் கவிகைமுன்னே
துலங்க வீனப்போற் குழாநடுவில்
ஆயுந் தமிழின் அருமையெலாம்
அறிவோன் வெங்க டேசுரெட்டன்
அரசர் பெருமான் இளசையர்கோன்
ஆனைப் பவனி வரப்பார்த்தேன்
நீயும் படைத்தாய் காதலியே
நின்பா லடுத்தேன் காதலியே
நீங்க வேபோ காதலியே
நிரப்புங் கடலே காதலியே.

(உரை) பாயும் களிறு - எதிரிப்படைகளைப் பாய்கின்ற ஆண் யானை, முன் ஏற - முன்னேறிச் செல்ல, பல் குதிரையும் பின் ஏற - பலவகைக் குதிரைகளும் பின் தொடர்ந்துசெல்ல, பாரத்து இருந்த இடக்கயமும் - தேரில் கட்டிய தேர்க்கொடியையும், பல ஆளையும் - மிகுதியான படைவீரர்களையும், ஒன்றுய் நிரத்தி - ஒன்றுபடுத்திச் சேர்த்து, தோயும் கனமே - சேருகின்ற பெருமையுள்ள, படர்ந்தகொம்பு - மிகுந்த ஊதுகொம்புகளை, தொடும்போது - வாசிக்கும் காலத்தில், இடமானம் - பெரும் பேரிகை, துவைக்க - முழங்க, தொடுத்து - தொடர்ந்து, செல்லும் - போகின்ற, கவிகை முன்னே துலங்க - குடைகள் தனக்கு முன்னே விளங்கிநிற்க[1],

---

1. பாட்டுடைத் தலைவன் பவனி.

பாயும் களிறு - பாய்ந்து செல்லுகின்ற கெளிற்றுமீன், மூன் ஏற - மேலிடத்தில் ஓட, பல்கு திரையும் பின் ஏற - மிகுதியாக உண்டாகும் அலைகளும் ஒன்றன்பின் ஒன்றுகப் பின் தொடர்ந்து வரவும், பாரத்து இருந்த இடக்கயமும் - நீர்க் கரையில் ஒதுங்கிய பெரிய கெண்டை மீன்களையும், பல வாளையும் - பற்பல வாளை மீன்களையும், ஒன்றுப் நிரத்தி - ஒன்றுக வரிசைப்படுத்தி, தோயும் கனமும் - தன்னைச் சாருகின்ற மேகங்கள், படர்ந்த கொம்பு - விரிந்த மரக்கினைகளை, தொடும்போது - சாருங் காலத்தில், இடமானம் துவைக்க - வானிடத்தில் பேரொலியாக இடி முழக்கஞ்செய்ய, தொடுத்து செல்லும் - தொடர்ந்து செல்லுகின்ற, கவிகை முன்னே துலங்க - வட்டம் முன்னிடத்தில் தோன்ற,[1]

உ(ன்)னைப்போல் - உன்னை ஒத்து, குழாம் நடுவில் - கூட்டத்தின் நடுவிடத்தில், ஆயும் தமிழின் - ஆராயப்பெறுகின்ற தமிழ் நூல்களின், அருமை எ(ல்)லாம் - அரிய சிறப்புத் தன்மைகள் பலவற்றையும், அறிவோன் - அறிந்தோனை, வெங்கடாசுர எட்டன் —, அரசர் பெருமான் - வேந்தர் வேந்தன், இளசையர் கோன் - எட்டியாபுர நகரத்துமக்கட்கு மன்னன், ஆனைப்பவனியினையின்மீது உலாவாக, வர பார்த்தேன் - வரக்கண்டேன், காது அலையே - வருத்துகின்ற நீரலைகளை, நீயும் படைத்தாய் - நீயும் கொண்டிருக்கின்றாய், நின்பால் - உன்னிடத்தே, அடுத்தேன் - சார்ந்தேன், காதலியே - என்னை முதன்மையாகக் காப்பாற்றுவாயாக, அல் ஐயே-இரவுப்பொழுது ஐயோ, நீங்கவே போகாது - செல்லவே செல்லாது வருத்துகின்றது, காதலியே நிரப்பும் கடலே-காதல் துன்பத்தையே பெருக்குகின்ற கடலே!

பாயும்: எதிர்காலப் பெயரெச்சம். களிறு - ஆண் யானை; கெளிற்றுமீன். பல்குதிரை - பல குதிரை; பல்கு திரையெனப் பிரித்து, பெருகி வருகின்ற அலை எனச் சிலேடைப் பொருளுக் கேற்றவாறு பொருள் காண்க. (சக)

---

1. கடல்.

நo

[முதல், கடை மடக்கு]

புந்திக் கினிமை யாகநிரம்
புந்திக் கரையி லொருகயமுன்
புந்திக் கெனவந் தருள்புரியன்
புந்திக் கறியப் புரந்தருள்வோன்

தந்திப் பிடரி லேறியுலாத்
தந்திப் படிமேன் மிகுங்கருணை
தருவோன் வெங்க டேசுரெட்ட
சாமி தனையே கைதொழுது

வந்தித் தவனைக் கண்டேனே
வாதித் தவனைக் கண்டேனே
வண்டு படியுங் காவீரே
மயலைப் படியுங் காவீரே

பந்தித் தாரா வினத்தாரே
பழக்கத் தாரா வினத்தாரே
பயத்தி லானுப் புள்ளீரே
பனையி லானுப் புள்ளீரே.

(**உரை**) வண்டு படியும் - வண்டுகள் தங்கியிருக்கின்ற, காவீரே - சோலைகளே, மயல் எப்படியும் - காதல் மயக்கத்தை எவ்வாற்றினும், காவீரே - காக்கமாட்டீரோ, பந்தி - வரிசையாகவுள்ள, தாரா இனத்தாரே-நாரைக் கூட்டங்களே! பழக்கத் தாரா - நட்புப் பூண்டவர் தாமோ, இனத்தாரே - சுற்றமாகவுள்ளவர்? பயத்தில் - நீர் நிலைகளில், ஆனு - விட்டு நீங்காத, புள்ளீரே - பறவைகளே! பனை இல் - பனைமரத்தையே இருப்பிடமாகக்கொண்டு, நாப்பு - கேலி செய்கின்ற உம் செயலை, உள்ளீரே - நினைக்கின்றீரில்லையே, புந்திக்கு - அறிவுக்கு, இனிமை ஆக - இன்பம் தரும்படியாக, நிரம்பும் - நிறைந்திருக்கின்ற, திக் கரையில் - ஓர் திசையிலுள்ள ஏரிக் கரையிடத்து, ஒரு கயம் முன்பும் - (முதலையின் வாயில் பற்றப்பட்ட) ஒரு யானையின் முன்பாக, திக்குள - திடீரென, வந்து - தோன்றி, அருள்புரி -

காத்தருளிய, அன்பும் - அன்பினுல், திக்கு அறிய - திசைகள் எங்கும் தெரிய, புரந்து அருள்வோன் - பாதுகாத்தருள்புரிகின் றருளை திருமாலே யொத்தோன், தந்திப் பிடரில் - யானையின் பிடர்மீது, ஏறி - மேலேறியிருந்து, உலாதந்து - உலாவாக வந்து, இப்படிமேல் - இவ்வுலகத்தில், மிகும் கருணை தருவோன் - மிக்க அருளைச்செய்கின்றவனை, வெங்கட ஈசுர எட்டசாமி தனையே-, கைதொழுது வந்தித்து - கைகுவித்து வணங்கி, அவனைக் கண்டேனே - அவன் உருவமெல்லாம் நன்கு கண்டு களித்தேன், வாதித்த - என்னிடம் வழக்குப் பேசுகின்ற, அ(ன்)னைக்கு - என் தாயிடத்து, அண்டேனே - (இனி) நான் சேரவே மாட்டேன்.

அரசர்களைத் திருமாலின் பிறப்பு என்று கூறுவது, தமிழ்ச் சான்றோர் மரபு. 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை' என்று திருவள்ளுவரும், 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே' என்று ஆழ்வாரும், 'செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஓப்பரோ' எனப் புகழேந்தியாரும் கூறுவன கொண்டு அறிக. அதனுல் திருமாலின் பிறப்பாகக் கொண்டு வெங்கடேசுரஎட்ட வேந்தனை 'ஆதிமூலமே' என்று அழைத்தபோது திருமால் முதலைவாயினின்றும் விடுவித்த செயலைக் குறிப்பிட்டு 'ஒரு கயமுன் புந்திக்கென வந்தருள் புரியன்பும்' என்றுள் என்க.

திக்கு + கரை - திக்கரையென இசைநோக்கிக் 'ககர உகரம்' குறைந்து நின்றது : குறைத்தல் விகாரம்.

நாப்புதல் - ஒருவர்பாற் குற்றங் கற்பித்து ஏளனஞ் செய்து நகைத்தல். தான் காதலால் துன்புறுங்கால் பறவைகள் ஆணும் பெண்ணுங் கூடிக்களித்து இரைந்திருத்தலை தன்னைப் பார்த்து, நாப்புதலாகக்கொண்டு இவ்வாறு கூறினள். தந்திறிப்பு. (இ0)

நகூ

[கடைமடக்கு]

படர வருமா லதிமதுரம்
பக்க மெனவே பலபூங்கோம்
படர வருமா லதிமதுரம்
பக்கம் வளரப் பதிகளெங்கும்

நடவே நந்த வனமமைத்து
நந்த வனமு மமைத்திநல்
நயவான் வெங்க டேசுரெட்டன்
நாளும் விரும்புங் கடற்றுறைவாய்ச்

சடமே யசைக்கும் போதாவே
சம்போ லிருக்கும் போதாவே
தனிக்க விதித்தான் போதாவே
தமியேற் கிதுவும் போதாவே

திடரின் முளைத்த முண்டகமே
திரையிற் புனலு முண்டகமே
தெளியா மயக்க முண்டகமே
சிலவேள் கணையு முண்டகமே.

(உரை) படர வரும் - படர்ந்துசெல்லுகின்ற, மால் - விட்டுணுகரந்தை, அதிமதுரம் - அதிமதுரச் செடியும், பக்கம் எ(ன்)னவே - அருகிலேயே இருக்க, பல பூங்கொம்பு - பல்வகை மணமலர்ப் பூஞ்செடிகொடிகள், அடர - நெருக்கமாக வளர, மாலதி - சிறு சண்பகம், மதுரம் - கொடிமுந்திரிகை, பக்கம் - அருகிடங்களில், வளர-உண்டாகிவர, பதிகள் எங்கும் - ஊர்கள் எல்லாவற்றிலும், நடவே - நட்டு உண்டாக்குதற்கு, நந்தவனமும் - பூந்தோட்டங்களும், அமைத்து - செய்வித்து, நந்த - அவைகள் நிலைபெற, வனமும் - மக்கட் குடியிருப்புகளும், அமைத்துஇடு - ஆக்கித் தருகின்ற, நல்நயவான்-நல்ல அரசாட்சி செய்வோன், வெங்கட ஈசுர எட்டன்-, நாளும் - எக்காலமும், விரும்பும் - விருப்பம் வைத்துள்ள, கடல் துறைவாய் - கடலின் துறைமுகத்திடத்து, சடமே அசைக்கும் - தன் உடலைக் குலுக்குகின்ற, போதாவே - பெருநாரையே! சம்பு ஒலிருக்கும்போது -

நரிகள் ஊளையிடும் நள்ளிரவுக்காலத்தில், ஆவே - ஆச்சாமரமே! தனிக்க விதித்தான் போதாவே - நான்முகன் என்னைத் தன்னந் தனியளாக இருக்கும்படி விதியமைத்தான், தமியேற்கு - இவ் வெளியேனுக்கு, இதுவும்-இவ்வளவான துன்பமும், போதாவே-பெறப்படாவே, (குறைவானவையே), திடரின் - மணல் மேடு களில், மூளாத்த - மூளாத்திருக்கின்ற, மூண்டகமே - முள்ளிச் செடிகளே! திரையில் - அலைகளில், புனலும் உண்ட க(ம்)மே - நீரையும் குடித்திருக்கின்ற சங்கமே! அகமே தெளியா மயக்கம் - (எனக்கு) மனந்தேருத மயக்கம், உண்டு - இருக்கின் றதே, சிலைவேள் - கரும்புவில்லையுடைய மன்மதனின், கணை யும் - அம்புகளும், மூண்டகமே - தாமரைமலர்களே! (ஆனாலும் அவைகள் மலருக்கேற்ற தன்மையின்றி மிக வருத்துகின்றனவே என்ன செய்வேன்!)

பாட்டுடைத் தலைவன் நந்தவனம் அமைத்துப் பல்வகை அறங்கள் செய்வோன். இத்தகையோன் தன்பால் இரக்கங் காட்டாமை குறித்துத் தலைவி கடற்கரையில் வாழ்வனவான இயற்கைப்பொருள்களை நோக்கி வருந்துவதாக அமைந்தது இப்பாட்டு.

நாரைகளை நோக்கியும், மரங்களை, தாமரைகளை, தன் கண்ணுக்குத் தோன்றுகின்ற பிற இயற்கைப் பொருள்களைப் பார்த்தும் கூறுவனவாக அமைந்துள்ளவை கவிச்சுவை இன்பம் நுகர்வார்க்கு அவலக் காட்சியளித்து இன்புறுத்துதலை அறிக.

(இக)

நூ

[முதல், கடைமடக்கு]

சேரு மாலை யங்கூரத்
தேருந் திருநா ளும்பொருந்தச்
சேரு மாலை யங்கூரத்
தேருந் திருநா ளும்பொருந்த

ஆரும் புகழும் இளசைநகர்
அதனைச் சிறப்பா யமைத்துலகை
ஆண்டோன் வேங்க டேசுரெட்டன்
அரசர்க் கரசன் கடற்றுறைவாய்ச்

சாருங் கரைக்கு மேற்றுவரே
தாய்மார் வழக்கு மேற்றுவரே
தாழை மரத்து மூள்ளிலையே
தமியேன் வருத்த மூள்ளிலையே

காருங் கலக்கு மழியலையே
காமன் கலக்கு மழியலையே
காத லடங்கு மாசுறவே
கரைந்தே னுடல மாசுறவே.

(**உரை**) சேரும் - அடுத்தடுத்திருக்கின்ற, ஆலயம் கூர - கோயில்களில் மிகவும், தேரும் திருநாளும் பொருந்த - தேரோட்டமும் திருவிழாக்களும் சிறப்புற, சேரும் மாலை - (நாள்தோறும்) வருகின்ற முறைமைப்படி, அங்குனர-அவ்வவ் விடங்கட்கு வருதலால், தேரும் திரு - எல்லோராலும் விரும்பப்படுகின்ற கலைச் செல்வமும் பொருட் செல்வமும், நாளும் பொருந்த - என்றும் நிலைத்திருக்க, ஆரும் புகழும் - எல்லோராலும் உயர்த்திப் பேசப்படுகின்ற, இளசை நகரதனை - எட்டையபுர நகரத்தை, சிறப்புற - மேன்மையாக, அமைத்து - செய்து, உலகை ஆண்டோன் - உலகத்தை ஆள்கின்றவனுனை, வெங்கட ஈசுர எட்டன்—, அரசர்க்கு அரசன் - மன்னர் மன்னனுக்குரிமையுள்ள, கடல் துறைவாய் - கடலின் துறைமுகத்திடத்து, சாரும் கரைக்குமேல் - சேர்ந்திருக்கின்ற கரையின்மீது இருக்கின்ற, துவரே - பவளக்

கொடியே! தாய்மார் - என் அன்னைமார்கள், வழக்கும் ஏற்று வரே-என்னிடம் குற்றங் குறைகளே யேற்றிப் பேசுவரே, தாழை மரத்து முள் இலையே-தாழைமரத்தின் முட்களையுடைய இலையே! தமியேன் வருத்தம் உள்ளிலையே - எளியேனது துன்பநிலையை நினைத்துப் பார்த்தாயில்லையே, காரும் கலக்கும் மறிஅலையே - மேகங்களும் சாருகின்ற மடங்கிச் செல்கின்ற அலையே!, காமன் கலக்கும் - மன்மதன் என்னைக் கலக்கமுறச் செய்வதையும், அறியலையே - தெரிந்தாயில்லையே, காதல் அடங்கும் மா சுறவே - கொல்லுந்தொழிலே வெளிக்காட்டாதிருக்கும் பெரிய சுருமீனே!, கரைந்தேதன் உடலம் மாசு உறவே - என் உடல் காதலால் மெலிந்து அழுக்குமிகுதிப்பட வருந்தினேன்.

ஆலயம் - ஆலயம்; போலி. தேரும் திரு - தேடுகின்ற செல்வம்; கல்வி, செல்வம் ஆகியவைகள். இவைகள் மக்கள் யாவராலும் தேடப்படுகின்ற பொருள். 'நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்' என்னும் கம்பநாடர் திரு மொழியும் இதனை வலியுறுத்துதல் அறிக. ஆண்டோன் - ஆள் கின்றவன்: வினையாலணையும் பெயர்; மிகுதிபற்றி நிகழ்காலம் இறந்த காலமாக வந்த காலவழுவமைதி.

கடலிலும் கடற்கரை ஓரங்களிலும் இருக்கின்ற பொருள் களை விளித்து அவைகளிடம் தன் குறைகூறித் தலைவி வருந்து கின்றாள். அவை, 'சாரும் கரைக்கு மேற்றுவரே' என்றும், 'தாழை மரத்து முள்ளிலையே' என்றும், 'காரும் கலக்கும் மறியலையே' என்றும் 'காத லடங்கு மாசுறவே' என்றும், அவ் வைகளை விளித்துக்கூறுவது, தலைவியின் வாங்காக் காதலை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. (கூ)

ருசு

[முதல், கடைமடக்கு]

வள்ளம் பாரும் விழிகண்முலை
வள்ளம் பாரும் திருநுதலும்
மாலைப் பிறையோ வேனமடவார்
மாலைப் பிரயோ சனமாக

உள்ளம் பொருந்து மதன்போல
உருவம் எடுத்துப் புவிபுரக்கும்
உரவோன் வெங்க டேசுரெட்டன்
ஓங்கும் இளசைக் கடற்றுறைவாய்

வேள்ளம் புடைத்த தறையீரே
வேளம் புடைத்த தறையீரே
விரைசேர் புன்னைக் கோப்பிலேயே
விடமா மன்னைக் கோப்பிலேயே

கள்ளுங் குடையு மாமலரே
காதுங் குடையு மாமலரே
கயத்து நாடு மலங்கினமே
கருத்து நானு மலங்கினமே.

(உரை) வள் அம்பு ஆரும் - கூரிய அம்பினை ஒக்கும், விழி - கண்களும், கண்முலை வள்ளம் பாரும் - கண்ணையுடைய கொங்கைகளின் பெருமைப் பரப்பும், மாலை பிறையோ எ(ன்)ன - மாலைப் பொழுதில் தோன்றும் மூன்றும்பிறைச் சந்திரனை என்று கூறும் படியான, திருநுதலும் - அழகிய நெற்றியையும் உடைய, மடவார் - இளமங்கையர், மாலை பிரயோசனம் ஆக - மாலைக் காலத்துக்கேற்ற பயனை, உள்ளம்பொருந்து - மனத்தில் தங்கிய, மதன் போல - மன்மதனைப் போலாக, உருவம் எடுத்து - வடிவங் கொண்டு, புவி புரக்கும் உரவோன் - உலகைப் பாதுகாக்கின்ற வலிமையுடையோனை, வெங்கட ஈசுர எட்டன்—, ஓங்கும் இளசை - உயர்வுமிக்க எட்டயபுர நகருக்குரிய, கடல் துறை வாய் - கடலின் துறைமுகத்திடத்து, வெள்ளம் புடைத்த - நீரலை மோதிய, தறையீரே - நிலமே!, வேள் அம்பு உடைத்தது அறை

யிரே - மன்மதனின் அம்பு (என் மார்பிற் பாய்ந்து) என்னைத் தனர்வடையச் செய்ததை (எம் தலைவனிடம்) கூறமாட்டீரோ, விரைசேர் - மணம்பொருந்திய, புன்னை கொப்பு இலையே-புன்னை மரத்தின் கிளையிலுள்ள இலையே !, விடம்ஆம் - நஞ்சுபோல்வா ளான, அன்னைக்கு ஒப்பு இ(ல்)லையே - என் தாய்க்கு ஒப்பாகக் கூறக் கூடியவர் யாருமில்லையே, (அவளை மிகக் கொடியவள்), கள்ளும் குடையும் - வண்டுகளும் துளைக்கின்ற, மாமலரே - பெருமையுள்ள பூவே!,காதும் குடையும் ஆம் அலரே - மிக்குப் பெருகிய பழிச்சொல் (என் மனத்தைத் துளைப்பதன்றிக்) காதை யும் துளைத்துத் துன்புறுத்துகின்றதே, கயத்து நாடு மலங்கு இனமே-குளத்தில் விரும்பியிருக்கின்ற விலாங்குமீன் கூட்டமே!, கருத்து நானும் மலங்கினமே - நான் மனக்கலக்கமடைந்துள் ளேனே !

வள் - கூர்மை. ஆரும் - ஒக்கும் : உவமஉருபு. பார் - பரப்பு, விரிந்தது. தறை - தரை - பூமி. சொல் மடக்கணி நோக்கித் தரை-தறையெனத் திரிந்தது.

> '' அறையும் ஆடரங் கும்மடப் பிள்ளைகள்
> தறையில் கிறிடில் தச்சரும் காய்வரோ ''

என்ற கம்பராமாயணத்தினும் தறையென வந்தவாறுணர்க.

கடலை நோக்குங்கால் கடற்கரை ஓரத்தில் உள்ள புன்னை இலைகள், மலர்கள், மீனினங்கள் தன் கண்முன் தென்படுகின்றன. தன் தாங்கலாற்றுக் காதலுணர்வு கரைபுரண்டு மனத்தை ஈர்த்து ஈர்த்துத் துன்புறுத்த 'விரைசேர் புன்னைக் கொப்பிலையே!', மாமலரே! மலங்கினமே! 'என அவைகளை அழைத்து முன்னிலைப் படுத்தி' என் கருத்தும் நானும் கலங்கி நிற்கின்றேமே! நீவிர் என் கண்முன் தோன்றிக் காட்சியளித்தும் என்பால் இரக்கங்காட் டாது இருத்தல் தகுமோ!' என்று தலைவி வருந்திக் கூறுவதாக அமைந்த இது, காதல்மிக்க கழிபடர் கிளவித்துறையாகும். (இங்கு)

நூ

பாட்டுடைத்தலைவன் கொடைக்கும், சமுத்திரத்திற்கும் சிலேடை

[இடைமடக்கு]

கனகம் போலிவாய்த் தந்தநிலை
காட்ட மேலா னவராலும்
காணக் காவி யத்தவரும்
களிப்பா வலரும் பாணிகொண்டு

தனதா யேந்த விசைதரலாற்
சகல சனமும் பிழைக்கவனம்
தரலால் வேங்க டேசுரேட்ட
சாமி கொடைபோற் சமுத்திரமே!

வன வாருதியே தினமனங்க
வர வாருதியே உன்னிடத்தில்
மச்சம் பிடிக்க வலையுமுண்டே
மதனம் பிடிக்க வலைவேறே

தினமே கத்தவழி வாயே
திடமே கத்தவழி யேனே
செலுத்து மலையே நாசியுணைந்
திடத்து மலையே மறைத்தேனே.

(உரை) கனகம் பொலிவு ஆய் தந்து - பொன்னே இரப் போர்க்கு நிறைவுபெறக் கொடுத்து, அம் நிலைகாட்ட - அழகிய தன் கொடை நிலைமையைத் தெளிவிக்க, மேல் ஆனவராலும் - உயர்ந்தவர்களினாலும், காண - அறியும்படி, கா இயத்தவரும் - இசைவாணரும், களி பாவலரும் - இன்பந்தரும் தமிழ்ப்புலவர் களும், பாணி கொண்டு - அன்புற்று, தனது ஆய் - தனக்கு உரிமையாளராய், ஏந்த - வாழ்த்த, இசைதரலால் - புகழைத் தருகின்ற தன்மையினாலும், சகல சனமும் பிழைக்க அ(ன்)னம் தரலால் - மக்களெல்லாம் உய்யச் சோறளித்தலினாலும்,[1]

கன கம் பொலிவுஆய் - மிகுதியான நீர் நிறைவுள்ளதாகி, தம்தம் நிலைகாட்ட - நீர்நிறைவின் ஆழ அளவினை அவ்வவ்விடங்

1. பாட்டுடைத்தலைவன் கொடை.

களில் தெரியச்செய்து, மேல்ஆன வராலும் - மேலே திரிகின்ற வரால்மீனும், காண - தோன்ற, காவியத்து - குவளையிடத்துள்ள (மெல்லரும்புகள்), களிப்புஆ அலரும்-குளிர்ச்சியால் மலருகின்ற, பாணிகொண்டு - நீரையுடையதாகி, தனது ஆய் ஏந்த - தனது உரிமைப்பொருளாக மேற்கொண்டு, இசைதரலால் - (அம் மலர்கள்) இருக்க இடங்கொடுத்தலால், சகல சனமும் - எல்லா மக்களும், பிழைக்க வனம் தரலால் - வாழுதற்கு வழிவிட்டு உதவுதலினால்,[1]

வெங்கட ஈசுர எட்டசாமி—, கொடைபோல் சமுத்திரமே - கொடைத்தன்மை போன்று தோன்றுகின்ற கடலே!, வன வாருதியே - அழகிய கடலே!, தினம் மனம் கவர - நாள்தோறும் என் நெஞ்சம் ஆசைகொள்ள, ஆருதியே - நீர்ப்பெருக்க மடை வாயாக, உன் இடத்தில் - உன்பால், மச்சம்பிடிக்க - மீன்களைப் பிடித்துக்கொள்வதற்கு, வலியும் உண்டே - வலைகள் உண்டன்றே, மதனம் பிடிக்க அலைவேனே - (நான் உன்னைக்காணுந் தோறும்) மனக் கலக்கங்கொண்டு தடுமாறுவேனே? தினமே - நாள்தோறும், கத்த அறிவாயே - பேரிரைச்சலிடத் தெரிந்து கொண்டுள்ளாயே, திடமே கத்த அறியேனே - நான் அச்சமின்றிப் புலம்ப அறிகின்றிலேனே, செலுத்தும் அலையே - எல்லாப் பொருள்களையும் ஒதுக்கிச் செல்கின்ற அலையே!, நாசி உள் நைந்திடு - மூக்கின் உள்ளிடத்தே துளைக்கின்ற, து(ம்)மலையே மறைத்தேனே - (பிறர் கண்டு கொள்வரென்ற அச்சத்தால்,) தும்மலையும் வெளித்தோன்றுவண்ணம் அடக்கிக்கொள்ளலானேனே!

வாருதி - கடல். ஆருதி - நிறைவாயாக: முன்னிலை ஏவல் ஒருமை. காதல்மிக்க தலைவிக்குக் கடலின் கரிய அழகிய தன்மை மிக மனத்தை ஈர்க்கின்றது; அதைக்கண்டதும், காதல் கரை புரண்டோடுகின்றது. அதைத் தாங்கலாற்றாது வருந்துகின்றாள். வருந்துவோள், 'ஏ! வன வாருதியே! நீ தினம் என் மனம் விருப்ப மூற நீர் நிறைவாயாக; நான் அதைக்கண்டேனும் மன ஆறுதலடைவேன்; உன் நிறைவு என் தலைவன் கொடைபோல் எனக்குக் காட்சியளித்து என் நெஞ்சை ஆறுதலடையச் செய்யும்,' என்று கடலொடுகரைந்து கரைந்து வேண்டுகின்றாள். இவ்வாறே தன் காதலிபால் கரையற்ற அன்பு கொண்ட திருவள்ளுவர் தந்த காதலன், திங்களை நோக்கி வேண்டும்பகுதி இதனோடு ஒன்று படுத்தி மகிழற்பாலது. அது,

"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலி வாழி மதி"

---

1. சமுத்திரம். 2. திருக்குறள்: ककक

'ஏ! திங்காள்! என் காதலியின்முகத்தைப்போல் ஒளிகாட்ட வல்லமை பெற்றுள்ளாயானால் என் அன்புக்குரியாய்; ஆகலான், நீ வாழ்க' என்று திங்களை நோக்கிப் பேசுதலும் காண்க.

'ஏ கடலே உன்னிடம் மச்சம்பிடிக்க வலியிருக்கின்றது; நானே மதனம்பிடிக்க அலைகின்றேன்; நீயோ! நாள்தோறும் கத்த அறிவாய்: நானே அச்சமின்றிப் புலம்பக்கூட ஆற்றலில் லேன்!' என்று தனக்கும் கடலுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக்கூறித் தனக்கு உதவிபுரியக் கடலொடு முறை வேண்டு கின்றாள்.

பின்னர்த் 'தும்மலையும் மறைத்தேனே' என்று கவலுகின்றாள். தும்மல் தோன்றுவது தன்பால் அன்புகொண்டார் நினைந்தால் தான் என்பது மனைலை உணர்ந்தோர் கண்டறிந்த உண்மை. இதனைத் திருவள்ளுவர் அருளிய பெருநூலில்,

[1]"தும்மச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று"

எனக் கூறுவதும் கண்டின்புறுக. 'மதன் அம்பு இடிக்க அலைவேனை'எனப்பிரித்து மன்மதன் மலரம்பு தூளாக்கி வருத்த அலைந்து திரிவேனை என்று பொருள் கூறலுமாம். (இ)

1. திருக்குறள்: கூடுகஅ.

ரு ரு

பாட்டுடைத்தலைவன் குணத்திற்கும், கடலிற்கும் சிலேடை

[கடைமடக்கு]

தெரிய வமுதம் பழகுமதி
தெரிந்த வாரம் பிரியாமல்
தீரத் திடமும் நீங்காமற்
செழிக்க வாய்மை கடவாமல்

வரிசை புரிந்து தமிழ்புனைய
வந்தோன் வெங்க டேசுரேட்டன்
மனது நிறையுங் குணம்போல
வளரும் பெரிய கடற்றுறைவாய்ப்

பெரியமீனே சினக் கயலே
பெண்பா லெவரு மெனக்கபலே
பெருகுந் திரையிற் செல்லீரே
பிழைக்கத் தூது செல்லீரே

அரியின் மனையே மூடலையே
அமைந்தார் எவரு மூடலையே
அரனுர்க் குரித்தாங் கணைக்கூடே
அணுகேன் மலர்தாங் கணைக்கூடே.

(உரை) தெரிய - யாவரும் அறியும்படி, அமுதம் - இனிமை யுடன், பழகு - நட்புக்கொள்கின்ற, மதிதெரிந்த - அறிவை அறிந்துள்ள, வாரம் பிரியாமல் - அன்பு நீங்காமல், தீரதிடமும் நீங்காமல் - வீர வலிமையும் கெடாமல், செழிக்க - அன்புபெருக, வாய்மை கடவாமல் - உண்மைநிலை பிறழாமல்,[1]

தெரிய அமுதம் பழகு - எல்லோரும் காண அமிழ் தத்தைக் கொண்டு, மதிதெரிந்த - வரையறுக்கப்பட்டுத் தோன்றுகின்ற, வாரம் பிரியாமல் - கரையைவிட்டுக் கடவா மல், தீரத்து இடமும் - நீர்க்கரை ஓர இடத்தையும் கடந்து, நீங்காமல் - செல்லாமல், செழிக்கவாய் - உலகம் வளர்ச்சி

1. பாட்டுடைத்தலைவன் குணம்.

பெற இசைந்த, மைகள் தவாமல் - மேகங்கள் குறையா மல்,[1] வரிசை புரிந்து - உலகை முறைசெய்து, தமிழ் பூணியவர் தோன் - தமிழ்மாலை சூடிக்கொள்ளப் பிறந்தோனை, வெங்கட ஈசுர எட்டன்—, மனது நிறையும் - மனம் நிறைவு கொள்கின்ற, குணம்போல - நற்பண்பைப்போல, வளரும் - பெருகுகின்ற, பெரிய கடல்துறைவாய் - பெரிய கடல் துறைமுகத்தினிடத்தே உள்ள, பெரிய மீனே - பெரிதானமீனே! சி(ன்)னக் கயலே - சிறிய கெண்டை மீனே! பெண்பால் எவரும்-பெண்கள் யாரும், எனக்கு அயலே - எனக்கு அயலாராகவேயுள்ளனர், பெருகும் திரையில் - பெருக்கெடுத்து வருகின்ற அலைகளிடத்துள்ள, செல் லீரே - மேகங்களே! பிழைக்க தூது செல்லீரே - நான் உயிர் வாழும்படியாகத் தூதாகச்செல்ல மாட்டீரோ?, அரி - திரு மாலின், இல் மனையே - இல்லாளான திருமகள் பிறந்த வீடே, மூடு அலையே - மறைக்கின்ற அலைகளே!, அமைந்தார் எவரும் ஊடலையே-யாரும் ஊடுதலையே கொண்டுள்ளார்கள், அரனுர்க்கு உரித்துஆம் - சிவபெருமானுக்கு உரிமையான, கணைக்கூடே - அம்பருத் தூணியே! மலர்தாங்கு - மலர்கள் மலர்ந்திருக்கின்ற, அணைக்கு ஊடே அணுகேன் - கரைகளின் நடுவிடத்தில் சேரேன்.

மக்கட்குரிய நற்குணங்களில் தம்மைச் சார்ந்தாருடன் உயர்வு தாழ்வு கருதாது இனிமையுடன் பழகுதல் உயர்ந்த சிறப் பாகும். அம்முறையில் இன்சொற்கூறி அன்புடன் பழகுகின்றுன் என்பதை, 'அமுதம் பழகுமதி தெரிந்த வாரம் பிரியாமல்' என்று தலைவன் குணங்கனிப் பாராட்டிக் கூறினுள்.

'தமிழ்மொழி பூணிய வந்தோன்' என்றது, இயற்கைச் செப் பமும், ஆழ்ந்த அரும்பெருங் கருத்துக் கொண்டதுமான தமிழ் மொழியில் பற்றுதலுடையனுய்ப் புலவர் பாடும் புகழுடையனுய் விளங்குகின்றுன் என்பதைக் குறிப்பிட்டவாறும்.

அரி - திருமால்; இல் - இல்லாள்: இடவாகு பெயராய்த் திருமாலின் மனையாளான திருமகளை உணர்த்திற்று. திருமகளும் சந்திரனும் சங்கநிதி பதுமநிதி முதலிய பொருள்களும் திருப்பாற் கடலில் அமிழ்தம்பெறக் கடைந்தபோது தோன்றினவென்பது புராணக்கதை. அதனுல் திருமகள் பிறந்த இடமாகிய கடலை 'அரியில் மனையே' என்றுள். அஃதன்றியும் 'அரனுர்க்கு உரித் தாம் கணைக்கூடே,' என்றுள். திரிபுர அசுரர்கள் பொன், வெள்ளி, இரும்புகளால் இயன்ற மூன்று கோட்டைக்குள்ளிருந்து நினைந்தபோது அவைகளைப் பறக்கச் செய்து உலகை அழித்து வந்தனரென்றும், அவர்கள் கொடுமைக்கு அஞ்சிய தேவர்களின்

1. கடல்.

மூறையீட்டுக்கு இரங்கிச் சிவபெருமான் சிரித்து அக் கோட்டை களையும் அவ்வசுரர்களையும் அழித்தனரென்று புராணங்கூறும். அவர்களை அழித்தற்கு இறைவன், பூமியைத் தேராகவும், மேருவை வில்லாகவும் வாசுகி யென்னும் பெரும்பாம்பை நாணு கவும், திருமாலே அம்பாகவும் கொண்டு சென்றுரென்றும், புரா ணங்கள் கூறும். அம்முறையில் திருமால் அம்பாக இருந்ததனா லும், திருமால் பாற்கடலில் அறிதுயில் (யோகநித்திரை) கொண் டிருப்பதாகப் புராணங்கள் உரைப்பதால் அத்திருமாலாம் அம்பு இருக்கும் இடத்தை அம்புக்கூடாக உருவகித்துக்கூறினுள். அதுதான் 'கணைக்கூடே' என்பதாகும். கணைக்கூடு அம்புகள் இருத்தற்குக் கூடுபோல் இருக்கும் வைப்பிடம்.

சிவபெருமான் திரிபுரம் எரித்த வரலாற்றை,

[1] திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம் பேரல் கேட்ப'

என, இளங்கோவடிகளும்,

[2] 'வளைந்தது வில்லு வினைந்தது பூசல்
உளைந்தன மூப்புரம் உந்திபற
ஒருங்குடன் வெந்தவா றுந்திபற'

என, மணிமொழிப் பெருமானும்,

[3] 'நாணென்ருல் நஞ்சிருக்கும் நற்சாபம் கற்சாபம்
பாணந்தான் மண்தின்ற பாணமே—தானுவே!
ரோர் சிவபுரத்துச் செல்வநீ எப்படியோ
நேரார் புரமெரித்த நேர்'

எனக் காளமேகப் புலவரும் பிற ஆன்ருேர்களும் தம் நூல் களில் உரைப்பனவற்றைப் பரந்துபடக் காண்க. (திதி)

---

1. சிலப், சு: ச0 - க. 2. திருவாசகம், திருவுந்தியார்: க. 3- தனிப்பாடல்:



நூ

[இடை. கடைமடக்கு]

பூரித் தவரை யேந்தியோரு
பூங்கந் தவரை யோடித்துமனம்
பொருந்தித் தவரை வளர்த்துமணிப்
பூயங்கத் தவரைப் பூசைசெய்தோன்

பாரிக் கிணையா நிதிசோரிந்து
பாகத் தமிழைப் பூனேந்துபுகழ்
படைத்தோன்வெங்க டேசுரேட்டன்
பாருக் கரசன் கடற்றுறைவாய்

வாரிக் கரையே கரைத்திடரே
மாதர் கொடுப்பார் கரைத்திடரே
மறுகு முவரி வாய்ப்படவே
வசமோ அன்னே வாய்ப்படவே

மூரித் தோணிக் குறும்பாயே
முனிவான் மாரன் குறும்பாயே
முத்தே யனைய தெண்ணீரே
மோகம் விளைவ தெண்ணீரே.

(உரை) பூரித்த வரை ஏந்தி - பெருத்தமலையைக்குடையாக எடுத்துப் பிடித்து, ஒரு - ஒப்பற்ற, புங்கம் - உயர்வுள்ள, தவரை - வில்லினை, ஒடித்து-முறித்து, மனம் பொருந்த-நெஞ்சம் பொருந்தும்படி, தவரை வளர்த்து - தவமுடைய முனிவர்களை உயர்த்தி, மணி - மணியையுடைய, புயங்கத்தவரை - பாம்பை யணிந்த சிவபெருமானை, பூசைசெய்தோன் - வழிபாடு செய்தவனும், பாரிக்கு - பாரிவள்ளலுக்கு, இணையா - ஒப்பாக, நிதி சொரிந்து - பெரும்பொருள் ஈந்து, பாக தமிழை - (இய லிசை நாடகமென்னும் மூன்று) பாகுபாடுடைய தமிழ்மொழி மாலையை, புனைந்து - ஏற்று, புகழ்படைத்தோன் - அதனால் புகழ்பெற் றோனுமான, வெங்கட ஈசுர எட்டன்-, பாருக்கு அரசன்-உலகத் துக்கு மன்னனுக்குரிமையான, கடல்துறைவாய் - கடலின் துறை முகத்திடத்தே, வாரி - வெள்ளம் வருகின்ற, கரையே - கரை

யிடமே, கரைதிடரே - கரையின் உயர்ந்த இடமே, கரைத்து - (மனத்தை) இளக்கி, இடரே மாதர் கொடுப்பார்-துன்பத்தையே பெண்கள் தருவார், மறுகும் - மாறிமாறிச் செல்கின்ற, உவரி வாய் படவே - கடலிடத்துள்ள தோணியே! அன்னே வாய்பட - தாயின் வாயிடத்தே வசைமொழிபெற, வசமோ - ஆகுமோ ? மூரித்தோணிக்கு - வலிமையுள்ள படகிற்கு, உறும்பாயே - பொருந்தியிருக்கின்றே பாயே! மரான் குறும்பு ஆயே முனிவான்-மன்மதன் பொல்லாங்காகவே சினப்பான், முத்தே அனேய - முத்துப்போன்ற, தெளிநீரே - தெளிந்தநீரே, மோகம் விளைவது எண்ணீரே - காதல் பெருக்கெடுத்து வருவதை எண்ணிப் பார்க்கின்றிலீரே.

பூரித்த-பருத்த: பெயரெச்சம். அது, வரை யென்னும் பெயர் கொண்டு முடிந்தது. தவர் - வில், வில்லேமுறித்தென்றமையால் இராமபிரான் என்பது பெறப்பட்டது. அரசர்கீரீத் திருமாலின் சாயலாகக்கொள்வது தமிழ்ச் சான்றோர் மரபு. அந்த முறையில் இராமனேத் திருமால் பத்துப் பிறப்புள் ஒருவனுகக் கூறுவர் ஆதலால், இராமன் மிதிலையில் வில்லேமுறித்த கதையை ஆதர வாகக்கொண்டு 'புங்கந்தவரை முறித்து' என்ருள்.

பாரி கடையெழுவள்ளல்களில் ஒருவன். இரவலர்க்கும், பாணர்க்கும், கூத்தர்க்கும், புலவர்க்கும் வரையாது கொடுக்கும் வண்மையாளன். இவன் முல்லேக்குத் தேரீந்தானென்ப.

> "பூத்தலே அருஅப் புனேகொடி முல்லே
> நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
> கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
> பரந்தோங்கு சிறப்பிற் பாரி." (புறம்: ஒ00)

என்று கபிலரால் பாராட்டப்பெறுகின்ருன். முல்லே கொஞ கொம்பின்றி நின்ருல் பரண்போட்டுப் படரச் செய்யலாம்; அதை நீத்துக் குதிரையுடன் அதன் பக்கத்தில் அதைப் படரச் செய்வது அறிவிலார் செயலாகுமே எனவினவின், கொடையிற் பண்பட்ட உள்ளம், அம் முல்லேக் கொடியை அப்புறப்படுத்த ஒப்பவில்லே. ஆதலால் குதிரை பூட்டியதேரைக் குதிரையுடன் விட்டகன்ருன். அது மனத்தின் இளகிய பண்பு. அதிற் பண்பட்டவர்க்கன்றிப் பிறர்க்கு அஃது ஒப்பற்ற மாறுபாடாகவே தோன்றும்.

இத்தகைய வள்ளலே எம் வெங்கடேசுரெட்டன், அவன் முல்லேக்குத் தேரீந்த 'பாரி' போன்ருன். அவன் முல்லேயைக் காத்ததுபோல, எனக்கும் தான் அணிந்துள்ள முல்லே மலர் மாலே

யைக் கொடுத்துக் காப்பானென்னும் கருத்தைத் தன் நெஞ்சத் துட்கொண்டு,

"பாரிக்கு இணையா நிதிசொரிந்து."

என்றுள்.

'பாகத் தமிழ்' பாகுபாடுடைய தமிழ். உலகில் பல்வகைப் பட்ட மொழிகள் வழக்கிலுள்ளன. ஆனல் அவைகளுள் எம் மொழியும் தமிழ்மொழிபோல், இயல் இசை நாடகம் எனத் தனித்தனியாக வகுக்கப் பெறவில்லே. ஆனல், நம் செந்தமிழ் மொழி மட்டும் அத்தகைச் சிறப்புற்று உலக வழக்கினும் செய்யுள் வழக்கினும் நிலேபெற்று என்றும் வாடாது, வதங்காது இளமையும் தண்மையும் நுண்மையும்பெற்று 'மெல்லிய இனிய மேவரு தகுந'வான நற்சொற்குழுமத்துடன் என்று முளதாக வழங்கி வருதலின், அதன் இயற்கைச் செம்மை நலத்தை ஆய்ந்தறிந்து அம்மொழியில் பல்வகை நூல்களேயும் ஆக்கச் செய்து ஏற்றமுறச் செய்த வள்ளலென்பாளாய்,

'பாகத் தமிழைப் புணர்ந்து'

என்று தன் தலேவனேப் பாராட்டிக்கூறி வருந்துகின்றுள் இந் நூல் தலேவி.

'இத்தகைய பண்புடையோன் என்பால் அருளிரக்கங் காட்டினனில்லேயே! 'ஏ! வாரிக்கரையே! கரைத்திடரே!' எனக் கடற்கரை, திட்டு முதலியவைகளே நோக்கிக் கூறி வருந்துவது, உண்மைக் காதல் கொண்டவர்க்குக் கலக்கமுண்மை இடையறு திருக்குமென்பதை வெளிப்படுப்பதாகும். (இசு)

நவ

கடலிற்குப், தகவிங்கும் சிலடை

[அடிமுதல்மடக்கு]

சிலவா னையுஞ்சொற் குதவுநல
சிலவா னமையும் புரந்தருள்வோன்
சிறப்பாஞ் சந்த்ர காவியிடால்
சேர்த்தோன் சந்த்ர கிரிவேந்தன்

சோலவா லமுதந் துளிக்கமொழி
சொல்வோன் வெங்க டேசுரேட்ட
தோட்ட வாரந் தவருத
துங்கன் இளசைக் கடற்றுறைவாய்ப்

பலவா யிருக்குங் கற்கடகம்
பற்று மூனையே கற்கடகம்
பறிபோ னவளு நானுகும்
பயமுண் டுனக்கு மெனக்குமல்லால்

நிலவா டையுநீ பொருந்துவைய
நிலவா டையுகான் பொருந்தேனே
நீத்தங் கிலைக்கு முன்னையன்னே
நீத்தங் கிலையா ளிருந்தேனே.

(உரை) சொற்கு-தன்மீது பாவாணர் பாடிவந்த நூலுக்கு, சில ஆனையும் - (பெரும் பொருள்களுடன்) சில யானைகளையும், உதவு - கொடுத்து உதவிபுரிகின்ற, நல சிலவான் - நல்ல பொருட்கொடையையுடையான், ந(ம்)மையும் - நம் போன்ற சார்ந்தோரையும், புரந்து அருள்வோன் - பாதுகாத்து அருள்செய்வோன், சிறப்பு ஆம் - பெருமை மிக்க, சந்த்ர காவி இடால் - சந்திர காவியென்னும் கொடியை, சேர்த்தோன்-தனக்கு உரிமையாகக் கொண்டோன், சந்த்ரகிரி வேந்தன் - திருக்குற்ரால மலைக் குரிய அரசன், சொ(ல்)ல - பேசுங்கால், வால் அமுதம் - தூய இனிமை, துளிக்க - தோன்ற, சொல்வோன் - பேசுவோன், தொட்ட - தொடர்ந்த, வாரம் - பேரன்பு, தவருத - நீங்காத, வெங்கட ஈசுர எட்ட-, துங்கன் - மேன்மையாளனுக்குரிய,

இளசை - எட்டையபுர நகரைச் சார்ந்த, கடல் துறைவாய் - கடல்துறைமுகத்தின் இடத்து, பல வாய் - பல இடங்களில், இருக்கும் கற்கடகம்உ(ன்)னையே பற்றும்-குடிகொண்டிருக்கின்ற நண்டுகள் அகலாமல் உன்னிடமே இருக்கும், கல்கடகம் - மணி பதித்தவளையல்கள், பறிபோனவளும்-இழந்து நிற்பவளும், நான் ஆகும்-நானேஆவேன்,உனக்கும் பயம் உண்டு-உன்னிடம் நீர் இருக்கின்றது, எனக்கும் (பயம் உண்டு) - என்னிடமும் அச்சம் இருக்கின்றது, அல்லாமல் - அஃதன்றியும், நில ஆடையும் - பூமிக்கு ஆடையாகவும், நீ பொருந்துவை - நீ சேர்ந்திருப்பாய், அகில வாடையும் - தென்றற் காற்றின் மணமும்கூட, நான் பொருந்தேனே - நான் பொறுக்கலாற்றேனே, உன்னை - உன்னிடம், நீத்தம் - வெள்ளநீர், கிளைக்கும் - பெருகும், அன்னை நீத்து-நான் என் தாயை விட்டுவிட்டு, அங்கு-அவ் ஒதுக்கிடத்தே, இளையாள்-உடல் மெலிந்தவளாய், இருந்தேனை-இருக்கலானேனே ! (என் செய்வேன்! எனக்கு நீ உதவிசெய்ய மாட்டாயோ?)

சொற்கு - சொல்லுக்கு ; சொல்லான் அக்கிய நூலுக்கு ஆதலால், கருவியாகுபெயர். ஆனை : யானை என்பதன் போலி. செலவு - செல்லுதல், செல்லவிடுதல். இங்கு எதுகை நயம் நோக்கிச் 'சிலவு' என வந்தது, மரூஉ. இடால், டால் - கொடி ; திசைச்சொல்.

பேசுங்கால் யாரும் நயம்பட இனிமை ததும்பப் பேசுதல் வேண்டும். அஃதே,பேசுந்திறமையாகும். கடுகடுத்த பேச்சும், வெடுவெடுத்த சொல்லும் கேட்போர்க்கும் பார்ப்போர்க்கும் அச்சமும் வெறுப்புங்காட்டி மக்கட்குரிய பண்பான நட்பை - அன்பைச் சிதைக்குமாதலால், இவன் அவ்வாறின்றி யாரிடத்தும் நயம் தோன்றப் பேசுவோன் என்பாளாய் 'அமுதம் துளிக்க மொழி சொல்வோன்' என்றாள். சொல - சொல்ல : இடைக்குறை. காரணப் பொருட்டாய்வந்த செயவெனெச்சம்.

கற்கடகம் - நண்டு ; கல்லழுத்திய காப்பு. பயம் - நீர் ; அச்சம். பயம் உண்டு என்னும் சொல்லே இரண்டிடத்தும் கூட்டப்பெற்றது. நிலம் - பூமி. அகிலம் - தென்றற்காற்று. வாடை - மணம் ; காற்று. காதலர்க்குத் தென்றல் முதலிய இன்பந்தரும் பொருள்களும் துன்பந் தருவனவாதலால், 'அகில வாடையும் பொருந்தேன்' என்றாள். இளையாள் - இளைத்தாள்; இளைத்துப்போனேன் ; அல்லது இளம்பருவமுடையாள் என உரைத்தலுமாம். இளையாள்: தன்மையிடத்துப் படர்க்கையாக வந்த இடவழுவமைதி. உனை - உன்னை - உன்னிடம், இரண்டனுருபு : ஏழாம் வேற்றுமைப்பொருள் தந்த வேற்றுமை மயக்கம். (இவ)

ருஅ

[முதல், கடைமடக்கு]

பொற்பா டகப்பூங் கோம்பனையார்
பொற்பா டகமும் பட்டிகையும்
பொருத்தி யுடைசேர்த் தம்புயக்காப்
பொருத்தி யுடைய வடிவாகிக்

கற்பால் விளங்கி மலர்விரிக்குங்
கற்பான் மயங்கிப் பின்ரூடரக்
கண்டோன் வெங்க டேசுரேட்டன்
கல்விப் பெருமான் கடற்றுறைவாய்

முற்பா யலையே பாயலையே
முனிந்தேன் கயமே மதகயமே
மூடி வருமே யோருவருமே
மொழியா திருந்தார் திருந்தாரே

வெற்பா கலையே யென்கலையே
விழுந்த வகைசோ லென்கலையே
வெள்ளத் தொளித்தாய் கருங்கலையே
வெதுப்புஞ் சோம வன்கலையே.

(உரை) பொற்பு - அழகுள்ள, ஆடக பூங்கொம்பு அனையார் - பொன்னிறம் படைத்த பூங்கொடிபோன்ற மங்கையர், பொன் பாடகமும் - பொன்னைச்செய்த காலணியும், பட்டிகையும் - அரைநாணும், பொருத்தி - சேர்த்து, உடை சேர்த்து - ஆடை உடுத்து, அம்புயக்காப்பு - தாமரைமலரில் வீற்றிருக்கின்ற, ஒருத்தி உடைய வடிவுஆகி - ஒப்பற்ற திருமகளின் வடிவம்போல் அழகுபடுத்திக்கொண்டு, கற்பால் - கற்பினுக்கு, விளங்கி - விளக்கங்காட்டி, மலர்விரிக்கும் - பூவாக மலர்கின்ற, கற்பால் - கற்பின் அடையாளமான முல்லை மலர்மாலைக்கு, மயங்கி - (விருப்பங்கொண்டு) மயக்கமுற்று, பின்தொடர - (பெண்கள் பலர்) பின்பற்றிவர, கண்டோன் - பார்த்திருந்தோன், வெங்கட ஈசுர எட்டன் - வெங்கட ஈசுர எட்டப்பனை, கல்விப்பெருமான் - கல்வி பெருமை கொண்டவனுக்கு உரிய, கடல் துறைவாய் -

கடலின் துறைமுகத்திடத்து, மூன் பாய் அலியே - மூன்பாகத் தாவிச் செல்கின்ற அலைகளே! பாயலியே - (நான்) படுக்கையிடத்தையே, முவிர்தேன் - வெறுத்தேன், கயமே - ஆழமுள்ள மடுவே!, மதகயமே - மதயானைபோன்ற இருட் கூட்டம், மூடி வருமே-உலகை எல்லாம் மறைத்துக்கொண்டு இனிவராநிற்குமே, ஒருவருமே - எனக்குரியார் யாரொருவரும், மொழியாது இருந்தார்-(இதனால் எனக்குத் துன்பம் வருவதைக்) கூறாமல் இருந்துவிட்டனர், திருந்தாரே-(இவரை எவ்வாறு எனக்குரியாரென்று கூறுதல் கூடும்? இவரே எனக்குப்) பகைவராவார், வெற்புஆகு அலியே - மலைபோல் மேல் நிமிர்ந்துவருகின்ற அலைகளே!, என் கலியே - நான் அணிந்திருந்த ஆடை, விழுந்த வகைசொல் - கீழே நழுவிவிழுந்த நிலைமையைக் கூறு, என்கலியே - என்று என்னிடம் கேட்டாயில்லையே, கரும் கலியே - கருநிறமுள்ள சுறுமீனினை, வெள்ளத்து ஒளித்தாய் - நீரில் அமிழ்த்தி மறைத்தாய், சோம வன்கலியே-நிலவின் கொடிய கலிப்பகுதிகள், வெதுப்பும் - சுட்டுவருத்துகின்றதே;! [என் செய்வேன். கொடிய சுறுமீனினைக் கூட அமிழ்த்தி ஒளிக்கின்ற நீ, மதியின் வன்கலியை (வலியமானை) அமிழ்த்தி மறைக்கமுடியாதோ!, என்பால் அன்பு கொண்டால் - உனக்கு அன்பு உண்மையாக இருக்குமேயானால் - சோமன் வெதுப்புந் துன்பத்தை மாற்றுக என்றபடி.]

ஆடகப் பூங்கொம்பனையார் - பொன்கொடிபோன்ற ஒளி பெற்ற உடலினையுடைய இளமங்கையர். கற்புக்கு அடையாளமான மூல்லையைக் 'கற்பு' என்றுள். ஏறு போல்வானை ஏறென் பதுபோலக் கற்புக்குரிய மூல்லையைக் கற்பாகவே கூறப்பட்டது.

காதலர்க்குப் பகற்பொழுதினும் மாலைப்பொழுதும் இரவுப் பொழுதும் மிகத் துன்புறுத்துவதாகும். இதனை வள்ளுவர் தந்த தலைவி,

> [1]"காலைக்குச் செய்தஇன் றென்கொல் எவன்கொல்யான்
> மாலைக்குச் செய்த பகை"

என மாலைப் பொழுதையும்,

> "அரவு விழுங்கியதோ அச்சுத்தேர் இற்றுப்
> புரவி கயிறுருவிப் போச்சோ—இரவிதான்
> செத்தானோ வேறுதிசை சென்றானோ இன்றெனக்கு
> எத்தால் விடியும் இரா."

என, மற்றொருதலைவி இரவுப்பொழுதையும் நோக்கி நொந்துரைத்தல் காண்க. (இஅ)

---

1. திருக்குறள்: உஉஉகி.

நூல

கடலிற்கும், மாதர்குழாத்நிற்கும் சிலேடை

[கடைமடக்கு]

படரு மாமை மேற்கோண்டு
பலவாய்க் கேசங் காட்டிவரப்
பார தனத்தை வெளியாக்கிப்
பருஞ்சக் கரமா வட்டமிடத்

திடமா முனைப்போன் மாதர்குழாஞ்
செல்ல நடுவே பவனிவந்தான்
செயமால் வெங்க டேசுரேட்ட
தீர னவனைத் தெண்டனிட்டேன்

உடலும் உனைப்போற் பச்சென்றே
உடைந்தேன் மேலார்ப் பச்சென்றுய்
உன்னைத் தடுப்ப தெளியேனே
உன்னுன் மனது தெளியேனே

கடலா யோகோ வந்தாயே
கடினு மோகோ வந்தாயே
கரைவா யிடத்த திருப்பாயே
கலந்தா யிரங்கா திருப்பாயே.

(உரை) படரும் ஆமை மேல்கொண்டு-மிகுதியாயிருக்கின்ற ஆமைகளைத் தன் மேலிடத்தில் ஏந்தி, பல வாய்க்கே - பல இடங்களில், சங்கு ஆட்டி - சங்குகளை அலைத்து ஒதுக்கி, வரப்புஆர் - கரைகள்மிக்க, அதனதத்தை - மிகுதியிடத்தை, வெளிஆக்கி - வெற்றிடமாகச்செய்து, பரும் சக்கரம் - பெரிய சக்கரவாகப் பறவைகள், மாவட்டம் இட - அழகுடன் வளைந்து பறந்துவர,[1]

படரும்-பெருகிவருகின்ற, மாமை-பொன்னிறப் பசலையை மேல்கொண்டு - தம் உடலெல்லாம் பெற்று, பலஆய்-பல்வகைத் தன்மையவாக, கேசம் காட்டி - கூந்தலை அழகுபடுத்திப் பிறர்

1. கடல்.

காணச்செய்து, வரு அப் பார தனத்தை - வளர்ச்சிபெற்று மேலெழுகின்ற பெரிய கொங்கைகளே, வெளிஆக்கி - விளங்கச் செய்து, பரும் சக்கரமா - பெரிய சுற்றுக, வட்டம் இட - வளைந்துசென்று,[1]

திடம்ஆம்-மாருமல் இருக்கின்ற, உ(ன்)னைப்போல் - உன் றனைப்போலாக, மாதர் குழாம் - பெண்கள் கூட்டம்,[1] செல்ல - போக, நடுவே - நட்ட நடுவிடத்தில், பவனி வந்தான் - உலாப் போந்தான், செயமால் - வெற்றிப் பெருமையோன், வெங்கட சூர எட்டதிரன்—, அவனை தெண்டனிட்டேன் - அவனை வணங்கினேன், (வணங்கியவுடன்), உடலும் - என் உடம்பும், உ(ன்)னைபோல் - உன்னைப்போன்றே, பச்சென்றே - பசலைநிற மென்றே கூறும்படி, உடைந்தேன் - வேறுபட்டு மெலிந்தேன், மேல் ஆர்ப்ப - அதன்பின் நீ ஒலித்துக்கொண்டு, சென்குய் - ஓடினுய், உன்னை தடுப்பது - (ஓடிப்போகின்ற) உன்னைத் தடை செய்து நிறுத்துவது, எளியேனே - இவ் ஏழ்மைநிலையிலுள்ள நானே (முடியாதே), உன்னுல் - உன் நலத்தினுலேயே, மனது தெளியேனே - என் மனம் தேற மாட்டேனே?, கடல் ஆய் ஓகோ வந்தாயே - ஓ ஓ! கடல் உருவமாக வந்துள்ளாயே!, தாயே கோபம் கடினமோ - என் தாய்க்கு என்மேல் சினம் மிக்க கடுமையாயிருக்கின்றதே, கரையாய் இடத்து - கரையின் ஓர இடத்தில், அதிர் - ஆரவாரமாகச் சென்று, உப்பு ஆயே - உவர் நீராகவே, கலந்தாய் - மனலுடன் ஒன்றுபட்டாய், இரங்காது இருப்பாயே - (உனக்குச் சார்ந்தாரிடத்து ஒன்றுகூடும் தன்மை பெற்றிருந்தும்) என்பால் இரக்கங்கொள்ளாமல் இருக்கின்றுயே! (இது தகுதியோ?) (இக)

---

1. மாதர்குழாம்.

கூ0

[கடைமடக்கு]

கனத்துப் புடைத்துப் பருத்துலிம்மிக்
காம்பு திரண்டு கண்கறுத்துக்
காமன் மகுடம் போற்பரந்து
கச்சுக் கடங்காக் கனதனத்தார்

மனத்துக் கிசைந்த வடிவழகன்
மதவேள் வெங்க டேசுரெட்டன்
வைகை நதியும் வைப்பாறும்
வந்து பெருகுங் கடற்றுறையே !

உனக்கு ளேவா சஞ்சலமே
உள்ளத் துளவா சஞ்சலமே
ஒழியா துப்பு மயக்கம்மே
உண்டே துப்பு மயக்கம்மே

சினத்து மோது வரியாரே
தெரிந்து மோது வரியாரே
தேனுக் கோட மலைத்தேனே
சித்தங் கோட மலைத்தேனே.

(உரை) கனத்து - பாரங்கொண்டு, புடைத்து - விம்முதல் பெற்று, பருத்து - பெரிதாகி, விம்மி - இறுக்கமடைந்து, காம்பு திரண்டு - நுனி கூடுதல் பெற்று, கண்கறுத்து - பக்க இடம் கருநிறம்பெற்று, காமன் மகுடம்போல் - மன்மதன் முடியைப் போன்று, பரந்து - இடம் விரிந்து, கச்சுக்கு அடங்கா - கச்சினுக்குள் உள்ளடங்காத, கன தனத்தார் - உயர்ந்த கொங்கையையுடைய இளநங்கையருடைய, மனத்துக்கு இசைந்த - மனத்துக்கேற்ற, வடிவு அழகன் - உருவ அழகுடையான், மதவேள் - மன்மதனையொத்த, வெங்கட ஈசுர எட்டன்-, வைகை நதியும் - வையையாற்றின்நீரும், வைப்பு ஆறும் - வைப்பாற்றின் நீரும், வந்து பெருகும் - சேர்ந்துகூடி வந்து நிறைகின்ற, கடல் துறையே - கடலின் துறைமுகமே ! உனக்கு உ(ள்)ளே - உள்ளிடத்தே, பாசம் - இருப்பன, சலமே - சலஞ்சல முதலிய சங்

கினங்களே, உள்ளத்து - (என்) மனத்தில், உ(ள்)ள - உள்ளன, ஆ - ஆகா!, சஞ்சலமே - வருத்தங்களே, ஒழியாது உப்பு மயக்கம்மே - உவர்ப்புள்ள சுவைக்கலப்பு உன்னீவிட்டு நீங்காது, உண்டே துப்பு மயக்கம்மே - (எனக்கு) அறிவுப்பெருக்கம் இருக்கின்றது, (உன் தன்மைகளே நன்கறிவதற்கு), சினத்து - பெருகி, மோதும் - அலைகள் அடிக்கின்ற, உவரியாரே-கடலாரே! தெரிந்தும் - என் நிலைமையை அறிந்திருந்தும், ஒதுவர் யாரே - (என் காதலன்பாற் சென்று என் நிலையை) எடுத்துரைப்பார் எவர் உள்ளனர்?, தேன்-வண்டுகள், உக்க - எழுப்புதலால், ஒடு-பறந்துசெல்கின்ற, மலைத்தேனே - மலையில் வாழும் பெண் வண்டே! சித்தம் கோட - மனம் வேறுபட, மலைத்தேனே - ஒரு வழிப்படாது மயங்கினேனே.

உவரியார்-கடலார். சினத்தால் கடலெனோக்கிக் கடலார் என்று விளித்தாள், "உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும், இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே' என்பது நன்னூல். இங்கே எத்திணை விதமாகக் கடலெவேண்டினும் தனக்கு ஒருதவியும் செய்யாமல் இருப்பதை நோக்கி 'பெருகி அலைமோது கடலாரே! நீரும் போய் என் குறையை என் தலைவனுக்கு எடுத்துரையாவிடின், வேறுயார் என் குறையைச் சொல்லுவார்?' என்று சினந்து கூறுவதால் அஃறிணைப் பொருளான கடல் உயர் திணை விகுதிகொடுத்து அழைக்கப்பட்டது; இங்கே இழிவினுல் என்க.

[2]"செந்தார்ப் பசுங்கிளியார் சென்றூர்க்கென் இன்னுரைதான்
தந்தாரே தந்தார்என் இன்னுயிர்தான்."

எனச் சிந்தாமணியில் குணமாலையார் தமக்காகத் தூது சென்ற கிளியின் அன்பை நோக்கி, அதன் செயலுக்கு மகிழ்ந்து தன் னிலைக்கு வருந்துங்கால் 'செந்தார்ப் பசுங்கிளியார்' என்றார், உவகை மிகுதியால்; அதுவும் இதுபோன்றே என்க.

உக்க - ஊக்க: குறுக்கல் விகாரம் பெற்றது, ஊக்கல் - அசைத்தல், எழுப்பல் முதலிய பல பொருள் குறித்த உரிச் சொல். (சுo)

---

1. நன்னூல்: சூஉo. 2. சீவகசிந். குணமாலை: கஅசு.

கூகூ

[கடைமடக்கு]

கோப்புங் குழையுந் தாவுமரங்
குறித்த மலரைப் பறித்துநெடுங்
கோப்புங் குழையுந் தாவுமரங்
குறித்த விழியார் செறித்தமுலே

செப்பு முலைமேல் வைத்தணைப்பார்
செயமால் வெங்க டேசுரேட்ட
தீரன் பவனி பார்ப்பார்நான்
திரும்பிப் பார்த்தேன் பெருங்கடலே!

உப்பு வினைக்கு மளப்பாரே
ஊரார் அளப்பும் அளப்பாரே
உள்ள முழக்கந் தருந்திரையே
உள்ளுக் கிறங்கா தருந்திரையே

துப்பு வளர்வ தாங்கரையே
துகிலே யிழந்த தாங்கரையே
துறைவாய் முடுக வருமனமே
தோலையா மயங்க வருமனமே.

(உரை) பெரும் கடலே - பெரிய கடலே!, கொப்பும் குழையும் - கிளைகளும் இலைகளும், தாவும்-பரந்துள்ள, மரம்குறித்த - மரங்களில் தாம் கருதிய, மலரைப் பறித்து - பூக்களைக் கொய்தெடுத்து, நெடும் கொப்பும - நீண்ட காதணியையும், குழையும் - காதையும், தாவும் - கடந்துசெல்கின்ற, அரு அம் - அரிய அழகு பொருந்திய, குறித்த விழியார் - (ஆடவரால்) கருதப்படுகின்ற கண்களையுடைய இளமகளிர், செறித்த - தாம் கைக்கொண்ட, மு(ல்)லே - முல்லை மலரை (தம் காதலன் அணியும் மலர் என்பதால் காதல் மிகுந்து), செப்புமுலைமேல்-சிமிழையொத்த தம் கொங்கைகளின் மேல், வைத்து அணைப்பார்-ஒற்றித் தழுவிக்கொள்வார், செயமால் - வெற்றிப் பெரியோனை, வெங்கட ஈசுர எட்டதிரன்-, பவனி பார்ப்பார் - உலாவருவதைக் காணும் கருத்துடையுராகவே இருந்தனர், நான் திரும்பிப் பார்த்

தேன் - நானே ஏறிட்டுப் பார்த்தேன், உப்பு வீளைக்கும் - உப்பீனை உண்டாக்கித் தருகின்ற, அளப்பாரே-உப்பங்கழிநிறைந்த நிலமே!, ஊரார் - ஊரிலுள்ள மக்கள், அளப்பும் அளப்பாரே - ஒன்றுடன் ஒன்றைக் குழப்பிப்பேசிப் பிதற்றுவாரே, உள்ள - இடைவிடாதிருக்கின்ற, முழக்கம் - பேரிரைச்சலை, தரும் திரையே - கொடுக்கின்ற அலையே!, உள்ளுக்கு இறங்காது அருந்து இரையே - உண்ணும் உணவுகள் என் வயிற்றுக்குள் செல்லாமல் குமட்டலெடுக்கின்றதே, துப்பு வளர்வது ஆம் கரையே - பவளக்கொடிகள் வளர்கின்றதான கரையிடமே!, துகிலை இழந்த தாங்கு அரையே - ஆடை அணிந்திருந்த என் இடுப்பு தன் ஆடையை இழந்திருக்கின்றதே, துறைவாய் - கடல் துறைமுகத்திடத்தே, வரும் அ(ன்)னமே - நெருங்கிப் பறந்து வருகின்ற அன்னப் பறவையே!, தொலையா - நீங்காத, மயல் கவரும் மனமே-என் மனத்தைக் காதல் கவர்ந்து கொள்கின்றதே. (என் செய்வேன்! நீர் யாரும் எனக்கு உதவி செய்யமாட்டீரோ?)

கொப்பு - கிளை. குழை - இலை; காது. செப்பு - சிமிழ். தாங்கு அரை - உடுத்திருக்கின்ற இடை. (சுக)

கூஉ

[அடிமடக்கு]

பொன்னம் போருப்பை நேராகப்
பூவை தாங்கும் புயங்கமெனும்
பூணுஞ் சேரு மறுகாலப்
போது மறுகா னீங்காமல்

இன்னம் புலவர்க் கமுதளிக்கும்
எங்கோன் வெங்க டேசுரேட்டன்
எய்தும் பவனி பார்த்தேனம்
பெய்தான் என்மேல் மதன்கடலே!

அன்னம் இறங்கப் படுதிரையே
அன்னம் இறங்கா திடுதிரையே
அலரி கலமா மதிக்கரவாய்
அலரி கலமா தரும்புரிவார்

கன்னங் கருமைப் புணரியெனக்
கன்னங் கருமைப் புனனனைக்குங்
காதற் றுயும் வண்டேயென்
காதற் றுயும் பகைத்தாளே.

(உரை) கடலே - வாரியே!, பொன் அம் பொருப்பை - பொன்மலையை, நேர்ஆக - ஒப்பாகச் சொல்லும்படி, பூவை தாங்கும் - உமையம்மையை (இடப்பாகத்தில்) வைத்திருக்கின்ற, புயங்கம் எ(ன்)னும் - பாம்பாகிய அணியும், சேரும் - சேர்ந்திருக்கின்ற, இன் - இனிமைதரும், அம் புலவர்க்கு-அழகிய சிவபெருமானுக்கு, அமுது அளிக்கும் - வழிபாடு செய்து அமுது படைக்கின்ற, எம்கோன் - எவ் தலைவனை, வெங்கட ஈசுர எட்டன்-, எய்தும் பவனி பார்த்தேன் - வருகின்ற உலாவைக் கண்டேன், அம்பு எய்தான் என்மேல் மதன் - (அப்போது) மன் மதன் என்மீது மலரம்புகளைச் செலுத்தினன், அன்னம் இறங்கப் படு திரையே - அன்னப் பறவைகள் பறந்து வந்து சாருதற்குரித் தாம் அலையே!, அன்னம் இறங்காது-(எனக்கு) உணவுசெல்லாமல், இடுதிர் ஐயே-ஐயோ செய்கின்றீரே, அல் அரி - இரவுக்குப் பகை

யாகிய, கலை மா மதிக்கு - கலைநிறைந்த பெருமைமிக்க நிலாவுக்கு, அரவு ஆய் - பாம்பு ஆனதைப்போல், அலர் இகலை - பழிதூற்றுகின்ற பகைமையை, மாதரும் புரிவார் - பெண்களும் செய்வார், கன்னம் கருமை புணரி-கன்னங்கரேலென இருக்கின்ற கடலே!, எனக்கு அன்னம் - எனக்கு உணவோ, கரு மை புனல்-நஞ்சுநீர் போல் இருக்கின்றதே, நல்நைக்கும் - நலத்தைக் கெடுக்கின்ற (நல்லன கேட்காத), காது அற்றும் வண்டே - செவிப்புலன் இல்லாத தாம் வண்டே!, என் காதல் தாயும் பகைத்தாளே - என் அன்புள்ள தாயாரும் என்பால் பகைகொண்டாளே.

கன்னங் கருமை - மிகக் கருமையென்னும் பொருளது. பென்னம் பெருத்த, சின்னஞ் சிறுத்த என்னும் வழக்குகள் போலக்கொள்க. காது அற்றுய், காதல் தாய் எனப் பிரிக்க.

காது அற்றுய் : முன்னிலையொருமை வினைமுற்று. வண்டு கட்குக் காது அறிவு இல்லை யென்பது, தொல்காப்பியர் போன்ற தொன்னூலாசிரியர்கள் கொள்கை. ஆனால் சீவகசிந்தாமணி போன்ற பழந்தமிழ்க்காப்பியத்தினும் அகநானூறு போன்ற நூல்களினும் வண்டுகட்குக் காதறிவுண்டென்று கூறுகின்றனர். இஃது ஆய்வுக்குரியது. சீவக மன்னன் வண்டுகளை விளித்துக் குணமாலையின் மணப்பொடியையும் சுரமஞ்சரியின் மணப் பொடியையும் ஆய்ந்து கூறுமாறு பணித்தமையால் அதற்குக் காதறி வுண்டெனக்கொள்ளலாம்.

[1] "மங்கை நல்லார் கண்ணும் மனமும்போன்று
எங்கும் ஒடி இடறும் சுரும்புகாள்
வண்டு காள்மகிழ் தேனினங் காள்மது
உண்டு தேக்கிடும் ஒண்ஞமி மீட்டங்காள்."

[2] "சோலை மஞ்ஞை சுரமைதன் சுண்ணமும்
மாலை என்னும் மடமயில் சுண்ணமும்
சால நல்லன தம்முளும் மிக்கன
கோல மாகக்கொண் டுண்மின்."

எனச் சீவகன் வண்டுகளை அழைத்துக்கூற, அவைகேட்டு வந்து, சுண்ணத்தை உண்டாதாகக் கூறுவது காண்க.

இங்கே தலைவி வண்டினை நோக்கிக் காது அற்றுய் என்று கூறியது பண்டை ஆசிரியன்மார் கருத்தை நோக்கியெனக் கொள்க. (கூஉ)

1, 2. சீவகசிந்தாமணி, குணமாலை : சஉ - ஙூ.

கூஉ

[அடிமடக்கு]

பார வரையும் ஏந்தியிந்தப்
பார வரையும் புரந்துமுக்கட்
பண்ண வரையும் வணங்கியிசைப்
பண்ண வரையும் வளர்த்தறிவு

கூர வரையா தியலறிந்து
கோடுப்போன் வெங்க டேசுரேட்டன்
கோற்றக் கவிகை நிழற்றமத
குவட்டிற் பவனி வரப்பார்த்தேன்

வார மழியா யிப்பிமுத்தம்
வார மழிவாய் கருங்கடலே !
வணக்க மழிவா யுன்னிடத்தில்
வணக்க மழிய லாயிருக்கும்

கோர மியத்தால் விகோப்பையெனக்
கோர மியத்தை விகோயாயே
கோடுமைக் கிடமா யிருப்பாயேன்
கோடுமைக் கெவரை யுரைப்பேனே.

(உரை) கரும் கடலே-, பார வரையும் - பெரிய மலையையும், ஏந்தி-(குடையாக) எடுத்துப் பிடித்து, இந்த பார் அவரையும் - இவ்வுலக மக்கள் எல்லோரையும், புரந்து - பாதுகாத்து, மூக்கண் - மூன்று கண்களையுடைய, பண்ணவரையும் - சிவபெருமானையும், வணங்கி - தொழுது, இசைப்பண்ணவரையும்-இசைப் பாடல் பாடுகின்ற பாணர்களையும், வளர்த்து - மேலோங்கச் செய்து, அறிவு கூர - நுண்ணறிவு மிகுதலால், வரையாது - அளவுபடுத்தாமல், இயல் அறிந்து - ஒவ்வொருவரின் தன்மைகளைக் கண்டு தெளிந்து, கொடுப்போன் - பொருள் ஈவோனின், வெங்கட ஈசுர எட்டன்-, கொற்றக் கவிகை - வெற்றிக்குடை, நிழற்ற-நிழல்தர, மத குவட்டில்-மதயானையின்மேல் ஏறி, பவனி வர - உலாவாக வந்ததை, பார்த்தேன் - கண்டேன், வாரம் அறியாய் - தருணத்தைத் தெரிந்தாயில்லை, இப்பிமுத்தம்-சிப்பியின்ற

முத்துக்களை, வார - வாரிக்கொண்டுபோக, மறிவாய் - மடங்கிச் செல்வாய், வணக்கம் - வளைவதை, அறிவாய் - அறிந் திருப்பாய், உன் இடத்தில்-உன்னுடைய இடத்திலோ, வ(ண்)ண கம் - பலநிற மேகங்கள், மறு இயலாய் - மாசுபடிந்திருக்கும் தன்மை போலாக, இருக்கும் - தங்கும், கோரம் - (யாருக்கும்) அச்சத்தை, இயத்தால் வினைப்பை - உன் பேரிரைச்சலினால் உண்டாக்குவாய், எனக்கோ - என்றனுக்கோ, ர(ம்)மியத்தை வினையாயே - மன அமைதியை உண்டாக்கமாட்டாயே, கொடு - சூழ்ந்துள்ள, மைக்கு - இருளுக்கு, இடம்ஆய் - இருப்பிடமாக, இருப்பாய் - இடங்கொடுத்துள்ளாய், என் கொடுமைக்கு - என் னுடைய பொல்லாங்கு நிலைக்கு, எவரை உரைப்பேனே-யாரைக் குறைகூறி வருந்துவேன்.

பாரம் - பெருமை. பண்ணவர் - தேவர்; பாணர்கள். குவடு- மலை. மலைபோன்ற யானைக்கு ஆகுபெயர். இயம் - ஒலி; பெரு முழக்கம். ரமியம் - ரம்மியம் என்னும் சொல்லின் இடைக்குறை; ரம்மியமாவது மனநிறைவு. முதல் அடிமடக்குச் சொல்லணி இன்பந்தோன்ற அமைந்த செய்யுள் இது. (சுஉ)

[அடியும் கடையும் மடக்கு]

காரி யனைய கொடைக்குமுப
காரி தமிழ்பா ராட்டும்விப
காரி மதியோ சனையாலுங்
காரியகர் மம்ப கருவோன்

வேரி வனசத் திருமாதை
விழியு ளிருத்திப் பகையனைத்தும்
வென்றோன் வெங்க டேசுரேட்டன்
மேவு மிளசைக் கடற்றுறைவாய்

வாரி முகட்டி லெழுகலமே!
வனோ போ னதுவு மெழுகலமே
வந்தால் வருமீ சுரப்பாறே
மைய லெனக்குஞ் சுரப்பாறே

நீரி னுறு மீன்புலவே
நெடுநாட் செலுமோ நான்புலவே
நெய்தற் படருங் கொடியாரே
நேய ரனமார் கொடியாரே.

(உரை) காரி அனைய - காரியென்னும் வள்ளலைப் போன்ற, கொடைக்கும் - ஈகைக்கும், உபகாரி - உதவிசெய்வோன், தமிழ் பாராட்டும்-தமிழ் மொழியைச் சிறப்பித்துப் பேசுகின்ற, விபகாரி-வழக்குரைப்பதில் வல்லவன், மதி யோசனையாலும் - அறிவுடன் ஆராய்ந்தறிகின்ற திறமையாலும், காரிய கர்மம் - தொழில் செய்யும் திறத்தைக் கூர்ந்தறிந்து, பகருவோன் - தன்பாலுள்ள பணியாளர்களுக்கு எடுத்துரைப்போன், வேரி வனச - தேன் பொருந்திய தாமரைமலரில் வீற்றிருக்கின்ற, திருமாதை - திரு மகளை, விழிஉள் உருத்தி - தன் கண்பார்வையில் தங்கவைத்து, பகை அனைத்தும் வென்றோன் - பகை முற்றிலும் வென்றவனை, வெங்கட ஈசுர எட்டன்---, மேவும் இளசை - இருக்கின்ற எட்டையாபுரத்தைச் சார்ந்த, கடல் துறைவாய் - கடலின் துறைமுகத்திடத்து, வாரி முகட்டில் - நீரின் மேலிடத்தில், எழு

கலமே - விளங்குகின்ற கப்பலே !, வலே போனதுவும் - வலேயல் கள் கழன்றோடிப் போனதும், எழுகலமே - (ஒன்றல்ல ; இரண் டல்ல) ஏழுகல அளவு இருக்கும், வந்தால் வரும் - நீர்ப்பெருக்கு வரின் வருகின்ற, மீசுரப்பு - மேலான ஊற்றுள்ள, ஆறே - நதியே !, மையல் எனக்கும் - என்னிடத்தும் காதல், சுரப்பு ஆறே - பெருக்காறுபோல் பெருகுகின்றதே, நீரில் நாறும்-நீரிடத் தத் தோன்றுகின்ற, மீன்புலவே - புலால் மணமுள்ள மீனே !, நெடுநாள் செ(ல்)லுமோ நான் பு(ல்)லவே - (என் காதலரை நான்) தழுவுதற்கு நீண்ட நாட்கள் ஆகுமோ?, நெய்தல் படரும்-கடல்சார்ந்த இடங்களில் படருகின்ற, கொடியாரே - (மலர்க்) கொடிகளே !, நேயர் - அன்பர்போல் இருக்கின்ற, ஐ(ன்)னே மார் - (செவிலித்தாய், நற்றாய் முதலிய) தாய்மார்கள், கொடி யாரே - என்னிடம் கொடுந்தன்மையுடையராகவே இருக் கின்றனர்.

காரி - கடையெழு வள்ளல்களில் ஒருவன் ; இவ்வள்ளலே மலையமான் திருமுடிக்காரி எனவும் வழங்குவர்.

[1] "காரி யூர்ந்து பேரமர்க் கடந்த
மாரி ஈகை மறப்போர் மலையனும்." (கடிஅ)

என்னும் புறநானூற்றடிகளானும்,

[2] "வாலுளைப் புரவியொடு வையக மருள
ஈர நன்மொழி இரவலர்க் கீந்த
அழல்திகழ்ந் திமைக்கும் அஞ்சுவரு கடுந்திறல்
கழல்தொடித் தடக்கைக் காரியும்."

என்னும் சிறுபாணாற்றுப்படை அடிகளானும் அறியப்பெறும்.

இத்தகைய பயன் கருதாப் பெருங்கொடையாளன், வெங்க டேசுரெட்ட வேந்தன் என்பாளாய்க் 'காரியணைய கொடைக்கும் உபகாரி' என, அவ் ஈகைக்கும் ஈகை கொடுக்கின்றவன் என, இவன் கொடைப்பண்பினே மிக உயர்த்துக் கூறினுள். காரி கொடைக்கும் கூடத்தான் கொடுக்கும் கொடையுடையான் என்ற மையால், அக்கொடையினும் இக்கொடை, மிக விஞ்சி நின்றது.

கோடையின் வெம்மையைக் கூறப்போந்த பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் புராணத்துள்,

"மனிதர்வெங் கோடைதீர்க்கும் வசந்தமென் காலும்வேறு
துனிதவிர் இளங்கால் வேண்டும்; சோலையும் சோலை வேண்டும்;

1. புறம்: கடிஅ. 2. சிறுபாண். கூஉ - டு.

புனிதநீர்த் தடமும் வேறு புதுமலர் ஓடை வேண்டும்;
பனிதரு மதியும் வேறு பால்மதி வேண்டுங் காலம்.''

என்று வெப்பம் மிகுந்து மக்களை வாட்டியது என்பதைக் கூறுங் கால், வெப்பந்தீர்க்கும் குளிர்ச்சிப் பொருள்களான, தென்றல், சோலை, தடாகம், நிலவு முதலியவைகள் இவ்வெப்பம் பொறுக்க லாற்றாது வேறொரு தென்றல், சோலை, தடாகம், நிலவுகளை விரும்பித் தம் வெப்பத்தை மாற்ற எண்ணிய காலம் என்று கூறுதல் கொண்டு, கொடு வெப்பமென்று காணக்கிடக்கின்றது. இதுபோலவே, காரியையொத்த கொடைஞனாக இருப்பினும், அக்கொடைக்கும் கொடை கொடுக்கும் பெருமித வள்ளல் என்றுரை. இவன் கொடையின் பெருமை மிகமிக உயர்ந்ததென் பதைக் குறிப்பித்தவாறும்.

பின்னரும் பகைவரை வென்று தன் வெற்றிக்கொடி நாட்டிய மேலோன், எட்டுத் திருவில் ஒரு திருவாகிய வீரத் திருவை மூன்றிறுத்தித் தன் பார்வையினாலேயே வென்றுன் என்பாளாய் மன்னன் கட்பார்வை மேலேற்றி 'பேரி வசைத் திருமாதை விழியுள் இருத்தி.....வென்றோன்' என்றுரை.

வாரி - கடல், மூகடு - கடலின் மேலிடம், கலம் - நாவாய்; கப்பல், வளை - வளையல், எழுகலம் - எழுகலமுள்ள அளவு, தன் கையினின்று கழன்று மீழ் வீழ்ந்த வளையல்கள் கழன்று கழன்று விழ, மீண்டும் அவைகட்கு வேறு வேறு அணிய அவை களும் கழன்றுபோக இவைகளைக் கணக்கிடின் மிகுதி யென் பாளாய் 'எழுகலம்' என்றுரை. இதனால் தன் கைவளை பற்போனதைக் குறிப்பிட்ட வாறறிக. (சுச)

சுரு

[கடைமடக்கு]

வருந்துஞ் சனகி முகம்பார்த்து
வரவிற் பலத்தைப் பின்பார்த்து
மணக்கோ லஞ்செய் திருந்தவன்வேள்
மணக்கோ லஞ்செய் ததைப்பாரான்

திருந்து வளையும் போச்சனவே
தெரிவை மாதர் மயலாகும்
செயவேள் வெங்க டேசுரெட்ட
தீரன் இளசைக் கடற்றுறைவாய்

இருந்த திடனு கக்காவே!
என்னைத் திடனு கக்காவே
ஏற்ற தாலத் திடத்தூரே
ஏசுங் தாலத் திடத்தூரே

பொருந்து மணலின் வாய்த்திட்டே
பொறுப்பே னுதாய் வாய்த்திட்டே
புதிதா மதியா நந்தினமே
பொருகா மதியா நந்தினமே.

(உரை) வருந்தும் சனகி - (தன்பால், காதலால்) வருந்து கின்ற சீதாதேவியின், முகம்பார்த்து-முகவாட்டத்தைத் தெரிந்து, வரவில் பலத்தை - மேன்மையுள்ள வில்லின் வலிமையை, பின் பார்த்து - (அதன்) பின்பு கண்டறிந்து, (வளைத்து முறித்து), மணக்கோலம் செய்து - திருமணஞ் செய்யும் ஒப்பனைகொண்டு, இருந்தவன் - இருந்தவனனை இராமனை ஒத்தவன், வேள் - மன்மத னனவன், மணகோல் - மணமுள்ள மலரம்புகள், அஞ்சு எய்ததை பாரான் - (என்மேல்) ஐந்து எடுத்துத் தொடுத்ததை அறியாள், திருந்து வளையும் - வேலைப்பாடமைந்த வளையல்களும், போச்சு எனவே - கழன்று கீழே நழுவியது என்று, தெரிவை மாதர் - அழகிய இளம்பெண்கள், மயல்ஆகும் - மயக்கங்கொள்கின்ற, செயவேள் - வெற்றி முருகனையொத்த, வெங்கட ஈசுர எட்ட தீரன்—, இளசை - எட்டையாபுர நகரத்தின், கடல்துறைவாய் -

கடல் துறைமுகத்திடத்து, இருந்த - இருக்கின்ற, திடல் - மேட்டுப்பாங்கான நிலத்திலுள்ள, நாகக் காவே - புன்னைமரச் சோலையே!, என்னை—,திடன் ஆக - வலிமையுடன், காவே - காப்பாற்றுவாயாக, ஏற்ற - பொருந்திய, தால திட தூரே - பனையே!, ஏசும் தாலத்து இடத்து ஊரே - ஊரிலுள்ளார் யாவரும் என்னை நாவில் வைத்து ஏசிப் பழிதூற்றுவர், பொருந்து மணலின் வாய்திட்டே - சேர்ந்துள்ள மணல் மேடே!, பொறுப்பேனே தாய்வாய்த் திட்டே - என் அன்னையின் வாயிலிருந்து வருகின்ற வசைமொழிகளை நான் கேட்டுப் பொறுக்க லாற்றுவேனே?, புதிது ஆம் - புதுமையுள்ள, மதி ஆம் - நிறை நிலவுபோன்ற, நந்து இனமே - சங்குக்கூட்டங்களே!, பொரு காம தியாநம் தினமே - என்னுடன் போர்தொடுக்கின்ற காமனை வழிபடுதலே நாள்தோறும் என் வேலையாக இருக்கின்றது! (காமனைக்கண்டு கலங்குவதே என் வேலை என்றபடி.)

வனை - வனையல். நாகம் - புன்னைமரம். தாலம் - பனைமரம்; நாக்கு.

இதில் தலைவி கடலைச் சார்ந்த பகுதிகளில் வாழ்கின்ற இருக்கின்ற ஒவ்வொரு பொருள்களையும் பார்த்து விளித்துத் தன் குறைகளை முறையிடுவதாக அமைந்தது இவ்வழகிய செய்யுள்.

இளசை - எட்டையாபுரம். கா - காடு, சோலை. கா - காப்பாற்று என இருபொருள் நயம் காண்க. வாய்த்திட்டு - வாயால் வைகின்ற வசைமொழி. நியாநம் - வழிபாடு. காமனை வழிபடுதலாவது, தன்னை வருத்தவேண்டாவென்று வேண்டிக் கொள்ளுதல். (சுருதி)

சுசு

கடலிற்கும், தலிவிக்கும் சிலேடை

[அடி முதல் மடக்கு]

கச்சங் கடக்க அடங்காக்கோங்
கைக்கும் பசலை பொருந்தியனங்
கைக்கும் படிக்கும் இருந்துமடல்
கைக்குந் தரிக்க எண்ணிமதி

உச்சம் பார்க்கு மடவார்கள்
உள்ளங் கவரக் காமனேப்போல்
உதித்தோன் வெங்க டேசுரெட்டன்
உலாவப் பார்த்தேன் பெருங்கடலே!

அச்சங் கூரும் உன்னிடத்தில்
அச்சங் கூரும் என்னிடத்தில்
அம்பால் அசைவாய் நீயுமதன்
அம்பால் அசைவு மெனக்குண்டே

மச்சங் கடவா துன்னேயுங்கா
மச்சங் கடவா தெனக்குமுண்டாம்
வணங்கா ராகும் உனக்கெனக்கும்
வணங்கா ராகும் சிலதியரே.

(உரை) பெருங்கடலே - பெரியகடலே!, கச்சு - வாரானது, அங்கு அடக்க - அங்கேயே உள்ளே அமிழ்த்த, அடங்கா கொங் கைக்கும் - அடங்காமல் மேலெழுகின்ற தனபாரத்திடத்தும், பசலை பொருந்தி - தேமல்பூத்து, அ(ன்)னம் கைக்கும் படிக்கும் இருந்து - சோற்றை வெறுக்கும்படியாக இருந்து, மடல் - மட லெழுதுவதை, கைக்கும் தரிக்க எண்ணி - கையிடத்தே வைத் துக்கொள்ள நினைந்து, மதி உச்சம் பார்க்கும் - சந்திரன் தனக்கு உயர்நிலையிலிருப்பதைக் கணிவர்களிடம் பார்த்தறிகின்ற, மட வார்கள் - இளமங்கையர்களின், உள்ளம் கவர - மனத்தைக் கொள்ளைகொள்ள, காமனேப்போல் உதித்தோன் - மன்மதன் போன்று பிறந்தவன், வெங்கட ஈசுர எட்டன் -, உலாவப் பார்த் தேன் - உலாவருதலைக்கண்டேன்.

அச் சங்கு ஊரும் உன்னிடத்தில் - உன்பால் அழகிய சங்குகள் தவழ்ந்து செல்லும், அச்சம் கூரும் என் இடத்தில் - என் பால் காதலால் அச்சம் மிகுந்துள்ளது, அம்பால் அசைவாய் - நீயும் நீலகேளினால் நடுங்குவாய், மதன் அம்பால் - மன்மதன் கணிகளினால், அசைவும் எனக்கு உண்டே - துன்பமும் எனக்கு இருக்கின்றது, மச்சங்கள் தவாது உன்னையும் - உன்னிடம் வீட்டு மீன்கள் வேறெங்குஞ் செல்லாது, காம சங்கட வாது - காமனால் வருகின்ற துன்பப்போர், எனக்கும் உண்டு ஆம் - எனக்கும் உள்ளது, வ(ண்)ணம் கார் ஆகும் உனக்கு - உனக்கு நிறம் கருமையாகும், எனக்கும்- என்னிடம், சிலதியரே - பணிப் பெண்கள், வணங்கார் ஆகும் - பணிவில்லாதவராகவே இருக்கின்றனர்.

கச்சு - இரவிக்கையென்று இக்கால மக்கள் கூறுவர், 'வார்' அதன் பரியாயப் பெயர். மடல் - மடலெழுதுதல். காதலன் உருவத்தைக் காதலி ஓர் வண்ணத் திரைத்துணியில் எழுதிப் பார்த்துப் பார்த்து மகிழ்தல்; இது காதல் மிகுந்து தலைவன் திருவுருவைக் காணவேண்டுமென்னும் அவாவுந்த எழும் காதலுணர்வால் நிகழ்வது. இதை, மடலேறுவதாகக் கொள்ளின் பெண்மை இயல்புக்குச் சாலாதென வள்ளுவர் பெருமான் விலக்குவர். காதலன் கூற்றாக,

> [1]"காமம் உழந்து வருந்தினுக் கேமம்
> மடலல்ல தில்லை வலி."

என, நுவலும் கூற்றால் அறிக. நெய்தற் கலியினும் திருமங்கை மன்னர் அருளிய பெரிய திருமடல், சிறிய திருமடலினும் வரும் காதலிகள் நாணுத்துறந்து பெண்மையறத்துக்குப் புறம்பாகக் காதலொன்றே பற்றி மற்றெந்த அறத்தையும் கருதாது பெண்மையைச் சித்திரித்துக் கூறிய தென்னெனின், அவை பெண்மை இயல்புக்குச் சாலாதன எனக் கொள்க. விரிப்பின் நீளும், ஆகலான் ஈண்டு விலக்கியுரைத்தார் என்க. (சுசு)

---

1. திருக்குறள் : ககஉக.

கூவ

[கடைமடக்கு]

பாரம் பரிய மவன்குணத்தைப்
பாரம் பரியாக் கொண்டவற்குப்
பார்வை கொடுத்தான் கங்கைகொண்ட
பார்ப்பான் பார்ப்பா னென்றுசொலத்

தீரந் தருகண் கொடுத்தவதி
செயவான் வெங்க டேசுரேட்டன்
திருமால் போலப் பவனிவந்தான்
சென்று தொழுதேன் பனிக்கடலே !

நாரம் பொருமுன் னடுக்கலையே
நானும் படித்தே னடுக்கலையே
நண்டு நடந்த துறைப்பாலே
நலிந்தேன் விரகத் துறைப்பாலே

வாரமடுத்தா னுக்குண்டே
மாதர் பொறுத்தா னுக்குண்டே
மாரன் பொருவன் மஞ்சினமே
மாரு னேவன் மஞ்சினமே.

(உரை) பனிகடலே - குளிர்மையுடைய வாரியே !, பாரம் பரியம் அவன் குணத்து ஐ - (வெங்கடேசுர எட்டனுகிய) அவன், வரல்முறையாக வருகின்ற நற்பண்புள்ள தலிவன், பார் அம்பு அரியா கொண்டவற்கு - திருமாலேப் பெரிய அம்பாகக் கொண்ட சிவபெருமானுக்கு, பார்வை கொடுத்தான் - தன் கவனம் முழுதும் செலுத்தினேன் (பத்திமுறை கொண்டோன்), கங்கை கொண்ட பார்ப்பான் - கங்கை கொண்ட பார்ப்பா னென்பவன், பார்ப்பான் என்று சொ(ல்)ல - பார்க்குந் தன்மை பெற்றுனென்று சொல்லுமாறு, தீரம் தரு - மென்மை கொடுக் கின்ற, கண் கொடுத்த - கண்ணே நன்கு தெரியும்படி செய்த, அதி செயவான் - மிக்க வெற்றியாளனுன, வெங்கட ஈசுர ஏட்டன் -, திருமால்போல பவனி வந்தான் - திருமால் போன்று உலாவந்தான், சென்று தொழுதேன் - (அதைத் தெரிந்து நேரிற் போய் அவனே) வணங்கி நின்றேன், நாரம் பொரு - நீர்கொண்டு மோதுகின்ற, முன் அடுக்கு அலையே - மேலிடத்தில் வரிசையாக வருகின்ற அலையே!, நானும் படித்தேன் நடுக்கலையே - நானும்

நடுக்கங்கொள்ளுதலேக் கற்றுக்கொண்டேன், நண்டு நடந்த துறை பாலே - நண்டினங்கள் சென்ற துறைமுக இடமே !, நலிந்தேன் விரகத்து உறைப்பாலே - காமத்துன்பத் தாக்குதலினல் நான் மெலிவடைந்தேன், வாரம் அடுத்து ஆனு குண்டே - கடற்கரை ஓரத்தைச் சார்ந்து அழியாத பள்ளமே !, மாதர் பொறுத்தால் நாக்கு உண்டே - மங்கையருக்கு பொறுக்குந் தன்மை இருக்குமானல் நாவு இருக்குமோ?, மஞ்சினமே - மேகத் திரள்களே !, மாரன் பொருவன் - மன்மதன் போர்தொடுப்பான், மாருனே வன்மம் சினமே - அவன் உறுதியுடன் கோபம் தணியானே !, (என்செய்வேன், எனக்கு இனி யாரே துணையாவர்.)

ஐ - தலேவன், இதனடியாகவே ஐயன், ஐயை முதலிய ஆண் பால் பெண்பாற் சொற்கள் பிறத்தலே அறிக. 'என் ஐ முன் நில்லன்மின் தெவ்விர்' என்றூர் பெருநாவலர். பார்வை - கவனம் அல்லது பற்று, பார் அம்பு அரி - பெரிய அம்பு வடிவு கொண்ட திருமால். திருமால் அம்பாக இருந்த வரலாற்றை இந் நூல் (நிகி) ஆம் பாட்டுள் விளக்கினும். அதனே ஆண்டுக் காண்க.

திரிபுரத்தைச் சிவபெருமான் சிரித்து எரித்த வரலாற்றை,

"நாணென்ருல் நஞ்சிருக்கும் நற்சாபம் கற்சாபம்
பாணம்தான் மண்தின்ற பாணமே—தாணுவே
சீராரூர் மேவும் சிவனே நீ எப்படியோ
நேரார் புரம்எரித்த நேர்."

என்று இரட்டையர்கள் நகைச்சுவைபட மொழிந்ததும் காண்க.

தலேவிக்குக் கடலேக் காண்டொறும் காண்டொறும் காதற் பெருந்தீ கொழுந்து விட்டெரிகின்றது. கடல்முன் காணப்படும் பொருள்களே யெல்லாம் தன்முன் அழைத்து, தன் துன்பத்தைக் கூறிக் கூறி ஆறுதல் பெறுகின்ருள். அவை 'அடுக்கு அலேயே ! நான் நடுக்கலே அடைந்தேன்; துறைப்பாலே ! நான் விரகத்து உறைப்பால் நலிந்தேன்; குண்டே ! மாதர்கள் என்னேப் பழி தூற்றிப் பேசாமல் பொறுமையுடன் இருப்பாராயின், அவர் கட்கு நாவு உண்டோ இல்லேயோவென்று ஐயம்கொள்ள வேண்டியதுதான் ! ஆகவே, என் கண்முன் காணப்படுகின்ற மேகத் திரள்களே ! இனி மன்மதன் போருக்கு ஆயத்தனுகி வருவான்; பொருவான்; அவன் வைராக்கியத்துடன் சினம் மாருமல் மலரம்பு கொண்டு எய்து வருத்துவன்' என்று பன்னிப் பன்னிக் கடலுடன் கவன்று பேசுகின்ருள். (சுஎ)

கூஅ

[கடைமடக்கு]

மாரி யாக நிதிமிகவும்
வழங்கி யாக நடத்திவளர்
மகமே சனன மானதனுல்
மகவான் இவனே யெனத்துதிக்கப்

பாரில் அரசு செய்துசெல்வம்
படைத்தோன் வெங்க டேசுரேட்டன்
பவனி வரநான் எதிர்நடந்து
பார்த்தேன் பரவாய் உனைப்பார்த்தேன்

சூரி யனையே கரந்தாயே
சொல்லில் வெகுமூட் கரந்தாயே
தோணி தொடுத்த மயக்கங்கே
தொடர்ந்த தெனக்கு மயக்கங்கே

நீரின் மிகுந்து நிலையாயே
நின்றேன் பொரமுன் நிலையாயே
நீயோ வேது வெதுப்பாயே
நீத்தேன் மலரப் புதுப்பாயே.

(**உரை**) மாரி ஆக - மேகம்போலப் பயன் கருதாமல், நிதி மிகவும் வழங்கி - பெரும் பொருளை எராளமாகக் கொடுத்து, யாகம் நடத்தி - வேள்விகள் செய்து, வளர்மகமே - மக நட்சத்திர நாளில், சனனம் ஆனதனுல் - பிறந்ததினுல், மகவான் இவனே - மகத்துக்குரியான் (இந்திரன்) இவனே என்று கூறி, துதிக்க - (மக்கள் எல்லோரும்) கொண்டாட, பாரில் - உலகில், அரசு செய்து - அரசாட்சிபுரிந்து, செல்வம் படைத்தோன் - செல்வத்திற் சிறந்தோனை, வெங்கட ஈசுர எட்டன் -, பவனி வர - உலாக்கொண்டு வருங்கால், நான் எதிர் நடந்து - நான் நேரில் சென்று, பார்த்தேன் - (அப் பவனியைக்) கண்டேன், பரவாய் - கடலே ! உ(ன்)னை பார்த்தேன் - உன்னையுங் கண்டேன், சூரியனையே கரந்தாயே - நீ பகலவனை மறைத்தாயே, சொல்லில் - ஏசுவதில், வெகுமூள்கரம் - பிக்க விடாத சினம்

உள்ளாள், தாயே - என்தாயே, தோணி தொடுத்த - படகுகள் சேர்ந்த, ம(ய்)ய கங்கே - நடுக்கரையே !, தொடர்ந்தது எனக்கு மயக்கு அங்கே - அவ் வலாவைக் கண்ட அவ்விடத்திலேயே எனக்குக் காதலால் மயக்கம் பின்பற்றியது, நீரில் மிகுந்தும் - நீர் நிறைவில் மிகப் பெருகியும், நிலையாயே - நீ ஓரிடத்தில் நிலைத்து நிற்காயே, நின்றேன் பொர - (மன்மதனுல்) போர்செய்ய நிற்க னானேன், மூன் நிலை ஆயே - எனது மூந்திய நிலைமையை எண்ணிப்பார், நீயோ வேது வெதுப்பாயே - நீதான் சுட்டுத் துன்புறுத்துவாயே ; (நான் என் செய்வேன்), நீத்தேன் மலர புதுப்பாயே-பூவிரித் துள்ளனவான புதிய படுக்கைகளே விட்டுத் துறந்தேன்.

மாரி - மேகம். மேகம் உலகில் மழை பெய்வது, தனக்கொரு பயன் கருதியன்று. அது கடமையாக மழைபொழிகின்றது. அதுபோல் பயன் கருதாது, பிறர் தன்மை ஒன்றையே கருதிக் கொடுக்கும் வள்ளல் என்பாளாய் 'மாரியாக நிதிமிகவும் வழங்கி .....படைத்தோன் ' என்றார். மாரியின் தன்மையை,

> [1] 'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
> என்னுற்றும் கொல்லோ உலகு '

என்னும் வள்ளுவர் திருமொழியால் உணர்க. பாரியின் கொடைத் திறத்தைப் பாராட்டிய கபிலர் பெருமான்,

> [2] 'பாரி பாரி என்று பல ஏத்தி
> ஓருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
> பாரி ஓருவனும் அல்லன்
> மாரி உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே '

என்று கூறுதலும், அது வேறுபாடு கருதாது மழைபொழியும் இயல்பை,

> " அறுகுளத் துகுத்தும் அகல்வயற் பொழிந்தும்
> உறுமிடத் துதவாது உவர்நிலம் ஊட்டியும்
> வரையா மரபின் மாரி போல."

என்று வள்ளல் பேகன், நட்டோ ரென்றும் மற்றே ரென்றும் நல்லார் என்றும் பொல்லா ரென்றும் செல்வ ரென்றும் அல்ல ரென்றும் கருதாது தம்பால் இல்லையென்றிரப்போர்க்கு இல னென்னும் எவ்வமுரையாது வரையாது கொடுத்துதவிய தன்மைக்கு ஒப்ப இதனையே யெடுத்துரைத்தலானும் அறிக. ()

1. திருக்குறள் : உகக. 2. புறநானூறு : கoஎ.

கூசல

[கடைமடக்கு]

விரையு மதவா ரணமுகிலா
மின்னூர் பலரும் மயிலாக
மேக ஊர்தி இவனுக
விழியா டாமல் நிற்பதனுல்

தரையின் மடவார் அரம்பையராத்
தருநா யகனும் இவனுகத்
தானே வேங்க டேசுரெட்ட
சாமி பவனி வரப்பார்த்தேன்

கரையி லிருக்கும் தாராவே!
கதிரை மறைத்த தாராவே
கடலே திரையு மாற்றுவையே
கடுத்த முழக்க மாற்றுவையே

இரையு மீன்பாய் சினவரையே
என்சொல் வேனுன் சினவரையே
இசைந்த நிலவைப் புத்துகிலே
இறங்கு முலைவைப் புத்துகிலே.

(உரை) விரையும் - (உலாப்போங்கால்) விரைந்து செல்கின்ற, மத வாரணம் - மதத்தையுடைய யானையானது, முகிலா-மேகமாகவும், மின்னூர் பலரும் - இளமங்கையார் எல்லோரும், மயில் ஆக - மயிலாகவும், மேக ஊர்தி - மேகத்தை வாகனமாகக் கொண்ட இந்திரனே, இவன் ஆக - இவனுகவும், விழி ஆடாமல்-(இவனைப் பார்த்த மங்கையர் காதலால் பார்த்த வண்ணமாகவே) கண் இமைக்காமல், நிற்பதனுல் - (எழுது பாவைபோல்) நிற்கின்ற தன்மையினுல், தரையின் மடவார் - நிலவுலகப் பெண்கள், அரம்பையரா - (விண்ணுலக) மங்கையர்களாக, தரு நாயகனும் இவன் ஆக - ஐந்தருக்களின் தலைவனுன இந்திரனே இவனென்னும்படி, தானே - தானுகவே, வெங்கட ஈசுர எட்டசாமி -, பவனிவர - உலாவாக வருவதை, பார்த்தேன் - கண்டேன், கரையில் இருக்கும் - கடற்கரை இடத்தே இருக்கின்ற,

தாராவே - நாரைகளே, கதிரை மறைத்த தாராவே - சூரியனே மறைந்து போகச் செய்தவை வான்மீன்களே, கடலே - அளக்கரே !, திரையும் மாற்றுவையே - அலைகளையும் மாற்றி மாற்றித் தருவாயே, கடுத்த முழக்கம் - கடுமையான இரைச்சலை, ஆற்றுவையே - செய்வாயே, இரையும் - ஒலியிடுகின்ற, மீன்பாய் - மீன்கள் பாய்ந்தோடுகின்ற, சி(ன்)ன வரையே - சிறிய கரையிடமே !, என் சொல்வேன் நான் - நான் என்னவென்று கூறுவேன், சின வரையே - என் மனக்கொதிப்பின் அளவினை, இசைந்த - பொருந்திய, நிலவைப்பு - நிலத்தில் ஊன்றி வைத்துள்ள, துகிலே - விருதுக்கொடியே, இறங்கும் - நழுவி வருகின்றதே, முலைவைப்பு துகிலே - கொங்கைகளின்மேற் போர்த்துள்ள ஆடைகள். (என் செய்வேன் ! காதல் மிக்க துன்புறுத்துகின்றதே ! நீவிர் ஒருவரும் உதவீரோ !)

வெங்கடேசுரெட்ட வேந்தன்மீது காதல் கொண்ட மங்கையர்கள் அவனைக் கண்டு கண் இமைக்காமல் பார்த்தபடியே இருப்பதால், அவர்களை அரம்பையராகக் குறித்தார். விண்ணுலக அரம்பையர் தெய்வ உலகத்தினராகலின் அவர்கட்குக் கண் இமைப்பதில்லை; தெய்வப் பிறப்பினர்க்குக் கண்ணிமையா தென்பதை, 'தாழ்ந்துகண் இமைத்தல் செல்லார்' என்றும் 'எல்லை மூவைந்து நாள்கள் உளஎன இமைக்குங்கண்ணும்' என்றும் வருஞ் சீவகசிந்தாமணிச் செய்யுளான் அறிக. அக்காரணத்தால் என்க.

சினவரை - சின்னமலை; சினத்தின் அளவு என இருபொருள் நயங்காண்க.

கொங்கைகளை மறைத்தற்கு மெல்லிய ஆடையை மேலே அணிவது மங்கையரியல்பு. அதுவும் காதல் விஞ்சிச் சோர்ந்து கீழே விழுதலால், 'இறங்கு முலை வைப்புத் துகிலே' என்றார். கொங்கைமேல் மெல்லிய ஆடைகொடு போர்த்தலை, திருவள்ளுவர் படைத்த காதலன் கூற்றை,

> [1]'கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்
> படாஅ முலைமேல் துகில்'

என்பதுகொண்டு ஒப்பு நோக்கி மகிழ்க. (சுசு)

---

1. திருக்குறள் : கo அஎ.

ஏ

உவமைவிலக்கு

[கடைமடக்கு]

காமன் இவனே என்னிலவன்
கறுப்பன் இவனைச் சிவப்பனென்பார்
காளை வேலன் என்னிலவன்
கண்ணீ ராறுங் கலந்திருப்பான்

பூமன் னவரை நிகருரையாப்
பூமான் வெங்க டேசுரேட்டன்
புகழ்சே ரெட்ட புரந்தழைக்கப்
புருகூ தனைப்போல் வரக்கண்டேன்

சோமன் தனக்கு மாமனையே !
துணையா யிருக்கு மாமனையே
சூழும் புவிக்குள் வளபட்டே
துடித்தேன் மதலுல் வளபட்டே

ஆமன் மதன்சேர் வைப்பறையே
ஆர மணிசேர் வைப்பறையே
ஆழம் நிலையாப் பயனிலையே
அன்னை யாலும் பயனிலையே.

(உரை) காமன் இவனே என்னில் - இவனையே மன்மதன் என்று கூறுவோமானுல், அவன் கறுப்பன் - அவன் கருநிற முடையான், இவனை சிவப்பன் என்பார் - இவனைச் சிவந்த நிற முடையானென்று நன்கு பழகியோர் கூறுவர், காளை - இள எருதையொத்த, வேலன் என்னில் - வேற்படையையுடைய முருகன் என்று கூறுவோமென்றுல், அவன் - அம் முருகன், கண் ஈராறும் - கண்கள் பன்னிரண்டும், கலந்து இருப்பான் - ஒன்று சேர்ந்து இருப்பவன் ஆவான், ஆதலால், பூ மன்னவரை-(தேவர் கோனையன்றி) பூவுலக அரசர்களை, நிகர் உரையா - ஒப்பாக எடுத்துச் சொல்லவொண்ணுத, பூமான் - உலக மன்னனுன, வெங்கட ஈசுர எட்டன் -, புகழ்சேர் எட்டபுரம் தழைக்க - புகழ்சார்ந்த எட்டையாபுர நகரம் உயர்வு பெற்றேறுங்க, புருகூதனைப்போல் -

இந்திரனீப்போல, வர கண்டேன் - உலாவருதலைப் பார்த்தேன், சோமன் தனக்கு மா மனையே - சந்திரனுக்குரிய சிறந்த மனையாளாம் அல்லிமலரே!, துணை ஆய் இருக்கும் மா மனையே - பெரிய வீடே எனக்கு உதவியாக இருக்கின்றது (வேறோர் உதவியும் காண்கிலேன்), சூழும் வனை பட்டே-சுற்றியிருக்கின்ற மேற்போர்வையே!, மதனுல் வனைபட்டே - மன்மதனுல் வனைக்கப் பெற்று, பூமிக்கு உள் துடித்தேன் - உலகில் மிகமிகத் துடி துடித்து வருந்தினேன், ஆ - ஆகா!, மன்மதன் சேர்வை - மன்மதனைச் சார்தற்குரிய, பறையே - முரசமே!, ஆரம் அணிசேர் - முத்தும் மற்ற அணிகளும் சார்தல், வைப்பு அறையே - அவைகளை வைக்கும் அறைகளிலேயே (வைத்துள்ளேன்.) (அவைகளை என்னுல் அணியக்கூட வில்லையே), ஆழும் நிலையா - நீர் நிலையினை அறியவொண்ணுத, பயன் நிலையே - நீர் நிற்கின்ற இடமே!, அன்னையாலும் பயன் இல்(லை)யே - என் தாயாலும் ஏதொரு நலனும் இல்லையே! (என்ன செய்வேன்!)

காமன் கருநிறத்தன் ஆகலான் 'கறுப்பன்' என்ருள். முருகவேளுக்கும் மன்மதனுக்கும் வேற்றுமை தோன்றச் 'செவ்வேள்', என்ப. முருகவேளெனக் கூறின் அவனுக்குப் பன்னிரண்டுகண்களுண்டன்ருே? இவனுக்கு இருகண்கள் தானே இருக்கின்றன. ஆகலான், இவனே நம் காதற்குரியனன வெங்கடேசுரெட்டப்பன் என்பாளாய்த் தலைவன் அழகும், இளமைப் பண்பும், உலாச் சிறப்பும், மன்னர்க்குரிய படைப்பெருக்கும், பிறவும் பாராட்டிக் கூறினுள். பூமன்னர் - மண்ணுலகத் தரசர்கள். புருகூதன் - இந்திரன். சோமன் - சந்திரன். சந்திரனைக் கண்டதும் அல்லி யரும் புகள் மலர்வதாகலான், அவ் வியைபுநோக்கி மனையாளாகக் குறிக்கப்பட்டது.

தான் கருதிய காதலனுகிய வெங்கடேசு ரெட்ட ஏந்தலை மணத்தற்கு விரும்பாது ஏச்சுரை கூறிப் பழிப்பதால் தன் தாயை வெறுத்து 'அன்னையாலும் பயனில்லையே' என்ருள். இரவுக் குறிஇடை யீடுபட்ட தலைவியும் 'வல்லுரைக் கொடுஞ் சொல் அன்னை துஞ்சாள்' என்று தாயை வைவதாக வரும் அகநானூற்றடியையும் நோக்குக. (எ0)

எக

[கடைமடக்கு]

புயமா னதுவு மிருவரையே
பொருந்தும் பூமா னிருவரையே
பொறுப்ப தசோதை யோரடியே
பூமி யளந்த தோரடியே

தயவாய் வளர்ப்ப தெம்மையவன்
தானே வெங்க டேசரேட்ட
சாமி விசய தரராம
சாமி போல வரப்பார்த்தேன்

உயர்வாம் பணையின் மேற்காயே
உதிக்கு மதிய மேற்காயே
ஓலைப் பூவில் வருந்தாதே
ஒருவர் தேற்றில் வருந்தாதே

கயமேல் வருமிக் கனுவாயே
காண்ப தெனக்குக் கனுவாயே
கழுநீர் விடுத்தெய் தானறவே
காமன் கணையெய் தானறவே.

(உரை) புயம் ஆனதுவும் - தோள்களானவைகளும், இரு வரையே - இரண்டு மலைகளையே, பொருந்தும் - ஒத்திருக்கும், பூமான் - உலகத்துக்குரியோன், நிருவர் ஐயே - அரசர்கட்குத் தலைவன், பொறுப்பது அசோதை ஓர் அடியே - அசோதாதேவி அடித்த ஓர் அறைதலையும் பொறுத்துக் கொண்டதாகும், பூமி அளந்தது ஓர் அடியே - தன் ஓரே திருவடியாலே உலகை அளந்த தாகும், தயவு ஆய் வளர்ப்பது எம்மை - எங்களை அருளுடன் காப்பாற்றுவது, அவன் தானே - மேற்கூறிய அத்தகையோனே ஆன, வெங்கட ஈசுர எட்டசாமி -, விசயதர ராமசாமி - வீரபத்தியுள்ள இராமபிரான், போல-போலாக, வர பார்த்தேன்- உலா வருதலைக் கண்டேன், உயர்வு ஆம் - மிக வளர்ந்துள்ள தான, பணையின் மேல் காயே - பணையிடத்துள்ள காய்களே ! உதிக்கும் மதியம் மேற்கு ஆயே - மேற்குப்பக்கத்திலே நிலவு

தோன்றுமே, (இதை எண்ணுயோ?), ஓலைப்பூவில் வரும் தாதே-தாழம்பூவில் உண்டாயிருக்கிற மகரந்தமே!, ஒருவர் தேற்றில் வருந்தாதே - யாரேனும் ஒருவர் தெளிவிப்பரானுல் என்மனம் வருத்தமுறுதே, (ஒருவரும் தேற்றுவாரில்லையே), கயம்மேல் வரும் - ஆழமுள்ள நீரில் மிதந்து வருகின்ற, மிக்கல் நாவாயே - மிகுதியான மரக்கலமே!, காண்பது எனக்கு கனு ஆயே - எனக்குத் தோன்றுவதெல்லாம் கனவுநிலையே ஆராய்வாயாக, நறவே - குங்குமமரமே!, காமன் கழுநீர் கணை விடுத்து எய்தான் - மன்மதனுனவன் குவளைமலர்க்கணைகளைச் செலுத்தி அறவே எய்தான். (எம் காதலனே) எக்காலமும் ஈங்கு வர மாட்டான் போலும்! (என் செய்வேன்! திங்கள் தோன்றித் துன்புறுத்துகின்றது; மன்மதன் குவளைமலர்க் கணைகளைக் கொண்டெய்கின்றுன்; எவ்வாறு பொறுக்கலாற்றுவேன்! எங் காதலனே இனி வாரான்போல் தோன்றுகின்றதே; அவனை அடைந்து இன்புறுதல் எவ்வாறு?)

இருவரை - இரண்டுமலை, ஈண்டுமலை, ஆகுபெயராகத் தோள்களைக் குறித்தது. பூமான் - அரசன்; உலகத்துக்குரியோன் என்பது பொருள். நிருபர் எனற்பாலது நிருவரெனக் கடைமடக்கு நோக்கிவந்தது. நிருபர் - அரசர். ஐ - தலைவன். எய்தான் - விடுத்தான்; வாரான் என்னும் இருபொருள் நயம் காண்க.

'திருவுடைமன்னரைக் காணிற் திருமாலைக் கண்டேனே' என்னும் ஆழ்வார் திருமொழிக்கேற்ப வெங்கடேசுரெட்ட வேந்தனைத் திருமாலின் அவதாரமாகக் கொண்டு, திருமால் கண்ணன் பிறப்பில் அசோதையால் அடிபட்டதை, 'பொறுப்ப தசோதை ஓரடியே' என்றுர். பிரான்டும் முழுமுதல்வனுன திருமால் குறளுருவாக வந்து மாவலி மன்னன்பால் மூவடி மண் பெற்று அளந்த தன்மையைப் 'பூமியளந்த தோரடியே' என நயம்படக் கூறினர். (எக)

ஏஉ

[கடைமடக்கு]

பெலப்போ ரிடவே யெதிர்த்தவர்க்குப்
பிலமும் விசும்புங் குடியாக்கிப்
பிழையி லாத தமிழோர்கள்
பிழைக்குந் தரமா நிதிசொரிந்து

சொலப்பா மதுரம் அறிந்தகல்வித்
துரையாம் வெங்க டேசுரேட்ட
துங்கன் பவனி வரப்பார்த்துத்
தொழுதேன் தொழுதேன் நெடுங்கடலே!

கலப்பாய் விடுத்த துசமரமே !
கடின மருத்த துசமரமே
கலேக்கு மலேக்கு மேற்றுளியே
காமன் கணேயு மேற்றுளியே

நிலப்பான் மணலி னுணலேயே
நினேயே னமுதே னுணலேயே
நீரிற் கிடக்கு முதலேயே
நீங்கே னேவிம் முதலேயே.

(உரை) பெல போரிடவே - மிக்க போர்செய்வதற்கு, எதிர்த்தவர்க்கு - எதிராக நின்ற பகைவர்க்கு, பிலமும் விசும்பும்-மண்கீழிடமும் வானமும், குடி ஆக்கி - குடியிருக்கும்படி செய்து, பிழை இ(ல்)லாத-குற்றமற்ற, தமிழோர்கள்-தமிழ்ப்புலவர்கள், பிழைக்கும் தரமா - வாழும் தன்மையாக, நிதி சொரிந்து - பொருள்களே வாரிக்கொடுத்து, சொ(ல்)ல - சொற்சுவையுடையனவான, பா மதுரம் - பாட்டின் இனிய பண்பை, அறிந்த - கண்டுதெரிந்த, கல்விதுரை ஆம் - கல்வி கேள்விகளில் மேம்பட்ட செல்வனான, வெங்கட ஈசுர எட்டதுங்கன் -, பவனி வர - உலாவருதலே, பார்த்து தொழுதேன் - கண்டு வணங்கினேன், நெடுங்கடலே - நீண்ட வாரிதியே!, கலம் - கப்பலிடத்து, பாய் வீடுத்த - பாய் கட்டித் தொங்கவிட்ட, துச மரமே - கொடி மரமே!, கடினம் மருத்து அது சமரமே - தென்றற் காற்றினு

லாகும் கொடும்போர் மிகத் துன்பமானதே, கலிக்கு மலிக்கும் மேல் துளியே - சுருமீனையும் மோதுகின்ற மேலே செல்லும் அலியே!, காமன் கணையும் - மன்மதன் அம்புகளும், ஏற்று உளியே - தைக்கின்ற உளிபோல் துன்பந்தருகின்றதே, நிலப்பால் மணலின் நுணலியே - பூமியின்கிழிட மணலில் வாழ்கின்ற தவளையே!, நீனையேன் அமு(து)தென் உ(ண்)ணலியே - பாலுடன் கலந்த தேன் உண்பதைக்கூடக் கருதாதவளா யிருக்கின்றேன், நீரில் கிடக்கும் முதலியே - நீரிடத்துத் தங்கியிருக்கின்ற முதலியே!, நீங்கேனே விம்முதலியே - நான் ஏக்கமடைவதிலிருந்து விடுபட்டேனில்லையே.

பெலம் - பலம் : வலிமை, மிகுதியென்று பொருளுரைக்கப் பட்டது. போரில் எதிர்த்த பகைவர்களைக் கொன்று வென்ற திறத்தை, 'பிலமும் விசும்பும் குடி ஆக்கி' என்ருள், இறந்தவர் உடல் மண்ணிலும் உயிர் விண்ணிலும் சார்தலைக் கருதி. இக் கருத்தை,

[1]'வானத் துருமொடு உடுத்திரள் சிந்த
மலிந்த பறந்தலையின்
மண்ணவர் பண்ணவர் வாளின் மறிந்தவர்
மற்றவர் பொற்றொடியார்
பானற் கணையும் முலைக்கு வடும்பொரு படையிற்பட'

என, மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழினும் நயம்பெறக் கூறுதல் காண்க.

வெங்கடேசுரெட்ட வேந்தனை யெதிர்த்தோர் தோல்வியுறுதலும் இவன், 'வெல்லுமத்தனையல்லது தோற்றிலா விறலும்' குறித்துக்காட்டி வீரப்பண்பை விளக்கியவாறும்.

மருத்து - காற்று ; ஈண்டுக் காதலர்க்குத் துன்பந்தருதலால் ஒன்றொழி பொதுச்சொற் குறிப்புமொழியாகக்கொண்டு தென்றற்காற்றெனப் பொருள் கூறப்பெற்றது. கலிக்கு - கலியை : 'சுருமீனை'என நான்கனுருபு இரண்டனுருபுப் பொருள்தந்த வேற்றுமைமயக்கம். மலிக்கும் - மோதுகின்ற, மலித்தல் - மோதுதல் : எதிர்த்தடித்தல் என்னும் பொருள் தருவதாகும். [2]'மகளிர் மலித்தல் அல்லது மள்ளர், மலித்தல் போகிய சிலைத்தார் மார்ப' எனப் பிறர் கூறுவதும் இப்பொருள் தருதலை ஓர்க.

---

1. மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ். 2. புறநானூறு: 80

அமுது தேன் என்னுஞ் சொற்களில் இசையம் நோக்கி 'து' குறைந்துநின்றது. அமுது - பால். உணவுகொள்ள முடியாத உடல்நிலையுடையார், பாலுணவு தேனுணவு முதலிய பருகும் பொருள்களையே விரும்பி உண்பர் அப் பொருள்களையும் உண்ணவொண்ணுத காதல்மிக்க கையறவு நிலையில் இருப்பதால் இத் தலைவி 'நினையேன் அமு(து)தென் உண்ணலையே' என்று வருந்திக் கூறினள்.

விம்முதல் - மயங்குதல்: கலக்கமடைதல். இது தன் வச மிழந்து உணர்வு மயங்கியகால நிகழ்வது. இதனை,

[1] 'இவ்வளவிற் செல்லுங்கொல் இவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காதல் இயம்புங்கொல்—இவ்வளவில்
மீளுங்கொல் என்றுரையா விம்மினாள்'

என்னும் நளவெண்பாவில் நளமன்னன் 'தமயந்தி காதல் நினைவே, நனவினும் கனவினும் வருத்தத் தூதுசென்ற அன்னம், தமயந்தியை இவ்வளவிற்காணும், சொல்லும், திரும்புமென்று பன்னிப்பன்னிக் கூறியதாகக் கட்டுரைத்த இடத்து 'விம்மினாள்' என்று உரைத்தமை தெளிக. (எஉ)

---

1. நளவெண்பா.

எங

[முதல் அடியும் கடையும் மடக்கு]

தஞ்ச மதிக்கு மடமாதர்
தஞ்ச மதிக்கு மாமெனவே
சமர சமுகம் பார்ப்பார்மதன்
சமர சமுகந் தனைப்பார்த்துக்

கெஞ்ச மதவெற் பினிலுதய
கிரிமேற் கதிரோன் போன்றுசந்த்ர
கிரிவாழ் வெங்க டேசுரெட்ட
கீர்த்திப் பெருமான் பவனிவந்தான்

கஞ்ச னிறங்கா வாகனமே!
கனக னிறங்கா வாகனமே
கைமேற் சாய்த்தே னம்பரமே
காணேன் மெலிந்தே னம்பரமே

அஞ்ச மலைத்தேன் பரவையே
அழிவே ஞனுன் பரவையே
ஆழி கோப மடங்காயே
அதிர்த்தாய் நூறு மடங்காயே.

(உரை) தஞ்சம் மதிக்கும் மடம் மாதர் - தமக்கு உரிய துணைவரைக் கருதுகின்ற இளமங்கையரானவர், தம் ச(ம்)மதிக்கும் ஆம் எ(ன்)னவே - இவன் தமக்குச் சம்மதம் கொள்வான் ஆகும் என்றே, சமரச முகம் பார்ப்பர் - ஒன்றுபட்ட தன்மையுடையாரை நோக்கி, மதன் சமர சமுகம் தனை பார்த்து - மன் மதனுடைய போரின் மிகுதியைக்கண்டு, கெஞ்ச - தாழ்ந்து வேண்ட, மதவெற்பினில் - மதயானையின்மீது, உதயகிரிமேல் - தான் தோன்றும் மலையிடத்தே, கதிரோன்போன்று - காலை (இளஞ்) சூரியன்போல, சந்த்ரகிரிவாழ் - பொதியின்மலை நாட்டில் வாழுகின்ற, வெங்கட ஈசுர எட்டகீர்த்திப் பெருமான்-, பவனி வந்தான் - உலாவாக வந்துற்றான், கஞ்சன் இறங்கா - நான்முகன் இருக்கின்ற, வாகு அ(ன்)னமே - அழகிய அன்னப் பறவையே!, கனகன் நிறம் கா வா - பொன்னிறத்தோன் நிறத்

தைப்போல் தேமல் படராவகை என்னைக் காக்க வருக, க(ன்)னமே கைமேல் சாய்த்தேன் - (மனச் சோர்வினல்) என் கவுளைக் கையிடத்தே சாய்த்துள்ளேன், அம்பரமே காணேன் - என் ஆடை நழுவியதைக் கண்டேனில்லை, மெலிந்தேன் நம் பரமே - நம் சிறந்த தன்மையெல்லாம் குறைவுற்றேன், அஞ்சு அமலை தேன் பரவையே - அச்சந் தரும் ஒலியையுடைய தேன் கலந்த நீர்ப்பெருக்கே !, அறிவேன் நான் உன் பரவையே - நான் உன் பெருமையை நன்கு அறிவேன், ஆழி - கடலே !, கோபம் அடங்காயே - சினம் குறையாயாக, அதிர்த்தாய் நூறுமடங்கு ஆயே - முன்னினும் நூறுபங்கு மிகுதியாக முழங்கினை. (இதனை நன்கு எண்ணிப் பார்ப்பாயாக.)

சமரச முகம், சமர சமுகம் எனப் பிரித்துப் பொருள் கொள்க. வெற்பு - மலை: மலைபோன்ற யானையை வெற்பென்றது ஆகுபெயர். கஞ்சம் - தாமரைமலர்; அதில் இருப்பவனுதலால் நான்முகன் கஞ்சன் எனப்பட்டான். கனகன் - குபேரன்; அவன் நிறம் பொன்னிறம். அம்பரம் - ஆடை. அமலை - பேரொலி. பரவை - பரப்பு; அகலநீளம். ஆழி - கடல், ஆழத்தை யுடையது என்னும் பொருளது. கடலானது, இரவும் பகலும் ஓவாது அலையெறிந்து மோதிமோதி யடித்தலை, கோபங்கொண் டுள்ளதாகக் கொண்டுரைத்தாள்.

[1] 'சூழ்ந்து கிடந்த கரைமேல் திரையென்னும் கையெறிந்து
வீழ்ந்து கிடந்தல றித்துயி லாதிவ் விரிகடலே.'

என்னும் சேரமான் பெருமாள் நாயனார் திருமொழியைக் கடலின் செயலுக்கு ஒப்பாக நோக்கி மகிழ்க.

கடலோடு கழறுவதாகக் கலித்தொகையினும்,

[2] "ஓஒ கடலே, தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற இமை
பற்றுவேன் என்றியான் விழிக்குங்கால் பற்றுமென் [யெடுத்துப்
நெஞ்சத்துள் ஓடி ஒளித்தாங்கே துஞ்சாநோய்
செய்யும் அறனில் லவன்."

எனக் கூறுவது காண்க. (எஉ)

---

1. திருவாரூர் மும்மணிக்கோவை : உ0. 2. கலித்தொகை:

எச

[அடிமுதல் மடக்கு]

அங்கங் குடஞ டாதிபர்கள்
அங்கங் குடஞ டியும்வரப்பார்
அனைத்தும் புரந்தோன் அன்பாலே
அனைக்கு நிகரா எனைப்புணர்ந்தோன்

தங்க மலைத்திண் புயன்வனசம்
தங்க மலைக்குத் திருநயனம்
தந்தோன் வெங்க டேசுரெட்டன்
தழைக்கும் இளசைக் கடற்றுறைவாய்

வங்கங் குலாவ வருவையுன்கோ
வங்கங் குலாவ வினைவளர்க்கும்
மணக்கு முதவி சாலமென்னை
மணக்கு முதவி சாலவைப்பாய்

துங்க வலையே மனதுபொருந்
துங்க வலையான் மெலிவேலை
தோயத் திசைவாய்த் திசைமுழுதும்
தோயத் திசையோ கந்தாவே.

(உரை) அங்கு அங்கு உடன் - அவ்வவ் விடங்களிலுள்ள, நாடு அதிபர்கள் - நாட்டுத் தலைவர்களானவர், அங்கு அங்கு உடன் நாடியும் - அவ்வவ் விடங்களிலேயே அப்போதே தேடிக் கொண்டும், வர - தன்னிடம் வந்து பணியும்படி, பார் அனைத்தும் புரந்தோன் - உலகம் முழுதையும் ஆட்சிசெய்தோன், அ(ன்)னைக்கு நிகரா - (அன்பின் திறத்தினால்) தாயின் தன்மைக்கு ஒப்பாக, எ(ன்)னை புணர்ந்தோன் - என்னை மருவினோன், தங்கமலை திண்புயன் - பொன்மலையையொத்த துளக்கலாகாத தோளினன், வனசம் தங்கு அமலைக்கு - செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகளுக்கு, திருநயனம் தந்தோன் - தன் அழகிய நாட்டத்தைக் கொடுத்தோன், வெங்கட ஈசுரஎட்டன் -, தழைக்கும் இளசை - வளருகின்ற எட்டையாபுர நகருக்குரிய, கடல்துறைவாய் - கடலின் துறைமுகத்திடத்து, வங்கம்

குலாவ - மரக்கலங்கள் தன்பால் தோன்ற, வருவை - வாரா நிற்பாய், உன் கோ - உன் நீர் அலைகள், அங்கு அங்கு உலாவ - அவ்வவ்விடங்களாம் கரை ஓரப்பகுதிகளில் ஓடிச்சென்று வருதலால், வீணை வளர்க்கும் - தன் போக்குவரவாம் தொழிலை மிகுதிப்படுத்தும், மண குமுத வீசாலம் - மணமுள்ள அல்லிமலர் இனமே! என் ஐ - என் தலைவன், மணக்கும் உதவிசால - (என்னை) மணஞ்செய்து கொள்ளுதற்கு ஆம் உதவி மிகும்படி, வைப்பாய் - செய்வாய், துங்க அலையே - உயர்வுள்ள அலையே!, மனது பொருந்தும் - நெஞ்சுடன் ஒட்டியிருக்கின்ற, கவலையான் மெலிவேனே - மன வருத்தத்தால் வாடுவேனை, தோயத்து இசை வாய்த்து - நீரின் பெருக்கங்கொண்டு, இசை முழுதும் தோய - புகழெல்லாம் நிறைய, திசையோகம் - நிலையாகத் தலைவனுடன் கூடலை, தாவே - கொடுப்பாயாக.

அங்கு அங்கு - அவ்வவ்விடங்கள். அனை - அன்னை ; தாய். கமலை - திருமகள், அரசர்கள் தம் அருட்பார்வையினால் யாவர்க்கும் நன்மைசெய்து புரத்தலினால் அச் சிறப்புநோக்கித் திருமகளுக்குத் தன் 'திருநயனம் தந்தோன்' என்றுள். இக் கருத்தோடொப்ப,

> [1]'நீ, உடன்று நோக்கும்வாய் எரிதவழ
> நீ நயந்து நோக்கும்வாய் பொன்பூப்பச்
> செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
> வெண்திங்களுள் வெயில் வேண்டினும்
> வேண்டியது வினைக்கும் ஆற்றலை.'

எனச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பேராற்றல் குறித்து ஆவூர் மூலங்கிழார் கூறியதை ஒப்ப வெங்கடேசுவரெட்ட மன்னன் அருட்கண் பார்வைமீதேற்றி அவன் ஆற்றலை விளக்கியதறிக.

வங்கம் - மரக்கலம் ; கப்பல், படகு எனக் கொள்ளலுமாம். விசாலம் - விரிவு ; கூட்டம், இங்கே இனம் என்னும் பொருள் பெற நின்றது. (எசை)

---

1. புறநானூறு : நூஅ.

எ

[அடிமுதல் மடக்கு]

துரையே கொடுக்குந் தயாபரம
துரையே புரந்த பாண்டியமூ
துரையே வளர்த்த செயதரச
துரையே படைத்த சேகவீரா

நிரையே பிழைக்க மலையெடுத்த
நிருபா வேங்க டேசுரேட்டா
நின்னைத் தொழுவோம் எனமடவார்
நின்றுர் நானும் எதிர்நின்றேன்

திரையே திரையிற் படிந்திளங்க
திரையே ஒளித்தாய் மேலெனுமுத்
திரையே தரித்தேன் அவன்கணையே
திரையே கொடுத்த தறியாயே

கரையே கடவா துலாவியகோக்
கரையே மடவா ராசியமூர்க்
கரையே நினைத்து மாலையிற்சேக்
கரையே குறித்தும் பயந்தேனே.

(உரை) துரையே - பெருஞ் செல்வனே !, கொடுக்கும் - யாவருக்கும் தருகின்ற, தயாபர - மிக இரக்கமுள்ளவனே! மதுரையே புரந்த - மதுரைமாநகரை ஆட்சிசெலுத்திய, பாண்டிய - பாண்டிமன்னர்களே ஒத்தவனே !, மூது உரையே வளர்த்த - தொன்றுதொட்ட புகழை மேலோங்கச் செய்த, செயதர - வெற்றியாளனே !, சதுரையே படைத்த - நாகரிகங் கொண்ட, சேகவீரா - உலக வீரனே !, நிரையே பிழைக்க - ஆனிரை (பசுக்கூட்டம்) வாழ, மலை எடுத்த - கோவர்த்தன மலையைத் தூக்கிப்பிடித்த, நிருபா - வேந்தே !, வெங்கட ஈசுர எட்டா -, நின்னை தொழுவோம் என - உன்னை வணங்குவோ மென்று, மடவார் - இளநங்கையர், நின்றுர் - எதிர்பார்த்து நின்றுர்கள், நானும் -, எதிர்நின்றேன் - உன் வருகைக்கு எதிர் கொண்டு நின்றேன், திரையே - அலையே !, திரையில் படிந்து -

கடலிலச்சார்ந்து, இளங்கதிரையே - இளஞ் சூரியனையே, ஒளித்தாய் - மறைத்தாய், மேல் எ(ன்)னும் - தேமலாகிய, முத்திரையே தரித்தேன் - இலாஞ்சனை (குறி)யை அணிந்தேன், அவன் கண்ணையே - அம் மன்மதன் மலரம்புகள், திரையே கொடுத்தது அறியாயே - உடற் சுருக்கத்தையே தந்ததை நீ தெரிந்தாயில்லையே, கரையே கடவாது - கடற்கரை யோரங்களைக் கடந்து அப்பாற் செல்லாமல், உலாவிய கொக்கரையே - சென்ற சங்கே!, மடவார் ஆகிய - மங்கையர் என்னும், மூர்க்கரையே நினைத்தும் - கீழானவரின் செயலை எண்ணியும், மாலையில் செக்கரையே குறித்தும் பயந்தேனே - மாலைப் பொழுதில் தோன்றும் செவ்வானின் கொடிய நிலைக்கும் அஞ்சினேனே.

தமிழ்நாட்டையும் தமிழ்ப் புலவர்களையும் முத்தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் காக்கும் வீரனுகலான், 'மதுரையே புரந்த பாண்டிய' என்றாள். காதல்மிக்கார்க்கு பகல் நீங்கி மாலைப் பொழுதுவரின் மனத்தைத் துன்புறுத்துமாகலின் 'இளங் கதிரையே ஒளித்தாய்' என்றும், 'மாலையில் செக்கரையே குறித்தும் பயந்தேனே' என்றும் கூறினாள்.

[1] 'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்'

[2] 'காலைக்குச் செய்தான் றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.'

என்று கூறும் வள்ளுவர் திருமொழிகளும் இதனுடன் ஒப்ப நோக்கத்தக்கது. பிறிதொரு தலைவி மாலைப்பொழுது கண்டு வருந்திக் கூறுங்கால், காதல் கொண்டார்க்கு மாலைப்பொழுதெனத் தனியாக இல்லை; துணைபிரிர்திருப்போர்க்கு எல்லாக் காலமும் மாலையே என்று காதல் கைம்மிக்க தன்னிலையை வருத்தத்துடன் சித்திரித்துக் கூறுவதும் சுவைமிக்கதாகும். அது,

[3] 'சுடர்செல் வானம் செப்பப் படர்கூர்ந்து
எல்லறு பொழுதின் மூல்லை மலரும்
மாலை என்மனுர் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை
பகலும் மாலை துணையி லோர்க்கே.'

என்பது காண்க. (எடி)

1, 2. திருக்குறள் : கஉகஎ; கஉஉடி; 3. குறுந்தொகை: உகச

[அடிமுதல் மடக்கு]

கூரா ழியைக்கைக் கொண்டவன்போற்
கோற்றக் குடையி னிழலில்வந்த
கோமான் வதன மதியின்மின்னூர்
கோமான் போலக் குதிக்கவிட்டு

வாராய் தளவந் தாராய்போன்
மருமா வெங்க டேசுரேட்ட
மகிபா வென்றே பற்பலரும்
வணங்க நானும் வணங்கிநின்றேன்

பாரா வார மேவிரகம்
பாரா வார மேவலராம்
பணில வுவரி யன்னேசினப்
பணில வுவரி னுன்மெலிவேன்

ஆரா வலழி யுந்தரநீ
ஆரா வலழி யுந்தரத்தாய்
அம்பா யுததி யாவாய்வேள்
அம்பா யுததி சயம்பாரே.

(உரை) கூர் ஆழியை - கூர்மையுள்ள சக்கரப்படையை, கை கொண்டவன்போல் - கையிடத்தே உடைய திருமால் போலாக, கொற்றக் குடையின் - வெற்றிக்குடையினது, நிழலில் வந்த - நிழலிடத்தே தங்கிப் பவனிவந்த, கோமான் - அரசனே, வதன மதியின் - முகமாகிய நிலவையுடைய, மின்னூர் - மகளிராகிய எங்களே, கோ மான் போல - அம்புபட்டுருவிய மானைப்போலாக, குதிக்க - துள்ளித்துடித்துத் துன்புற, விட்டு - இடைவழியில் ஒழித்துவிட்டு, வாராய் - வாராநின்றீரோ!, தளவம்தாராய் - முல்லை மலர்மாலையைத் தரமாட்டாயோ?, பொன் மருமா - திருமகளே மார்பில் கொண்டவனே!, வெங்கட ஈசுர எட்டமகிபா -, என்றே பல்பலரும் - என்று கூறிக் கொண்டே பல பெண்கள் யாவரும், வணங்க - தொழுதுநிற்க, நானும் -, வணங்கி நின்றேன் - தொழுதுகொண்டு நிற்கலானேன்,

பாரா வாரமே - கடற்கரையே !, விரகம் பாரா - என் காதல் நிலையை எண்ணுமல், வாரம் மேவு - கரையைச் சார்கின்ற, அலர் ஆம் - விரிவடைகின்ற, பணில உவரி - சங்குகளையுடைய கடலே!, அன்னை கினப்பள் - என் தாய் கோபங்கொள்வாள், நிலவு வரின் - சந்திரன் தோன்றினுல், நான் மெலிவேன் - நான் வருந்தி வாடுவேன், ஆர் ஆவல் அறியும் தரம் - என் காதலை எவர் அறியும் தன்மையர், நீ ஆரா அலறி - நீ ஓவாமல் இரைச்சலிட்டு, உந்(து) தரத்தாய் - மோதுகின்ற தன்மையுடையாய், அம்பாய் - நீர் பாய்ந்து செல்கின்ற, உதஅதி ஆவாய் - நீருக்குத் தலைமைத் தன்மையுடையை ஆவாய், வேள் அம்பு ஆயுத அதிசயம் பாரே - மன்மதனின் மலரம்புப் படையின் வியக்கத்தக்க தன்மையை நீ காண்பாயாக.

வாராய், முன்னிலை. பொன்மருமா என்பதற்கு அழகிய மார்பையுடையாய் என்றலுமாம். பணிலம் - சங்கு. உவரி - கடல்; உவர் நீரையுடையது என்னும் பொருளது. அதிசயம் - வியப்பு. பார் - காண்.

ஆழி - வட்டம். ஈண்டுச் சக்கரம். கோ - அம்பு, கோமான் - சிறந்த மான் என்றலுமாம். அதற்கொரு பொருட் சிறப்பின்று. கோ மான் - அம்புபட்டு உருவிய மான்; அது, துள்ளித் துடி துடித்து மயங்குதல்போல் மயங்கினேன் என்றபடி. இதனை,

[1] "ஏவடு பிணையின் நோக்கி இறைவனை கழல நின்ற
தாய்படும் துயர மெல்லாம் தாரவன் நீக்கி னானே."

எனக் கேமசரியார் இலம்பகத்து வரும் அரிய கருத்து, இதற்கு ஓத்த பொருட்டாய் வருதலா லென்க.

இதன்கண் அடிமடக்குச் சொல்லணியின்பந் தோன்ற ஆசிரியர் அமைத்த பாநயம் கண்டு இன்புறற்பாலது. நுட்பமாகப் பொருட்செறிவு அமைந்திருத்தலும் அறிக. (எசு)

1. சிவகசிந்தாமணி, கேமசரியார் : சுசு.

எஎ

[முதல் அடியும் இடையும் மடக்கு]

துரந்த ரீக புரந்தரவேள்
துரந்த வாறு மறிந்திலேயே
சோமத் தலேயைத் தரித்தாயே
சோமன் வருத்த மாற்றுயே

நிரந்த கருணைத் தயாநிதியே !
நீதா ! வெங்க டேசுரெட்டா !
நீதா மூலையை யெனமடவார்
நின்றுர் நானும் கூடநின்றேன்

பரந்து புடைக்குங் கரையேபொன்
பரந்து புடைக்கு மூலக்கணிந்தேன்
பார்வைத் துடுக்கும் புடைவையனே
பார்வைத் துடுக்கும் பொறுப்பேனே

வாம்பு வாரி தம்பமற
மயக்கு வாரி தம்பகரார்
வருத்தக் கதறி யேன்உனக்கு
வரத்தக் கதறி யேன்புகலே.

(உரை) துரந்தரீக - உலகைத் தாங்குவானே !, புரந்தர - இந்திரன் போன்றவனே !, வேள் துரந்த ஆறும் அறிந்திலேயே - மன்மதன் மலரம்பு செலுத்திய வழியும் தெரிந்தாயில்லேயே, சோம தலேயை - திங்கள்போன்ற வெண்கொற்றக் குடையை, தரித்தாயே - கொண்டாயே, சோமன் வருத்தம் மாற்றுயே - எனக்குச் சந்திரனல் வருகின்ற துன்பத்தை மாற்றமாட்டாயோ?, நிரந்த கருணை தயாநிதியே - எல்லோரிடமும் ஒன்றுகக் கலந்த அருள்நிதியம் உள்ளோனே, நீதா - நெறிமுறையுடையோனே, வெங்கட ஈசுர எட்டா---, நீ தா மூ(ல்)லேயை எ(ன்)ன - நீ மூல்லே மலர்மாலேயைத் தருவாயாக என்று கூறிக்கொண்டு, மடவார் நின்றுர் - இள மங்கையர் நின்றனர், நானும்---, கூட நின்றேன் - அவர்களுடன் நிற்கலானேன், பரந்து புடைக்கும் கரு ஐயே-விரிந்து மோதுகின்ற கரிய அமருள்ள கடலே !, பொன்

பரந்து-பசலை படர்ந்து, புடைக்கும்-பருத்திருக்கின்ற, முலைக்கு—, அணிந்தேன் பார் வைத்து உடுக்கும்/புடைவை - உலகில் வைத்து எல்லோரும் புனைகின்ற ஆடையைப் போர்த்தினேன், அ(ன்)னை பார்வை துடுக்கும் பொறுப்பேனே - (அதைக்கண்ட) என் தாயின் பார்வையின் கொடுமைத்தன்மையைத் தாங்கலாற்று வேனே, வரம்புவாரி - கரையையுடைய கடலே!, தம்பம் அற - பற்றுக்கோடு நீங்க, மயக்குவார் - அறிவைக் கலைப்பார், இதம் பகரார் - நல்லனவற்றைக் கூறார், வருத்த கதறி ஏன் - என்னைத் துன்புறுத்தக் கதறுகின்றாய் எதற்காக?, உனக்கு வர தக்கது அறியேன் புகலே - இதனால் உனக்கு வரக்கூடிய நன்மை நான் அறியாதவளானேன். (கூறுவாயாக.)

துரந்தரீகம் - பாதுகாவல். அதையுடைய மன்னர் துரந்த ரீகர் எனப்பட்டனர். துரத்தல் - செலுத்துதல். வேள்துரந்த என்னுங் குறிப்புமொழியினால் அம்பு என்னுஞ் சொல் வருவித் துரைக்கப்பட்டது. முலை - முல்லை: இடைக்குறை. முல்லை மலர்மாலைக்கு ஆகுபெயராக வந்தது. கரு ஐ-கருநிறமுள்ள அழகு. ஆகுபெயராய்க் கடலுக்கு வந்தது. தம்பம் - தூண், தூணைப் போன்ற நிலைமையினால் பற்றுக்கோடு என்னும் பொருளில் வந்தது. கதறுதல் - இரைச்சலிடுதல்.

கடலை நோக்கித் தலைவி கூறுகின்றாள்: கடலே 'நீ ஓவாமல் கதறுகின்றாயே; அஃது என்னையன்றே வருத்துகின்றது; அதனால் உனக்குக் கிடைக்கும் ஊதிய மென்ன?. சொல்லு. உலகில் யாரும் பயனின்றி எச்செயலையும் செய்யார்' என்று கூறுவாளாய், 'உனக்கு வரத்தக்கது அறியேன் புகலே' என்றாள். இதில் தலைவியின் அவலநிலை தோன்றுவது காண்க. (எஎ)

எஅ

[கடைமடக்கு]

தருவா னெனவே தமிழறிந்து
தருவான் களிவண் டலம்புமுல்லைத்
தாரான் சமரின் முதுகுபுறந்
தாரான் நேரார் தமையடக்க

வீருவான் அமரா வதிபுரக்கும்
மகவான் போலச் சந்த்ரகிரி
வந்தோன் வெங்க டேசுரெட்டன்
மதவா ரணத்திற் பவனிவந்தான்

குருகார் தடத்துக் கம்புள்ளே !
குலுக்குந் தடத்துக் கம்புள்ளே
குத்த விடுத்தா னுங்குளமே
கூட விடுத்தா னுங்குளமே

அருகே பாயுந் தனிக்குறவாய்
அன்னை மாரு மெனக்குறவாய்
அன்பு புரியார் மீன்ரூரே
அவரோ எனையு மீன்ரூரே.

(உரை) தருவான் எ(ன்)னவே-ஐந்தருவும் மேகமும் என்று சொல்லும்படி, தமிழ் அறிந்து - தமிழ்நூல்களின் சுவையுணர்ந்து, தருவான் - (தமிழ்ப்புலவர்க்குக்) கொடுப்போன், களிவண்டு - தேனுண்டு களிக்கும் வண்டுகள், அலம்பு - பாடுகின்ற, முல்லைதாரான்-முல்லைமலர் மாலையையுடையான், சமரில்-போர்க்களத்தில், முதுகுபுறம் தாரான் - புறமுதுகுகொடுக்காது நேரில் எதிர்த்துநிற்போன், நேரார் த(ம்)மை அடக்க - பகைவர் கூட்டம் ஓடுக்குதற்கு, வருவான் - வருகின்றவன், அமராவதி புரக்கும் - அமராவதியென்னும் தேவருலகுகரைக் காவல் புரிகின்ற, மகவான் போல - இந்திரன் போன்று, சந்த்ரகிரி வந்தோன் - பொதியில் மலைநாட்டிற் பிறந்தோன், வெங்கடாசல எட்டன்—, மதவாரணத்தில் பவனிவந்தான் - மதங்கொண்ட யானையின்மீதேறி உலாவாக வந்தான், குருகு ஆர் தடத்து

கம்புள்ளே - பறவைகள் நிறைந்த தடாகத்தில் வாழ்கின்ற சங்கே!, குலுக்கும் தடதுக்கம் - மிகுந்த துன்பம் என்னை நடுங்கச்செய்யும், புள்ளே குத்த - பறவைகள் (மீன் முதலிய வற்றைக்) கொத்த, விடுத்து - தன்னுள்கொண்டு, ஆனு குளமே - நீங்காத தடாகமே!, கூடவிடுத்தால் நாங்கு உ(ள்)ளமே - காதலனை அணைகின்ற எண்ணத்திற்கு விட்டுவிட்டால் என்மனம் ஊக்கங்குன்றுமே, அருகே பாயும் - பக்கத்தில் குதித்தோடுகின்ற, தனி குறவாய் - ஒப்பற்ற குறவைமீனே!, அன்னைமாரும் - என் தாயர்களும், எனக்கு உறவுஆய் - எனக்கு அன்பாக, அன்பு புரியார் - அன்புச்செயலைச் செய்யமாட்டார், மீன்தாரே - மீன் கூட்டமே!, அவரோ எ(ன்)னையும் ஈன்றுரே - அத் தன்மை யுடையவர்தாமோ என்னைப் பெற்றோராவர்? (நீயே எண்ணிக் கூறு.)

தரு வான்: எண்ணும்மைத் தொகை; இசை இயைபு நோக்கி விரியாது நின்றது. அதனைத் தருவும் வானுமென விரிக்க. தருவான் தாரான் என்னும் முரண்தொடை அழகு காண்க. தருவான், தமிழ்ச் சுவையறிந்து கொடுப்பான் என்றும் தாரான், முல்லைமலர் மாலையையுடையான் என்றும் இருபொருள் நயம் காண்க. முதுகுபுறந் தாரான் என்பது பகைவரோடு போர் புரியுங்கால் பின்னடையாத வேந்தன் வீரமாண்பை விளக்கி நின்றது. இதனைப் புலவர் பெருமக்கள் 'புறக்கொடை' யென்ப. நேரார் - பகைவர். குருகு - பறவை. குத்த - கொத்த. கொக்கு முதலிய பறவைகள் தருணம் பார்த்து மீன்களைத் துடுமெனப் பாய்ந்து கொத்தி விழுங்குதலைக் குத்துதல் என்பர்.

[1]"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து."

என்னும் திருக்குறட் செய்யுளில் குத்து என்பது இப் பொருட் டாதலை அறிக (எஅ)

1. திருக்குறள்: சகo.

எஅ

[முதலும், கடையும் மடக்கு]

கண்ணன் போல வருகமலக்
கண்ணன் பார முலைமடவார்
காமன்போல வளர்ந்து தெய்வக்
காமன் போலப் புவிபுரந்து

திண்ணந் தோன்றச் செங்கோன்மை
செலுத்தி அரசு புரியுமதி
செயவான் வெங்க டேசுரெட்ட
தீரன் இளசைக் கடற்றுறைவாய்

வண்ணந் தருகா வித்தாரே!
மாத ரேனைக்கோ வித்தாரே
வளருங் கரையோ டத்திடமே
வருமோ பயமோ டத்திடமே

எண்ணந் தருவா னேக்காணேன்
எடுக்கு மதன்வா னேக்காணேன்
இளைத்தேன் என்ப தறியாயே
இரங்காய் என்ப தறியாயே.

(உரை) கண்ணன்போல - கண்ணபிரானைப் போன்று, வரு - தோன்றிய, கமலகண்ணன் - தாமரைமலர் போன்ற கண் களையுடையான், பாரமுலை மடவார் - பருத்த கொங்கைகளை யுடைய மங்கையருக்கு, காமன்போல வளர்ந்து-காமனைப்போல (அழகில்) மிகுந்து, தெய்வ காமன்போல - தெய்வத்தன்மை பொருந்திய கற்பகச்சோலைக்கு அரசனான இந்திரனைப்போல, புவிபுரந்து - உலகைக் காத்து, திண்ணம் தோன்ற - தன் வலிமை யாவர்க்கும் தெரிய, செங்கோன்மை செலுத்தி - செங்கோல் முறைமை செய்து, அரசுபுரியும் - அரசாட்சி செய்கின்ற, மதி செ(ய்)யவான் - நுண்ணறிவுத் திருத்தம் பெற்றோன், வெங்கட சுரஎட்ட தீரன்—, இளசை கடல்துறைவாய் - எட்டையாபுர நகரக் கடல் துறைமுகத்திடத்து, வண்ணம் தரு - நிறங் காட்டு கின்ற, காவிதாரே - குவளைமலர் வரிசையே!, மாதர் எ(ன்)னை

கோவித்தாரே - பெண்கள் என்னைச் சினந்தாரே, வளரும் கரை ஓடத்து இடமே - மேல் எழுகின்ற படகுகளின் கரை இடமே !, வருமோ பயம் ஓட திடமே - அச்சம் வளர்வதால் ஊக்கம் உண்டாகுமோ ?, எண்ணம் தருவானே காணேன் - என் கருத்தை முற்றுவிக்கின்றவனே நான் கண்டேனில்லை, எடுக்கும் மதன்வானே காணேன் - என்னுல் தாங்கக்கூடிய மன்மதன் கணைகள் ஒன்றையும் காணுதவளானேன் (யாவும் வருத்துகின்ற கணைகளாகவே இருக்கின்றன), இளைத்தேன் என்பது அறியாயே-நான் உடலும் உள்ளமும் சோர்ந்தேன் என்பதை நீ தெரிந்தாயில்லையே. இரங்கார் என்பதறி யாயே - என்னுடைய அன்னே என்தடு மாற்றங்கண்டு சிறிதும் இரக்கங்காட்டமாட்டானே என்பதையும் அறிந்துகொள்வாயாக. (என் செய்வேன் ! நீ எனக்கு அன்பு கொண்டு நல்லன செய்தல் வேண்டும்).

மதி - நுண்ணறிவு, செய்வான் - செய்யவான் - செம்மைத் தன்மையையுடையான் ; அன்றிச் செயவான் என்றேகொண்டு வெற்றிக்குரியோன் என்றலுமாம். பயம் ஓடல்-அச்சம் வளர்தல்; ஓடல் மேலும்மேலும் வளர்தலேக் குறித்த குறிப்புச்சொல் இது, ஓடுதல், ஓடுகை முதலிய வேறுவிகுதிகள் பெற்றும்வரும். வாள் - அம்பு, மன்மதன் விடுகின்ற அம்புகள் மலராக இருப்பினும் ஒவ்வொன்றும் தனக்கு மேன்மை தருவதோ அன்றித் துன்பத்தைக் குறைப்பதோ இல்லே ; யாவும் துன்புறுத்துவதாகவே யிருக்கிறதென்பாளாய் 'எடுக்கு மதன் வாளேக் காணே' னென்றுரை என்க. - இது தலேவியின் துன்பத்தையும் காதல்மிக்க அவள் தன் மனநிலேயையும் தெற்றென விளக்குதல் அறிந்தின்புறுக.

இது, தலேவியின் காதற்கனிவால் மனந் துடிப்புற்றுக் கிழறும் நிலேயில் இசையோடு பொருந்தியிருத்த லறிக. 'இளைத்தேன் என்ப தறியாயே' என்பதில் இரக்க வுணர்வு தோன்றுதல் காண்க. (எக)

அ0

[அடிமுதல் மடக்கு]

சங்கோ லிடமும் முரசதிரத்
தாரை யிரையத் தவில்முழங்கச்
சத்த மிடுபே ரியந்துவைக்கத்
தந்தா வளத்தின் மிசையேறி

எங்கோன் வெங்க டேசுரேட்டன்
எழுந்தான் பவனி மாதரெல்லாம்
எதிர்போய்த் தொழுதார் நானுமவன்
எழிலும் வடிவுஞ் சோதித்தேன்

செங்கோ கனகத் திருநயனஞ்
செயமான் வலது புயம்வீரைத்
திறவான் மருங்கில் இருந்தார்கள்
சேரும் மாதர் ஆரென்றேன்

கங்கோ டிகலுங் கடலே !யங்
கங்கோ டியுமால் தோடர்ந்ததுசங்
கங்கோ டியுமுண் டகன்றதுமு
கங்கோ டியுநான் இருந்தேனே.

(உரை) கங்கு ஓடி க(ல்)லும் கடலே - கரையிற் சென்று மோதி ஒலிக்கும் பவ்வமே !, சங்கு ஒலிட - சங்குகள் முழங்க, மும்முரசு அதிர - (வீரம், கொடை, மணம் ஆகிய) மூவகை வாத்தியமும் ஒலிக்க, தாரை இரைய - எக்காளம் ஒலிக்க, தவில் முழங்க - பெருமத்தளம் முழங்க, சத்தம் இடு - பேரொலி தருகின்ற, பேரியம் துவைக்க-மிக்க பறைகளும் முழங்க, தந்தா வளத்தின் மிசை ஏறி - ஆண்யானைமேலே ஏறி இருந்து, எங்கோன் - எம் வேந்தனான, வெங்கடாசுர எட்டன்——, எழுந்தான் பவனி - உலாப்புறப்பட்டான், மாதர் எல்லாம் - பெண்கள் எல்லோரும், எதிர்போய் தொழுதார் - நேரிற்சென்று வணங்கினர்கள், நானும்—, அவன் எழிலும் வடிவும் - அவ் வேந்தன் தோற்றத்தையும் அழகையும், சோதித்தேன்-ஆராய்ந்து பார்த்தேன், செம் கோகனக திரு-செந்தாமரைமலரில் வீற்றிருக்

கின்ற திருமகள், நயனம் - கண்பார்வையினும், செயமான் - வெற்றித்திரு, வலதுபுயம் - வலத்தோளினும் ஆக, வீரத் திறவான் - வீரத்தைக்கொண்ட வலியோனது, மருங்கில் இருந்தார்கள் - பக்கத்தில் இருந்தனர், சேரும் மாதர் ஆர் என் றேன் - சேர்ந்திருக்கின்ற இப் பெண் யார் என வினவினேன், அங்கு அங்கு ஓடியும் - (சென்ற) அவ்வவ் இடங்களெல்லாம் விரைந்து சென்றும், மால் தொடர்ந்தது-காதல் மயக்கு விட் டிலது, சங்கம் கோடியும் மூண்டு அகன்றது - சங்க வளையல் களின் பக்கச்சேர்க்கை மூட்டுவாயும் விரிந்தது, முகம் கோடியும் தான் இருந்தேனே - நான் முகவாட்டமடைந்து இருக்க லானேனே.

'தந்தாவளத்தின் மிசையேறி.....எழுந்தான் பவனி, மாதர் எல்லாம்.....வீரைத் திறவான் மருங்கில் இருந்தார்கள்; முகங்கோடியும் நாலிருந்தேனே' எனக் கூட்டி இச் செய்யுட்கு வீணமுடிபு கொள்க.

ஓலிட - ஒலிக்க. தவில் - பெரும்பேரிகை. துவைக்க - முழங்க. மருங்கு - பக்கம். சங்கம் - சங்காலியன்ற வளையல். கோடி - பக்கம்; ஒருபக்கத்து மூனை. குமரிமூனை என்பது போலக் கொள்க. மூண்டு - மூட்டு; அஃதாவது மூட்டுவாய். வளையல்களின் ஒன்றுபட்ட சேர்க்கை; இணைப்பிடம்.

காதல்கொண்ட மங்கையர்க்கு, அவரணிந்த வளையல்களும், ஆடையும் நெகிழ்ந்து கீழ்விழுவது இயல்பு. இங்கே தலைவனுகிய வெங்கடேசுவரெட்டப்பனைத் தலைவி நேரிற்கண்டாள்; அவன் தோற்றத்தையும், அழகையும் சுவைத்தாள்; கண்ணுல் விழுங்கி னுள்; அவ்வளவில் உடல் பூரிப்புற்றது; பெண்ணுறுப்பெல்லாம் விம்மிதமுற்றன; தொடியணிந்த அவள் தோளும் மூன்னங் கைகளும் பூரித்துப் பருத்தன; கைவளையல்கள் கைகள் பூரித் ததனுல் அதன் மூட்டுவாய் தெறித்துக் கழன்றோடின. கூடிக் களித்ததைப்போல் இன்புற்றுள். இச் செயலைக் கடலிடங் கழறுவாளாய் 'மால் தொடர்ந்தது சங்கம் கோடியும் மூண் டகன்றது' என்றுள். இதில் தலைவி தன் காதல்நிலையை உரைத்து இன்புறுதல் காண்க. (அ0)

அங

[அடிமுதல் மடக்கு]

நிலப்பா வையைத்தா ளாலளந்த
நெடுமால் வெங்க டேசுரெட்டன்
நிருபர்க் கரசன் பவனிமுன்னே
நின்றேன் மயலாய் அவன்புயத்தைக்

கலப்பால் விரும்பிக் கிளைக்கேநான்
கலப்பால் விடுத்தேன் எனக்குமுன்பு
கலப்பால் உரைப்பே னெனவதற்குக்
கழற வதுவு மறுத்தேனக்குச்

சொலப்பா வையரை நான்பார்த்தேன்
சோதி முகத்திற் கொடுகொடுப்பும்
துணைமான் விழியிற் சிவப்புமிதழ்த்
துடிப்பு மனத்திற் கடுகடுப்பும்

சலப்பார் வையும்பார்த் தேர்மதனன்
தானை யாமால் அவரெனக்குத்
தானை யாமால் உரைப்பாரோ
தானை போன தறியாரே.

(உரை) நிலப் பாவையை - நிலமகளை (பூமியை), தாளால் அளந்த - தன் திருவடிகளால் அளவிட்ட, நெடுமால் - நீண்ட திருமாலையொத்த, வெங்கடேசுர எட்டன்—, நிருபர்க்கு அரசன் - அரசர்கட்கெல்லாம் அரசனனவனுடைய, பவனி முன்னே - உலாவருகைக்கு முன்பாக, நின்றேன் மயல்ஆய் - காதல்கொண்டு மயங்கி நிற்கலானேன், அவன் புயத்தை - அவன் தோள்களை, கலப்பால் விரும்பி - தமுவுவதற்கு வேட்கைகொண்டு, கி(ள்)ளைக்கே - (தூதுவிடுக்க எண்ணி) கிளிக்கு, கல பால் விடுத்தேன் - மிகுதியான பால்விட்டுப் பருகச்செய்தேன், எனக்கு முன் புகல் - (நான் சொல்வதை நன்கறிந்து சொல்வதற்காக அது, தெளிந்து கொள்ள) என் முன்னிலையில் நீ சொல் என்று சொல்ல, அப்பால் உரைப்பேன் என - நான் அதன்பின்

கூறுவேன் என்று சொல்ல, அதற்கு - அவ்வாறு கூறியதற்கு, கழற அதுவும் மறுத்தது - அக் கிளியும் தூதுபோய்ச் சொல்வ தற்கு ஒவ்வாதென மறுத்து உரைத்தது, எனக்கு சொ(ல்)ல - எனக்காகத் தூதுசென்று என் காதலரிடத்தில் உரைப்பதற்கு, பாவையரை நான் பார்த்தேன்-பெண்களை நான் நாடுதலானேன், சோதி முகத்தில் கொடுகொடுப்பும் - ஒளிமிக்க அவர்தம் முகத் தில் குளிர்ச்சி (வேறுபட்ட தன்மை)யும், துணை மான் விழி யில் - இரண்டாகிய மான்போன்ற கண்களில், சிவப்பும் - செம்மைநிறமும், இதழ் துடிப்பும் - இதழ்கள் ஆடுதலையும், மனத்தில் கடுகடுப்பும்-அவர் நெஞ்சில் வெறுப்பும், சல பார்வை யும் - கோபமாகப் பார்த்தலையும், பார்த்து - நான் கண்டறிந்து, ஏர் மதனன் - அழகிய மன்மதனுக்குரிய, தாணை ஆம் - படைகள் ஆவார், அவர் எனக்கு தான் - அவர்கள் எனக்காக, கையாமல் உரைப்பாரோ - தளராமல் சொல்வார்களோ?, தாணை போனது அறியாரே - என் ஆடை பறிபோனதை அறியமாட்டாரோ? (அறிவார்; அறிந்திருந்தும் அவர் மனநிலை இவ்வாறிருப்பதற்கு என் செய்வேன்!)

நிலப்பாவை - நிலமாகிய பெண்: இருபெயரொட்டு. 'கானுள நிலமகளைக் கைவிட்டு' என்னும் கம்பர் மொழியும் காண்க. நெடுமால் வெங்கடேசு ரெட்டன்: உவமத்தொகை.

தலைவி, தன் காதலைக் கிளிக்கு எடுத்துரைத்துத் தலைவன் பாற் செல்ல இசைவில்லாத நிலைகுறித்து வருந்துவதாக அமைந் தது இப்பாட்டு. இதில், தலைவன்பால் தூதுபோகக் கிளி மறுத் தமையும் மங்கை நல்லார் பலர் குறிப்பால் போக இசையாமை யும் நயம்பெறச் சித்திரிப்பது கண்டு இன்புறற்பாலது.

'தாணை போனதறியாரே' என்பதில் ஏகாரம் வினைப் பொரு ளில் வந்தது. (அக)

அஉ

தூதுவிலக்கு

[மடக்கு]

அன்னந் தனையே தூதுவிட்டால்
அரசர் பெருமான் கொடைமாரி
ஆமென் றுரைப்பார் ஆசையினல்
அங்கி தடுக்க மாட்டாதே

இன்னங் குயிற்குச் சொல்லிலவை
ஈன்ற தாயுங் கொடியதென்றே
இகழும் வளர்த்த தாய்கொடிய
தென்பார் இரங்க மாட்டாதே

பொன்னம் பொறிவண் டாயின்மயல்
புகலக் காது கேளாதே
போர்வேள் சிலைக்கு நாணுமது
போவென் றுரைத்தாற் போகாதே

மன்னன் குமார எட்டென்மகிழ்
மகவாம் வெங்க டேசுரேட்டன்
மாலை கொடுப்பான் கடலே! செம்
மாலை அடுத்து நின்றுயே.

(உரை) கடலே - அளக்கரே!, அன்னம் தனையே தூது விட்டால் - அன்னப் பறவையை எம் காதலன்பால் தூதுசெல்ல விடுவோமானல், அரசர் பெருமான் - மன்னர்களிற் சிறந்தோ னுடைய, கொடைமாரி ஆம் என்று ஈகை மேகம்போன்ற தென்று, உரைப்பார் - உலகமக்கள் கூறுவர், ஆசையினல் - (மழை பெய்வதால் வரும் நலங்கருதிய) விருப்பத்தால், அங்கு இது அடுக்கமாட்டாதே - இவ்வன்னம் அந்த இடத்தையே அணுகிச்செல்லாது, இன் அம் குயிற்கு சொல்லில் - இனிய குரலையுடைய அழகிய குயிற்பறவைக்குச் சொல்லி அனுப்புவோ மெனின், அதை ஈன்ற தாயும் - அதைப்பெற்ற தாயும், கொடியது என்றே இகழும் - கொடுமையானதென்னும் பழிச் சொல்லுடன், வளர்த்த தாய் கொடியது என்பார் - (அதனை)

வளர்த்து விட்ட தாயும் கொடுமையுடையது (அது காக்கை) என்று கூறுவார், இரங்கமாட்டாதே - (அது பிறப்பினாலும் வளர்ப்புத்தன்மையினாலும் கொடிய தன்மையுடையமையால்) இரக்கம் கொண்டு செல்லாது, பொன் - பொன்னிறம்பெற்ற, அம் பொறி வண்டு ஆயின்-அழகிய கிறல்கீளையுடைய வண்டைப் போகச் செய்யலாமெனின், மயல் புகல காதுகேளாதே - நம் காதலை உரைத்தனுப்ப அதற்குச் செவிப்புலன் கேட்காதே, (காதுணர்ச்சி இல்லையே), போர் வேள் சிலைக்கு - (அஃதன்றி) போருடற்றும் மன்மதன் கரும்பு வில்லுக்கு, நாணும் அது - அது கயிறுக அமைந்துள்ளது, போ என்று உரைத்தால் போகாதே - (அம் மன்மதனுக்கு உரிமையாக இருப்பதால்) அதனைத் தூது போ என்று சொன்னேமாயினும் செல்லமாட்டாதே, மன்னன் குமர எட்டன் - அரசனுன குமர எட்டப்பனுக்கு, மகிழ்மகவு ஆம் - மகிழ்ச்சிக்குரிய மைந்தனுன, வெங்கட ஈசுர எட்டன் —, மாலை கொடுப்பான் - அவன் நீ சென்றால் பூமாலை தருவான், செம்மாலை-செங்நிறமுள்ள மாலைப்பொழுதை, அடுத்து நின்றுயே-சார்ந்து இருக்கின்றுயே. (ஆதலால் நீ மாலையோடு பழகியிருப்பதால் மாலை வாங்கிவருதற்கு நீயே தகுதியுடையாய்; மாலை வாங்கிவரச் செல்வாயாக.)

அன்னப்பறவை நீரில் வாழ்வது; அதற்கு நீருள்ள பொய்கைகளே தங்குதற்கேற்ற இடம். அந்நீரைத் தருவது மேகம். மேகம்போன்ற கொடைத்திறத்தை, 'கொடைமாரி' என்றுள். அவன் கொடை மழையாகவே இருப்பதால் நீர்வாழ் இனமான பறவை, அவன்பால் தூதாகச் செல்லாது. நீர் தருவோனுடைய விருப்புக்கு மாருக இருத்தலாகாது என்ற கருத்தால் அவனை அடுக்காது; குயிலோ நிறத்தினும் பிறப்பினும் வளர்ப்பினும் கொடுந்தன்மை (கொடியது; ஆதலால் அதற்கு இரக்கமேது? பொறிவண்டோ காது உணர்வு இல்லாதது: அஃதல்லாமலும் நமக்குப் பகைவனுன மன்மதனுக்குரிய வில்லுக்கு நாணுக இருக்கின்றது; பகைப் புலத்தைச் சார்ந்ததால் அதுவும் பகைப்பொருளாகும். ஆகவே அதுவும் தூதாகச் செல்லுதற்கு உதவாது. ஆகவே "கடலே! நீயே தூது செல்லத் தகுதியுடையாய். ஏனெனின் மாலையை அடுத்து நின்றுய்; அதினும் 'செம்மாலை' அடுத்து நின்றுய் என்று குறிக்கின்றுள். ஒன்றில் தொடர்ந்த பயிற்சியுடையார்க்கே அவைகளின் தன்மை நன்கு அறியுந்தன்மை இருத்தலோடு அதனை முடிக்கும் திறனும் நன்கு அமைவதாகும். ஆகலான், நீயே மாலை வாங்கிவருதற்கேற்ற தன்மையுடையாயென்று கடலிடம் கனிவுகொண்டு கூறுகின்றுள், தலைவி. இதில் தூது விலக்குக்குரிய தன்மை பிறழாது கருத்தமைவு பொருந்தியிருத்தல் கண்டு மகிழ்க. (அ.உ)

அங

இதுவும் அது

[மடக்கு]

தென்றல் தனையே தூதுவிட்டால்
திரும்பி வரவு மாட்டாதே
செம்மை யிலையே பசுமயிலைத்
தேடித் தூது விடுப்பேனே

என்ற பொழுது நீதானே
இரங்கி யெதிரே வந்ததுபோல்
எனக்கும் உயிர்நீ தந்ததுபோல்
எட்டுத் திசையும் அமராடி

வென்ற பெருமான் இளசைவரும்
வெங்க டேசு ரெட்டமன்போன்
மேருப் புயத்தை நான்மருவ
வேணு கிடைக்க வேணுவெல்ல

மன்றல் கமழுங் குழலியிங்கே
வந்தாள் கடலே ! உன்னையவள்
வடிவிற் பார்த்தேன் அங்கசக்க
வடிவிற் பார்க்க வேண்டாமே.

(உரை) தென்றல் தனையே - தென்றற் காற்றையே, தூது விட்டால் - தூதனுப்பினுல், திரும்பி வரவும் மாட்டாதே - போனுல் திரும்பி இங்குவாராது, செம்மை இ(ல்)லையே-செம்மை கருமை முதலிய எந்நிறமும் அதற்கு இல்லையே (நேர்மையான தன்மை யற்றதே), பசு மயிலை - பச்சைநிற மயிற் பறவையை, தேடி தூது விடுப்பேனே - (அதனுல்) தேடிப் பிடித்துத் தூதாகச் செல்லச் செய்வேனே, என்ற பொழுது - என்று கூறி எங்கி நின்ற காலை, நீதானே - நீ தானுகவே நான் அழைக்காமல், இரங்கி எதிரே வந்ததுபோல் - இரக்கப்பட்டு என் முன் வந்த தன்மையைப்போலாக, எனக்கும் உயிர் நீ தந்ததுபோல் - எனக்கும் சென்ற உயிரை நீ மீளக்கொடுத்த தன்மைபோலாக,

எட்டு திசையும் - எட்டுத் திக்குகளிலும், அமர் ஆடி - போர் செய்து, வென்ற பெருமான் - பகைவர்களைத் தோற்கச் செய்த பெருமையுடையான், வெங்கட ஈசுர எட்டமன்—, பொன்மேரு புயத்தை - பொன்மலையை ஒத்ததோள்களை, நான் மருவ - நான் சேர்ந்து அணைய, வேளை கிடைக்க - நல்ல நேரம்வர, வேளை வெல்ல - மன்மதனை நான் வெற்றிகொள்ள, மன்றல் கமழும் குழலி - மணம் வீசும் கூந்தலையுடையாள் ஒருத்தி, வந்தாள் கடலே - கடலே! வந்து சேர்ந்தாள், உன்னை அவள் வடிவில் பார்த்தேன் - உன்றன அவள் தன் வடிவம்போலவே கண்டேன், அங்கசக்க வடிவில் - பகட்டுகின்ற உருவத்தில், பார்க்க வேண்டாமே - வேறென்று கருதிப் பார்க்கவேண்டுவதே இல்லை. (நீங்கள் இருவரும் ஒரே தன்மையுடையீரென்று கூறலாம்.)

இதுவும் தூதுவிலக்கு. தென்றலைத் தூது விடுத்தால் அது உருவற்றதாதலால் செம்மை கருமை முதலிய எங்நிறமுமில்லை; அதைக் காணவும் இயலாது; அன்றியும் திரும்பி வரவும் மாட்டாது. அன்றி மயிலைத் தூதுவிடுத்தால் அதற்குச் சிறந்த குணமில்லையென்னும் பொருள் தோன்றச் செம்மையிலையே யென்றுரை என்றலுமாம். அல்லது அது, செந்நிறமுள்ளதன்று; கருநிறமுடையதன்றே? அதற்கு வெளியுங் கருமை; உள்ளமுங் கருமையாகத் தான் இருக்குமென்று உரைத்தாளெனக் கொள்ளலுமாம். மயில் நீலநிறமுடையதாகலான், செந்நிறமுள்ளதல்ல என்னும் இருபொருள் நயந்தோன்ற நின்றதறிக.

அங்க சங்கம் - அழகுச் செறிவு, சங்கம் - கூட்டம்; இங்குச் சக்கம் என வலிந்து நின்றது. இதற்கு இங்குப் பகட்டுகின்ற எனப் பொருள் கூறப்பட்டது. (அங)

அசை

தூ'து செல்வோட்கும், கடலிற்கும் சிலேடை

கூந்தல் பாசி உன்னிடத்திற்
குலவு மதிய முகம்விழிமீன்
குமுதம் வாய்முத் தெயிறுகுழை
குதிக்கு மகரங் கழுத்துவளை

ஏந்து தோணி முத்துகழை
இரண்டு தோள்செம் பவளம்விரல்
இணைத்த முலைகள் மணற்குன்றம்
எய்து நாபி நீர்ச்சுழியாம்

போந்த நாக நிதம்பங்கண்டு
போன்ற முழந்தாள் வரால்கணைக்கால்
புறத்தாள் ஆமை விரல்களிறு
பொருந்தும் எகினம் போலுநடை

சாந்த மூழ்கும் புயத்தில்விந்தை
தரிதீதோன் வெங்க டேசுரெட்டன்
சமுகங் காண வருமாதன்
தனைப்போல் இருந்தாள் பனிக்கடலே !

(உரை) பனிக் கடலே - குளிர்ச்சியுள்ள வாரியே !, கூந்தல் பாசி உன் இடத்தில் - கூந்தலாகிய பாசி உன்பால் இருக்கின்றது, குலவு மதியம் முகம் - விளங்குகின்ற சந்திரனுகிய முகமும் உள்ளது, விழிமீன் - கண்ணுகிய மீனும், குமுதம் வாய் - அல்லி மலராகிய வாயும், முத்து எயிறு - முத்தாகிய பற்களும், குழை குதிக்கும் மகரம் - குதிக்கின்ற மகரமீனுகிய காதும், கழுத்து வளை - சங்குகளாகிய கழுத்தும், ஏந்து தோணி - அலையில் மிதந்து வருகின்ற படகுகளில், முத்துகழை - ஊன்றியிருக்கின்ற மூங் கில்களாகிய, இரண்டுதோள் - இருதோள்களும், செம் பவளம் விரல் - சிவந்த நிறமுள்ள பவளமாகிய விரல்களும், இணைத்த் முலைகள் மணல் குன்றம் - மணல் திட்டுகளாகிய ஒன்றுபட்ட கொங்கைகளும், எய்தும் நாபி நீர்ச்சுழி ஆம் - நீரின் சுழிகளா லாகிய பொருந்திய கொப்பூழும், போந்த நாகம் நிதம்பம் - வந்த

நல்ல பாம்புகளாகிய அல்குலும், நண்டுபோன்ற முழங்தாள் - நண்டுகளாகிய முழங்கால்களும், வரால் கணைக்கால் - வரால் மீன்களாகிய கெண்டைக்கால்களும், புறம்தாள் ஆமை - மேலடியாகிய ஆமையும், வீரல்களிறு - களிற்று மீன்களாகிய விரல்களும், பொருந்தும் எகினம்போலும் நடை - சார்ந்திருக்கின்ற அன்ன நடைபோன்ற நடையும், சாந்தம் மூழ்கும் புயத்தில் - சந்தனம் பூசிப்படிந்துள்ள தோளில், விந்தை தரித்தோன் - வீர இலக்குமியை கொண்டிருப்போனை, வெங்கட ஈசுர எட்டன்—, சமுகம் காணவரும் - திருமுன்பு பார்க்கவருகின்ற, மாதுஅப் பெண்ணனவள், உன் த(ன்)னீப்போல் இருந்தாள் - உன்னீப்போலவே ஒத்த தன்மையுடையளாய் இருந்தாள்.

தலைவி, கடலை நோக்கிக் கூறுகின்றாள்: 'கடலே, இவள், எம் தலைவன்பாற் சென்று தூது சொல்லி வருதற்கு இசைந்தாள்; அவள் உன் வடிவையே ஒத்திருந்தாள்' என கடல்படுபொருள் கட்டும் தூது செல்வோட்டும் ஒத்த நிலையாக உறுப்பழகை எடுத்துரைக்கும் தன்மை இறும்பூது சான்றதாக அமைந்துள்ளமை காண்க.

தலைவி, இதில் முடிமுதல் அடிவரை, தூதுசெல்வோட்டும் கடலுக்கும், கடல்படுபொருள்கட்டும் ஏற்ற ஒப்புமை காட்டி உரைத்திருப்பது மிக்க சுவையமுடையதாக அமைந்துள்ளது. கூந்தல் முதலிய உறுப்புகட்கு ஏற்ற உவமப் பொருள்களைக் கடலுக்குக் கூறுங்கால் இருபெயரொட்டுப் பண்புத்தொகைகளாகவும், தூது செல்வோட்டுக் கூறுங்கால் உவமத்தொகையாகவுங்கொள்க. (அசை)

அரு

[மடக்கு]

கடலே ! உன்போல் வந்தவரைக்
கண்டேன் மகிழ்ந்தேன் வார்த்தையுங்கற்
கண்டே உரைப்ப தெல்லாநி
கண்டே எனவுங் கண்டேனே

உடலென் பசந்தாய் என்றாளார்
உறவென் பசந்தாய் உரைக்கவெனக்
கோருவர் இலாத வாறென்றேன்
உள்ள தெனவே தலையசைத்துத்

திடமே புகன்றாள் புவிபுரந்த
செயமால் வெங்க டேசுரேட்ட
தீரன் கொலுவிற் சென்றாளென்
செய்தி உரைத்துன் பவனிகண்ட

தடமென் மூலையார் போதுமாதர்
தம்மில் ஒருத்தி பதுமினிப்பெண்
தாமங் கொடுக்க வேண்டுமென்றாள்
சாமி கருத்தும் இசைந்தானே.

(உரை) கடலே - பௌவமே !, உன்போல் வந்தவரை கண்டேன் - உன்னைப் போலாகக் காட்சியளித்து வந்தாரைப் பார்த்தேன், மகிழ்ந்தேன் - களிப்புக்கொண்டேன், வார்த்தை யும் கல்கண்டே - அவள் பேசும் மொழிகளும் கரும்புக்கட்டி போல் இனிமையே, உரைப்பது எல்லாம் நிகண்டே - அவள் சொல்வன யாவும் உறுதியானவையே, எனவும் கண்டேனே - என்பதும் நான் அறிந்தேன், உடல் என் பசந்தாய் என்றாள் - (அவள் என்னைப்) பார்த்து, '(நீ) என்ன காரணத்தால் உடம்பு வேறுபட்ட நிறத்துடன் இருக்கின்றாய்' என்று கேட்டாள், ஆர் உறவு என்ப - எனக்கு அன்பாயிருப்பேமென்று கூறுவார் யாரிருக்கின்றனர் ?, சந்து ஆய் உரைக்க எனக்கு - எனக்காக (என் காதலரிடத்தில்) தூதாகச்சென்று சொல்வதற்கு, ஒருவர் இ(ல்)லாத ஆறு என்றேன் - 'ஒருவர் கூட இல்லாத தன்மையே

உளது' என்று கூறினேன், உள்ளது, எ(ன்)னவே - (அவள் அதற்கு) அஃது 'உண்மையானதே' என்றுரைத்து, தலை அசைத்து - தன் தலையை ஆட்டி, திடமே புகன்றுள் - (தான் தூது போவதாக) எனக்கு உறுதிமொழி உரைத்தாள், புவி புரந்த செயமால் - உலகைக் காத்த வெற்றித்திருமால் போன்ற, வெங்கட ஈசுர எட்ட தீரன்--, கொலுவில் சென்றுள் - வீற்றிருக்கின்ற அரசவையைக் குறுகினுள், என் செய்தி உரைத்து - (அவன்பால்) என்னுடைய செயல்களையெல்லாம் கூறி, உன் பவனிகண்ட - உனது உலாவருகைக் காட்சியைப் பார்த்த, தடமெல் முலையார் - இடமகன்ற மெல்லிய கொங்கையுடையாரான, பொது மாதர் தம்மில் ஒருத்தி - கன்னிபருவம் பெற்ற மங்கையர்பலருள் ஒருத்தி, பதுமினி பெண் - பதுமினி வகுப்பைச் சார்ந்த நங்கையானவள், தாமம் கொடுக்கவேண்டும் என்றுள் - உனது முல்லை மலர்மாலையைத் தரவேண்டுமென்று கூறினுள், சாமி கருத்தும் இசைந்தானே - உயர்ந்தவனுளை மன்னன் மனத்தில் (அதனை) ஏற்றுக்கொண்டான்.

இதில், தலைவிவிட்ட தூதுசென்ற பெண், தலைவனிடஞ் சென்று மாலைகேட்டு, அவன் கொடுக்க இசைந்ததைக் கடலொடு கழறுகின்றுள்.

தூதுசெல்வோர், தூதுசெல்லும் இடத்திற்கேற்பக் காலமும் இடமும் நோக்கிச் சொல்லுதல் வேண்டும். இதனை வள்ளுவர்,

[1]"கடனறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை,"

என்றருளினர். இவ் வுரைக்கேற்ப இத் தூதி சென்று, காலமும் இடனும் நோக்கிக் கூறித் தான் சென்ற செயலை முற்றுவித்துத் தந்த திறத்தைத் தலைவி உளமகிழ்ந்த 'பதுமினிப் பெண் தாமங் கொடுக்கவேண்டுமென்றுள், சாமி கருத்தும் இசைந்தானே' என்று கூறுதலறிக. இதனால் தூதின் இயல்பு விளக்கப்பட்டமை அறிக. (அடி)

1. திருக்குறள்: கூஅஎ.

அசு

[மடக்கு]

ஆழி இடத்தில் இருந்தாளேன்
றவளும் உரைப்ப மகிழ்ந்துகணை
யாழி கொடுத்தான் அதனுடனே
யதிக வீலைமுத் தமுங்கொடுத்தான்

ஊழி காலம் வாழியென
உரைக்கத் தூதி எமைப்புரக்கும்
உறவோன் வெங்க டேசுரெட்டன்
உகந்த வெகுமா னமுங்கொடுத்தான்

சூழி யானை யென்றமுலைத்
துணைமேல் ஏற்றி முரசமெனத்
தோனிக்குஞ் சிலம்பும் புலம்பவகூ
துகிலுந் தரிக்க மனைக்குள்வந்தேன்

வாழி யெனவே நானிருந்தேன்
மாரப் பயலும் புறம்போனன்
மையல் ஒழிந்து கண்பொருந்தி
மன்னன் வரவுங் கண்டேனே.

(உரை) ஆழி இடத்தில் - கடற்கரைப் பக்கத்தில், இருந்தாள் என்று - இருக்கின்றாள் என, அவளும் உரைப்ப - அத் தூதுசென்றவள் சொல்ல, மகிழ்ந்து - மகிழ்ச்சிகொண்டு, கணையாழி கொடுத்தான் - தன் இலச்சினை மோதிரத்தைத் தந்தனுப்பினான், அதன் உடனே - அம் மோதிரத்தோடு, அதிக வீலை முத்தமும் கொடுத்தான் - மிக்க வீலைபெறுவதான முத்து மாலையையும் கொடுத்தனுப்பினான், ஊழிகாலம் வாழி என(ன்)ன - (அவைகளைப் பெற்றுக்கொண்டவுடன்) 'பல்லாண்டுகாலம் வாழ்க' என்று, உரைக்க தூதி - தூதுசென்றவள் கூற, எ(ம்)மை புரக்கும் உறவோன் - எங்களைக் காத்தருள்கின்ற - பேரன்புடையனான, வெங்கட ஈசுர எட்டன்——, உகந்த வெகுமானமும் கொடுத்தான் - அவளுக்கேற்ற பல்வகைப் பரிசுகளும் ஈந்தான், சூழி யானை யென்ற - முகபடாமணிந்த யானை

யாகிய, மூலத்துணைமேல் - இரு கொங்கைகளிடத்தே, ஏற்றி - அவைகளை அணிந்து, முரசம் எ(ன்)னத் தொனிக்கும்-முரச வாத்தியம் என்னும்படி ஒலிக்கின்ற, சிலம்பும் அலம்ப - சிலம்புகளும் ஒலிக்க, வளை துகிலும் தரிக்க - நுடங்குகின்ற ஆடையும் புனைவதற்காக, மனைக்கு உள் வந்தேன் - வீட்டிடத்தே வந்துற்றேன், வாழி எ(ன்)னவே நான் இருந்தேன் - (இவைகள் யாவும் தந்த எம் காதலர்) வாழ்க என்று வாழ்த்திக்கொண்டு நான் இருக்கலானேன், மாரப் பயலும் - மன்மதனுடைய (குறும்புசெய்யும்) சிறியோனும், புறம்போனும் - (என்னை விட்டுவிட்டு) வெளிச் சென்றான், மையல் ஒழிந்து - (என்) காதல்மயக்கமும் தீர்ந்து, கண்பொருந்தி - தூங்கி, (அத் தூக்கத்தின் கனவுநிலையில்), மன்னன் வரவும் கண்டேன் - எம் வேந்தன் என்பால் வரப் பார்க்கலானேன்

தலைவி இங்கே கனவுநிலையில் தன் தலைவன் வெங்கடேசுர எட்டப்பன் வந்ததைக் கடலொடு கூறுகின்றாள்.

முத்தம் - முத்து; அன்றி முத்தங்கொடுத்தலுமாம். ஊழி காலம் - உலக முடிவுகாலம் வரை வாழ்கவென வாழ்த்தினுள் தலைவனை. ஒருவர்க்குச் சிறப்புச் செய்யவேண்டுமெனின், அவரை யானைமீது ஏற்றுவித்து, மேளதாள முழக்கங்களுடன் உலாவர விடுப்பது முறை. அதுபோல் அவன் தந்த பொருள் களையெல்லாம் என் கொங்கைகளாகிய யானைமீதேற்றிக் கொணர்ந்து சிலம்பாகிய முரசம் முழங்க வந்ததாக உருவகப் படுத்திக் கூறினாள்.

வாழி : வியங்கோள் வினைமுற்று. இங்கே தனக்கு வெகுமானங்கொடுத்த தலைவனை வாழ்கவென வாழ்த்தி நான் அங்கிருந்தேனென்றும், நான் வாழ்கவென்று இருந்தேனென்றும் இரு பொருள்நயம் கொள்ளலுமாம்.

மாரப்பயல் - மன்மதனுடைய சிறுவன். தன்மீது ஓவாது மலரம்புகளைத் தொடுத்துவிடுத்துத் துன்புறுத்தியதாலுண்டான வெறுப்பினால் 'மாரப்பயல்' என்றாள். பயல் - சிறுபருவமுள்ளோன். சிறுபருவத்தினர்க்குப் பிள்ளைமைக் குறும்பால் பிறர் துன்பத்தைக் கருதாது இடையூறுசெய்வர் ஆதலால், இவ்வாறு பயல் என்றாள் என்க (அசு)

அஎ

[மடக்கு]

கனவில் வருமன் னவனெனது
கையைப் பிடித்து மடியில்வைத்துக்
கார்போற் குழலைக் கோதியவன்
கையான் முதுகைத் தடவியுமென்

மனது குளிர முன்புசுருள்
வழங்கி யவனே பின்புமுத்தம்
வழங்கித் தலையை வளைத்ததர
மாறிச் சுவைத்தான் வகைக்காரன்

சனகன் மகளே மணம்பொருந்தும்
தாமோ தரன்போ லிருபுயமும்
சாதி வனசக் கண்மலரும்
சந்த்ரோ தயம்போல் திருமுகமும்

எனது விழியிற் குளிரவுங்கண்
டிருந்தேன் வெங்க டேசுரெட்ட
மேந்த்ரன் கலவி தனைக்கடலே
இன்னம் புகல்வேன் கேட்பாயே.

(உரை) கடலே-சமுத்திரமே!, கனவில் வரும் மன்னவன்-என் கனவில் தோன்றுகின்ற அரசன், எனது கையை பிடித்து - என் கையைப் பிடித்துக்கொண்டு, மடியில் வைத்து - தன் மடி மீது என்னை இருத்தி, கார்போல் குழலை கோதி - மேகத்தை யொத்த என் கூந்தலை வகிர்ந்து முடித்து, அவன் கையால் முதுகைத் தடவி—, என் மனது குளிர - எனது மனம் மகிழ, முன்பு சுருள் வழங்கி - எனக்கு முன்னல் வெற்றிலை மடிப்பைக் கொடுத்து, அவனே பின்பு முத்தம் வழங்கி—, தலையை வளைத்து அதரம் மாறிச் சுவைத்தான்—,வகைக்காரன் - எதையும் ருசித் தறியும் தன்மையோன், சனகன் மகளே - சனக மன்னன் மகளான சீதையை, மணம் பொருந்தும் - திருமணம் புரிந்த, தாமோதரன் போல் - மாலையணிந்த இராமனைப் போன்ற, இருபுயமும் - இரண்டு தோள்களும், சாதி வனச கண்மலரும் - மலர்களில்

சிறந்த தாமரைமலர்க் கண்களும், சந்த்ரோதயம்போல் திரு முகமும்-நிறைநிலாத் தோற்றம்போன்ற அழகிய முகமும், எனது விழியில் - என் கண்களில், குளிரவும் கண்டு இருந்தேன் - களிப் புறவும் பார்த்தேன், வெங்கடாசல எட்டம இந்த்ரன்——, கலவிதனே-கலந்த தன்மையை, இன்னம் புகல்வேன் கேட்பாயே-இனிமேலும் கூறுகின்றேன் நீ கேட்பாயாக.

இதில் கனவுநிலையில் தலைவன் தலைவியை அணைந்து இன் புற்ற நிலையைக் கடலோடு கூறுகின்ருள் தலைவி.

கார்போல் குழல் : வண்ண உவமை. குழல் - கூந்தல். கூந் தலுக்கு மேகம், கொடிப்பாசி, கருமணல் போன்ற பொருள்களே நிறம் பற்றியும் திரட்சிபற்றியும் மினுமினுப்புப் பற்றியும் ஆன் ருேர்கள் உவமங்கூறுவது இயல்பு அம்முறையில் தமயந்தியின் கூந்தலே அன்னத்தின் வாயிலாக உரைக்கப்போந்த நைடத நூலாசிரியர்,

[1]'நீனிற முகிலோ பசியசை வலமோ
நெடுந்திரை கொழித்ததெள் ளறலோ
பானலங் கொண்ட பனிமொழித் துவர்வாய்
பசுங்கொடி கரியமென் கூந்தல்.'

என்பதால் அறிக.

சுருள் - வெற்றிலே. மெல்லிய இளந்தளிர் வெற்றிலே சுருண் டிருப்பதால் சுருள் எனப்பட்டதென்க. அன்றிப் பாக்கும், சுண் ணமும் வைத்துச் சுருட்டப்படுதலால் சுருள் என்ருர் என்றலு மாம்.

கலவிக்காலத்து நிகழும் மறைபொருள் நிகழ்ச்சிகளைப் படிப் படியாகக் கடலோடு கழறித் தான்பெற்ற இன்பத்தைத் தலைவி வெளிப்படுத்திக் கூறுவது இனிய சுவை பயப்பதை அறிக.

(அஎ)

1. நைடதம், அன்னத்தைத்தூது : கக.

அஅ

[அடிமுதல் மடக்கு]

கலச முலையைத் தோட்டேனையுங்
கலச மதியா மெனிற்பிடித்துக்
கசக்கு முலைக்காம் பையும்பருகக்
கசக்கு மெனவு நினையாத

சலவை உரிவேய் உயர்ந்தபுயா
சலவை யினுநான் விடுவேனே
சவாது வழித்துக் கழுத்ததனிற்பூ
சவாது வரைநேர் இதழ்பருகு

புலவி தனையே நினைப்பதுநான்
புலவி தலவோ சமயமென்றே
புகழ்சேர் வெங்க டேசுரெட்ட
பூபா உனையே நானினைந்தேன்

நிலவா னதுவுங் குளிரமந்தா
நில்வா சமுவங் தடிக்கவுநான்
நினைப்பா யலிலே மருவுவனீ
நினைப்பா யலிலே யென்றேனே.

(துறிப்புரை) கலசம் - கும்பம். கல - தழுவு (ஏவல்வினை.) சலவை - ஆடை. புயாசலம் - தோளாகிய மலை. சவாது - சவ்வாது; (மணமுள்ள பொருள்.) பூச வா - அணிதற்கு வருக. துவர் - பவளம். புலவி - ஊடல்; பிணக்கம். புல - புல்ல; தழுவ. மந்தாநிலம் - தென்றற்காற்று. பாயல் - படுக்கை. அல் - இரவு. (அஅ)

அசை

[அடிமுதல் மடக்கு]

சேலை உரிந்தான் கடிந்துவிழிச்
சேலை உருட்டிப் பார்க்கையிலே
செவ்வாய் இதழைக் கொடுத்தாளுன்
செவ்வாய் நீவிற் பற்பதித்தேன்

மாலை சரிந்த பிடரினுக்குள்
மாலை அமைந்த பிறைபோல
வைத்தான் நகத்தைக் கவுளுயுஞ்சு
வைத்தான் நயமி தென்றுரைத்தேன்

காலை இடுப்பில் இறுக்கியோருக்
காலை வகையா லிங்கனத்தாற்
கட்டி அணைக்கத் தொடுத்தவகைக்
கட்டி சோலவும் மனம்வருமோ

வேலை யெடுத்த திரைக்கடலே!
வேலை யெடுத்த முருகனேப்போல்
வெங்க டேசு ரேட்டனேனை
மேவச் சமயம் வாய்த்ததுவே.

(கு - ரை.) சேலை - ஆடை. சேல் - கெண்டை மீன். மாலை - பூமாலை, அந்திப்பொழுது. கவுள் - கதுப்பு; கன்னம். கால் - தாள்; ஒரு கால் - ஒருகடவை. ஐவகை ஆலிங்கனம் - ஐவகைப் பட்ட தழுவுதல். அட்டி - தடைசெய்தல். வேலை - தொழில், வேல் - வேற்படை. (அக)

கo

[அடிமுதல் மடக்கு]

சுரதஞ் செயவே கடிதடலிச்
சுரதந் தனையே தோட்டதுமீ
சுரதந் திரமா மதனையுமீ
சுரதந் திரமென் றெண்ணேலே

சரசஞ் சொலியே நகைத்ததுமிஞ்
சரசந் தானே மூடித்ததுபூச்
சரசம் பிரம வேளெடுத்த
சரசஞ் சலமுந் தவிர்ந்தேனே

கரகஞ் சமுமென் முலையான
கரகந் தொடுமப் போதிலநங்
கரகந் தையும்போய் விட்டதர
கரகந் திருவ மணமிதுவே

அரவந் தருபுட் குரன்முழங்க
அரவந் தனிலே நடித்தமுகில்
ஆமால் வெங்க டேசுரேட்டன்
அனுபோ கத்தைத் தொடுத்தேனே.

(கு - ரை.) சுரதம் - கலவி. கடிதடம் - காவலுள்ள இடம் ; பெண்ணுறுப்பு. மீசுரம் - மிகுதி. தந்திரம் - சூழ்ச்சி. சரசம் - பரிகாசம்; ஏளனம். பூச்சர சம்பிரமவேள் - பூவின் வகைகளால் தொழில் செய்கின்ற. மன்மதன் - மன்மதனுக்குரிய அம்பு. தாமரை, குவளை, மாம்பூ, அசோகம், முல்லை என்னும் ஐவகை மலர்கள். கர கஞ்சம் - கையாகிய தாமரைப்பூ. அனங்கர் அகந்தை - மன்மதன் செருக்கு அரவம் - ஒலி, பாம்பு. அனுபோகம் - தொடர்ந்தறிதல். (கo)

சுகக

[மடக்கு]

மடியில்வைத்து முலைபிடித்து
வலியமுத்த மிடமுகத்தில்
வதனம்வைத்து மதனவித்தை
வகைபிறக்க அவனுரைத்து

முடியுறைக்க நகமழுத்தி
முதுகினிற்கை படவணைத்து
முறுகிமெத்த இறுகிவேட்கம்
முழுதும்விட்டு மெலவசைத்து

நெடியபுட்கள் குரலெழுப்பி
நிலைதரித்த விழியிமைக்க
நினைவுமற்ற பரவசத்தி
னிறைவெனக்கு வரமயக்கி

விடியுமட்டும் அனுபவித்து
வெங்க டேசுரெட்டமன்
விரகதாப மதுதணித்த
வேளாநல்ல வேளையே.

(கு - ரை.) மடி - தன் பக்கம். வதனம் - முகம். மதன வித்தை - கலவித்தொழில். பரவசம் - மிக்க இன்பம். விரக தாபம் - காதற்பெருக்கம்.

(சுக)

கூஉ

[அடிமடக்கு]

தந்திதங் கலந்துகண்ட
தந்தரங்க மென்றுசந்த
தந்திடம் புரிந்தணைந்த
தந்திரந் தெரிந்திசைந்து

பந்தெழும்பு கின்றதென்று
பந்திகொண் டெழும்பவுஞ்சு
பந்தருஞ் சுகம்பொருந்து
பந்தயங்க ளும்பகர்ந்து

வந்துவந் திருந்தகோங்கை
மந்தரங் குலுங்கவண்டு
மண்டுகொண்டை கொண்டலென்று
வந்தோதுங்கு சண்டைகண்ட

விந்தைவிந்தை யென்றியம்பி
வீங்கடேசு ரேட்டமன்
விரகதாப மதுதணித்த
வேளைநல்ல வேளையே.

(கு - ரை.) இதம் - நன்மை. பந்தி - வரிசை. சுபம் - நலம். பந்தயம் - வஞ்சினங்கூறல். மந்தரம் - மந்தரமென்னும் ஓரு மலை. விந்தை - வியப்பு; வேடிக்கை. (கூஉ)

கூடு

[மடக்கு]

ஒருதரத்தில் லிடலிலைப்பின்
உபரிவித்தை முதனடத்தி
உசிர்செலுத்து கரிகரத்தில்
உரகனுச்சி மணியசைத்து

மருவியப்பு மமுதுடைத்து
வரவேழுப்பி யதிலெனக்கு
வலுமயக்கம் வரவிரித்து
மலரணைக்குள் விழவுயர்த்தும்

இருதொடைக்குள் அவனிருக்க
எனைமலர்த்தி முலைசுவைத்தும்
இதழ்சுவைத்தும் ஒருதரத்தில்
இருவருக்கும் மனம்ருசிக்க

விருதுகட்டி அனுபவித்து
வேங்கடேசு ரேட்டமன்
விரகதாபம் அதுதணித்த
வேளாநல்ல வேளையே.

(கு - ரை.) ஒருதரம் - ஒருதடவை. உபரி வித்தை - துணை நுண்கலை. உசிர் - நகம். கரிகரம் - புணர்ச்சிப் விளையாட்டி னென்று. விருது கட்டுதல் - சூளுறவு செய்தல். (கூடு)

[மடக்கு]

அப்புறத் தோதுக்கடிக்கும்
அத்தோழிற் கோருப்படுத்தி
அக்கணத்தி னில்தோடைக்குள்
அப்படிப் படுத்தெழுப்பி

இப்புறத் திழுத்தொருத்தி
எப்படிச் சமத்திகேட்டி
இத்தனைக்கு முத்தரித்த
திப்படிக் கெனப்படப்பை

குப்புறக் கிடக்கும்வித்தை
குற்றமற்ற வித்தைகுத்து
குத்தெனச் சொலச்சொலிக்
கொடுத்துறைத் தடுத்தடுத்து

மெய்ப்புறத் தோழிற்பயிற்றி
வெங்கடேசு ரெட்டமன்
விடியுமட்டும் அனுபவித்த
வித்தைநல்ல வித்தையே.

(கு - ரை.) ஒதுக்கடித்தல் - ஒருபக்கமாக இருக்கச் செய்தல். உத்தரித்தல் - அமுந்துதல். படப்பை - பாம்பின் படத்தையும் பையையும் போன்ற பெண் உறுப்பு. (கசை)

கூடு

தலைவனைச் சேர்ந்த வகைக்கும், கடலிற்கும் சிலேடை

மடிமே லேந்தி மலர்வாய்த்தேன்
வழங்கித் தனபா ரத்துகிரும்
வைக்கத் தனமே கசக்குமென்று
மணிவாய் முத்தம் பலகொடுக்கக்

கொடியின் இடைகால் விசைத்தெழும்பிக்
கொள்கப் பலைப்பாய் அசைக்கவந்து
கூட வரைச்சோ மனுந்தோயக்
கோட்டும் அமிர்தங் கோப்பளிக்கப்

படியை அளந்த காலாற்கற்
பாறை மிதித்து மடமாதைப்
பார்த்து முனியே திதுவெனவே
பகர்ந்தோன் வெங்க டேசுரேட்டன்

துடியு முனையும் படைத்தவேற்றித்
துரையைச் சேர்ந்த விதிம்போலத்
தோற்றுங் கடலே! நானுனக்குச்
சொல்லிக் காட்ட வேண்டாமே.

(உரை) மடிமேல் ஏந்தி-தன் மடியிடத்து என்னை இருத்தி, மலர்வாய்த்தேன் வழங்கி - அல்லிமலர் போன்ற செவ்வாய்த் தேனைக் கொடுத்து, தனபாரத்து - நகிலின் மேலே, உகிரும் வைக்க - நகத்தையும் வைத்துக் கீறி, தனமே கசக்கும் என்று - நகிலைக் கையாற் பிடிக்குக எனக் கூறி, மணிவாய் முத்தம் பல கொடுக்க - அழகிய வாயின் முத்தங்கள் பல தர, கொடியின் இடைகால் விசைத்து எழும்பி—, கப்பு அலைப்பாய்—, அசைக்க வந்து கூட—, அரைச் சோமனும் தோய—, கொட்டும் அமிர்தம் கொப்பளிக்க—,[1]

மடிமேல் ஏந்தி - நடங்குதலையுடைய அலைகளை மேலே கொண்டு, மலர்வாய் - குவளை அல்லி முதலிய மலர்களிட

1. தலைவனைச் சேர்ந்த வகை.

மூள்ள, தேன் வழங்கி - தேனீ ஈந்து, தன் அபார துகிரும் - தன்னிடமுள்ள மிகுதியான பவளங்களும், வை கத்தும் அ(ன்)னம் ஏக-விடியற்காலையில் கத்துகின்ற அன்னப்பறவைகள் நடந்துசெல்ல, சக்கும் என்றும் - சங்குகளும் என்றைக்கும், மணி வாய் - அழகுபொருந்திய, முத்தம்பல - மிகுதியான முத்துக்களை, கொடுக்க - தர, கொடியின் இடை - பூங்கொடிகளினிடத்திருந்து, கால் விசைத்து எழும்பி - காற்று வேகங்கொண்டெழுந்து, கொள் கப்பல் ஐ பாய் அசைக்க - பல்வகைப் பண்டங்கள் கொண்ட கப்பலின் நல்ல பாய்களை ஆட்டும்படி, வந்துகூட-வந்து சேர, வரைசோம(ன்)னும் - மலைபோல் கரையில் மோதுகின்ற, தோயம் திகாட்டும் - அலைகளின் மோதுதலும், அமிர்தம் கொப் பளிக்க - நீர்மேலெழ,[1]

படியை அளந்த காலால் - உலகை அளவிட்ட கால்களினால், கல்பாறைமிதித்து - கல்பாறையைத் தன் காலால் இடறி, மட மாதைப் பார்த்து - அதனால் வெளிப்பட்ட அகலிகையாம் பெண்ணைக்கண்டு, முனி - விசுவாமித்திர முனிவரே! ஏது இது எ(ன்)னவே பகர்ந்தோன் - என்ன காரணம் இது வென்று கேட்ட இராமனீ யொத்த, வெங்கடஈசுர எட்டன்—, துடியும் முனையும் - வலிமையும் துணிவும், படைத்த வெற்றி துரையை - கொண்ட வெற்றிகொண்ட உயர்ந்தோனீ, சேர்ந்த விதம்போல - அணைந்த தன்மையைப் போன்று, தோற்றும் கடலே - தோன்று கின்ற கடலே!, நான் உனக்கு சொல்லிக் காட்டவேண்டாமே - உனக்கு எல்லாம் தெரிந்தனவே யாதலால் நான் இன்றும் சொல்லித் தெரிவிக்க வேண்டாமன்றே?

மடிதல் - நுடங்குதல். மலர்வாய் : உவமத்தொகை. உகிர் - நகம். துகிர் - பவளம். சிலேடையணிக்கேற்பப் பிரித்துப் பொருள்கொள்க.

பாட்டுடைத்தலைவன் சிறப்புத் தோன்ற திருமால் மூவடி மண் பெற்று உலகையளந்த செயலை ஏற்றிக் கூறி, அத் திருமால் திருவடி போன்ற மன்னன் திருவடியைப் 'படியை அளந்த காலால்' என்றுள்.

கற்பாறை - கல்வடிவாகக் கிடந்த அகலிகை உருவம். முனி - இங்கே விசுவாமித்திர முனிவர். துடி - வலிமை. முனை - துணிவு. வீரர்கட்கு வலிமையும் துணிவும் முதன்மையானதால் 'துடியும் முனையும் படைத்த வெற்றித்துரை' என்றுள். (கஞ)

---

1. கடல்.

அகூ

[மடக்கு]

கையான் முகத்தைத் துடைத்துமலர்க்
கண்ணு லேனீயும் பார்த்துமறு
காலால் வண்டு குடைந்தமலர்க்
கணியை யெனது குழற்கணிந்து

மெய்யா னதையே தடவியென்றன்
மேலே இலங்கும் உடைமையெல்லாம்
வெவ்வே ருகக் கூனந்ததனே
மீட்டு நிரையாத் தரித்துமங்கே

நையா இடையைத் துகிலாலே
நன்ரூப் போதிந்து மனம்விரும்பி
நகைத்தான் வெங்க டேசுரேட்டன்
நானும் மகிழ்ந்த வனேப்பார்த்தேன்

மையார் விழியார் தமைக்கலவி
வகையால் உருக்கி வசப்படுத்தும்
மார்க்கம் அவனுக் கல்லாமல்
மாரன் தனக்கும் வாராதே.

(உரை) வெங்கடசுர எட்டன்—, கையால் முகத்தைத் துடைத்து - தன் கைகளினால் எனது முகத்தைத் துடைத்து, மலர்க்கண்ணால் எ(ன்)னீயும் பார்த்து - தன்னுடைய தாமரை மலர்போன்ற கண்களினால் என்னீயும் உற்றுநோக்கி, அறு காலால் - தம் ஆறுகால்களினால், வண்டு குடைந்த - வண்டுகள் தேனுண்ணக் கிளறிய, மீலர் க(ண்)ணியை - பூமாலையை, எனது குழற்கு அணிந்து - என் கூந்தலில் அணிந்து, மெய் ஆனதையே தடவி - என் உடலைத் தொட்டுத் தடவிக்கொடுத்து, என்தன் மேலே - என் உடல் உறுப்புக்களிடத்தில், இலங்கும் உடைமை எல்லாம் - அணிந்து விளங்குகின்ற அணிகளையெல்லாம், வெவ் வேறு ஆக கூனந்து - தனித்தனியே கழற்றியெடுத்து, அதனே மீட்டும் நிரைஆ தரித்தும் - அவைகளைப் பின்னரும் வரிசை முறையாக அணிவித்தும், அங்கே-அப்போதே, நையா இடையை-

இவைகளைத் தாங்கலாற்றுமல் துவளுகின்ற இடையினை, துகிலாலே - நல்லாடையினால், நன்று பொதிந்து - செவ்வையாக மறைத்து ஊடுத்து, மனம் விரும்பி நகைத்தான் - உள்ளன்பு கொண்டு (என்னைப் பார்த்துச்) சிரித்தான், நானும் மகிழ்ந்து - நானும் மகிழ்வுகொண்டு, அவனைப் பார்த்தேன் - அவனைப் பார்த்தவண்ணமா யிருந்தேன், மைஆர் விழியார் தமை - மைதீட்டிய கண்களையுடைய மகளிரை, கலவிவகையால் உருக்கி - புணர்ச்சியின் வெவ்வேறு தன்மையினால் மனத்தை இளக்கி, வசப்படுத்தும் மார்க்கம் தன்னுடன் ஒன்றுபடுத்துகின்ற முறை, அவனுக்கு அல்லாமல் - அவ் வேந்தனுக்கேயன்றி, மாரன் தனக்கும் வீராதே - மன்மதனுக்குங்கூட இல்லாத (கிட்டாத) செயலேயாகும்.

காதலால் கலக்குண்ட மகளிர்க்குக் கலக்கந் தவிர்த்து ஆதரவு நல்கும் ஆண்டகை வெங்கடேசு ரெட்டப்ப வேந்தன் என்பாளாய் அவன்றன் காதற்சிறப்புத் தோன்ற 'மாரன்தனக்கு வாராதே' என்றுரை.

கலந்த காதலனுகிய வெங்கடேசுர எட்டப்ப ஏந்தல் கலவியால் நேர்ந்த சோர்வை மாற்றிய நிலையைப் படிப்படியாக உரைக்கின்றுரை. அவன் தன் சிற்றிடையைத் திருத்தித் துகில் புனைந்த திறத்தை 'மையா இடையைத் துகிலாலே நன்றுப் பொதிந்து' என்றும், அவன் யாவையும் திருத்தி இயற்கை வனப்புத் தோன்ற ஆக்கிய பின்னர், அவளின் உறுப்பின் நலங்களையெல்லாம் ஏறிட்டுப் பார்த்தான்; எழுதா ஓவியம் போன்றிருக்கும் அவள் அழகுருவை வியந்தான்; நயந்தான்; மகிழ்ந்தான்; அம் மகிழ்வு வெளித்தோன்ற நகைத்தான்; இந் நிலையைத் தலைவி, 'மனம் விரும்பி நகைத்தான்' என்றும் கூறினள்.

பின்னர் எட்டப்ப ஏந்தலின், காதல் திறத்தைப் பாராட்டுதல் செய்து, இவனை ஒத்தவர் இங்குமில்லை; எங்குமில்லை; இவன் கலவித்திறம், மக்களாய்ப் பிறந்த ஆடவர் எவர்க்கும் அமையப் போவதில்லை; இவனுக்கென்ன? காமக்கூட்டத்தை உடன் புணர்க்கும் மன்மதனுக்குக்கூட வீராதென்பாளாய்,

'மையார்விழியார்.....மாரன் தனக்கும் வாராதே,'

என்றுரை. இதில், தலைவியின் மகிழ்ச்சி வெளித்தோன்றல் காண்க. (கூசு)

கலை

கடலிற்கும், தக்ஷிக்கும் சிலேடை

அறல்போல் குழலிக் கோதிமதி
அதுபோல் வட்டத் திருநீறும்
அமைத்துக் கதிர்போற் சிந்தூரம்
அதனுல் வகிர்த்துப் பொட்டுமிட்டுத்

திறமா கியமுத் தாரமுன்னே
திருத்தி மணற்குன் றிடைமேகம்
திரண்ட தெனவே நிலரத்னச்
செழுங்கச் சாலே மூலமறைத்து

நிறமே வியசங் கமுந்தரித்து
நிரையா கியபன் மணியாலும்
நிரப்பி நுரையாந் துகில்போருத்தி
நீங்கா மயலுந் தோன்றுதலால்

உறவா னவர்க்குத் தாயகம்போல்
உதித்தோன் வெங்க டேசுரெட்டன்
ஓசைக் கடலே! உன்போலேன்
உருவங் காட்டக் கண்டேனே.

(உரை) அறல்போல் குழலி கோதி - கருமணலியும் குழ லென்னும் மீனியும் உள்ளடக்கி, மதிஅதுபோல் - சந்திரனி யொத்த, வட்ட திருநீறும் அமைத்து-வட்ட வட்டமாக ஒதுங்கு கின்ற அழகிய் மணல் திடர்களையும் தன்பால் கொண்டு, கதிர் போல் சிந்து ஊர் அம் அதனுல் வகிர்த்து - சூரியனியொத்த ஆறுகள் கொண்டு வருகின்ற நீரினுல் சுற்றி, பொட்டும் இட்டு - நுழைகின்ற வழியை உண்டாக்கி, திறம் ஆகிய முத்து ஆரம் - சிறந்ததான முத்துக்களையும் சந்தனக் கட்டைகளையும், முன்னே திருத்தி - முன்னிடமான கரையோரங்களில் ஒதுக்கி, மணல் குன்று இடை - மணற் குவியல்களிடத்தே, மேகம் திரண்டது என - மேகங்கள் ஒன்றுபட்டிருக்கின்ற தென்னும்படி, நிலரத்ன செழும் கச்சால் - நீலமணிகளாலும் குளிர்ச்சியுள்ள மீன் களும்புகளாலும், மூ(ல்)லை மறைத்து - வனமல்லிகைகளாலும்

மூடி, நிறம் மேவிய சங்கமும் தரித்து - வெண்ணிறமுள்ள சங்கு களைத் தன்னிடங் கொண்டு, நிரை ஆகிய பல்மணியாலும் - வரிசை வரிசையாகவுள்ள பலவகை மணிகளாலும், நிரப்பி - நிறைவித்து, நுரை ஆம் துகில் பொருத்தி - நுரைகளாகிய மெல்லிய ஆடையைக் கொணர்ந்து சேர்த்து, நீங்கா மயலும் தோன்றுதலால் - தன்னை விட்டுப் போகாத செற்றைகளும் இருத்தலினால்.[1]

அறல்போல் குழலிலக் கோதி - கருமணல் போன்ற என் கூந்தலை வகிர்ந்து முடித்து, மதிஅதுபோல் - நிறைநிலவை யொத்த, வட்ட திருநீறும் - வட்ட வடிவில் திருநீற்றையும், அமைத்து பூசுதல் செய்து, கதிர்போல் - சூரியனை யொத்த, சிந்தூரம் அதனால் - சிந்தூரத்தினால், வகிர்த்து பொட்டும் இட்டு - வட்டமாக நெற்றியில் பொட்டினை யணிந்து, திறம் ஆகிய-சிறந்த தான, முத்து ஆரம் - முத்து மாலையை, முன்னே திருத்தி-மார்பில் அழகுற அணிந்து, மணல் குன்று இடை - மணல் மேட்டின் மேல், மேகம் திரண்டது எனவே - மேகங்கள் ஒன்று கூடியிருந்தது என்னும்படி, நிலரத்ன செழும் கச்சாலே - நில மணியாற் செய்த குளிர்மையுள்ள கச்சினாலே, மூலமறைத்து - கொங்கைகளை மூடுதல்செய்து, நிறம் மேவிய சங்கமும் தரித்து - வெண்ணிறம் பொருந்திய சங்கு வளையல்களைக் (கைகளில்) அணிந்து, நிரை ஆகிய பல்மணியாலும் - வரிசையான பலநிற மணி வடத்தினாலும், நிரப்பி - நிறைய அணிந்து, நுரை ஆம் துகில் பொருத்தி - நீரினது நுரையையொத்த மெல்லிய ஆடையணிந்து, நீங்கா மயலும் தோன்றுதலால் - போகாத காதலும் வெளிப்படுதலினால்,[2]

உறவு ஆனவர்க்கு - அன்புகொண்டவருக்கு, தாய் அகம் போல் உதித்தோன் - தாய் நாட்டையொப்பப் பிறந்தோன், வெங்கடஈசுர எட்டன்—, ஓசைக் கடலே - முழக்கத்தையுடைய கடலே!, உன்போல் என் உருவம் - உன்னைப் போலாகவே என் உருவத்தை, காட்ட - வெளிப்படுத்த, கண்டேனே - நான் பார்க்கலானேன்.

திருநீறு, நிலவினது ஒளிபோன்ற வெண்ணிறமுடையதாதலால் 'மதிபோல் வட்டத் திருநீறும்' என்றார். இதையொப்பச் சேக்கிழாரடிகளார்,

'ஆற்ற அண்ட மெல்லாம்பரந் தண்ணல்வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா.'

என்பது நோக்கற்பாலது. (கஎ)

1. கடல். 2. தலைவி.

கூஅ

[கடைத்திரிபு]

கருப்பஞ் சிலேயும் ஓர்கரமே
கண்டே னுனுஞ் சூகரமே
காமப் பயலும் மூட்கரமே
கணையைத் தொடுப்பான் சீக்கிரமே

வருத்தம் புரிவா ரனேகரமே
வல்லார் மடவார் நிசகரமே
மாமால் வெங்க டேசுரெட்டன்
வருவான் வருவான் என்றிருந்தேன்

திருந்தும் படிக்கு மனேகரமே
செய்தான் இனித்தி வாகரமே
தினியில் வருவா யெனக்கரமே
தெரிய உதித்தான் சக்கரமே

பொருத்தந் தருங்கண் ணுகரமே
போர்வேட் சிலேவீ ராகரமே
பூவை மாருஞ் சேகரமே
புகழ்ந்தேன் இரத்தி னுகரமே.

(உரை) கருப்பம் சிலேயும் - கரும்புவில்லேயும், ஓர் கரமே கண்டேன் - ஒருகையில் பிடித்திருக்கப் பார்த்தேன், சூகரமே - மானே!, காம பயலும் - காமனை குறும்பனும், மூட்கரமே - சினமிகுதிகொண்டு, கணையை தொடுப்பான் சீக்கிரமே - மலரம்பு கணை விரைவில் தொடுத்துவிடுவான், வருத்தம் புரிவார் - துன்பஞ் செய்வோர், அநேகர் - மிகுதியானவர், அம் மேவல்லார் - அப் பகைவர், மடவார் நிசகரமே - பெண்களேயாவர் உண்மையே, மாமால் வெங்கடசுசுர எட்டன்—, வரு வான் வருவான் என்று இருந்தேன்—, திருந்தும் படிக்கும் - என்மனம் செம்மைப்படும் படியாக, மனேகரமே செய்தான் - இன்ப நிலேயைச் செய்தான், இனி திவாகரம்-இனிமேல் சூரியன், வரு வாய் என - தோன்றுதற் குரிய காலமென்று கருதினேன், கரமே தெரிய உதித்தான் - (அச் சூரியனும்) தன் கதிர்கள் தோன்ற எழுந்தான், சக்கரமே

பொருத்தம் தரும் கண்ஆகரமே - உருளையின் வட்டவடிவத்தைக் காட்டுகின்ற இடத்துக்கு உறைவிடமே, போர்வேட்கு இ(ல்)லை வீர ஆகரமே - போர் செய்கின்ற மன்மதனுக்கு வீரப்பெருக்கம் இல்லை, பூவைமாரும் சேகரமே - பெண்களின் கூட்டத்தை, புகழ்ந்தேன் - பாராட்டினேன், இரத்தின ஆகரமே - மணிக் கூட்டங்களே !.

கருப்பஞ்சிலை - கரும்புவில். ஓர்கரம் - ஒரு கையில் எடுத்தான், சுகரம் - மான். மேவல்லார் - பகைவர். வருவாய் - வருகின்ற இடம் (நேரம்).

தலைவிக்கு ஓரிரவு பல்லூழிபோல் தோன்றுகின்றது; தன் கண்முன் தோன்றும் பொருள்களையெல்லாம் விளித்து அவைகளோடு தன் குறைகளையெல்லாம் எடுத்துக் கூறுகின்றாள். கூறிக்கூறிப் பயனிலதாகவே இனி ஞாயிறு தோன்றினுல்நன்று; பொழுது விடியுங்காலமாயிற்றே எனக் கருதியிருந்த தலைவிக்கு ஞாயிறு தோன்றித் தன் செவ்வொளி பரப்பிவந்தான்; அதைக் கண்டவுடன் மகிழ்ந்தாள்; அச் செவ்வொளிக்குமுன் எதிர் ஒளி காட்டி இரத்தினக்கூட்டங்கள் காட்சியளித்தன. அவைகளை நோக்கித் தலைவி, 'இரத்தினகரமே! இனி மன்மதனுக்கு வேலையில்லை; ஆதலால் என் தோழிப்பெண்களின் கூட்டத்தைப் புகழ்ந்தேன். அவர்கள் நான்படும் காதல் துன்பங்கண்டு பொருது வேண்டும் உதவிபுரிந்து என் உயிரைப் பாதுகாத்தனர்; அதற்காக' என்று கூறினள். (கூ)

கலவை

[கடைத்திரிபு]

தருண மறிவாய்ப் புக்கலமே
தக்க தெனஉன் அடைக்கலமே
சார்ந்தேன் எனக்குப் புட்கலமே
தந்தா யேய வனகலமே

மருவ வாவே யிருகலமே
வணங்கே யெனவிப் பகலமே
வாவென் முடாய் ஒருகலமே
மலரை விரித்தாள் சிவன்கலமே

திருமால் அமுதின் பரிகலமே
சேரும் உனையே மரக்கலமே
சேர்ந்த தெனையும் அணிகலமே
தினமும் நாங்கள் பிரிகலமே

அருமைத் தமிழாஞ் சகலமே
அறிந்த துரைபூ வினகலமே
அளந்தோன் வெங்க டேசுரெட்டன்
அணைந்தான் அதுமா மங்கலமே.

(உரை) தருணம் அறி - உற்ற காலத்தை அறிகின்ற, வாய்ப்பு கலமே - மிகுகிறப்புடைய மரக்கலமே! தக்கது எ(ன்)ன - நீயே தகுதியுடையாய் என்று, உன் அடைக்கலமே சார்ந்தேன் - உன்பால் தஞ்சமாக வந்தடுத்தேன், எனக்கு உப்பு உள் கலமே தந்தாயே - (உன்னையே புகலாகக் கொண்ட) எனக்கு உப்பு இருக்கின்ற கலத்தின் தன்மையே கொடுத்தாயே, அவன் அகலமே - என் காதலன் மார்பிடத்தை, மருவ ஆ - அணைவதற்கு ஆக, இரு வேய் கலமே - இரண்டு மூங்கிலனைய தோளையுடைய மணியே!, அணங்கே என - தெய்வப் பெண்போல்வாய்! என்று எண்ணிக் கூவி, இப் பகல் அ(ம்)மே வா என்முள் தாய் - என் தாயனைய தோழி அம்மா! இப்போதே வருக என்முள், ஒருகலமே மலரை விரித்தாள் - எனது படுக்கையில் ஓர்கல அளவென் னும்படி மிகுதியான பூக்களைப் பரப்பினள், திருமால் அமுதின்

பரிகலமே - திருமால் கடைந்தெடுத்த அமிழ்தம் இருக்கின்ற பாத்திரமே!, உ(ன்)னையே சிவன்கலமே மரக்கலமே சேரும் - உன்பால் சிவன் அணியாகிய பல்வகை உயிர்களின் எலும்பும் மரக்கலங்களுமே அடையும், எ(ன்)னையும் அணிகலமே சேர்ந்தது-என்னிடமும் பல்வகை அணிகலம் சேர்ந்தது, நாங்கள் தினமும் பிரிகலமே - (என் காதலனும் நானுமாகிய) நாங்கள் நாள்தோறும் பிரிவுறுமல் இணைந்திருக்கின்றோம், (அக் காதலனே) அருமை தமிழ்ஆம் - அரிய தமிழ்மொழியாலான நுண்பொருள்கள், சகலமே அறிந்த - எல்லாவற்றையும் ஆராய்ந் தறிந்துணர்ந்த, துரை-மன்னவன், பூவின் அகலமே அளந்தோன்-நிலப்பரப்பின் அளவெல்லாம் அளந்த திருமாலின் சாயலாக உள்ளோன், வெங்கடாசுர எட்டன்—, அணைந்தான் - என்னை மருவினன், அது மா மங்கலமே-அது சிறந்த நலனுக இலங்கிற்று.

திருமால் ஏவலால் தேவர்களும் அவுணர்களும் பாற்கடலில் அமுதுண்டாகக் கடைந்தபோது அதில், அமிழ்தம் பிறந்தது; ஆதலால் அமுதுள்ள பாத்திரம் என்றுள், கடலை.

தமிழ்மொழி, மெல்லிய இனிய மேவரு தகுவான சொற் கூட்டங்களையும், திருக்குறள் நாலடியார் பழமொழி போன்ற அற நூல்களையும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பிய நூல்களையும், பெரியபுராணம் போன்ற அருள் நூல்களை யும், கம்பராமாயணம் போன்ற கவினுர் நூல்களையும், தேவாரம் திருவாசகம் திருவாய்மொழி போன்ற பத்தியூட்டும் பண்ணுர் பாடல்களையும் கொண்டு இலக்கண வரம்புடையதாய் இலகுவது; அதைப் பயில்வோர் இன்பமிக்காராய், வேறெதையும் விரும்பா ராய் இதையே விரும்புவர்; ஆகலான், அம்முறையில் வெங்க டேசுரெட்டப்ப மன்னன் அவைகளை முற்றக் கற்றுத்துறை போயவன் என்பாளாய், 'அருமைத் தமிழாம் சகலமே அறிந்த துரை' என்றுள்.

தமிழ்ஆம் - தமிழாலான நூல்கள். பூ - மண்ணுலகம். சகலம் - எல்லாம் என்பது; எல்லாவகை நூல்களையும் குறித்து கின்றது. அணைந்தான் - சேர்ந்தான்: இறந்தகால வினையா லணையும் பெயர். மாமங்கலம் - பெருமங்கலம். தலைவி விரும்பிய வாறு தலைவனைச் சேர்ந்தின்புறப் பெற்றமையால் 'மாமங்கலம்' எனக் கூறி முற்றுவித்தார். (கக)

கூ00

வாழ்த்து

[கடைமடக்கு]

கண்ட கனவுந் தப்பாமல்
காம சரம்வந் தப்பாமல்
கண்டாள் விழிக்கு முன்னவனைக்
கண்டேன் இளசை மன்னவனைக்

கொண்டல் எனவே தெரிசித்தே
கொண்டேன் அதுவுந் தெரிசித்தே
கோமான் வெங்க டேசுரேட்டன்
கொடையைப் புகழ்ந்தேன் எனைப்புரக்கும்

மண்ட லீகன் வாழியவன்
மகவாஞ் சேகவீ ரேட்டமனும்
வாழி துரைகள் கிளுஞர்பிள்ளை
மாரும் பரிவா ரமும்வாழி

அண்டர் தமக்கோர் அமுதாகி
அவனி தனக்கோர் உப்பாகி
அமைந்த வாழி வாழியெங்கோன்
அணிந்த வாழி வாழியவே.

(உரை) கண்ட கனவும் - நான் இரவில் கண்டதான கனவின் தன்மையும், தப்பாமல் - நீங்காமல், காம சரம் - மன்மத னுடைய மலரம்புகள், வந்து அப்பாமல் - என்னிடம் வந்து பாயாமல், கண்டு - பார்த்து, ஆள் விழிக்குமுன் - மக்களெல்லாம் துங்கி எழுவதன் முன்பே, நவனை - புதுமையானவனை, இளசை மன்னவனை கண்டேன் - எட்டையபுர நகர வேந்தனை (கண்ணுல்) பார்த்தேன், கொண்டல் எ(ன்)னவே - மேகம்போன்றவன் என்றே, தெரிசித்து கொண்டேன் - வணங்கினேன், அதுவும் தெரி சித்தே - அதுவும் தெரிகின்ற மாயவித்தையே, கோமான் - வேந்தனை, வெங்கடசுசுர எட்டன்—, கொடையை புகழ்ந் தேன் - கையின் தன்மையைப் பாராட்டினேன், எ(ன்)னை

புரக்கும் - என்னைக் காக்கின்ற, மண்டலீகன் வாழி - உலக மன்னன் வாழ்க, அவன் மகவுஆம் - அவனுடைய மைந்தனுன, செகவீர எட்டமனும் வாழி - செகவீர எட்டமனென்னும் இள மன்னனும் வாழ்க, துரைகள் - வழிவழி மன்னர்கள், கிளைஞர் - சுற்றத்தார்கள், பிள்ளைமாரும் பரிவாரமும் வாழி - அவர்தம் மக்களும் படைகளும் வாழ்க, அண்டர் தமக்கு ஓர் அமுதுஆகி - தேவர்களுக்கு ஒப்பற்ற அமிழ்தம்போன்று இனியதாகி, அவனி தனக்கு ஓர் உப்பு ஆகி - இம் மண்ணுலகத்துக்கு ஒப்பில்லாத உப்புப்போன்று இன்றியமையாததாகி, அமைந்த ஆழி வாழி - நிலைத்த ஆணை உருளை (ஆக்கினை சக்கரம்) வாழ்க. எம்கோன் அணிந்த ஆழி வாழியவே - எம்தலைவன் அணிந்திருக்கின்ற கணை யாழி மோதிரமும் வாழ்வதாக.

காமசரம் - மன்மதன் மலரம்பு. அப்புதல் - மேலும்மேலும் மிகுதல். கண்டு - பார்த்து. ஆள் - மக்கள் யாவரும். நவன் - புதுமையானவன்.

ஒரு நூலை முடிக்குங்கால் வாழ்த்துடன் முடிப்பது ஆன்றோர் முறையாகலான், இதனை, 'மண்டலீகன் வாழி; மகவு வாழி; கிளைஞர் பிள்ளைமாரும் பரிவாரமும் வாழி' என்று முடிக்கின்றவர், வெங்கடேசுரெட்ட வேந்தன், ஆட்சி முறையையும் புகழ்ந்து வாழ்த்தி முடிக்கின்றார். இவ் ஆட்சிமுறை தேவர்கட்கும் பயனுகி, மக்கட்கும் பயனுகி மிளிர்கின்றது. அது தேவருக்கு அமிழ்தம் போன்றுள்ளது என்றார். அமிழ்தம் உண்பார்க்கு நரை திரை மூப்பு பிணி வருவதில்லை. அதனை உண்போர் தேவர்; அவர்கட்கு இவ் வமிழ்த உணவை ஈந்தது கடல்; அமிழ்தம் போன்றது இவன் ஆட்சி; அவ் வமிழ்தம் ஈந்த கடல் போன்றான் இம் மன்னன் எனக் குறிப்பால் உணரவைத்த கருத்து இன்புறத்தக்கது. அமிழ்தம் உண்பார் நரை திரை மூதலியவற்றால் துன்பமுறுதலாறுபோல, இவன் ஆட்சிக்குட் பட்ட யாரும் துன்புறார்; இன்புடன் வாழ்வர் எனத் தெற்றென விளக்கியவா றறிக.

[1] 'வேலினும் வெய்ய காளமவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே.'

என்றார் பட்டினப்பாலையினும். செங்கோல்முறை மக்கட்குத் தண்மைதந்து இன்பஞ்செய்தலால், இக் கருத்தையும் இதனோடு ஒப்பு நோக்குக.

'அவனி தனக்கோர் உப்பு' என்றார். உப்பு நாம் உண்ணும் ஒவ்வோர் பொருளினும் கலந்து சுவையையும் நலத்தையும்

1. பட்டினப்பாலை: 100 - க.

உடலுரத்தையும் கொடுக்கும் ஓர் ஒப்பற்ற அமிழ்தம். இவ் உப்பு இன்றியமையாதவாறுபோல, இவன் ஆட்சியும் உலக மக்கட்கு இன்றியமையாத பெருமைமிக்கது என்னும் கருத் தமைதியுடையது. உப்பு, இனிமையென்னும் பொருளது.

> [1]' ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல் வெயர்ப்பக்
> கூடலில் தோன்றிய உப்பு.'

என்பது பெருநாவலர் நூலில் இனிமையென்னும் பொருள் தருதலே ஓர்க.

வாழிய என்பது, வாழி என ஈற்று யகரவுயிர் மெய்குறைந்து நின்றது.

> [2]' வாழிய என்னும் செயவென் கிளவி
> இறுதி யகரம் கெடுதலும் உரித்தே.'

என்னும் தொல்காப்பிய நூற்பா முறைப்படி வந்ததெனக் கொள்க.

> [3] மல்குக வேத கேள்வி; வழங்குக சுரந்து வானம்;
> பல்குக வளங்கள்; எங்கும் பரவுக அறங்கள் இன்பம்;
> நல்குக உயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவம் ஓங்கி
> புல்குக; உலகம் எல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க;

என, வாழ்த்துக்கூறி முடித்தல் ஆன்றோர் மரபு, ஆகலான் இவரும் இந் நூலில் இங்கே, 'எங்கோன் அணிந்த ஆழி வாழியவே' என வாழ்த்துக்கூறி முடித்தார். (கoo)

---

1. திருக்குறள் : கருஉச.
2. தொல். எழுத்து : உகக.
3. திருவிளையாடல், பாயிரம் : கு.

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

	பக்கம்
அங்கங் குடனு	163
அண்டலார்கள்	80
அந்திவானம் ஒத்தெழுந்த	94
அப்புறத் தொதுக்கடிக்கும்	197
அவிரும் மதிகா	61
அறல்போல் குழலேக்	202
அன்னந் தனையே	179
ஆமாம் பழனங்	48
ஆர மூரசக்	96
ஆலங் கரும்பை	42
ஆழி இடத்தில்	187
ஆளும் பரியு	98
ஆனையடர்த்த	104
உரங்கொண் டிருக்கு	45
உள்ள திருக்கை	13
ஏடு சேர்க்கு	68
ஒருதாரத்தில்விடலேப்பின்	196
ஒற்றை யாழித்	106
கச்சங் கடக்க	146
கடலே! உன்போல்	185
கண்ட கனவுந்	208
கண்ணன் போல	173
கருப்பஞ் சேலையும்	204
கருப்பஞ் சேலையை	19
கலச மூலையைத்	191
கலையே பழகித்	63
களக மெனவே	65
கனகம் பொலிவாய்த்	118
கனத்துப் புடைத்துப்	133
கனவில் வருமன்	189
காமன் இவனே	154
காரி யனைய	141
காலி லேறி	86
காலே யலராக்	15

	பக்கம்
குருகு படரக்	29
குன்றின்மேல்	82
கூந்தல் பாசி	183
கூரா ழியைக்கைக்	167
கையான் முகத்தைத்	200
கொப்புங் குழையுங்	135
சங்கோ லிடமும்	175
சாரம் படைக்குங்	54
சாரி வரவே	78
சால மரத்தே	50
சிலவா னேயுஞ்சொற்	127
சுரதஞ் செயவே	193
சேரு மாலே	114
சேலே உரிந்தான்	192
சேறுவண்டு கூறுகொண்டு	88
தங்க மலைக்கு	86
தஞ்ச மதிக்கு	161
தண்டமொன்று கொண்டு	92
தந்திதங் கலந்துகண்ட	195
தருண மறிவாய்ப்	206
தருவா னெனவே	171
தலையே ழையுமுன்	40
தாக்குவெண் திரைக்	100
திருவும் பிறையு	11
தினக ராதி	56
துரத்த ரீக	169
துலையே கொடுக்குந்	165
தெரிய வமுதம்	121
தென்றல் தனையே	181
தொடுத்த வாரங்	8
நாரங் கிழித்துச்	38
நிலப்பா வையைத்தா	175
நிறைவாய்ச் சங்கக்	23
நெஞ்ச மகிழ்ந்து	77

	பக்கம்
நெடிய வானந்	21
படர வருமா	112
படரு மாமை	131
பட்டவத்த னச்செருக்கர்	84
பாயுங் களிறு	108
பாரம் பரிய	148
பார வரையும்	139
பார்பொ ருந்திய	3
புந்திக் கினிமை	110
புயமா னதுவு	156
பூரித் தவரை	124
பூவிற் பொலியு	34
பெலப்போ ரிடவே	158
பொற்பா டகப்பூங்	129
பொன்னம் பொருப்பை	137
மடிமே லேக்தி	198

	பக்கம்
மடியில் வைத்து	194
மத்தகத்து வெற்பையத்தி	90
மருக்கு லாவு	17
மாரி ரக	150
மாலே யரக	71
மின்னு மணியாய்	27
மேவுங் கறுப்பாற்	52
வருந்துஞ் சனகி	144
வள்ளம் பாரும்	116
வனச மண்டப	5
வன்னந் தவள	73
வாரு மார மூந்திய	25
வானந் தரித்து	31
வீண்ணு டருக்கல்	58
வீருதிடு சரண	1
விரையு மதவா	152
வெள்ளமே! உன	102